# ஆற்றலாளன்



Dr. ஆறுமுகம் கேதீஸ்வரன்

(1964 - 2024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றலாளன்



# மணிவிழா மலர்

Dr. ஆறுமுகம் கேதீஸ்வரன்

(1964 - 2024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | ஆற்றலாளன் |
| விடயம் | :- | மணிவிழா மலர் |
| தொலைபேசி | :- | 077 117 4956 |
| அச்சுப் பதிப்பு | :- | 04.05.2024 |
| பக்கங்கள் | :- | 197 + (VII) + (XL) |
| அச்சுப்பதிப்பு | :- | தமிழ்ப்பூங்கா பதிப்பகம்,<br>நெல்லியடி, கரவெட்டி. |
| பதிப்புரிமை | :- | மலர்க்குழு |
| பிரதிகள் | :- | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் சமர்ப்பணம்...

60 ஆவது அகவை காணும் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் கரவை மண்ணின் சிறந்த கல்வி மான்களில் ஒருவர். மருத்துவத் துறையில் உயர் பதவிகளை வகிப்பதோடு அப் பதவிகள் இவரால் பெருமைப்படும் அளவிற்கு செயலாற்றியவர்.

இவரது அகவை 60 நிறைவை முன்னிட்டு பெரியோர்களின் வாழ்த்துக்களோடு வைத்திய கலாநிதி அவர்களின் திறன்களை செயற்பாடுகளை எதிர்கால சந்ததியினர் அறிந்து பயன்படுத்தும் நோக்கோடு இவர் தொடர்பான மற்றவர்களின் பார்வையும் இவரால் எழுதப்பட்ட பல்வேறு ஆக்கங்களையும் உள்ளடக்கி **ஆற்றலாளன்** எனும் நூலை அவரது பிறந்தநாளாகிய 04.05.2024 ஆகிய இன்று வைத்தியகலாநிதி அவர்களின் கையில் சமர்ப்பிப்பதையிட்டு மகிழ்வடைகிறோம்.

இவ்வாறான ஒரு நூலை ஆக்க வேண்டும் எனும் பெருவிருப்போடு எம்மை ஊக்கிவித்த பெரியோர்களையும் அவரின் நண்பர்களையும் நன்றியோடு பாராட்டுகின்றோம்.

இந் நூலிற்கான அனுசரணையை இலண்டன் வாழ் கரவை உறவுகள் பெரு மகிழ்வோடு வழங்கியிருக்கிறார்கள். அவர்களிற்கு மலர்க்குழு சார்பில் எமது அன்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்க்குழு

திரு.இ.இராகவன் (ஓய்வுநிலை அதிபர்)

திரு.ந.பிரதீபன் (பிரதி அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி)

திரு.இ.அகிலன் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

திரு.வீ.மகாலிங்கசிவம் (இலண்டன்)

திரு.மா.சிவபாலன் (நோர்வே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


ஆசியுரைகள்

01) நல்லை ஆதீனம் - ஆசியுரை - 01

02) யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி - 02

03) செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி - ஆறு திருமுருகன் - 03

வாழ்த்துரைகள்

04) மென்போக்கு கொண்ட வினைத்திறனான சுகாதார சேவை நிர்வாகி - பேராசிரியர் சி.சிறிசற்குணராசா - 04

05) மணிவிழா வாழ்த்துச் செய்தி - இளங்கோவன் - 07

06) யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் வாழ்த்துச் செய்தி - மருதலிங்கம் பிரதீபன் - 10

07) வாழ்த்துச் செய்தி - ம.ஜெகூ - 12

08) கரவை மண்ணின் பெருமை வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் - சிவகுருநாதன் திருவாகரன் - 14

09) ஆற்றலும் ஆளுமையும் மனிதநேயமிக்க சேவையாளன் - சிவலிங்கம் சத்தியசீலன் - 16

10) அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன் - இராஜரட்ணம் வரதீஸ்வரன் - 18

11) வைத்தியர் பற்றிய எனது பார்வை - பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன் - 19

12) வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி - வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி - 22

13) மணி விழா வாழ்த்துச் செய்தி - வைத்திய கலாநிதி கனகராசா நந்தகுமாரன் - 24

14) Working with a Leader...! - Dr. M.Umashankar - 26

15) தொலையாக் காலத்தின் தோன்றல் - சா. சிவயோகன் - 28

16) தொலைநோக்கு தலைவர் - பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் - 34

17) வாழ்த்துச்செய்தி - நடராஜா - தெய்வேந்திரராஜா - 36

18) மணிவிழா வாழ்த்து - ச.சிவஶ்ரீ - 39





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) மருத்துவத் துறையின் மகத்துவம் - ஈ.தயாரூபன் - 41

20) International Medical Health Organization (IMHO)
- Dr.Rajam Theventhiran - 42

21) வாழ்த்துச் செய்தி - Dr. வரகுணன் மகாதேவன் - 43

22) Dr.ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் அறுபதாவது
அகவை பூர்த்தியையிட்டு வாழ்த்துக்கள் ! - அம்பிகாவரன் - 44

23) அறத்தின் பால் நின்று அன்பால் இணைந்த மக்கள்
விரும்பும் செயல் வீரன் - திரு.செல்வராசா முரளீதரன் (OAM) - 47

24) சேவையின் செம்மல் Dr கேதீஸ்வரன் - வீ. மகாலிங்கசிவம் - 49

25) அகநக நட்புடன் என் உள்ளத்திலிருந்து - சிவபாலன் - 51

26) "சேவையின் சிகரம்" - ஆ.கேதீஸ்வரன் - வ.செல்வராசா - 54

27) மக்கள் சேவையின் மகத்தான ஒப்புரவாளர் வைத்திய
கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் - கலாநிதி செ.சேதுராஜா - 56

28) ஆல் போல் தழைத்த மனிதர் - க.கிருஷ்ணகுமார் - 58

29) உளம் மகிழ வாழ்த்துகிறேன் - உபாலி சி.பொன்னம்பலம் - 61

30) மணிவிழா வாழ்த்து - வைத்திய கலாநிதி. சி.சுதோகுமார் - 62

31) மருத்துவ நிர்வாகத்தின் மகுடத்திற்கு மனமார்ந்த
மணிவிழா வாழ்த்துகள் - வைத்தியகலாநிதி வே.கமலநாதன் - 64

32) வள்ளுவமும் கேதீஸ்வரனின் வாழ்வியலும்
- வைத்திய கலாநிதி. சிங்காரவேலு குமரவேள் - 67

33) தனித்துவமான தலைமைத்துவம் - டாக்டர். க. செந்தூரன் - 72

34) யாழ்மாவட்ட சுகாதாரக் குடும்பத்தின் ஓர் அச்சாணி
- வைத்திய கலாநிதி.(திருமதி) பிறிந்திகா செந்தூரன் - 75

35) மாண்புமிகு மணிவிழா நாயகன் - Dr. அ.ஜெயகுமாரன் - 77

36) Greeting Massage from Dr.T.Balamuraly - Dr. Tharmalingam
Balamuraly (MBBS / DFM) - 79

37) பார்த்து வியந்த ஆளுமை எங்கள் சுகாதாரப் பணிப்பாளர்
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் - Dr. பரா.நந்தகுமார் - 80




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38) வைத்திய கலாநிதி Dr.A. Ketheeswaran அவர்களின் மணிவிழா வாழ்த்துப்பாமாலை - Dr. ச.சூரிகா - 83
39) மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன் Dr. ம.மங்கையர்மணி - 84
40) கரவையை அடையாளப்படுத்தும் இன்றைய ஆளுமைகளில் ஒருவர் கேதீஸ்வரன் - வீ.தனபாலசிங்கம் - 85
41) வாழ்த்தி வணங்குகிறேன் - மு.சுந்தரலிங்கம் - 87
42) A Beacon of Service and Love: - Ketheswaran Gauthaman (Son) - 90
43) பிறந்த மண்ணை பெருமைப்படுத்திய பெருந்தகை - இ.இராகவன் - 94

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவரது ஆக்கங்கள்**

44) என் வாழ்வின் வழித் தடங்கள் - 95
45) "தலைவர் சிவாவும் தாய்மண் கரவையூரும்" - கட்டுரை - 114
46) "தமிழ்த் தாயின் தவப்புதல்வனுக்கு கரவையூரின் கண்ணீர்க் காணிக்கை" - கட்டுரை - 118
47) "என்னை உருவாக்கிய கலைக்கோயில்" - கட்டுரை - 121
48) ஆரோக்கிய வாழ்விற்கு அறுபது ஆலோசனைகள் - கட்டுரை- 128
49) அபிவிருத்திப் பாதையில் அம்பம் - கட்டுரை - 142
50) "நான் கண்ட சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து" - பயணக் கட்டுரை - 148
51) தரமான சேவையை நோக்கிய திடமான பயணம் - கட்டுரை - 165
52) ஒரு வீணை அரங்கேற்றம் தேடி - சிறுகதை - 177
53) மௌனமே கீதமாய்... - சிறுகதை - 185

54) ஏற்பாட்டுக் குழு - 196
55) நன்றி - 197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக் குறிப்பு

## வைத்திய கலாநிதி.ஆறுமுகம் கேதீஸ்வரன்

- முழுப்பெயர் : வைத்திய கலாநிதி. ஆறுமுகம் கேதீஸ்வரன்
- தற்போதைய பதவி நிலை : பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்
- பிறந்த திகதி : 04.05.1964
- சொந்த ஊர் : கரவெட்டி
- ஆரம்ப கல்வி : கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம்
  கரவெட்டி திரு இருதயக் கல்லூரி
- இடைநிலைக் கல்வி : ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
- உயர்கல்வி : மருத்துவ பட்டப்படிப்பு MD (USSR)
  Minsk State Medical Institute,
  Belarus,USSR (1983 – 1989)
- பட்டபின்படிப்பு(Post graduate): MSc (Community Medicine)( சமுதாய மருத்துவம்)
  Postgraduate Institute of Medicine.
  University of Colombo (1999)
- உள்ளகப் பயிற்சி(Internship): போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு (1989 – 1990)
- முதல் நியமனம் : வைத்திய பொறுப்பதிகாரி, ஆதார வைத்தியசாலை
  களுவாஞ்சிகுடி ( 15.09.1990 – 20.04.1992)
- சேவையாற்றிய நிலையங்கள்:
  1. வைத்திய அதிகாரி, பொது வைத்தியசாலை,வவுனியா (21.04.1992 – 31.05.1998)
  2. சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா (01.06.1998 – 14.09.2002)
  3. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா (15.09.2002 – 28.02.2005)
  4. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் (01.03.2005 – 05.03.2015)
  5. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட மாகாணம் (06.03.2015 – 12.07.2016)
  6. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட மாகாணம் (14.07.2016 – 30.04.2022)
  7. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் (01.05.2022 – இன்றுவரை)
- சேவைக்காலம் : 33 வருடங்கள் 08 மாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

ஆசியுரை

03.03.2024



அன்புள்ளவர்களுக்கு !

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்ப்பாணம் (முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்) ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழாவினை சிறப்பித்து கரவெட்டி மக்கள் இவர்களை சிறப்புச் செய்து விழா ஏற்பாடு செய்திருப்பது பெருமன மகிழ்ச்சியை தருகின்றது. கேதீஸ்வரன் அவர்களின் பணி காலத்தின் கட்டாய தேவையாக அமைந்திருந்தது. கொரோனா என்னும் கொடிய நோய் உயிரினங்களை துன்பப்படுத்திய போதும் வடமாகாணத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் தனது வைத்திய சேவையால் அனைத்து உயிர்களையும் பாதுகாத்த பெருமை வைத்தியரைச் சாரும். அன்பும், அடக்கமும், எல்லோருடனும் அன்பாக பழகும் தன்மையும் எடுத்த பணியை செவ்வனே ஆற்றக்கூடிய திறனைக் கொண்ட வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி இவ் விழாவினை ஏற்பாடு செய்திருக்கும் கரவெட்டி மக்களையும் வாழ்த்தி கலாநிதி அவர்கள் குடும்ப சகிதம் பல்லாண்டு காலம் வாழ மீண்டும் வாழ்த்தி அமைகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt. Revd. Dr. Justin B Gnanapragasam*
*Bishop of Jaffna*

Bishop's House,
P.O. Box No. 02
Jaffna - Sri Lanka
Tel: +94(0) 21 222 2649 (O)
+94(0) 21 222 2161 (R)
Email: gnanamjb48@gmail.com

16.03.2024



# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சிறப்பாக கடமையாற்றிய வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் மணி விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்கி, இறையாசி வேண்டி நிற்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவர் அன்பானவர், இரக்கண குணம் உடையவர், எல்லோரையும் ஒரே மாதிரியாகப் பார்க்கும் இயல்பு கொண்டவர். இவர் தனது இடைநிலைக் கல்வியை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் கல்வி கற்றதன் பயனாக கிறிஸ்தவ விழுமியங்களை பின்பற்றுகின்ற நல்ல மனிதனாக இருக்கின்றார். வைத்திய அதிகாரியாக தொடங்கிய இவருடைய சேவை விரிவடைந்து சுகாதார வைத்திய அதிகாரியாக, பிராந்திய சேவைகள் பணிப்பாளராக, பிரதி மாகாண சுகாதார சேுவைகள் பணிப்பாளராக, மாகாண மற்றும் பிராந்திய சேவைகள் பணிப்பாளராக பல்வேறு நிலைகளில் இவரின் பணிகள் மக்களுக்கு கிடைத்திருக்கின்றது. வைத்திய மற்றும் சுகாதார துறையில் சிறந்த மாதிரியாக தனது அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து, சேவை புரிந்த இவரது அழகிய வாழ்வு பாராட்டுதற்குரியது. இவருடைய அறிவும், அனுபவமும் தொடர்ந்தும் வைத்திய மற்றும் சுகாதார துறைக்கும், சமுதாயத்திற்கும் கிடைக்கவும், இவர் என்றும் மகிழ்வாகவும், வளமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ ஆசித்து இறையாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

இறைவன் என்றும் அவரை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,

+ Gnanapragasam

பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
E-mail: thurkaiammantemple@gmail.com
Face Book: tellidurga@gmail.com
Tel: 021-3213151 Fax: 021-2241909
தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு. திருமுருகன்
Dr. ARU. THIRUMURUGAN
Hot Line: 077-6258511
E-mail: aaruthirumurugan@gmail.com
திகதி: 10/02/2024



# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக அரிய சேவைகளாற்றி ஓய்வு பெறும் வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழாக் குறித்து ஆசி கூறி வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். கரவெட்டி கிராமத்தில் கடவுள் பக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்த இவர், மருத்துவப் பணியில் சிறந்த நிர்வாகியாகச் செயல்பட்டு பலரது பாராட்டையும் பெற்றவர். சுமார் 34 ஆண்டு காலம் எம் மண்ணில் மருத்துவ சேவையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். கடந்த பத்தொன்பது ஆண்டுகள் அவரோடு பழகும் வாய்ப்புக் கிட்டியது. சிறந்த சமூக உணர்வு மிக்கவராக தனது பதவிக் காலத்தைப் பயன்படுத்திய பண்பாளர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் இணைந்து வலி வடக்கில் சித்த வைத்தியசாலை ஆரம்பிப்பதற்கு இவர் எடுத்த முயற்சிகள் மறக்கமுடியாது. கொவிட் 19 நோய்க் காலத்தில் இவரது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டாதவர்களில்லை. விடுமுறை நாட்களிலும் அயராது சேவையாற்றும் பண்பாளனை உளமார வாழ்த்தி சகல நலங்களுடனும் என்றும் சிறக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு திருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்போக்கு கொண்ட வினைத்திறனான சுகாதார சேவை நிர்வாகி



வடபுலத்து சுகாதாரத்துறையின் நிர்வாகப் புலத்தில் நீண்ட அனுபவம் கொண்ட வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் தனது அறுபதாவது வயது கண்டு அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார் என அறிகின்றபோது நம்ப முடியவில்லை. அவரது துடிதுடிப்பான தோற்றம், இளமைச் சாயலை என்றும் பிரதிபலிக்கும் புன்னகை நிரம்பிய வதனம் அவருக்கு அறுபது வயது வந்து மணிவிழாக் காண்கின்றார் எனும் செய்தியை மறுக்கும் காரணிகளாக முனைப்புப் பெறுகின்றன.

வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களும் நானும் ஹாட்லிக் கல்லூரியில் சம காலத்தில் மாணவர்களாக இருந்தவர்கள். பாடசாலை நாள்களிலேயே அவரை நான் அறிவேன். மிக மென்மையான சுபாபம் கொண்டவராகவும் பழகுவதற்கு இனியவராகவும் இருந்தவர். பாடசாலை நாள்களில் அவரது பேச்சில் இருந்த கனிவும் தெளிவும் அவர் மருத்துவ தொழில்துறைக்குள் புகுந்து அதில் பல நிர்வாகப் புலங்களை ஆட்சிசெய்தபோதும் மாறவில்லை. நாங்கள் பாடசாலைக் கல்வியைப் பெற்ற காலத்தில் தான் மெதுமெதுவாக போரின் தாக்கம் வெளிக்கிளம்பத் தொடங்கியது. வடமராட்சிப் பிரதேசம் போர் ஏற்படுத்திய பல தாக்கங்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. இளையவர்கள் பொருளாதாரத் தேவைக்காகவும் கல்வித் தேவைக்காகவும் புலம்பெயரத் தொடங்கினார்கள். அவ்வாறு புலம்பெயர்ந்தவர்களுள் பலர் மீளவும் மண்ணுக்கு திரும்ப முடியாது அல்லது விரும்பாது வேற்று நாடுகளில் தம் வாழ்வை திடப்படுத்திக்கொண்டனர். ஆனால் உள்நாட்டுக் கல்வி வாய்ப்பு, மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளால் மறுக்கப்பட்ட சூழலில் மருத்துவக்கல்வி பெறுவதற்காக ரஸ்சியாவுக்குச் சென்ற கேதீஸ்வரன் அவர்கள் மீண்டும் தாயகம் திரும்பி தன்னை இலங்கை சுகாதார அமைச்சில் ஒரு வைத்திய அதிகாரியாக இணைத்துக்கொண்டார்.

வடக்கு கிழக்கில் மட்டக்களப்பு, வவுனியா என ஆரம்பித்த அவரது சுகாதார சேவைப்பணி பின்னர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எனும் உயர் தகமையில் வடக்கு மாகாணம் முழுவதும் செறிந்தது. மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் மருத்துவ நிர்வாகத்துறைக்குள் தம்மை இணைத்துக்கொள்ள முன்வருவது என்பது சமூகத்துக்குச் செய்யும் தியாகத்துக்கு ஒப்பானது. குறிப்பாக மருத்துவர்கள் சிகிச்சையியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் ஆரம்பநிலைகளில் பணியாற்றினால் கூட பல சந்தர்பங்களில் மருத்துவநிர்வாகத் துறையில் மேல்நிலையிலுள்ள அதிகாரிகளைவிட அதிகம் சம்பாதிக்ககூடியதாகவுள்ளது. அத்துடன் மருத்துவ நிர்வாகத் துறை சார்ந்த அதிகாரிகள் சந்திக்கின்ற சவால்கள் மிகச் சிக்கலானவை. ஆளிடை முரண்பாடுகள், பொருளாதார மட்டுப்பாடுகள், தேவைகளின் பெருக்கம், மக்களின் எதிர்பார்ப்பு மட்டம் என நிறைந்த சவால்களுக்குள்ளால் தமது நிர்வாகத்தை நகர்த்த வேண்டிய தேவைப்பாடு இவர்களுக்கு உண்டு. இத்தகைய சூழலில் மருத்துவ நிர்வாக துறைக்குள் தம்மை உட்படுத்தி பொது மக்களுக்கு கிடைக்கும் சுகாதார சேவைகளின் தரத்தை உறுதிசெய்ய உழைக்கும் அதிகாரிகள் பாராட்டத்தக்கவர்கள். அத்தகையதொருவரே வைத்தியர் கேதீஸ்வரன் அவர்கள்.

வைத்தியர் கேதீஸ்வரன் அவர்கள் சுகாதாரத் துறையில் இணைந்து பயணித்த காலத்தின் பெரும்பகுதி பெரும்நெருக்கடியான பொருளாதாரத் தட்டுப்பாடுகளும் போரினால் விளைந்த அனர்த்தங்களும் சூழ்ந்த காலப்பகுதி. அத்தகைய நேரங்களில் வவுனியா மற்றும் யாழ்ப்பாண பிராந்தியங்களின் சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய பொழுது அவர் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தார். அவற்றை மிகவும் சாதுரியமாகவும் திடமான மனதுடனும் எதிர்கொண்டார். அதுபோன்று போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எனும் தகமை நிலையுடன் இருந்த அவர் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுத் திட்டங்களில முன்னின்று செயற்பட்டார். அவரது காலத்தில் வடக்கு மாகாணத்தின் சுகாதார துறை பல முன்னேற்றங்களைக் கண்டது. அரசாங்கத் திட்டங்களுக்கு அப்பால் கொடைவழங்குனர்கள் பலரை அணுகி சுகாதாரத் துறை சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய முனைப்புடன் செயற்பட்டவர். உலகவங்கி, உலக சுகாதார தாபனம், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முகவர் அமைப்புக்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இந்திய ஜப்பான் அரசுகளின் நிதியுதவிகள் எனப் பலதரப்பட்ட உதவிகளைப் பெற்று வடக்கு மாகாண சுகாதாரத் துறையை மேம்பாடு அடையச் செய்தவர். தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை இவரது சேவைக்காலத்தில் புதிய பரிமாணத்தைப் பெற்றது. புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நம்மவர்களுக்கு பெரும் ஆறுதலாக அமைந்தது இவரது தலமைத்துவத்தில் அமைந்த பல பணிகள். அத்துடன் இலவச அம்புலன்ஸ் வண்டிச் சேவை, பிராந்திய மருத்துவநிலையங்களின் மீள்எழுச்சி, கஷ்ட பிரதேசங்களுக்கான வைத்திய அதிகாரிகள் நியமனம் என காலத்தால் நினைக்கத்தக்க பல பணிகள் இவரது தலமைத்துவக் காலத்தில் நிறைவேறின.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலாக 2020ஆம் ஆண்டு ஏற்பட்ட கோவிட் 19 பெரும் தொற்றுக் கால முகாமைத்துவம் என்பது வைத்தியகலாநிதி கேதீஸ்வரன் அவர்களது இடர்முகாமைத்துவ திறனுக்கு சான்று பகரும் விடயமாகும். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக அவர் செயற்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட இவ் சுகாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தத்தை அவர் மிகவும் திறமையாக கையாண்டார். தன் சக ஆளணியினரின் ஆற்றல்களை ஒருங்கிணைத்து தொற்று நெருக்கடிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அக் காலப்பகுதியில் பல்கலைக்கழகம் சார்ந்த பெரும்பங்களிப்பு ஒன்றை எனது தலைமைத்துவத்தின் கீழ் அவருக்கு வழங்கக் கூடியதாகவிருந்தது.

கோவிட் தொற்றை இனம் காண்பதற்கான பி.சி.ஆர் பரிசோதனையை எமது மருத்துவபீட விரிவுரையாளர்கள் வைத்தியகலாநிதி ச.முருகானந்தன் மற்றும் பேராசிரியர் செ.கண்ணதாசன் வழிநடத்தலில் மேற்கொண்ட பொழுதுகளில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கும் பல்கலைக்கழகத்துக்குமான உறவுநெருக்கம் மேலும் வலுப்பெற்றது. மிகவும் அபாயகரமான சிக்கலான தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பல்கலைக்கழகம் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கியது. அப்போது அதற்கான வளங்களை ஏற்பாடு செய்வதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியகலாநிதி கேதீஸ்வரன் ஆற்றிய பணி பெரிது. காலத்தால் என்றும் நினைக்கத்தக்கது.

இவ்வாறு வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் தனது கனதியான தடத்தை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நிர்வாகப் புலத்தில் பதித்து ஓய்வுபெறுகின்றார். அவரது நல்ல குணப்பண்புகள் அவரைத் தொடர்ந்து வரும் இளையவர்களுக்கு முன்மாதிரிகளாக அமையும்.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் அறுபது வயது கண்டு அரசாங்க சேவையில் ஓய்வுபெற்றாலும் அவரது சேவை இந்த மண்ணுக்கு ஏதோ ஒரு வகையில் கிடைக்க வேண்டும். அவர் நீண்ட ஆயுளுடனும் தேக ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டும். அவரைச் சார்ந்த உற்றமும் சுற்றமும் மேலும் பல உயர்வுகள் பெறவேண்டும். இவையனைத்தும் ஈடேற எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து, வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச் செய்தி



மானிடர் உயிர் காக்கும் மருத்துவத் தொழிலில், வினைத்திறனும் விளைதிறனும் மிக்க பல்வகைப்பட்ட மருத்தவம் மற்றும் சுகாதார சேவையினை ஆற்றியோர் பலர் இருப்பினும், வடக்கு மாகாணத்திலே தங்களின் அதிகளவான காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றியோர் ஒரு சிலரே. அத்தகையான சேவையாளர்களுள் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களும் விளங்குவதையிட்டு நான் பெருமையும் மகிழ்வும் அடைகிறேன்.

இறைவன் படைப்பில் மண்ணுலகில் பிறந்து வாழும் ஒவ்வொரு மனிதனும் சீரான வாழ்வினை வாழும்படியும் தன்னலமற்றதுமான சேவையினை ஆற்றும் படியும் இறைவனால் நிர்ணயிக்கப்படுகின்றான். அதே மனிதன் இறைவனுக்கு அடுத்தபடியாக மனப்பூர்வாமன நன்றியறிதலுடன் தன்னலமற்ற சேவைக்காக கைகூப்பி வணங்குவது மரணத்தினிறும் உயிரை மீட்டெடுக்கும் மருத்துவர்களையே.

வடமராட்சியில் கரவெட்டி பிரதேசத்தில் பிறந்து அதே பிரதேசத்தில் உள்ள பாசடாலைகளில் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியினை முடித்து ரஷ்யா நாட்டில் உள்ள Belarus USSR பல்கலைக் கழகத்தில் 1983-1989 காலப்பகுதியில் தனது மருத்துவ பட்டப் படிப்பினை பூர்த்தி செய்து கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 1989-1990 இல் உள்ளகப் பயிற்சியினை முடித்த பின்பு தனது முதல் அரச சேவைக்கான நியமனத்தினை வைத்திய பொறுப்பதிகாரியாக களவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் 15.09.1990 இல் ஆரம்பித்தார். இரு வருட கால மருத்துவ சேவையின் பின்னர், வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் 1992 இல் வவுனியா பொது வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்று அர்ப்பணிப்புடனான மருத்துவ சேவையினை வழங்கினார்.

வடக்கு மாகாணத்தில் 1990ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு யுத்த காலமானது பொது மக்களுக்கு மட்டுமன்றி மருத்துவ துறையினக்கு ஒரு சவாலான காலமாகும். பல உயிர்களை மரணத்தின் விளிம்பிலிருந்து மீட்டெடுத்து நெருக்கமான பாதுகாப்பற்ற சூழலில் முதலுதவி மற்றும் மருத்துவ சேவையினை வழங்கி மறுவாழ்விற்குள் அவர்களை இட்டுச் சென்ற மருத்துவர் குழாமை யாரும் மறக்க முடியாது. பிராந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று மருத்துவம் சார் நிர்வாகத்தின் பொறுப்பதிகாரியாக மட்டுமன்றி வைத்தியருக்கு உரியதான கடமையுணர்வும் நேர்மையும், ஆளுமை மிக்க நிர்வாகியாகவும் பல சவால்கள், தடைகள், இடர்பாடுகளுக்கு மத்தியிலும் வடக்கு மாகாணத்திற்கேயான அக/ புற சவால்களுக்கும் முகம் கொடுத்தும், தனது பொறுப்பிற்குள்ளான மருத்துவம் மற்றும் சுகாதார சேுவைகளை மிகவும் துணிவோடும் வினைத்திறனோடும் நிறைவேற்றியது மட்டுமன்றி, பொது மக்களின் மத்தியில் ஒரு கைராசியான வைத்திய அதிகாரி என்கின்ற நற்சாட்சியினையும் பெற்றுள்ளமையை யாரும் மறுக்க முடியாது. இவருடைய அயராத மருத்துவ சேவையும் ஆளுமை விருத்தியுடனான நிர்வாகப் பணியும் பிற மாவட்ட வைத்திய அதிகாரிகளின் மனதில் மருத்துவம் மற்றும் சுகாதார சேுவைகள் தொடர்பில் புதிய எண்ணக்கருவினை உருவாக்கியுள்ளது என்பது ஒரு நிதர்சனமான உண்மையாகும்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு பலதரப்பட்ட விசேட திட்டங்களை உரிய முறையில் தயாரித்து உலக வங்கி, (WB) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) போன்ற வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களிற்கு சமர்ப்பித்து அவற்றினை திறம்பட செயற்படுத்தியுள்ளார்.

விசேடமாக, கொவிட் எனும் மரணக் கொல்லி நோயின் தாக்கத்தினால் உலக நாடுகள் அனைத்துமே முடங்கி மருத்துவம், சுகாதார சேவைகள் மற்றும் பொருளாதார ரீதியாக நெருக்கடிக்குள்ளாகியிருந்த அபாயகரமான சூழ்நிலையில், இலங்கை நாடானது நோயின் தாக்கத்தினை மிகவும் கட்டுப்பாட்டு நிலைக்குள் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய இக் காலப் பகுதியில், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இந் நோயின் தாக்கத்தினை கட்டுப்பாட்டு நிலைக்குள் வைத்திருந்தது மட்டுமல்லாமல் அவசியமான அத்தியாவசியமான சகல மருத்துவ சுகாதார சேவைகளை ஒரு சிறந்த பொறிமுறையினை பிரயோகித்து மாவட்ட, பிரதேச வைத்தியசாலைகளுக்கூடாக பொதுமக்களுக்கு வழங்கி அவர்கள் மத்தியில் நோயின் பயத்தினை நீக்கி ஒரு சுமுகமான சூழலில் வாழும்படியாக செய்த சேவையானது மிகவும் பாராட்டுதற்குரியது.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் என்பவரை நினைக்கும் போது சாந்தமான முகபாவமும் தெளிவான கருத்து நிறைந்ததும் போதிய விளக்கங்களுடனான பேச்சும் யாவருக்கும் முதலில் தோன்றும். பல சுகாதார சேவை மேம்படுத்தல் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள் அமுல்படுத்தவும் திருப்திகரமாக நிறைவேற்றப்படும் என்கின்ற நம்பிக்கையினை வெளிநாட்டு உதவித் திட்ட அதிகாரிகளிடத்தில் தோன்றப்பண்ணியவை இவருடைய இவ்வகையான ஆளுமைப் பண்புகளே. இவர் ஒரு சிறந்த கவிஞனுமாவார்.

கடமைகளை நிறைவேற்ற சந்தர்ப்பங்களுக்காக காத்திராது, கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தினையும் அர்ப்பணிப்புடனான கடமைகளாலும் பணிகளாலும் சுகாதார சேவைத் துறையை உயர்த்துவதே தனது அளப்பரிதான கடமையாகக் கொண்டு செயற்பட்ட ஒரு நல்ல அதிகாரியாவார். கண்ணியமிக்க கடமையுணர்வு நிறைந்த அதிகாரியாகவும், நேர்ச்சிந்தனைகள் ஆன்மீகப் பண்பு நிறைந்த பொதுமகனாகவும், தனது பணிக்காலத்தினை நிறைவேற்றியுள்ள எனதன்பான வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் தனது ஓய்வுக் காலத்திற்கான சேவை திட்டங்களுடன் கடமையாற்ற காத்திருக்கும் இவ் வேளையில், மிகவும் நலத்தோடும் சிறப்போடும் வாழ இறைவனை பிரார்த்திப்பதோடு அவரின் தன்னலமற்ற சமூக சேவைப் பணிகள் மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

**இளங்கோவன்**

பிரதம செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மகோன்னதமான சுகாதார சேவையை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற அன்பிற்கும், மரியாதைக்குமுரிய வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களுடைய மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"நோய் நாடி நோய் முதல் சாடி - அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் அர்த்தமுள்ள குறளுக்கு உதாரண புருஷராக வைத்திய கலாநிதி அவர்களை நான் காண்கின்றேன். மிகவும் அன்பான, சாந்தமான, அனைவருடனும் மிக இலகுவாகவும், எளிமையாகவும் பழகுகின்ற அவரது குணாதிசயங்களும், அவரிடம் காணப்படுகின்ற அதீத திறமையுமே அவரை சுகாதாரத்துறையின் உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கு அச்சாணியாக அமைந்தது எனலாம்.

2009 ம் ஆண்டில் வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து மீளக்குடியமர்த்துவதற்காக இம் மாவட்டத்தில் தஞ்சமடைந்த பல்லாயிரக்கணக்கான மக்களைப் பொறுப்பேற்று, திட்டப் பணிப்பாளராக மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிய போது, இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மக்களை சுகாதார ரீதியாக நல்நெறிப்படுத்துவதற்கு எமக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கி மக்களின் சுகாதாரம் சார்ந்த தேவைகளை அறிந்து செயற்பட்ட ஒருவர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் என்றால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்லாது, 2020ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. இந் நிலையில் மிகவும் அர்ப்பணிப்புடன் துரிதமாக செயற்பட்டு பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும், வைத்தியப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு மக்களின் சுகாதாரம் சார்ந்த தேவைப்பாடுகளை நிறைவேற்றியதுடன், பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி எமது யாழ்ப்பாண மாவட்ட மக்கள் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்த் தாக்கத்திலிருந்து மிக விரைவாக மீள் நிலையை அடைவதற்கு வித்திட்டவர் என்பதில் எந்தவிதமான ஐயமில்லை.

தன்னலமற்ற, அர்ப்பணிப்பான மக்கள் சேவையாலும், அதிகாரத் தோரணையற்ற தனது அன்பான, பணிவான, நேர்த்தியான தலைமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளாலும் உத்தியோகத்தர் மத்தியிலும், மக்கள் மனங்களிலும் ஒரு நீங்காத இடத்தை வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் தக்க வைத்துள்ளார் என்பதனை யாரும் மறுத்துவிட முடியாது.

வடக்கு மாகாண, குறிப்பாக மாவட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளுள் முக்கியமான ஒன்றாகிய சுகாதார சேவைகளை மிகச் சிறந்த முறையில் வழங்கி வைத்திய கலாநிதி.ஆ.கேதீஸ்வரன் அவர்களுக்கு இம்மணி விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மணிவிழாக்குழுவினருக்கு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர் ஓய்வுக் காலத்தில் தொடர்ந்தும் மாவட்டத்தின் சுகாதார, வைத்திய வளர்ச்சியிலே தன்னுடைய பங்களிப்பை வழங்குவதுடன், ஆரோக்கியத்தடன் நீண்ட காலம் வாழ இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்**
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் (பதில்),
யாழ்ப்பாண மாவட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து செய்தி



மணிவிழா காணும் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் பல்வேறு வகிபாகங்கள் எடுத்து வட மாகாண சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். வட மாகாணத்தில் 1992 ஆம் ஆண்டு வவுனியா பொது வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகவும், 1998 ஆம் ஆண்டு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியாகவும், 2002 ஆம் ஆண்டு வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையாற்றிய டாக்டர் கேதீஸ்வரன் அவர்கள் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கு முன்மாதிரியான பல செயல்களை ஆற்றியுள்ளார். இவர் வடக்கு மாகாணத்தில் கடமையை பொறுப்பேற்ற சமயம் யுத்தத்தினால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருந்த மக்களுக்கு சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவதில் அதிகமான சவால்களை எதிர்நோக்கியிருந்தார். ஆளணிப்பற்றாக்குறை, போக்குவரத்து வசதியீனம், போதிய மருத்துவ உபகரணங்கள், மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு, கட்டட வசதியின்மை போன்ற பல குறைபாடுகள் சுகாதாரத்துறையில் நிலவிய போதும், சுகாதார சேவைகளை சிறப்பான முறையில் முன்னெடுத்திருந்தார்.

இவ்வாறாக 13 வருடங்கள் வவுனியா மாவட்டத்தில் நிறைவான சேவையாற்றி 2005 ஆம் ஆண்டு முதல் இடமாற்றலாகி தனது பிறந்த மாவட்டத்திற்கு சேவையாற்ற ஆரம்பித்தார். யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கு பல்வேறு முனைவுகளை மேற்கொண்டதுடன், தமது அலுவலகம் தேசிய சுகாதார மேன்மைக்கான விருது, தேசிய உற்பத்தித்திறன் விருது போன்ற பல விருதுகளை பெற்று கொள்ள காரணமாயிருந்தார்.

மேலும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் சுகாதார சேவைகளின் மறுமலர்ச்சியில் இவரது வகிபாகம் சிறப்பானதாகும். யாழ் மாவட்டத்தில் பெரும்பாலான வைத்தியசாலைகளிற்கு தேவையான விடுதிகள், வெளிநோயாளர் பிரிவு கட்டடங்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கான விடுதிவசதிகள் போன்றவற்றினை சிறந்த முறையில் திட்டமிட்டு பாரிய செயற்திட்டங்களினூடாக நிதியினை பெற்று நிர்மாணித்ததுடன், பெருமளவு வைத்திய உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் வைத்திய சேவைகளை நாடும் நோயாளிகள் பெருமளவில் நன்மையடைந்து வருகின்றமை கண்கூடாகும். மேலும் யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் அதிகமான உளநோய்களின் வெளிப்பாடுகள் காணப்பட்ட நிலையில், உளநல மேம்பாட்டிற்காக இலங்கைக்கு முன்மாதிரியாக "குடில", "மாதவம்" போன்ற பல அலகுகளை யாழ் மாவட்டத்தில் உருவாக்கியிருந்தார்.

டாக்டர் கேதீஸ்வரன் அவர்கள் தமது அர்ப்பணிப்பான சேவைகளை யாழ் மாவட்டத்திற்கு மட்டுமன்றி, வட மாகாணம் முழுவதற்கும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்து வழங்கியிருந்தார். நெதர்லாந்து அரசினால் வழங்கப்பட்ட சுமார் ரூபா 9 பில்லியன் பெறுமதியான இலகு கடன்திட்டத்தின் கீழ் நான்கு பாரிய விசேட மருத்துவ சேவை வழங்கல் பிரிவுகளை பருத்தித்துறை, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மாங்குளம் வைத்தியசாலைகளில் உருவாக்குவதற்கு பங்காற்றினார். மேலும் பல வெளிநாட்டு நன்கொடைகள் வட மாகாண சுகாதாரத்துறையின் அபிவிருத்திக்கு கிடைக்கப் பெற வழிவகுத்தார்.

டாக்டர் கேதீஸ்வரன் அவர்களது துூர நோக்கான சிந்தனைகளும், அர்ப்பணிப்பான அரச சேவையும், செயற்துணிவும், விடாமுயற்சியும் கடந்த இரு தசாப்த காலத்தில் சுகாதாரத்துறையில் அவரது வெற்றிக்கு காரணமாக அமைந்தன. அவரது சேவைகள் மேலும் சிறப்புறுவதுடன், அவரது எதிர்கால வாழ்வு வளம்பெற வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் சார்பாக மனதார வாழ்த்துகிறேன்.

**ம.ஜெகூ**

செயலாளர்

சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பாராமரிப்பு சேவைகள் அமைச்சு

வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவை மண்ணின் பெருமை வைத்தியர் ஆ.கேதீஸ்வரன்



வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களது சேவையின் மகத்தவத்தை முழுமையாக அறிந்தவன் என்ற வகையில் அவரது அறுபதாவது அகவை பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

எங்கள் மண்ணின் மைந்தன் என்ற வகையிலும் கரவை தச்சை விநாயகரின் தீவிர பக்தர் என்ற வகையிலும் அவரை அறிந்திருந்த நான் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றும் காலத்தில் அவரது சேவையின் பல பரிமாணங்களையும் அறிந்த கொள்ள முடிந்தது.

சந்தர்ப்பங்களுக்கேற்ப மாற்றமடைந்து வந்த வடமாகாண மக்களின் சுகாதார தேவைகளை இனம்கண்டு அவற்றுக்கு வழங்கக் கூடிய சிறந்த சேவைகளை வழங்குவதற்கு அவர் எடுக்கக் கூடிய ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டு அரசினால் வழங்கப்படும் அத்தியாவசிய சேவையாகிய சுகாதார சேவையை அர்த்தமுள்ள வகையில் பெற்றுக் கொடுத்தார்.

ஊரடங்கு காலத்தில் அவசர நோயாளர்களுக்கும் பிரசவத்துக்குமான போக்குவரத்து வசதிகள், பொருளாதார தடை விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நோய்த்தடுப்பு மற்றும் குணப்படுத்தலுக்கான தேவைப்பாடுகளை உறுதி செய்து கொள்ளல்.

வெவ்வேறு வகையான மருத்துவத் தேவைகள் உள்ளவர்களுக்கான விசேட செயற்பாடுகள்.

தொற்று நோய்கள் பரவும் சந்தர்ப்பங்களில் அவசிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அவசர மாற்று நடவடிக்கைகளும் என சுகாதார சேவையின் முழுமையான பலன்களை எமது மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் நிகரில்லாத ஒரு நிர்வாகியாக தொழிற்பட்டவர் கேதீஸ்வரன் அவர்கள்.

வடமாகாண மக்களுக்கு வரப்பிரசாதமாக கிடைத்திருக்கும் DRIVE செயற்றிட்டங்களில் முன்னாள் மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி சத்தியலிங்கம் அவர்களுடன் இணைந்து கேதீஸ்வரன் அவர்கள் ஆற்றிய பங்களிப்பினாலேயே இன்று சுகாதார சேவையின் பல மைல்கள் முன்னேறிய நிலையிலான அத்திட்டங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகள் எமது மாகாணத்துக்கு கிடைக்கப்பெற்றன.

நான் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் சிறந்த வகையில் நிர்வாகத்திற்கான ஒத்தழைப்பை வழங்கி அமைச்சின் பொறுப்புகளை நிறைவேற்றும் கடமைகளை இலகுபடுத்தியிருந்தார்.

அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை, படுக்கை நோயாளிகளுக்கான வீடுகளிலான சேவை, முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட சேவை மையம், இப்படி வடமாகாணத்தின் ஒவ்வொரு சுகாதார சேவை முன்னெடுப்பிலும் அவரது பங்களிப்பு நினைவில் நிலைத்திருக்கும்.

மத்திய அமைச்சில் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வுகளில் வடமாகாணத்தின் செயற்பாடுகள் பாராட்டப்படும் அளவில் தமது கடமைகளை பொறுப்புணர்வுடன் ஆற்றியிருந்தார்.

அவரால் ஆற்றப்பட்ட பணிகளினை முழுமையாக விபரிக்க இந்த ஒரு இதழ் போதுமாக இருக்காது என்பது எனது கருத்தாகும்.

எப்போதும் அமைதியுடன் பொறுமையுடன் ஒரு மருத்துவ சேவகனுக்கே உரித்தான சகல பண்புகளுடனும் அரச சேவையில் தனக்கே உரித்தான சகல இடம் ஒன்றை பதிவு வெய்திருக்கும் அவர் தொடர்ந்தும் சுகாதார சேவைக்கு தனது உயரிய பங்களிப்பை வழங்குவாராக இருந்தால் அது எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதாக அமையும்.

அவரால் பயன் பெற்ற அத்தனை மக்களின் வாழ்த்துக்களுடனும் தச்சை விநாயகரின் அருளாசியுடனும் அவர் சகல சௌபாக்கியங்களுடனும் நீடுழி வாழ, அறுபதை நிறைவு செய்யும் இவ் வேளையில் வாழ்த்துவதில் நிறைவடைகிறேன்.

**சிவகுருநாதன் திருவாகரன்**
செயலாளர்
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றலும் ஆளுமையும் மனிதநேயமிக்க சேவையாளன்



கடந்த மூன்று தசாப்தங்களாக சுகாதாரத்தறையில் அர்ப்பணிப்புடனும்செயலூக்கத்துடனும்அளப்பரியசேவையினை குறிப்பாக வடமாகாண மக்களிற்கு வழங்கியவர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள். நான் இலங்கை நிருவாக சேவையில் இணைந்த காலப் பகுதியில் இருந்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் வடமாகாணத்திலும் அவருடன் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருந்தது. அன்பும், பண்பும், மனித நேயமும், சேவைமனப்பாங்கும் அவரிடம் நான் கண்ட குணாதிசயங்களாகும். எந்த விடயத்தினையும் மிக இலகுவாக அணுகி அதனை மக்கள் நலன்சார்ந்து சிந்தித்து அதற்கு செயல்வடிவம் கொடுக்கும் சிறப்பு அவரிடம் காணப்பட்டது. அவரின் சேவைக்காலப் பகுதியில் வடமாகாண, சுகாதாரத்துறை பாரிய அபிவிருத்திகளையும், வளர்ச்சிகளையும் பெற்றது. பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக (உள்ளூர், சர்வதேச) நிதியீட்டங்களை பெற்று வைத்தியசாலைகள், நோயாளர்களிற்கான தங்குமிட வசதிகள், மருத்துவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிற்கான விடுதி வசதிகள், மருத்துவ உபகரணங்கள், சுகாதாரதுறை பாரிய அபிவிருத்திகளையும், வளர்ச்சியினையும் பெற்றது. பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக (உள்ளூர், சர்வதேச) நிதியீட்டங்களை பெற்று வைத்தியசாலைகள், நோயாளர்களிற்கான தங்குமிட வசதிகள், மருத்துவ உபகரணங்கள், சுகாதாரதுறை நிரவாகத்திற்கான பாரிய கட்டுமாணங்கள் மற்றும் வசதிகள் என பல்வேறு கோணங்களில் அபிவிருத்திக்கான வழிவகைகளை சிறப்பாக கையாண்டு வினைத்திறனுடனும், விளைதிறனுடனும், மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாடு அசாதாரண சூழ்நிலையில் இருந்த காலகட்டங்களில் மக்களிற்கான மருத்துவ சேவையினை குறிப்பாக நடமாடும் வைத்திய சேவைகள் எமது மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பினைப் பெற்று நிறைவேற்றியமை பாராட்டத்தக்கதாகும். அக் காலப்பகுதியில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையிலும் கூட அவசர சிகிச்சைகளிற்கான வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நோயாளர்களிற்கான 110 அம்புலன்ஸ் சேவையினை அறிமுகம் செய்து எல்லோரினதும் பங்களிப்புடன் அதனை வெற்றிகரமாக நடமுறைப்படுத்தியமை நன்றியுடன் நினைவு கூரத்தக்கதாகும்.

கொரோனா பெரும் தொற்றுக் காலங்களில் நாடு மிகவும் சவாலான காலகட்டத்தில் அனைவரையும் ஒருங்கிணைத்து சிறப்பான சேவையினை முன்னெடுப்பதுடன் தேவைக்கேற்ப தற்காப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தி மக்களை பாதுகாத்ததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொண்டு தேசிய ரீதியில் வடமாகாண சுகாதாரத்துறைக்கான பெரும் கௌரவத்தினை பெற்றுக் கொடுத்தமையும் பாராட்டத்தக்கதாகும். டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சுகாதாரத் துறையினரால் முன்னெடுக்கப்படும் தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள், அவசரகால இடர் முகாமைத்துவ வேலைத்திட்டங்கள், நலன்புரி நிலையங்களின் பராமரிப்பு போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களில் பிரதான பங்களிப்பினை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். நான் வவுனியா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளராகவும் வடமாகாண கல்வியமைச்சிக் செயலாளராகவும் கடமையாற்றிய காலப்பகுதிகளில் மக்கள் நலன் சார்ந்து. சமூக நலன் சார்ந்து எமது மணவர் நலன் சார்ந்து பல்வேறு வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்து பணியாற்றியமை பாராட்டத்தக்கதாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தனிப்பட்ட ரீதியிலும் எனக்கு மிகவும் பிடித்த நற்பண்புள்ள, ஒரு சிறந்த நண்பனாகவும், முன்னுதாரணம் மிக்க சேவையாளனாகவும், சிறந்த வளவாளராகவும், மற்றவர்கள் பின்பற்றக்கூடிய Role Model ஆகவும், ஆளுமையும் ஆற்றலும் மனிதநேயமிக்க சிறந்த மனிதனாகவும், நான் அவரைப் பார்க்கின்றேன். அவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் இன்னும் பல சமூகப்பணிகள், காத்திருக்கின்றன. வைத்திய சாலைகள் நோயாளர் நலன்புரிச் சங்கங்கள், முதியோர் காப்பகங்களில் அவர் ஒரு ஆலோசகராக இணைந்து எமது மக்களிற்கு சேவையாற்ற வேண்டுவதுடன் ஆன்மீகம் சார்ந்து, மக்களின் சிறப்பான வாழ்வியல் சார்ந்து எமது மாணவர்களின் தொழில் வழிகாட்டல் மற்றும் வாண்மை விருத்தி சார்ந்து பல்துறை ஆளுமையுள்ள ஒரு மிகச்சிறந்த வளவாளராகஎமது சமூகம் அவரின் அறிவு, திறன், மனப்பாங்கின் அடுத்த சந்ததிக்கு கிடைப்பதற்கான ஒழுங்கமைப்பினை மேற்கொள்ள வேண்டும் என அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அவர் தனது ஓய்வுக் காலத்தில் மகிழ்ச்சியுடன் தனது குடும்பத்தினருடன் நீண்டபாலம் நோய் நொடியின்றி வாழ எல்லாம் வல்ல தச்சன் தோப்பு விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து வேண்டி நிற்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவலிங்கம் சத்தியசீலன்**
(மேலதிக பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,
செத்திரிபாய, பத்தரமுல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்



அகவை அறுபது கண்டு இன்னும் அரச சேவையில் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கும் எனதருமை நண்பர் வைத்தியக் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களை வாழ்த்துவதில் பேருவகையடைகிறென்.

நண்பர் கேதீஸ்வரன் அவர்கள் எனது வயதை ஒத்தவராக இருந்தாலும் அவர் ஹாட்லிக் கல்லூரியிலும் நான் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றிருந்தோம். பின்னர் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி மருத்தவப் பட்டம் பெற்று வைத்திய அதிகாரியாக தன் அரச பணிகளைத் தொடர்ந்து இன்று சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளராக தன் சேவைகளை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

அவருடைடய சேவைக் காலத்தில் வடமாகாணம் முழுவதும் பயனடைந்துள்ளது என்பதுடன் தான் பிறந்து வளர்ந்த கரவெட்டிக் கிராமத்தின் வைத்தியசாலைக்கும் புதிய கட்டிடங்கள் அமைத்து உயர்வான வைத்திய சேவைகளைப் பெறச்செய்தமையும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு தனிப்பட்ட நலன் விரும்பிகளிடமிருந்தும் அரசாங்க மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்தும் பெரும்தொகை நிதிகளைப் பெற உயரிய பங்களிப்பு வழுங்கியமையையும் பெருமையடையச் செய்யும் விடயங்களாகும்.

இன்னும் உற்பத்தித்திறன் போட்டிகளில் மிகச் சிறப்பாக வைத்தியசாலைகள் மற்றம் பிராந்திய அலுவலகங்களை ஒழுங்கமைத்து நேர்த்தியான விரைவான சேவைகளைப் பெறவைத்தமைக்காக உயரிய ஜனாதிபதி விருதுகளையும் தன்வசமாக்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நண்பர் கேதீஸ்வரன் நீண்ட ஆயுளுடனும், நிறைவான செல்வத்துடனும் உயர்ந்த புகழுடன் அளவற்ற மகிழ்ச்சியுடனும் இன்றுபோல் என்றும் வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகிறென்.

**இராஜரட்ணம் வரதீஸ்வரன்**

ஓய்வுநிலை உள்ளுராட்சி அமைச்சின் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர் பற்றிய எனது பார்வை



வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் ஒரு உன்னத மானிடர். அவரை பற்றி சில வார்த்தைகள் பகிர்வதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் மகிழ்வடைகிறேன். இதனை நான் ஒரு பெருமையாக கருதுகிறேன். இதற்கு மணிவிழா குழுவினரிற்கு எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வைத்தியர் உடன் எனது தொடர்பு இருபது வருடங்களுக்கு மேற்பட்டது. இது முதன்மையாக தொழில் சார்ந்தது. அவருடைய தொழில்சார் அர்ப்பணிப்பு அளப்பரியது. அவரிடம் பிடித்த பழக்கம் என்னவெனில் ஒரு வேலையை எடுத்துக் கொண்டால் அதனை செய்துமுடிக்க காட்டும் அக்கறையும் அதனை எப்படியாவது செய்து முடிக்க அவர் போடும் எத்தனிப்புகளும் பல மருத்துவ துறைசார் நிர்வாகிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

அவருடன் சேர்ந்து பயணித்ததின் ஊடாக நான் கண்ட சில முக்கியமான மருத்துவ பணிகளை இங்கே குறிப்பிட்டு அது எவ்வாறு அன்றாட மக்களின் வாழ்விற்கு உறுதுணையாக அமைந்தது என்பதை குறிப்பிடுவது தற்போதைய மற்றும் எதிர்கால மருத்துவதுறைசார் தலைவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும்.

இவருடைய மகோன்னத சேவை வவுனியாவில் செய்து கொண்டு இருக்கும் போது 2004 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் திரு.கந்தையா கணேஷ் அவர்கள் யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட காலம். யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிமனையில் நிரந்தர பணிப்பாளர் இல்லாமை போரால் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் சுகாதார சேவைகளை வழிநடத்த சரியான தலைவர் தேவையாக இருந்தது. தேவையை கருத்தில் கொண்டு இவருடைய சேவை யாழ்ப்பாணத்திற்கு தேவை என கருதி யாழ்ப்பாண மாவட்டத்தின் சுகாதார பணிப்பாளராக வைத்தியர் கேதீஸ்வரன் நியமிக்கப்படுகிறார். அவர் தனது சேவைகளை ஆரம்பித்து பல நல்ல விடயங்களை அறிமுகப்படுத்தும் போது சிறிது சிறிதாக போர் மேகங்கள் திரளத் தொடங்குகிறது. இதன் காரணமாக மக்கள் இரவில் நடமாடுவது ஆபத்தானதாக காணப்படுகின்றது. இதனால் இரவு அவசர சிகிச்சைகளுக்காக வெளியில் செல்வதற்கு ஏற்பட்ட பயம் காரணமாக பல நோயாளிகளும் அவர்களின் உறவினர்களும் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு இருந்த போது இவரும் காலம்சென்ற வைத்தியர் ந.சிவராஜாவும் இணைந்து உருவாக்கிய அவசர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை அம்புலன்ஸ் சேவைகள் பல உயிர்களை காப்பாற்ற பேருதவியாக அமைந்ததுடன் அது தற்போது நாட்டில் உள்ள அம்புலன்ஸ் சேவைகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்தது. வளங்கள் குறைந்த நிலையிலும் எவ்வாறு இருக்கும் வளங்களை கொண்டு சேவைகளை உருவாக்க முடியும் என்பதை இதனூடாக எடுத்துக் காட்டியதுடன் சுகாதார சேவைகள் முகாமைத்துவத்தில் எவ்வாறு இருக்கும் வளங்களை திரட்டி மக்களுக்கான சேவைகளை தேவையான நேரத்தில் வழங்குவதுதான் ஒரு சிறந்த முகாமைத்துவத்தின் பண்பு. இதனை திறம்பட செய்வதில் வைத்தியர் கேதீஸ்வரன் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறார்.

இதுபோல இங்கு மேலும் சில வரலாற்று பதிவுகளை பதிப்பிடுதல் சாலப்பொருந்தும். இவர் திறம்பட யாழ்மாவட்ட சுகாதார பணிப்பாளராக கடமையாற்றி வரும் போது வடமாகாண சுகாதார சேவையை வழிநடாத்த ஒரு துடிப்பான பணிப்பாளரின் தேவையை கருத்தில் கொண்டு வடமாகாண சுகாதார சேவைகள் இவரை பணிப்பாளராக பணிபுரியும்படி கேட்டுக் கொண்டதின் பேரில் அப்பதவியை ஏற்று வடமாகாண மட்டத்தில் பல சேவைகளை விருத்தி செய்ய தன்னால் இயன்ற பேருதவியை நல்கியமை கண்கூடு.

அக்காலப்பகுதியில் வடமாகாண சுகாதார திணைக்களத்தினால் மத்திய சுகாதார அமைச்சின் உதவியுடன் பல சேவைகளை விருத்தி செய்வதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் சிலவற்றை குறிப்பிட்டு வைத்தியர் அவர்கள் அதனை திறன்பட செய்து முடித்தார் என்பதை பதிவிட விரும்புகிறேன்.

நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டு உயிர் ஆபத்து ஏற்படக்கூடிய நிலையில் உள்ள நோயாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளில் மருத்துவம் தேவைப்படுபவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு சென்று சேவை வழங்குவதற்கு பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மருத்துவ சேவை ஒன்றை தேவை கருதி ஒரு முன்னுதாரணமாக வடமாகாணத்தில் ஆரம்பிக்க இவரின் உதவி பேருதவியாக அமைந்தது. இது மட்டுமல்லாது இன்று வடமாகாணத்தில் புதிதாக உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகின்ற பல வசதிகள் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டு மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் கிடைப்பதற்கு வைத்தியரின் பங்கு அளப்பரியது.

இவருடைய சேவைகள் வடமாகாண மருத்துவ சேவைகளின் விருத்திக்கு பேருதவியாக இருந்தது. நான் இங்கு ஒருசில உதாரணங்களை குறிப்பிட்டு உள்ளேன். இவரின் பன்முகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் அவற்றின் பயன்கள் எண்ணிலடங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகப்பட்ட ஆளுமைகளை கொண்ட வைத்தியர் அவர்கள் வடமாகாண சமூகத்திற்கும் இலங்கைக்கும் ஆற்றிய அளப்பரிய சேவை எப்போதும் போற்றுதற்குரியது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும் எனும் வள்ளுவனின் குறள் வாக்கிற்கமைய இவருடைய சேவைகளும் பணியும் இவரை உன்னத இடத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவராக கருத்துவதற்குரியவராக்கி உள்ளது. வைத்தியர் கேதீஸ்வரன் அவர்கள் தனது உன்னத பணியை தொடர்வதற்கும் நீண்ட ஆயுளை பெற்று குடும்பத்துடன் சிறப்பாக வாழ அருள்கிடைக்க வேண்டுகிறேன்.

**பேராசிரியர் இ சுரேந்திரகுமாரன்**
பேராசிரியர் சமுதாய மருத்துவத்துறை,
பீடாதிபதி மருத்துவ பீடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி



வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் ஒரு சிறந்த ஆளுமை மிக்க நிர்வாகி ஆவார். அவரது மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் நகரின் பிரசித்தி பெற்ற கரவையூரில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும், உயர் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூ ரியிலும் கற்றுத் தேர்ந்ததுடன், மருத்துவத்துறையை தேர்வு செய்து பட்டப்படிப்பினை பெலாரஸ் நாட்டிலும் பட்டப்பின் படிப்பினை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் படிப்புகள் கற்கைகள் நிறுவனத்திலும் பூர்த்தி செய்தார்.

வைத்திய கலாநிதி. கேதீஸ்வரன் அவர்கள் தனது உள்ளகப் பயிற்சியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொண்டதுடன், தமது முதல் நியமனத்தில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் 1990 - 1992 காலப்பகுதியில் சேவையாற்றினார். அதனைத் தொடர்ந்து வைத்திய உத்தியோகத்தராக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும், சுகாதார வைத்திய அதிகாரியாக வவுனியாவிலும் கடமையாற்றியதுடன், 2002 ஆம் ஆண்டில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்று வவுனியா மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை வழங்கினார்.

அத்துடன், 2005 - 2015 காலப்பகுதியில் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தத்தினால் சிதைவடைந்த நிலையிலிருந்த வைத்தியசாலைகளை பல சிரமங்களின் மத்தியில் மீளக்கட்டியெழுப்பினார். தொடர்ந்து 2015-2016 காலப்பகுதியில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக தனது அர்ப்பணிப்பான சேவையை சுகாதாரத்துறையின் முன்னேற்றத்திற்காக வழங்கி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் தனது மொத்த சேவைக்காலத்தில் ஏறத்தாழ 32 வருடங்களை வடமாகாண மக்களின் நலனுக்காகவே செலவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இலங்கையின் சுகாதார கட்டமைப்பில், வடமாகாண சுகாதார சேவையின் வினைத்திறனை பலரும் வியந்து பேசுமளவிற்கு பல்வேறு மனிதவள மற்றும் பௌதிக வள அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்ட பெருமையும் இவரையே சாரும். விசேடமாக கோவிட் பெருந்தொற்று நோய்க்காலப் பகுதியில் இரவுபகல் பாராது அவர் மக்களுக்காற்றிய பணி அளப்பரியதாகும். அதுமட்டுமன்றி சுகாதார துறை என்பதையும் கடந்து பல்துறை ஆற்றலுடைய இவர் தமிழ் மீது அளவற்ற பற்றுக் கொண்டவராவார் என்பதுடன் எந்நிலையிலும் நேரம் தவறாமையை சிரமேற்கொண்டு கடைப்பிடிப்பவருமாவார்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க தனது சேவையை மனநிறைவுடன் ஆற்றிவரும் வைத்தியகலாநிதி. கேதீஸ்வரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் அவரது வாழ்வு சிறப்பாக அமையவும், அவர் உடல், உள நலத்துடன் நீண்ட காலம் தனது சேவையைத் தொடரவும் மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி**

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,

பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை,

வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்துச் செய்தி



வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் அகவை அறுபது அடைவதை விட்டு வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தனது சேவை காலத்தில், பல்வேறு பணிநிலைகளில் சேவையாற்றிய வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் வட மாகாணத்தின் சுகாதார சேவைகளை கட்டி எழுப்புவதில் முன்னின்று பெரும் பங்காற்றியுள்ளார்.

நீண்ட காலத்தின் பின்னர் வடமாகாண கிராமப்புற வைத்தியசாலைகளின் அபரிமித வளர்ச்சி இவரின் சிறந்த திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட்டன. சிறந்த ஆளணி முகாமைத்துவம், வளப்பங்கீடு, பொதுமக்களுடனான நல்லுறவு, புலம்பெயர் உறவுகளின் ஆதரவு இவரின் செயற்பாட்டுகளுக்கு வலுச்சேர்த்தன.

வடமாகாணத்தின் ஆளணியினரின் பயிற்சிக்காக வட மாகாணத்திலேயே பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்து அதனூடாக எமது பிரதேசத்தில் தகுதியானவர்களை சுகாதாரத் திணைக்களத்தினுள் உள்வாங்க பெரும் பணியாற்றினார்.

யாழ் மாவட்டத்தில் போக்குவரத்து கஷ்டங்கள் நிறைந்திருந்த காலப்பகுதியில் நோயாளர்களின் உயிர் காக்கும் பொருட்டு இவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 110 இலவச அம்புலன்ஸ் சேவை பின்னர் வடமாகாணம் பூராக விஸ்தரிக்கப்பட்டது. இச்செயற்பாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டே பின்னர் நாடு பூராவும் 1990 அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இவரின் தலைமைத்துவத்தின் கீழ் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தர நிர்ணய போட்டிகளில் வட மாகாண சுகாதாரத் திணைக்களமும் நிறுவனங்களும் பங்கு பெற்றதுடன் பல பரிசில்களையும் சான்றிதழ்களையும் தனதாக்கிக் கொண்டன.

கொரனா தொற்று தீவிரமாக பரவிக்கொண்டிந்த காலப்பகுதியில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமை ஆற்றிக் கொண்டிருந்த வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் பணி அளப்பெரியது. இரவு பகல் பாராது, ஓய்வு உறக்கமின்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி மக்களை நோய் தொற்றில் இருந்து பாதுகாக்க அரும் பணியாற்றினார்.

இவரின் சிறந்த தலைமைத்துவ பண்புகள், விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, சிறந்த வழிகாட்டல்கள் போன்றவையே நமது பிரதேசத்தின் சுகாதார சேவையின் வளர்ச்சிக்கு காரணம் எனலாம்.

சிறந்த நிர்வாகியாக, சுகாதார குடும்பத்தின் தலைவராக, வழிகாட்டியாக, முன்னுதாரணமாக சேவையாற்றிய இவரின் அனுபவங்களுக்கும், ஆற்றல்களுக்கும் பல பதவி உயர்வுகள் பெற்று மத்திய சுகாதார அமைச்சிற்க்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் வட மாகாணத்திற்கே தனது மூன்று தசாப்த சேவைக்காலத்தையும் முற்று முழுதாக அர்ப்பணித்துள்ளார்.

இன்று அகவை அறுபதில் தடம் பதிக்கும் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் இன்னும் பல தசாப்தங்கள் ஆரோக்கியமாக தனது குடும்பத்தினுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என இறைவனை வேண்டுவதுடன் அவரின் அனுபவங்கள் ஆற்றல்கள் சுகாதார திணைக்களத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும் எனவும் அவரின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் சுகாதார சேவைகளின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படல் வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

**வைத்திய கலாநிதி கனகராசா நந்தகுமாரன்,**
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Working with a Leader...!



I started working with the legend, Dr. A. Ketheswaran from June 2012 when I got my first Medical Administration appointment to Base Hospital Tellippalai as a Medical Superintendent after finishing my Masters Degree in Medical Administtation.

In various categories, still I have been working with our Sir as Deputy RDHS, and RDHS.

Dr.Ketheswaran Sir has been playing an inevitable and pivotal role for the Northern Province Health sector from late 1990s and especially when he undertook the health management of Jaffna district in 2005, it marked the beginning of a new era. He assumed the responsibility of re-structuring and modernizing the face of healthcare delivery from the remnants of war-devasted debris. That was really a needy time to have a legendary leader to uplift the health sector and the nature has correctly chosen the most suitable professional for that.

A good leader really demonstrates and set examples to their subordinates via their actions. I have been blessed to work under Sir as a head of the institution when he was the Regional Director of Health Service (RDHS) Jaffna and when he was the Provincial Director of Health Services (PDHS) Northern Province, I worked under him as RDHS Mullaitivu. Hence, I am blessed to have the experience of his guidance and leadership qualities. Still the lessons learnt from Sir is guiding me for my professional and personal life.

He demonstrates extra ordinary level of Professional skills, Emotional Intelligence and Ethical values in each minute of his works and thus lays the best pathway for his fellow officers to follow.

Our Sir is a Text book of Management. How?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lankan Institute of Development Administration (SLIDA) defines the "Management" as;

***"Getting the things done through and with the people by using the available resources efficiently and effectively in a changing environment to achieve the organizational objectives and goals"***

Its simply a descriptive of our Sir, Dr.A.Ketheswaran.

I am really privileged to be a part of this "Diamond Jubilee" "மணிவிழா" via this message.

God bless you Sir.

**Dr. Umashankar Muthukumarasamy Sharma.**
MBBS (Jaffna-Sri Lanka),
MSc in Medical Administration (Colombo-Sri Lanka),
MD in Medical Administration (Colombo-Sri Lanka)
MSc in Medical Toxicology (Colombo-Sri Lanka),
MBA (Commonwealth-OUSL),
Regional Director of Health Service – Mullaitheevu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலையாக் காலத்தின் தோன்றல்



நீண்ட, நெடிய யுத்தம் என்றுக்கு நாம் முகங்கொடுத்து மீண்டிருக்கின்றோம். யுத்தம் எமக்களித்த துன்பதுயரங்கள் சொல்லில் மாளாதவை. யுத்தத்தினால் நாம் இழந்தவைகள் ஏராளம். அது ஏற்படுத்திய ரணங்களும், வலிகளும், வடுக்களும், வாழ்வியல் நெருக்கீடுகளும் ஏராளம் ஏராளம். ஆயினும், யுத்தம் சமூக ஊடாட்டத்தில் சில நேர்விளைவுகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை. குறிப்பாக அது அர்ப்பணிப்பும், தியாகமும், சமூக உணர்வும் கொண்ட மனிதர்களை உருவாக்கியது. அத்தோடு, அது பொதுநோக்கு, சமூக மேம்பாடு, வளமான எதிர்காலம் போன்ற சிந்தனைகளுக்கான அடித்தளத்தையும் இட்டுச் சென்றது. மேலாக, அது தனித்துவமான, படைப்பாற்றலுடனான, தூரநோக்குடைய திட்டங்களுக்கும், சேவை வழங்கல்களுக்கும் வழிசமைத்தது.

இலங்கையின் வடபகுதிக்கான முறைசார் உளமருத்துவ சேவைகள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பமானது. முதலில், மந்திகையில் அமைந்திருந்த வைத்தியசாலையிலும், ஒருசில வருட இடைவெளியில் காங்கேசன்துறையில் அமைந்திருந்த வைத்தியசாலையிலும் உளமருத்துவ விடுதிகள் உருவாக்கப்பட்டன. அத்துடன் மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் உளமருத்துவத்துக்கான வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதே காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பொது வைத்தியசாலையிலும் (பின்னர் அது போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்ந்தது) உளமருத்துவ சேவை வழங்கல்கள், பிரதானமாக வெளிநோயாளர் பிரிவாக ஆரம்பமானது.

காங்கேசன்துறை வைத்தியசாலை பின்னர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து ஒன்றில் தெல்லிப்பழையில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்துக்கு இடம் மாறியது. தற்போது அது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்ந்துள்ளது. வடபகுதிக்கான பிரதானமானதும், மூன்றாம் நிலைப் பராமரிப்பை வழங்குகின்றதுமான உளமருத்துவ விடுதி வசதிகள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலேயே உருவாகின. யாழ். மருத்துவபீடத்தின் ஆரம்பத்தோடு, மருத்துவ மாணவர்கள் உளமருத்துவம் கற்பதற்கான பிரதான வைத்தியசாலையாகவும் தெல்லிப்பழை வைத்தியசாலை ஏற்றம் பெற்றது. மருத்துவபீடத்தில் உளமருத்துவப் பேராசிரியராகக் கடமையாற்றிய வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி தயா சோமசுந்தரம் அவர்கள் உளமருத்துவ சேவைகளை யாழ். மாவட்டத்துக்கு அப்பாலும், வைத்தியசாலைகளின் மதிற்சுவர்களுக்கு வெளியேயும் கொண்டு செல்வதில் அளப்பரும் பணியாற்றினார். உளமருத்துவ சேவைகள் என்ற எல்லையை விரிவு படுத்தி, உளசமூக சேவைகள் என்ற பரந்த சிந்தனைப் பரப்பின் தோற்றத்துக்கும், உளநலப் பிரச்சினைகளைப் பல்துறைசார்ந்து அணுகி ஆதரவளிக்கும் செயன்முறைக்கும் அவர் வழி வகுத்தார். யுத்தத்தினால் உருவாகிய, உருவாகக் கூடிய உளப் பிரச்சினைகளை ஒரு பேசுபொருளாக வெளிக் கொணர்வதிலும் அவர் கடுமையாக உழைத்தார்.

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் இறுதி நாட்களில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து இலங்கையின் உளமருத்துவ மற்றும் உளசமூக சேவைகள் ஒரு புதிய பரிமாணத்தைத் தொட்டன. சுனாமியின் அதிர்வுகளும், யுத்த சூழலின் அலைகளும் யாழ். மாவட்டத்தினது உளநல சேவைகளின் தொடர்ச்சிக்கும், விரிவாக்கத்துக்கும் மிகவும் உதவின. அந்தச் சேவை வழங்கல்கள் மருத்துவமனைகளுக்கு அப்பால் நீட்சியடைந்தன. அவை மருத்துவ சிகிச்சைகளோடு புனர்வாழ்வு, சமுதாய மீளிணைப்பு, நீண்ட காலப் பராமரிப்பு, சமுதாய மட்டத்துப் பராமரிப்பு, இணைந்த சேவை வழங்கல்கள் எனப் பல்பரிமாணம் பெற்றன.

யாழ் மாவட்டத்தின் உளநல சேவைகள் சேவை நாடிகளின் தேவைகள் மற்றும் நலன்களை முதன்மைப்படுத்தியதாக வடிவமைக்கப்பட்டன. சேவை வழங்கல்கள் யாவும், அவற்றின் பௌதீக சூழலிலும் சரி, அணுகுமுறைமையிலும் சரி, இயலுமானளவு போதியளவு அடிப்படை நியமங்களைப் பேணிய வண்ணம் வடிவமைக்கப்பட்டன. சேவை வழங்குபவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறுவிதமான பயிற்சிகளைப் பெறுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அதுபோல், காலத்துக்குக் காலம் சேவைகளின் தரம் மற்றும் வினைத்திறன் என்பவற்றை அளவிடும் புறவயமான ஆய்வுகளும் செய்யப்பட்டன.

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் இரண்டு உளமருத்துவ விடுதிகள் இயங்குகின்றன. இம் மாவட்டத்தில் இருக்கும் போதனா வைத்தியசாலை, நான்கு ஆதார வைத்தியசாலைகள், நான்கு பிரதேசமட்ட வைத்திசாலைகள் என ஒன்பது இடங்களில் உளமருத்துவ வெளிநோயாளர் சேவைகள் வழங்கப்படுகின்றன. உளநோய்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான வதிவிடப் புனர்வாழ்வு நிலையம் ஒன்றும், மதுவடிமை நிலையிலிருந்து வெளிவர உதவுகின்ற வதிவிடப் புனர்வாழ்வு நிலையம் ஒன்றும் இயங்குகின்றன. சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினருக்கான விசேட அலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும், ஓட்டிசம் போன்ற மூளை மற்றும் நரம்பு விருத்திக் கோளாறுகளுக்கான சேவை வழங்கல் நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உளநலம் தொடர்பான அவசர தேவைகளுக்கு தொடர்பு கொள்ளக்கூடிய உதவி அழைப்பெண் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, அது இப்போது தேசியமட்ட உதவி அழைப்பெண்ணோடு இணைக்கப்பட்டு இருக்கின்றது. உளநோயுடைவர்களை அவர்களது வீடுகளிலேயே வைத்து முகாமைத்துவம் செய்யும் வகையிலான நடமாடும் சேவைப் பிரிவு ஒன்றும் இயங்குகின்றது.

இவை தவிர, ஒவ்வொரு சுகாதார வைத்திய பிரிவுகளிலும், உளசமூக சேவைகள் வழங்குவதற்கென ஒரு தனித்துவமான ஆளணி உருவாக்கம் பெற்றிருக்கின்றது. சுகாதார அதிகாரி பிரிவுகளில் உளநலம் சார்ந்த பிரச்சினைகள் கலந்துரையாடப்படுகின்றன. தற்கொலை பற்றிய தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. தற்கொலையினால் இறந்தவர்களது உறவினர்களுக்கு உளஉதவி தேவைப்படுமிடத்து, அவர்கள் அது நோக்கி ஆற்றுப்படுத்தப்படுகின்றார்கள். சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அவர்களது பணியாளர்களுக்கும் உளப்பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான அணுகுமுறைகள் என்பன பற்றிக் காலத்துக்குக் காலம் தெளிவுபடுத்தப்படுகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் உருவாகிய பரந்துபட்ட, புதுமையான, ஆக்கத்திறனோடு கூடிய, முன்னுதாரணமாக அமையக்கூடிய உளநல சேவைகள் யாவும் மிகவும் குறைவான ஆளணியினரைக் கொண்டே ஏற்படுத்தப்பட்டன. அவை அவ்வாறே தற்பொழுதும் இயங்குகின்றன. மத்திய நிர்வாகம், மாகாண நிர்வாகம், மருத்துவ பீடம் போன்ற செயற்கையான வேறுபாடுகள் எவையுமின்றி, 'தேவைகளுக்கு எதிர்வினையாற்றுதல்' என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு, சுகாதாரத் திணைக்களங்களுக்குரிய வளங்களில் மாத்திரம் தங்கியிராது, நல்லுள்ளம் படைத்த தனிநபர்கள் அமைப்புகளின் ஆலோசனைகள், உதவிகள், ஒத்தாசைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டே மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவும் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை இன்றும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்டத்து உளநல சேவைகள் படிப்படியாக வளர்ந்து உச்சம் தொடுவதற்கும், அவை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், உலக சுகாதார ஸ்தாபன மட்டத்திலும் அங்கீகாரம் பெறுவதற்கும் பலர் காரணமாக இருந்திருக்கலாம். ஆனாலும், அவர்கள் யாவரையும் ஒருங்கிணைத்து, சேவைகளின் விரிவாக்கம் மற்றும் தரம் என்பவற்றில் அக்கறை செலுத்தி, சேவை பெறுபவர்களினது மட்டுமின்றி, சேவை வழங்குபவர்களினது நலன்களையும் முதன்மைப்படுத்தி, ஒட்டுமொத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைபலன்களை ஏற்படுத்திய தலையாய பணிக்கு நாம் ஒருவரை மட்டுமே பெயர் குறிப்பிட முடியும். அந்த ஒருவர் வேறொருவர் அல்லர். அவர் என்றும் எம்மோடு இருக்கும், எமது அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களே.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு பங்குனி மாதம் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளராகப் பதவியேற்றார். அன்றிலிருந்து இன்றுவரை அவர் உளநல சேவை வழங்கல்களுக்குப் பொறுப்பான மேலதிகாரியாகவும், நிர்வாகியாகவும் மட்டுமல்லாது, உளநலத்துக்கான மதிப்பார்ந்த நல்லெண்ணத் தூதுவராகவும் (Goodwill ambassador) இயங்கி வருகின்றார். சமுதாய மட்டத்தில் உளநல மேம்பாட்டுக்காகவும், உளசமூக சேவைகளுக்கான பல்துறைசார் இணைவுக்காகவும் பரப்புரை செய்வதில் அவர் மிகவும் இதயசுத்தியோடு செயற்பட்டு வருகிறார்.

கடந்த இருபது ஆண்டுகளுக்குள் எத்தனையோ விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. காலம் மாறியிருக்கின்றது. வாழ்வுச் சூழல் மாறியிருக்கின்றது. அரசுகள் மாறியிருக்கின்றன. ஆட்சியாளர்களும் ஆளுநர்களும் மாறியிருக்கின்றார்கள். கால ஓட்டத்தில் நெருக்கீடுகள், சவால்கள், பயமூட்டல்கள், எல்லைப்படுத்தல்கள் என எத்தனை எத்தனையோ ஏற்பட்டிருக்கின்றன. அத்தனை வேளைகளிலும் உளநல சேவைகளை இடையறாது தொடர்வதற்கு அவர் காட்டிய அக்கறையும், ஆதரவும் மிகவும் போற்றத் தக்கது.

உளநல, மற்றும் உளமருத்துவ சேவைகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு அவர் என்றுமே மறுப்புச் சொன்னது கிடையாது. சேவை வழங்கல்கள் தொடர்பான ஓர் எண்ணக்கருவை அவரோடு பகிர்ந்து கொண்டால், அதனை எவ்வாறு நிர்வாக விதிமுறைகளின் நெறிமுறைகளுக்குள் நின்று நடைமுறைப்படுத்தலாம் என்று அவர் ஆலோசனை வழங்குவார். அவர் அத்தோடு நிறுத்திக்கொள்ள மாட்டார். அந்த எண்ணக்கரு செயலுருவம் பெற்று, அது சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படும்வரை அவர் அதனைப் பின்தொடர்ந்து, நிறைவேற்றி முடிப்பார்.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரனது நிர்வாக அணுகுமுறை வியக்கத்தக்கது. அவர் எல்லோரையும் மதித்து, மரியாதை கொடுத்து நடத்துவதோடு, அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, பொறுப்புகளை ஒப்படைத்து 'வேலை வாங்கும்' பண்பைக் கொண்டிருந்தார். அவர் மாவட்ட சுகாதார சேவைகளுக்கான ஒட்டுமொத்த நிர்வாகியாக இருந்த போதிலும், ஒவ்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களிலும் அந்தந்த விடயங்களுக்குரிய துறைசார் வளவாளர்கள், தொழில்நுட்ப ஆலோசகர்களை அணுகி, அறிவுறுத்தி, கலந்துரையாடி, அவர்களது ஆலோசனைகளைப் பெற்று விடயங்களை நடைமுறைப்படுத்தும் பணிவைக் கொண்டிருந்தார். கட்டுரையாளர் பார்வையில் அவர் ஓர் அதிகாரம் செலுத்தியாக இல்லாது, பணிகளை ஒத்திசைவோடு ஒருங்கிணைக்கும் நடத்துனராகத் (conductor) தொழிற்பட்டார். கௌரவங்கள் கிடைக்கப்பெறுகின்ற வேளைகளில் எல்லாம் அவர் அவற்றைத் தன்னோடு இணைந்து பணியாற்றியவர்களோடு பகிர்ந்து கொண்டார். இவை அனைத்துக்கும் மேலாக, அவர் பலவேளைகளில் சேவைகள் ஒழுங்காக நடைபெறவேண்டும் என்ற உயரிய நோக்கம் காரணமாக மறுபடியும், மறுபடியும் தனது சுயமரியாதையைத் தியாகம் செய்தார். வைத்திய கலாநிதி கேதீஸ்வரனின் நிர்வாக அணுகுமுறை உண்மையிலே வியக்கத்தக்கது.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் வளங்களை ஒன்றிணைப்பதில் வல்லவராக இருந்தார். அரச திணைக்களங்கள், அதிகாரிகளோடு மட்டுமன்றி, உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புகள் ஆகிவற்றை இணைத்துக் கொண்டு அவர் உளநல சேவைகளையும், ஒட்டுமொத்தமான சுகாதார சேவைகளையும் மேம்படுத்துவதற்காக அரும்பாடுபட்டார். அவர் அனைத்துத் திணைக்களங்களாலும் மதிக்கப்படும் ஒருவராக இருந்தார். அவ்வாறு காய்க்கின்ற மரமாக இருந்ததன் காரணமாக அவர் அழுக்காறு மனதுடையவர்களின் கல்லடிகளையும் பெற்றுக் கொண்டார். ஆயினும், அவர் அதிகம் கலங்காது, மக்களுக்கான சேவைகள் கிடைக்கப்பெறுவதனை உறுதிப்படுத்திக் கொண்டார்.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் மாகாணப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலங்களில் அவர் மாகாண மட்டத்தில் உளநல சேவைகளின் விரிவாக்கத்துக்கு மிகவும் காத்திரமான பணியினை ஆற்றியிருந்தார். குறிப்பாக வடமாகாண சபை இயங்கிய காலப்பகுதியில் வடமாகாண சுகாதார சேவைகளை நவீனப்படுத்துவதிலும், அவற்றைச் சர்வதேசத் தரம் மற்றும் செல்நெறிகளுக்கு ஏற்ப இற்றைப்படுத்துவதிலும் அவர் காத்திரமான பங்கை வழங்கியிருந்தார். அவை பற்றியெல்லாம் பதிவிடுவது இந்தக் கட்டுரையின் நீளத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதனால், அவற்றைப் பற்றி வேறொரு கட்டுரையில் விரிவாக ஆராயலாம்.

கட்டுரையாளருக்கும் கேதீஸ்வரனுக்கும் இருந்த உறவு பற்றியும் இங்கு குறிப்படுவது பொருத்தமானது. கட்டுரையாளரும், வைத்திய கலாநிதி கேதீஸ்வரனும் உளநல சேவை வழங்கல்கள் என்ற ஒரு பொதுப்பரப்பில் இணைந்து கொண்டாலும், அவர்கள் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்மீது ஒருவர் ஆழமான அன்பையும், மரியாதையையும், அக்கறையையும் உடைய ஓர் உறவு நிலையைப் பேணிக் கொண்டு வந்தார்கள், வருகிறார்கள். அந்த உறவு நிலையானது வெறுமனே நண்பர்களாக இருத்தல் என்னும் நிலையிலும் பார்க்க வேறானது. உண்மையில் கட்டுரையாளர் இதுவரை வைத்திய கலாநிதி கேதீஸ்வரனின் வீட்டிற்குச் சென்றது கிடையாது. அதுபோல் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்களும் கட்டுரையாளரின் தனிப்பட்ட வாழ்க்கைப் பாதையின் எந்தவிடத்திலும் தடம் பதிக்கவில்லை. அந்த உறவானது சுகாதாரத்துறையில் ஒரு நிர்வாகியும் ஒரு துறைசார் வல்லுனரும் எவ்வாறு இணைந்து பணியாற்றலாம் என்பதற்கான நல்லதொரு முன்னுதாரணமாக, அவ்வாறு ஒத்திசைவோடு பணியாற்றுவதன் மூலம் வினைத்திறனுடனான சேவைகளை எத்துணை மேம்பாடான முறையில் வழங்கலாம் என்பதற்கான ஓர் எடுத்துக் காட்டாக, ஒத்த மனவதிர்வுடையவர்கள் ஒன்று சேரும்போது ஏற்படக்கூடிய புரிதலும் 'பரிவதிர்வும்' ஒட்டுமொத்த விளைபலன்களை எத்தனை மடங்கு அதிகரிக்கும் என்பதனைப் பறைசாற்றும் சிறந்த ஆதாரமாக இருக்கின்றது.

மணிவிழாக் காணும் கேதீஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துக்கள். அவர் என்றும் இறையருள் துணையோடு நலமாக இருப்பாராக.

கட்டுரையாளர் பற்றி

வைத்தியகலாநிதி சாம்பசிவமூர்த்தி சிவயோகன் அவர்கள் கடந்த முப்பது ஆண்டு காலமாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றி வருகின்ற ஒரு உளமருத்துவ நிபுணராவர். அவர் தற்பொழுது யாழ். பல்கலைக்கழக உளமருத்துவத்துறையில் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் கடமையாற்றுகின்றார். அவர் வைத்தியகலாநிதி கேதீஸ்வரன் அவர்களுடன் இணைந்து யாழ். மாவட்ட மற்றும் வடமாகாண உளநல சேவைகளின் மேம்பாட்டுக்கு உழைத்தவர்களில் முதன்மையானவர்.

**பேராசிரியர் சா. சிவயோகன்**
உளநல மருத்துவ நிபுணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைநோக்கு தலைவர்



(Visionary Leader)

அறிவாலும் அமைதியான வழிநடத்தலாலும் பிராந்திய சுகாதாரப் பணிமனையை அலங்கரித்துக்கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் மணி விழா குறித்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அவர் ஆரம்பக்கல்வியை கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கரவெட்டி திரு இருதயக்கல்லூரியிலும், உயர் கல்வியை வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்று, தொடர்ந்து மருத்துவப் பட்டப்படிப்பினை ரஸ்யாவில் பெலாரிஸ் பல்கலைக்கழகத்திலும் சிறப்பாக பயின்று பட்டதாரியாக வெளியேறி மீண்டும் இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பில் சமுதாய மருத்துவப் துறையில் Msc பட்டத்தையும் பெற்று, தனது இடைவிடாத முயற்சியினால் சுகாதாரத்துறையில் உயர் பதவிகளை வகிக்கும் தகுதியைப் பெற்றார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சுகாதார சேவையில் கடமையாற்றும் மணிவிழா நாயகனின் அமைதியான சுபாவம், கம்பீரமான குரல், விடாமுயற்சி இம் மூன்றும் அவருக்கு அணிகலன்களாக திகழ்கின்றன. அவருடைய சேவைக்காலத்தில் வவுனியாவில் 13 வருடங்களும், யாழ் பிராந்தியத்தில் 19 வருடங்களும் தனது சேவையினை திறம்படச் செய்துவருகின்றார். குறிப்பாக எங்கள் பிரதேசங்கள் சீரற்ற நிலையில் இருந்த காலங்களில் அவருடைய சேவைகளை நாம் மறக்கமுடியாது. மந்திகை ஆதார வைத்தியசாலையின் புனரமைப்புக்கு அவர் ஆற்றிய சேவையை பிரதேச மக்கள் மறக்கமாட்டார்கள். அதேபோல கரவெட்டி வைத்தியசாலையையும் புனரமைத்து அப்பிரதேச மக்களுக்கு சகல வசதிகளையும் செய்து இன்று தரமான வைத்தியசாலையாக உயர்ந்திருப்பதற்கு அவருடைய விடாமுயற்சியே காரணமாகும். ஒரு கட்டத்தில் அவர் இந்த இரண்டு வைத்தியசாலைகளும் "எனது இரு கண்கள்" போன்றன எனக் குறிப்பிட்ட போது அவருடைய சேவையின் அர்ப்பணிப்பை நாம் உணரக்கூடியதாக இருந்தது.

முகாமைத்துவ ரீதியாக, நிர்வாக ரீதியாக பார்க்கும் பொழுது, உலகில் இன்று பிரபல விஞ்ஞானியான ஜோன் மைக்ஸ்வெல் என்பவர், ஒருவர் தனது தொழில் ஸ்தானத்தில் "வெற்றி" (Success) பெற மூன்று அம்சங்களைக் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.வாழ்க்கையில் உங்கள் நோக்கத்தை அறிந்து கொள்ளுங்கள்.

2.உங்கள் அதிகபட்ச திறனை அடைய வளர்ந்து செல்லவும்.

3.மற்றவர்களுக்கு பயனளிக்கும் விதைகளை விதைக்கவும். இந்த விதைகள் வளர்ந்து செல்லும்பொழுது தான் தொழிலில் ஒரு வெற்றியாளனாக சமூகத்தில் பிரதிபலிப்பார்.

அந்தவகையில் இவருடைய கருத்துக்கள் மூன்றும் மணிவிழா நாயகனுக்கு முற்றுமுழுதாகவே பொருந்தும். அவர் ஒரு வெற்றியாளன் என்றே நான் கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நீங்கள் "வரையறுக்காததை நீங்கள் அடைய முடியாது" என்ற முகாதைத்துவத் தத்துவத்தை தன்னகத்தேக்கொண்டு செயற்பட்ட மணிவிழா நாயகனை வாழ்த்தி தொடர்ந்தும் சமூகத்துடன் ஒரு வெற்றியாளனாக செயல்பட வேண்டும் என்று கூறி, அவர் தன் குடும்பத்துடன் சகல பாக்கியங்களையும் பெற்று நீண்டகாலம் வாழ வேண்டும்மென்று வாழ்த்துகின்றேன்.

**மாணிக்கம் நடராஜசுந்தரம்,**
(ஓய்வுநிலை பேராசிரியர்,
முன்னாள் முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி
யாழ் பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



வைத்தியத் துறையில் 33 வருடங்களுக்கு மேலாக அப்பழுக்கற்ற சேவையை ஆற்றி மணிவிழாக்காணும் வைத்திய கலாநிதி ஆகேதீஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை அவரது படிப்பையோ, பதவியையோ, பணத்தையோ வைத்து மதிப்பிடுவதில்லை. அவர் மற்றவர்களை எவ்வாறு மதிக்கிறார் என்பதனைக் கொண்டே மதிப்பிட முடியும். Dr. கேதீஸ்வரன் யாராக இருந்தாலும் அவரை மதித்து நடக்கும் பண்பை இயல்பாகவே கொண்டவர். சிற்றூழியரோ, சகபாடியோ, மேலதிகாரியோ அவர்களை மதித்து நடப்பதில் அவருக்கு நிகர் அவரே. வைத்தியத்துறையில் தங்களையும் மனிதராக மதித்து நடப்பவர் என சிற்றூழியர் பலர் சொல்லக்கேட்டதுண்டு.

அவர் சிறந்த வைத்தியராகவும், வைத்தியத்துறையில் நிர்வாகியாகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். வைத்தியசாலையில் சகல தர உத்தியோகத்தர்களும் நோயாளிக்கு சிறந்த சேவையை வழங்கக்கூடிய திறனையும், கவின் நிலையையும் உருவாக்கியவர். தனது பதவிக்காலத்தில் தன்னைத் தேடிவரும் சாதாரண மக்களையும், குழுக்களையும் அவர்கள் குறையை செவிமடுத்து தன்னாலியன்ற தீர்வுகளை வழங்கி நிவாரணத்தையும் பெற்றுக்கொடுத்து திருப்தி காண்பவர். வசதிபடைத்தவர்களையும் வசதி குறைந்தவர்களையும் சமமாக நடாத்தும் பண்பையும் அவரிடம் காண முடியும்.

நெருக்கடியான காலகட்டத்தில் அவர் வவுனியாவில் ஆற்றிய சேவை இன்னும் அம்மக்களால் நினைவு கூரப்படுகின்றது. அக்காலத்தில் ஏனைய திணைக்கள அதிகாரிகளுடனும் சிறந்த தொடர்பைப் பேணியதன் மூலம் அம்மக்களுக்கு வைத்திய சேவைக்கு அப்பாலும் பல்வேறு உதவிகளைப் புரிந்த சுகாதார சேவைகள் பணிப்பாளராவார்.
தனது சேவைக்காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டவர். தனக்கு தீங்கிழைத்தவர்களையும் மன்னித்து மறந்திருக்கிறார். இது அவரது உயர்ந்த பணிக்கு எடுத்துக்காட்டாகும். சவால்களை அமைதியாக இருந்து எதிர்கொண்டு வெற்றி கண்ட ஓர் வைத்திய அதிகாரியாவார். அமைச்சர்கள், செயலாளர்கள், மற்றைய உயரதிகாரிகள் ஆகியோருடன் நேரடி தொடர்புகளைப் பேணி தனது மக்களுக்கான சேவையைப் பெற்றுக்கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினால் அரச திணைக்களங்களுக்கு பெருமளவு நிதி கட்டிடங்களுக்கு ஒதுக்கப்பட்ட போது கிராமிய வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைக்கான கட்டிடங்கள், நோயாளர் விடுதிகள், தாதியர்கள் வைத்தியர்களுக்கான விடுதிகள் என்பவற்றை துரிதமாக நிறுவி ஒதுக்கப்பட்ட நிதியை முற்றிலும் பயன்படுத்தியவர். இவ்வாறான பௌதீக வள ஒதுக்கீடுகள் அவ்வைத்தியசாலைகள் இன்று திறம்பட இயங்குவதற்கு வழிவகுத்தவர். பின்தங்கிய வைத்தியசாலைகளுக்கு முடிந்தளவு வைத்திய அதிகாரிகளை அனுப்பி அம்மக்களின் தேவையை நிறைவு செய்தவர். தனது ஊருக்கும் தன்னாலான சேவைகளைச் செய்தவர். மந்திகை ஆதார வைத்தியசாலை, கரவெட்டி பிரதேச வைத்தியசாலை என்பவற்றை பொதுமக்களின் அன்பளிப்புடனும் பங்குபற்றுதலுடனும் அபிவிருத்தி செய்தமை அம்மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். புலம்பெயர்ந்த மக்களிடமும், ஊர் மக்களிடமும் பணத்தை சேகரித்து வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்தமை அவரின் தனிப்பட்ட ஆளுமைக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாகும். மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய காலகட்டத்தில் வடமாகாணம் முழுவதற்கும் தனது காத்திரமான சேவையை வழங்கியவர்.

அவரின் கோரிக்கைகளுக்கு பொதுமக்களின் உடனடி ஆதரவு கிடைப்பது அவர் மீது கொண்ட பொதுப்பணி தொடர்பான நம்பிக்கையினாலாகும்.. தான் கல்வி கற்ற ஹாட்லிக் கல்லூரிக்கான செயற்திட்டங்களை வடிவமைப்பதில் அவரது பங்களிப்பு என்றும் நினைவு கூரத்தக்கது. தொலைபேசி அழைப்புகளுக்கு உடனடியாகவோ பின்னரோ பதிலளிக்கும் பழக்கம் அவரிடம் என்றுமே இருந்து வந்துள்ளது. எவ்விடயம் தொடர்பிலும் எவரும் அவரிடம் ஆலோசனை கேட்டும் பட்சத்தில் உரிய தரப்பினரிடம் பேசி சரியான வழிகாட்டலை வழங்கும் இயல்பினால் மற்றவர் மனதில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துக் கொண்ட பண்பாளர்.

மற்றையோருக்காக நேரத்தை ஒதுக்கி உதவி செய்யும் மனப்பாங்கு மெச்சுதற்குரியது. உண்மையில் தான் வகித்த பல்வேறு பதவிகளுக்கும் பெருமை சேர்த்த அரச சேவையாளனாவார்.

,கதை, கவிதை எழுதுவதில் வல்லவர் சிறந்த எழுத்தாளராக அவர் விளங்கியமை தனது பதவிக்கான பணிகளை பயன் தரு முறையில் நிறைவேற்றுவதற்கு துணையாக இருந்திருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பெற்றோரின் வளர்ப்பு அவரை மட்டுமின்றி சகோதரரையும் பல்கலைக்கழக விரிவுரையாளராக இன்றைய நிலைக்கு உயர்த்தியமை மிகையல்ல. அவரது தந்தையாரும் உதவி செய்வதில் தயக்கம் காட்டாதவர். அவரது துணைவியாரின் பொறுமையும் விருந்தோம்பல் பண்பும் அவரின் பணிக்கு மேலும்வலுச் சேர்த்தமை மறுக்க முடியாத உண்மை. அவரது புதல்வனும் கல்வியிலும், பண்பிலும் உயர்நிலையை அடைந்திருப்பது அவருக்கு பெருமையை தேடிக்கொடுத்துள்ளது. இவ்வாறான உயர்ந்த குணவியல்புகளையும் கல்வித் தகைமைகளையும் கொண்ட அவர் குடும்பத்தினருடன் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

நன்றி

**நடராஜா - தெய்வேந்திரராஜா**
ஓய்வு பெற்ற அதிபர்
ஹாட்லிக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



கரவெட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழா காண்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்"

எனும் வள்ளுவர் வாக்கை மெய்ப்பிப்பதற்காக பொருத்தமான தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும், மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பதவியை அலங்கரித்தவரே இன்றைய மணிவிழா நாயகன் அவர்கள். அன்பு, கருணை, இரக்கம், இன்சொல், உதவி செய்யும் மனோபாவம் அத்தனைக்கும் சொந்தக்காரரிவர். தான் ஒரு வைத்திய கலாநிதி என்ற நிலையில் இருந்து இறங்கி எளிமையான வாழ்வியல் முறையைத் தனதாக்கிக் கொண்டவர் இதனால் அனைவரது அன்பையும் பாராட்டையும் பெற்றுக் கொண்டவர்.

உள்ளகத்தில் என்றும் உற்சாகமாகவும் இளமையாகவும் இருக்கும் இவர் "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் தாரக மந்திரத்தை மனதில் இருத்தி தான் பிறந்த பிரதேசத்தில் மட்டுமன்றி ஒட்டுமொத்த பிராந்தியத்திற்குமே சேவை புரிந்தவர்.

உலகையே அச்சுறுத்திய "கொரோனா" கால பேரிடர் காலத்தில் இவர் பிராந்தியத்திற்கு ஆற்றிய பணி மகத்தானது. இதனை விட "டெங்கு" நோய் பரம்பல் நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கு அமைய பிரகடனப்படுத்தப்பட்ட விசேட "டெங்கு" கட்டுப்பாட்டு தினங்களின் போது தனது தனித்தவமான ஆற்றலாலும் மதிநுட்பமான அணுகுமுறையாலும் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து சிறப்பாக செயலாற்றி வெற்றியும் கண்டிருந்தார். இவற்றினை காலம் என்றுமே மறந்து விடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவிழந்தோர் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதில் தனது பணிமனை ஊடாக சிறப்பாக செயலாற்றியவர். சுகாதார அமைச்சின் செயற்றிட்டங்களுக்கு சிறந்த முறையில் செயல்படிவம் கொடுப்பதில் இவருக்கு நிகர் இவரே.

இவை மட்டுமன்றி தனது பிரதேசமாகிய கரவெட்டிப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், அது தொடர்பான வளர்ச்சியிலும் அயராது பணியாற்றிக் கொண்டிருப்பது போற்றுதற்குரியது.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய செயல் வீரனின் சேவையை நன்றியுடன் நயந்து இன்று "மணிவிழா" எடுக்கும் விழாக்குழுவினரை மனநிறைவோடு பாராட்டுகின்றேன். வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களது அயராத சேவைக்குக் கிடைத்த மணிமகுடம் இம் மணிவிழா என்பதில் ஐயமில்லை. ஓய்வுக்காலம் சிறக்கவும் உடல் உள ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து பிராந்திய மக்களுக்கும் பிறந்த மண்ணிற்கும் தொடர்ந்து இவர் சேவை பரிய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு மணிவிழா வாழ்த்தினையும் கூறி நிறைவு செய்கின்றேன்.

**ச.சிவஸ்ரீ**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத் துறையின் மகத்துவம்



"மருத்தவப் பணியே மகத்தான பணி.
மனிதரைக் காக்க உனை நீ அர்ப்பணி"

என்ற சிரமமான பணியை சிரம் மேற்கொண்டு சீரிய பணியினை சிறப்புற ஆற்றிய வைத்திய கலாநிதி திரு.ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழா ஆண்டில் மகத்தான தருணத்தில் மனதார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஓய்வே இல்லாத சமூகப் பொறுப்பு, ஓய்வின் பின்பும் தொடரும் பணிகளில் மருத்துவ துறைக்கு நிகர் அதுவே !

ஆரம்பக் கல்வியை சரஸ்வதி வித்தியாலயமும் திரு இருதயக் கல்லூரியும் உரமாய் ஊட்டிவிட, கனம் மிகு ஹாட்லி கல்லூரி இடைநிலை கல்வியூடே இருள் போக்கி அருள் வழங்க, மேலை நாடு பட்டப்படிப்பை பரிணமிக்கும் வகையில் பகிர்ந்தளித்தது.

கொழும்பு பல்கலை பட்டப்பின் படிப்பளித்து பணிக்காக வலு சேர்க்க வளமளித்து, மக்களுக்கான மகத்தான பணிக்கு வரமளித்தது.

பணியென்று பாதம் படர்ந்தது. உள்ளக பயிற்சியாக... மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பின் போதனா வைத்தியசாலையில்...

மாண்புமுறு பணிகள் மகத்தாகப் பரவிட பணித்தளங்கள் மாவட்டங்களிடையே மாற்றங்கண்டிட, பதவி நிலைகள் படிப்படியாக ஏற்றங் கண்டிட மருத்துவ துறையின் அத்தியாவசிய நிலைகள் பொறுப்புடனும் திறனுடனும் நிரம்பி நின்றது வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களால் என்பது பெருமைக்குரிய சான்றாகும்.

அகவை அறுபது கண்டாலும் பொலிவை இழக்காது துடிப்புடன் மருத்துவப் பணியினை மாந்தர்க்காய்; அவனியில் தொடர்ந்திட வாழ்த்துகிறேன்.

"வாழ்க உம் நாமம் ! வளர்க நின் பணி"

**ஈ.தயாரூபன்**
பிரதேச செயலாளர்,
பிரதேசசெயலகம், கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

International Medical Health Organization
(IMHO)
Mailing Address: PO Box 342466 Columbus, OH 43234
Physical Address: 400 West Wilson Bridge Road Suite 230 Worthington, OH 43085
Tel: (614) 659-9922 Fax: (614) 659-9933
Email: contact@theimho.org



President
Rajam Theventhiran, MD
(New York)

Vice Presidents
Kana Devacaanthan, MD
(Florida)

Kanaga N. Sena, MD
(Connecticut)

Secretary
Sri Nanthakumar, PhD
(Texas)

Treasurer
Murali Ramalingam, CPA
(Ohio)

Directors
Nanda Nanthakumar, PhD
(Massachusetts)

Sinnarajah Raguraj, MD
(Maryland)

Thavam Thambipillai, MD
(South Dakota)

Siva Nadarajah, BSc. Eng
(New Jersey)

Yaso Natkunam, MD
(California)

Nitya Kumar, MD
(North Carolina)

மருத்துவர் கேதீஸ்வரன் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் இவ்வேளையில் எம் அமைப்பின் சேவைக்கும் வளர்ச்சிக்கும் அவர் அளித்த பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூர விரும்புகிறோம்.

கேதீஸ் என எங்களால் அன்பாக அழைக்கப்படும் மருத்துவர் கேதீஸ்வரனுடனான எமது தொடர்பு 2008ம் ஆண்டில் ஆரம்பமாகியது

*"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"*

என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப இனிய சுபாவமும் பண்பும் பணிவாக எல்லோருடனும் பழகும் இவரின் இயல்புகளே எம்மை அவரிடம் உடனடியாக ஈர்த்தது.

எமக்கு ஒரு வழிகாட்டியாக, ஆசானாக, நல்ல நண்பனாக கடந்த 16 வருடங்களாக இருந்து வருகிறார். நாம் அவரை எப்போது தொடர்பு கொண்டாலும் அது இரவென்றாலோ விடுமுறை நாளென்றாலோ எமது அழைப்பை உடன் ஏற்று எமக்குத் தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து தருவார். எம்மமைப்பின் வளர்ச்சியில், எங்களால் செயற்படுத்தப்பட்ட திட்டங்களில் கேதீஸிற்கு மிகப்பெரிய பங்குண்டு. வடமாகாண சுகாதார சேவையை முழுநாட்டிற்கும் ஒருமுன்னுதாரணமாக கொண்டுவர வேண்டுமென கேதீஸ் அயராது உழைத்துக்கொண்டிருப்பவர்.

யாழ் பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்திற்கான 2010ம் ஆண்டில் தேசிய சுகாதார விருது (National Health Excellency Award), 2013 - தேசிய உற்பத்தித்திறன் விருது (National Productivity Award), 2014-மாகாண சுகாதார மேன்மைக்கான விருது (Provincial Health Excellency Award), 2017-அரச கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட விருது (Committee on Public Accounts) என்பன கேதீஸ்வரனின் உழைப்பிற்கும் ஆளுமைக்கும் அர்ப்பணிப்பிற்குமான அங்கீகாரங்களாகும்.

இந்நாளில் எம் அமைப்பின் உறுப்பினர்களும் உங்கள் சேவையால் பயனடைந்த எண்ணற்ற மக்களும் நீங்கள் பல்லாண்டு காலம் உடல் நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்துகிறோம்.

உளமார்ந்த நன்றிகளுடன்,

ராஜம் தேவேந்திரன்

03-17-2024

*IMHO is a registered tax-exempt, 501(c)3 non-profit, charitable organization in the United States (Federal Tax ID #: 59-3779465). IMHO is a registered Private Voluntary Organization (PVO) with the United States Agency for International Development (USAID), and a proud member of InterAction.*

www.TheIMHO.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மருத்துவர் கேதீஸ்வரன் அவர்களை கடந்த 15 வருடங்களாக அறிந்திருக்கிறேன். கேதீஸ்வரன் அவர்கள் ஒரு உயர்ந்த பொறுப்பில் இருந்தாலும் அவர் என்றுமே மக்களோடு மக்களாக பணி செய்வதில் முன்னிலை வகிப்பவர். கனடாவில் இருந்து இலங்கை வடமாகாண இறுதிக்கால பராமரிப்புத் திட்டம் ஆரம்பிப்பதற்காக நாங்கள் முயற்சி எடுத்த வேளையில் மிக முக்கிய தூணாக நம்முடன் அவர் பங்காற்றினார். கனடாவின் IMHO நிறுவனத்துக்கும் அங்கு தாயகத்தில் உள்ள மருத்துவர்களுக்கும் ஒரு இணைப்பு பாலமாக மிக அருமையாக சேவை ஆற்றினார். மருத்துவர் கேதீஸ்வரன் பழகுவதற்கு இனிமையானவர். மிகவும் பண்பானவர். எப்பொழுது நாம் தொடர்பு கொண்டாலும் உடனடியாக விஷயங்களை பொறுமையாக கேட்டறிந்து அதற்குரிய தீர்வை காண்பதில் மிக முனைப்பாக இருப்பார்.

கேதீஸ்வரன்அவர்கள் நமது தாயகத்திற்கு கிடைத்த ஒரு மிகப் பெரிய சொத்து. அவர் அதிர்ந்து பேசியோ கோபமாக பேசியோ நான் பார்த்ததில்லை. எந்தவிதமான கடினமான சூழ்நிலையையும் தனது பொறுமையான அணுகுமுறையால் மிக நேர்த்தியாக தீர்த்து வைப்பதில் வல்லவர்.

மருத்துவர் அவர்கள் தனது 60 வது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடும் இந்த தருணத்தில் அவருக்கு உளம் கனிந்த பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அதே வேளையில், அவர் அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும், மக்கள் பணியில் மேலும் முனைப்புடன் செயல்படுவார் என்ற பெரு நம்பிக்கை நம் அனைவரிடம் உள்ளது.

மருத்துவர் கேதீஸ்வரன் அவர்கள் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் கொண்டு சிறப்புற வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

**Dr. வரகுணன் மகாதேவன்**

மருத்துவர் – கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr.ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் அறுபதாவது அகவை பூர்த்தியையிட்டு வாழ்த்துக்கள் !



வைத்திய கலாநிதி கேதீஸ் அவர்களே !

"மண்ணின் மணம்
மறவாத மறவர்களே !
பெற்ற தாயையும்,
பிறந்த பொன்னாட்டையும்
மறந்து வாழும் மதிபிறழ் கலியுகத்தில்
கண்டம் விட்டு
கண்டம் போயும்
கரவெட்டியை மறவாது
ஊரின் பெயரில்
மன்றம் வளர்க்கும்
உத்தம புருஷர்களே!
ஒன்றியத்தின் ஒன்பதாவது ஆண்டு
நிறைவிற்கு - உங்கள்
தொப்புள்கொடி தேசத்திலிருந்து - ஒரு
தொலைநகல் வாழ்த்துச் செய்தி."

கனடா கரவெட்டி ஒன்றியத்தின் ஒன்பதாவது ஆண்டின் (2008) நிறைவையொட்டி வெளியிட்ட "மருத மலரில்" நீர் அனுப்பிய உணர்வு பூர்வமான செய்தியின் சிறு பகுதி. கனடா வாழ் கரவெட்டி மக்கள் நாம் கரவெட்டியையோ, உம்மையோ என்றும் மறக்கவில்லை.

உம்முடைய அறுபதாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, கனடா வாழ் உமது தொப்புள்கொடி உறவுகள் சார்பாக உம்மை வாழ்த்துவதில், பாராட்டுவதில், உமது மேன்மையுறு வளர்ச்சியில் எங்கள் பிரார்த்தனைகளை தொலைநகல் மூலம் சமர்ப்பிக்கிறோம். குறிப்பாக எனது குடும்பத்தினரின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 மே இல் எழுதி வெளியிட்ட இரு நூல்களான "ஊரும் உறவுகளும், "My Legacy-Life-Love it, Live it, Leave it Livable" என்பவற்றை வெளியிட்டு வந்த அடுத்த நாள் அதிகாலையில், நீர் கனடாவுக்கு வர இருப்பதாகவும், கனடா மருத்துவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு நிதி திரட்ட உத்தேசித்துள்ளதாகவும் செல்வரத்தினம் அண்ணர் தொலைபேசியில் கூறினார். அன்றே Dr.வரகுணனுடன் தொடர்பு கொண்டு, அவரின் உதவியுடன் மருத்துவர் சங்கத்துக்கும் கூடுவதற்கான தினத்தையும் அறிவித்திருந்தோம்.

கலாநிதி வரகுணனின் குழுவே அதற்கான மண்டபத்தையும், மதிய போசன ஒழுங்கையும் செய்திருந்தார்கள். எனது அறிமுக உரையை தொடர்ந்து, உமது ஒப்படைத்தல் இடம்பெற்றது. அன்று உமது பொறுப்பில இருந்த பிரதேச வைத்தியசாலைகள் அனைத்தினதும் உள்ளூர்த் தாக்குதலால் சேதமடைந்த நிலையில் உள்ள படங்களும், பின்பு உமது பொறுப்பில் புனருத்தாரணம் செய்த பின் அவற்றின் படங்களும் காட்டப்பட்டு, அவற்றுக்கான விளக்கங்களும் தந்தீர். எவ்வளவு நேரமும், முயற்சியும், சிந்தனையும் அர்ப்பணித்துள்ளீர் என்பதை எந்தக் குழந்தையும் அறியும்.

உமது கடமை, சேவை கரிசனையையும், ஆக்கபூர்வமான முயற்சியையும் இன்றைய பிறந்த நாள் விழாவில் பாராட்டுகிறேன். நீர் கனடாவில் என்னிடம் விடைபெறும் போது, உமது கண்கள் கலங்கியதை நான் பார்க்கத் தவறவில்லை. நன்றி உணர்வோ, மகன்-தந்தைப் பிரிவுணர்வோ?

நான் அறிந்த மட்டில், எட்டு படுக்கைகளை மட்டுமே மகப்பேற்றுக்காக இருந்த அம்பம் ஆஸ்பத்திரி, இன்று மந்திகை ஆஸ்பத்திரி அளவுக்கு பல்வேறு வைத்திய சேவை வசதிகளுடன் விஸ்வரூபம் எடுத்து செயல்படுவதற்கு முழுமுதற் காரணம் நீரே! தச்சந்தோப்பு, வெல்லன் தேர்த்திருவிழாவில் காவடி தூக்கிக் காட்சி தந்த அந்தச் சிறுவனா இந்த கேதீஸ்?

கரவெட்டி ஆஸ்பத்திரியின் உருவாக்கத்தின் Master Brain நீரே ! மேற்கொண்டு, கரவெட்டி ஆஸ்பத்திரி சபையின் துணையுடள் செயற்றிட்டத்தை நிறைவேற்றியதும், படிப்படியான அபிவிருத்தி வேலைகள், தரம் உயர்த்தும் நடைமுறைகள் இவை யாவும் உமது தலைக்குள்ளால் வந்தவையே. கடுகு சிறிதானாலும் காரம் பெரிதல்லவா?

உமது அறுபதாம் ஆண்டு நிறைவில் இவற்றை நினைவு கூர்ந்து, பிறந்த நாள் வாழ்த்தோடு , உமது சலியாத, சாதுர்ய செயற்றிறன் பற்றிய பாராட்டையும் சங்கமிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் நிறுத்தினால், அடியேன் குறுகிய வட்டத்துள் நின்ற குற்றத்துக்குள்ளாவேன். உமது பொறுப்பிலுள்ள வடபிராந்திய ஆஸ்பத்திரிகள் அனைத்திலும் அபிவிருத்தி வேலைகள், வைத்திய உபகரண உதவிகள், பராமரிப்பு நடவடிக்கைகள், நிருவாக மேற்பார்வை போன்ற பல்வேறு கடமைகளையும் குறைவின்றிச் செய்து வருகிறீர் என்பதை முகநூலில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் அறிந்தேன். அதனையிட்டு பெருமிதம் கொள்கிறேன்.

சிறிலங்காவிலுள்ள பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பங்கள் நாட்டினைச் சிக்கல்களில் மாட்டிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில், அவற்றில் அகப்படாமல், உமது அதிகாரவட்டத்தில் உள்ள அத்தனை ஆஸ்பத்திரிகளுக்கும் தவறாது சேவைபுரிந்து வருவுது போற்றற்குரியது. வெறுமனே அரசாங்கத்தை நம்பியிராமல், தனிப்பட்ட முறையிலும், சமூக அமைப்புக்கள் மூலமும், வருவாய்த் திட்டங்கள் மூலமும் நிதி திரட்டி, நம் தேவைகளை நாமே பூர்த்தி செய்வோம். இந்தப் பாதையில்தான் கலாநிதி பயணித்து வந்துள்ளார் என்பது கண்கூடு. பொறுப்பிலுள்ள மற்றவர்களுக்கும் இத முன்மாதிரியாக அமையட்டும்.

குடும்ப சமேதராக, உடல், உள நலத்தோடும், மகிழ்ச்சியோடும் உமது சேவை நீடிக்கவும், புகழ் ஓங்கவும் எலல்ாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறென்.

அன்பின்

**அம்பிகாவரன்**

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தின் பால் நின்று அன்பால் இணைந்த மக்கள் விரும்பும் செயல் வீரன்



வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் வைத்திய முகாமைத்துறையில் வடமாகாணத்தில் மூன்றிற்கு மேற்பட்ட தசாப்தகாலமாக அறத்தின்பால் நின்று அன்பினால் அனைவரையும் தன்வசம்கவர்ந்த செயல்வீரர். Dr.A.Ketheeswaran அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன்.

எந்த விடயத்தையும் பல கோணங்களில் ஆராய்ந்து அனைத்து நிர்வாகிகளையும் உள்வாங்கி அவர்களின் ஒத்துழைப்புடன் பல கடினமான காலங்களிலும் திட்டங்களை செயற்படுத்தி வெற்றிவாகை கூடிய சிறந்த நிர்வாகி, சிறந்த ஆலோசகர். மேலும் முரண்பாடற்ற முகாமைத்துவம் மற்றும் தளததில் உள்ளவர்களையும், புலத்தில் உள்ளவர்களையும் இணைத்து திட்டங்களை அமுல்படுத்துவதில் முன்உதாரணமாக திகழ்ந்தவர்.

மென்மையான அணுகுமுறையும் அன்பான வார்த்தைகளும் அவரது ஆளுமைக்கு மிகவும் மெருகு ஊட்டியது.

மேலும் தயக்கம் இன்றி பணிக்கப்பட்ட கடமைகளை சவாலாக ஏற்று விருப்பமுடன் நிறைவேற்றுவது என்பது அவரது தனித்துவம். மேலும் பல வைத்தியசாலைகளையும் பல அத்தியாவசியமான பிரிவுகளையும் உருவாக்கி Covid நேரத்தில் பல திட்டங்களை அதிதீவிரமாகவும் விரைவாகவும் அமுல்படுத்துவதில் வெற்றி கண்டவர்.

நான் எமது சமூகத்தை இணைத்து எமது மந்திகை வைத்தியசாலையில் ஒரு மாற்றத்தை உருவாக்கவதற்கு என்னுடன் பல தடவைகள் ஆலோசித்து வழிநடத்தி "ஐயமிட்டுண்" என்னும் செயற்பாட்டை முதல்முதலாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உருவாக்கவதில் மிகப்பெரிய பலமாக என்னுடன் பயணித்தவர்களில் மிகவும் முக்கியமான பங்கை செய்தவர் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் பதிவிட விரும்புகின்றேன். இன்று "ஐயமிட்டுண்" செயற்பாடானது பல பாடசாலைகளில் உணவைக் கொடுத்து சமூகத்தை இணைத்து எமது மாணவர்களை கல்வியில் தக்க வைப்பதற்கு மிகப்பெரிய பாலமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஐயமிட்டுண் மலையகம் கிழக்குமாகாணம் மற்றும் வடக்கில் உள்ள பல பாடசாலைகளில் விஸ்தரிக்கப்பட்டு சமூகத்தை பாடசாலைகளில் இணைப்பதில் பெரிய வெற்றியைச் சந்தித்துள்ளது. மேலும் Dr. Ketheeswaran இன் சமூகம் சார்ந்த செயற்பாடுகள் சமூகத்தை இணைக்கின்ற செயற்பாடுகள் எமது வடமாகாணத்தில் ஓர் உன்னதமான உறவுநிலையை வைத்திய முகாமைத் துறையில் பேணியுள்ளது.

Dr.கேதீஸ்வரன் அவர்கள் சேவையில் இருந்து தனது அகவை அறுபதில் ஓய்வு பெற்றாலும் தனது ஆளுமை கொண்ட ஆலோசனைகளை வழங்கவும் சமூகத்திற்கான அபிவிருத்தி சேவைகளில் தொடர்ந்து ஈடுபடவும் தனது குடும்பத்துடன் சந்தோசமாக வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு.செல்வராசா முரளீதரன் (OAM)**
நிறுவுனர்
ஐயமிட்டுண் அறக்கட்டளை
அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் செம்மல் Dr கேதீஸ்வரன்.



கரவை மைந்தன் Dr கேதீஸ்வரனின் மணிவிழா வைபவத்தை முன்னிட்டு கரவெட்டி மக்களினால் வெளியிட விருக்கும் மலரில் எமக்கும் வாய்ப்பு தந்தமைக்கு இளைப்பாறிய அதிபர் இராகவன் அவர்களுக்கு முதற்கண் நன்றி.

ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்குப் பின்னால் பலரின் பங்களிப்பு எப்போதுமே உண்டு. அந்த வகையில் Dr கேதீஸ்வரன் அவர்களின் முன்னேற்றத்திற்குப் பின்னால் இருந்த இருவர்பற்றி குறிப்பிடுதல் சாலச் சிறந்தது என்றே நினைக்கிறேன். அது வேறுயாரும் இல்லை. அவரைப் பெற்றெடுத்த அண்ணா ஆறுமுகமும் அக்கா மீனாட்சியும்தான்.

கரவெட்டி பல கல்வியாளர்களைக் கண்டுள்ளது. கரவெட்டியின் புகழ் சொல்லும் மணியோசை தச்சந்தோப்பானின் ஆத்மீக மணியோசைதான். ஆலயத்திலிருந்து சேவையை ஆரம்பித்த ஆறுமுகமண்ணனை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. சிந்தாமணி வாசிகசாலையை உருவாக்கி சிறியோரினதும் பெரியோரினதும் அறிவுப்பசியை தீர்த்த பணி ஆறுமுகமண்ணரையே சாரும். அற்புதமான மனிதர். கூப்பிட்ட குரலுக்கு ஓடி ஓடிச் சேவை புரிந்த இவருக்குக் கேதீஸ்வரன், சுப்பிரமணியம் என இரு சற்புத்திரர்கள். இருவரும் கல்வியில் உச்சத்தைத் தொட்டவர்கள். கேதீஸ்வரன் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம் , திரு இருதயக் கல்லூரி ஆகியவற்றிலும் இடைப்படிப்பை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றுப் பின்னர் அவர் உயர் கல்வியை அரசின் உதவியூடாக சோவியத் ரஸ்சியாவிலுள்ள பெலாரசிலும் கற்று வைத்தியக் கலாநிதியானவர்.

இவ்வாறு ஆறுமுகம் அண்ணனின் இருபிள்ளைகளும் ஒருவர் வைத்தியத் துறையிலும் மற்றவர் பேராசிரியராகவும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இவர்களில் கேதீஸ்வரன் எங்களோடிணைந்த மாபெரும் சேவையாளன். கேதீஸ் எனது ஊரவராக இருந்தபோதும் நான் அவரை நேருக்கு நேர் பார்த்தது லண்டனில்தான். அதுவும் அவர் ரஸ்சியாவில் படிக்கும்போது அவரின் நண்பர் மணிவண்ணனுடன் எனது மனைவியைச் சந்திக்க வந்த இடத்தில்தான் நானும் சந்தித்தேன். ஊரவர் என்பதை அறிந்த அன்றிலிருந்து எங்களுக்கிடையில் ஆழ்ந்த நட்பு உருவாகியிருந்தது. இவரின் சேவை 1990 தொடங்கி ஏறக்குறைய 33 ஆண்டுகளாக வடமாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் சாதாரண வைத்தியராகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இப்படியான பொறுப்பான அதிகாரியாக இவர் உயர்வதற்கான காரணம் இவரது நடுநிலையான தன்மையும் எந்தவிதமான அரசியலிலும் ஈடுபடாமையும் எந் நேரமும் மக்களின் வாழ்க்கைக்கான சுகாதாரத்தையும் வாழ்க்கை நலனையும் முன்னிறுத்தியமையே ஆகும்.

தனது வெளியுலக அனுபவத்தைக் கொண்டு அவர் மேற்பார்வையில் உள்ள பல வைத்தியசாலைகளை குறிப்பாக மந்திகை, கரவெட்டி வைத்திய சாலைகளை நவீனமயப்படுத்தியுள்ளார்.

மகப்பேற்று வைத்தியசாலையாக இருந்த அம்பம் வைத்திய சாலையை இன்று யாவரும் புகழப்படும் வகையில் அதிசிறந்த வைத்தியசாலையாக்கியுள்ளார். கரவெட்டி அபிவிருத்திச் சங்கம் பிரித்தானிய கிளை , கனடா கிளை ஆகியவற்றுடன் இணைந்து ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை.

கேதீஸின் அழகான ஒரு சுபாவம் உதவி என்று கேட்பவர்களுக்கு மறுக்காமல் உடனே உதவி செய்தலாகும்.அவருடைய 33 வருட சேவைக்காலத்தில் பல்வேறு உயர் பதவிகள் பெற்று மக்களுக்காற்றிய உதவிகள் மறக்கவொண்ணாதவை. இவரின் சேவையைப் பெறாதவர்கள் மிகச் சொற்பமே.

நான் ஊருக்குச் செல்லும்போதெல்லாம் அவரைச் சந்தித்தே வருவது வழக்கம். இத்தகு சிறப்புகள் பெற்ற கேதீஸ் எமக்கு நண்பராக இருப்பதையிட்டு நாம் பெருமிதம் அடைகிறோம். இவர் நீண்டகாலம் வாழ்ந்து தொடர்ந்து சேவைகள் புரிய வேண்டுமென வாழ்த்தி இறைவன் இவருக்குப் பக்கபலமாக இருக்கவேண்டி அமைகிறோம். இவரின் மணிவிழா சிறப்பாக நடைபெற்று சிறப்புற வேண்டு மென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வீ. மகாலிங்கசிவம்.**

(செயலாளர், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம், பிரித்தானியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகநக நட்புடன் என் உள்ளத்திலிருந்து...
## நோர்வேயிலிருந்து சிவபாலன்



இன்று 04.05.24 மணிவிழாகாணும் எனது அன்பு நண்பர் வைத்திய கலாநிதி திரு கேதீஸ்வரன்அவர்களுடனான எனது 50 இற்கு மேற்பட்டவருடகால நினைவுகளை இம்மணிவிழா மலரில் பகிர்ந்து கொள்வதில் மட்டற்றமகிழ்ச்சி அடைகின்றேன். நண்பர் அவர்களும் நானும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்விகற்காதபோதும் லீலாறட்ணம் மாஸ்ரருடைய தனியார் கல்வி நிலையத்தில் இரண்டு வருடங்கள் ஒன்றாகப்பயின்றோம் அப்போது இருந்துதான் எமது நட்பு ஆரம்பமானது அன்று முதல் இன்றுவரை இடையில்பல காலம் சூழ்நிலைகளால் தொடர்புகள் அற்றுஇருந்தும் என்றும் அழியாத மரியாதை மிகுந்தநட்பு.

அன்று நாங்கள் 5ம் வகுப்பில்படித்துக்கொண்டு இருந்தபோது கல்விநிலையத்தின் சரஸ்வதி பூஜை பெரியநிகழ்வாக கொண்டாடப்பட்டது. வழமையாக ஆசிரியர்கள் தான் நிகழ்ச்சிகளை தயாரித்து மாணவர்கள் மூலம் ஒப்புவிப்பார்கள் ஆனால் எங்கள் வகுப்பில் நான் ஒரு வில்லுபாட்டு எழுதுகிறேன். செய்வோம் என்று கேதீஸ்வரன் அவர்கள் என்னிடம் கூறினார் என்னிடம் ஒரு சிறிதளவிலான பாடல்திறன் இருந்தமையால் எம் மற்றைய நண்பர்களின் உதவியோடும் சேக்கிழார் எனும் தலைப்பில் ஒரு சமயபாட கதையை எழுதி அப்போது மிகவும் பிரபலமான. தேவரின் தெய்வம் எனும் பட பாடல்களை மாற்றிஅமைத்து அதை மிக சிறப்பாக அமைத்து எழுதியிருந்தார் அந்த நேரத்தில் நான்காம் வகுப்பில் படித்த நாங்கள் இப்படியொரு நிகழ்வை சொந்தமாக செய்வது இலகுவல்ல நான் ஏன் இதை இதில் எழுது கிறேன் என்று சொன்னால் 50 ஆண்டுகளின் முன் ஒரு ஆளுமை மிக்க வளரும் பயிர் முளை விட்டிருந்தது.என்பது கண்கூடாக அன்று தெரிந்தது. இந்த கரவை மண்ணின் பொக்கிசம் அன்று அடையாளம் காணப்பட்டது. இன்று வடமாகாணமக்களின் சுகாதார நலன்கள் காப்பதில் சிறப்பாக அவர் செயலாற்றுவதை நாம் எல்லோரும் அகமகிழ்வோடும் பெருமையோடும் காண்கின்றோம்

அதுமட்டுமல்ல அன்று நான் கண்ட கேதீஸ்வரன் அவர்கள் மிகவும் மிருதுவான சாந்தமான நண்பர்களிடம் தகராறுகள் அற்ற ஒரு சிறந்தபண்பாளர். இந்த பண்பாடுகள் எல்லாம் அவரை எவ்வாறு பல இக்கட்டானகால கட்டங்களின்போதெல்லாம் அவரது பணியை எவ்வளவு சிரமங்களின் மத்தியில் சிறப்பாக செயற்படவைத்துள்ளது என்பதை எல்லோரும் அறியக்கூடியதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு கேதீஸ்வர்கள் அவர்கள் கரவெட்டி திருஇருதையகல்லூரிக்கு பெருமை சேர்த்தவர். 1978 ஆம் ஆண்டில் கல்விப்பொது சாதாரண பிரிவில் 7D 1C பெறுபேறு பெற்று முதன்மை மாணவர்களில் ஒருவராகத்திகழ்ந்தார். அதன் பின்னர் எம்முடன் ஹட்லிக்கல்லூரியிலே உயர்தரகல்விக்காக இணைந்தார்

அப்போது கூட நான் சேர்ந்துபடிக்கும் பாக்கியம் பெறவில்லை. இருவேறுபட்ட துறைகளில் கல்விகற்றோம் பின்னர் இரு வேறுபாதைகளில் இருவரும் பயணப்பட்டோம். அவர் மருத்துவ மேற்படிப்புக்காக சோவியத் யூனியன் நாட்டிற்குச்சென்றார் நான்எனது துரதிஸ்ட்ம் கல்வியை இடைநிறுத்தி வேறுபாதையில் சென்றேன்.

மிகநீண்ட இடைவேளையின் பின்னர் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது 15 ஆண்டுகளின் பின் நான் முதல்முதலாக எம் ஊருக்கு வந்தபோது அவர் வுனியாவில் பணியாற்றிக் கொண்டிருந்தார் உறவுகளூடாக நான் வந்ததை அறிந்து பார்க்கவேண்டும் என கூறியிருந்தார். குடும்ப சகிதம் நானும் சென்று பார்த்தேன். மீண்டும் எம்நட்பு உயிர் பெற்றது.

பின்னர் அவர் வடமாகாணத்துக்கு பணியாற்ற வந்தார். எனக்கு 50 வயது எட்டியது. நான் ஊர் சென்று அந்தநாளை அமைதியாய் கழிக்கவும் நான்பிறந்த மருத்துவமனைக்கு ஏதாவது செய்யவேண்டும் எனவும் அவருடன்தொடர்புகொண்டு கேட்டேன். அப்போதுதான் நான் அறிந்து கொண்டேன். அவருடைய பெரும் சேவையாலும்கரவெட்டி ஒன்றியத்தின் கடும் பங்களிப்பாலும் பெரியதொரு வெற்றியாக கரவெட்டி வைத்தியசாலை உருவாக்கப்பட்ட விடயம். மிக மிக மகிழ்ந்தேன்.அன்றில் இருந்து ஊருக்காக என்னால் ஆன பணிகளை செய்யவேண்டும் என்ற ஆர்வம் என்னிடமும் கொழுந்துவிட்டது.

கரவெட்டி சொர்க்கம் எனும் எண்ணம் என் உள்ளத்தில் உருவெடுத்தது. இதை இசை வடிவாக்கி ஒரு ஆவணமாக ஆக்கவேண்டும் என முடிவு செய்தேன். என் ஆக்கத்தை பாடலாக எழுதி முதன் முதலில் ஊரில் திரு கேதீஸ்வரன் அவர்களிடம் அனுப்பினேன் சில மணி நேரங்களில் மிகவும் மகிழ்வுற்று எனக்கு ஊக்கம் தந்தார் அது மட்டும் அல்ல பிறந்த இடத்தை எழுதினீர்கள் கடைசியாய் செல்லும் இடத்தை மறந்துவிட்டீர்கள் சிவபாலன் என்றார். உடனடியாக சோனப்பு மயானத்தை பாடலாக எழுதினேன் மிகவும் மகிழ்ந்தார். நான் அதை வெற்றிகரமாக வெளியிட அவருடைய ஊக்கம் எனக்கு வழிசமைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல அவருடைய ஆலோசனையுடன் சில நல்ல பணிகளை நான்எம் மண்ணுக்காக செய்யகூடியதாக இருந்தது. அடுத்து எங்கள் வைத்திய கலாநிதி அவர்களின் அப்பா அம்மா இன்று துரதிஸ்ரவசமாக அவருடன் இல்லை என்றாலும் மிகவும் அருமையாக அவரையும் அவரது தம்பி மணி அவர்களையும் வளரத்திருக்கிறார்கள். இரு நல்ல இதயம் படைத்தவர்களையும் ஆற்றல் மிக்கவர்களையும் கரவை மண்ணுக்காக ஈந்திருக்கிறாரகள் கேதீஸ் என்னுடன் கதைக்கும போது எல்லாம் தந்தையின் கதை வந்தால் கூறுவார். ஐயாவுக்குத் தெரியும். நான் இன்று இப்படி இருப்பேன். இதை எல்லாம் செய்வேன் என அது மட்டும் அல்ல. அவருடைய தந்தையும் நல்ல கலைஞர். கலை ரசிகன் கரவை வரலாற்றின் அண்ணாவி ஆழ்வார் அப்பாவின் பவளக்கொடி என்னும் வரலாற்றுக்காவியத்தில் முக்கியபாத்திரத்தில் பங்கேற்று நடித்தவர். தவில் நாதஸ்வரத்தில் மிகுந்த ரசனை உள்ளவர்.அந்த கலை ஆற்றல் தான் மகனிடமும் உள்ளது.

கேதீஸ் அவர்களிடமும் தொடர்நது வருகிறதுஅவருடை கலைப்பபடைப்புக்கள் இன்னும் பல வரவேண்டும என பார்ததிருக்கின்றோம். அவரது அப்பப்பாதான் பல நல்ல பழக்கங்களை எல்லாம் கற்றுந் தந்ததாகவும் வண்டில் மாடுகட்டி எல்லாம் திருத்தலங்களுக்கு கூட்டி சென்றதாகவும் இப்படி ஓர் அருமையான வளர்ப்புகள் இன்று கரவை மண்ணில் மட்டும் இல்லை வடமாகாணத்திலேயே பிரதிபலிப்பதை காணும் போது எம் எல்லோருக்கும் பெருமையாகவுள்ளது.

இன்றைய இந்த இனிய நன்நாளில் எங்கள் வைத்தியகலாநிதி அவர்கள் மேன் மேலும் எம் மக்களுடைய சுகாதாரநலன்களில் சேவை புரிந்து புகழ் பெற்று சுகநலம் பெற்று பல்லாண்டு காலம் சிறப்பாக வாழவேண்டும் என இவ் மணிவிழாமலர் மூலம் வாழ்த்தி மகிழ்கின்றேன் எனக்கு இச்சந்தர்ப்பத்தை தந்தமைக்கு மிகவும் நன்றிகள் கூறி அமைகின்றேன்

அன்புடன்

**சிவபாலன்**

நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சேவையின் சிகரம்" - ஆறுமுகம் கேதீஸ்வரன்



மணிவிழாக் காணும் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறென். வடமராட்சி வலயக கல்விப் பணிப்பாளராகக கடமையாற்றிய காலப்பகுதியில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நான் சந்தித்த அபூர்வமான மானிடப் பிறவிகளில் அவரும் ஒருவர். வவுனியா மாவட்டத்தில் பிராந்திய சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றி இடமாற்றத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். முப்பதாண்டு கால உள்நாட்டு யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. நீண்டகால யுத்தத்தின் வடுக்களைச் சுமந்த நிலையில் யாழ்மாவட்டம் னாட்சியளித்தது. கல்வியும், சுகாதாரமும் தளர்வடைந்த நிலையில் காணப்பட்டது.

மிகப் பழமையான யுத்த வடுக்களையேந்திய வைத்தியசாலைக் கட்டிடங்களில் வைத்தியர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள், ஊழியர்கள் பற்றாக்குறையுடன் வைத்தியசாலைகள் இயங்கிக் கொண்டிருந்தன. இவற்றை மீட்டெடுத்து மக்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்கவேண்டியிருந்தது. எமது வலயக் கல்விப் பணிமனைக்கு அருகாமையிலிருந்த மந்திகை ஆதார வைத்தியசாலையே இதற்கு நல்ல உதாரணமாகக் காட்சியளித்தது. அவ் வைத்தியசாலையின் அப்போதைய தோற்றம் இப்போதும் என் மனத்திரையில் நிழலாடுகிறது. இது போன்றே பெரும்பாலான வைத்தியசாலைகள் இயங்கிக் கொண்டிருந்தன. இவற்றை மீட்டெடுக்கும் மீட்பராக வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் வருகை தந்தார். இவ் வைத்திய சாலையின் இன்றைய தோற்றத்தின் காரணகர்த்தா டாக்டர் கேதீஸ்வரனே எனக் கூறலாம்.

யாழ்மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையேற்ற வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் யாழ்மாவட்ட வைத்தியசாலைகளை சீராக்கம் செய்து மக்களுக்கு வேண்டிய சுகாதார சேவையை வழங்குவதில் அயராது பாடுபட்டார். ஒருநாள் என்னுடன் தொடர்பு கொண்ட அவர் எமது பாடசாலை அதிபர்களைச் சந்தித்துக் கலந்துரையாட அனுமதி கேட்டார். அவர் கேட்டுக்கொண்டபடியே அதிபர்களைச் சந்திக்க அனுமதித்தேன். மந்திகை ஆதார வைத்தியசாலையின் அப்போதைய அவலநிலையை எடுத்துக் கூறி ஒரு விடுதியைப் புனரமைக்க நிதியுதவி வழங்குமாறு கோரினார். எல்லாப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்களும், ஆசிரியர்களும் இணைந்து பெருமளவு நிதியைச் சேகரித்து விடுதியொன்றை புனரமைப்புச் செய்ய உதவினார்கள். அவர் கேட்டுக் கொண்டதற்கமைய தனிப்பட்ட பலரும் வைத்தியசாலையைப் புனரமைக்க உதவி செய்தனர்.

வடமராட்சி வலயப் பாடசாலைச் சிறுவர்களின் தேவைக்கென ஒரேயொரு பாடசாலைப் பற்சிகிச்சை நிலையமே யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இயங்கி வந்தது. பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கிலுள்ள சிறுவர்களுக்கு இச்சிகிச்சை நிலையத்திற்குச் சென்று வருவதிலுள்ள கஷ்டங்களை டொக்டர் கேதீஸ்வரனுக்கு எடுத்துக்கூறி இன்னொரு பற்சிகிச்சை நிலையத்தை பருத்தித்துறையிலுள்ள வடஇந்து மகளிர் கல்லூரியில் அமைக்க உதவுமாறு கேட்டுக் கொண்டேன். எனது வேண்டுகோளை ஏற்று இப் பாடசாலையிற் பற்சிகிச்சை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியகலாநிதி கேதீஸ்வரனிடம் பல நற்பண்புகளை நான் அவதானித்துள்ளேன். கடமையுணர்வு, சேவை மனப்பாங்கு, அடக்கம், பணிவு அனைத்தையும் தன்னகத்தே கொண்டமையால் தான் அவரால் பல சாதனைகளைப் புரிய முடிந்தது. அவர் சிறந்தவோர் மேடைப்பேச்சாளர், நல்லதொரு எழுத்தாளர், பல்துறை ஆளுமை படைத்த சிறந்தவோர் வைத்தியகலாநிதியாக அவரை அடையாளங் காணலாம். அவரைப் பற்றிச் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்கலாம். அவரது சேவையை நினைக்கையில் ஔவையின் பாடலொன்றே நினைவுக்கு வருகிறது.

"மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் சன்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செய்ய
அருமையும் பாரார் அவமதிப்பும் நோக்கார்
கருமமே கண்ணாயினார்"

மணிவிழாக் காணும் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் மேலும் பல ஆண்டுகள் எம்மண்ணுக்குச் சேவையாற்றி சிறந்த சுகாதார சேவையை மக்களுக்கு வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

வ.செல்வராசா
ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையின் மகத்தான ஒப்புரவாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்



அரச பதவிகள் மக்களுக்காக மக்கள் அரசுகளால் உருவாக்கப்பட்டு, கற்றலில் தேர்ச்சி பெற்றோருக்கு வழங்கப்படுவனவாகும். அரச பதவிகளுக்கென சேவை செய்வதற்கான அதிகாரமும் வலுவாண்மையும் உள்ளன. இவை பதவியை வகிப்போருக்கு உரிமையானவையன்று. மக்களுக்கு உரித்தானவையாகும். நமது நாட்டில் நடைமுறையில் பதவிகளில் உள்ள பலரிடம் இதற்கான செயற்பாட்டுப் பண்பினைக் காணமுடியாதுள்ளமை கவலையளிப்பதாகும். பலர் பதவிகளால் பெருமையடைகின்றனர். சிலர் பதவிகளைப் பெருமையடையச் செய்கின்றனர்.

அவ்வாறு பதவிகளைப் பெருமையுறவைத்த ஓர் மகத்தான ஒப்புரவாளர் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் ஆவார். பிரதிபலன் கருதாது பொதுமக்களுக்குச் செய்யும் தொண்டே ஒப்புரவு என்பது அறிஞர்களின் கருத்தாகும். பிரதிபலன் கருதாது தனது பதவிகளின் பணிகளை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் சமூகத்திற்காக ஆற்றி வருபவர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் ஆவார்.

ஓர் திறமை மிக்க மாணவனாக, ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகப் பட்டங்கள் வரை மிளிர்ந்த இவர் தனது வைத்தியத் தொழிலில் பல்வேறு களநிலைகளிலும் சிறப்பான மக்கள் தொண்டாற்றியதுடன் சமூகத்தின் முக்கியமான பல்வேறு துறைசார்ந்தும் விருப்புடனும் அக்கறையுடனும் பங்கேற்றார். கல்வி, ஆன்மீகம், சுற்றாடல், மக்கள் நலன் சார்ந்த வறுமை போக்கும் செயற்றிட்டங்கள் என சகல பொதுநலத் திட்டங்களையும் எமது பிராந்தியத்தில் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மானசீகமாகவும் தனது பதவி அதிகாரம் வலுவாண்மை மூலமாகவும் ஊக்கமளித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக எமது பிராந்தியத்திலும் பிரதேசத்திலும் நேர்மை, நியாயம், இன்சொல், தீர்க்கம் முதலான தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட ஓர் நல்ல மனிதராக பிரதிபலன் கருதாத மக்கள் சேவகனாக வாழ்கின்றார். யுத்தகாலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் பல இக்கட்டான நிலைமைகளிலும் யாழ்பாணப் பிரதேசத்திலும் வடக்குமாகாணத்திலும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தியில் தீர்க்கமானதும் திடமானவையுமான செயற்பாடுகளை முன்னெடுத்தார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியில் அவரது அதீத அக்கறையும் ஆலோசனைகளும் என்றும் எமது நினைவில் நிலைத்திருக்கும்.

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபராக நான் கடமையாற்றிய காலத்தில் கல்லூரிச் சமூகத்தின் ஆதரவோடு அக்கல்லூரி அதீத வளர்ச்சி பெற்ற காலத்தில் ஆக்கம் மிக்க பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC) அங்கத்தவராகக் கல்லூரிக் கல்விப் பணியாற்றிய வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் கல்விப்பணிக்குத் தலைதாழ்த்தி அவரது அகவை அறுபதில் பிரதேச மக்களால் முன்னெடுக்கப்படும் அவரது மணிவிழாவில் அவரையும் அவரது மனைவி மற்றும் புத்திரரையும் வாழ்த்துவதில் மட்டில்லா மகிழ்வடைகின்றேன்.

"நன்றி மறப்பது நன்றன்று"

**கலாநிதி செல்லத்துரை சேதுராஜா**
முன்னாள் அதிபர்,
யா/நெல்லியடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆல் போல் தழைத்த மனிதர்



"தெள்ளிய ஆலின் சிறு பழுத்து ஒரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையிலும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் பரவி ஆள் பெரும் படையோடு
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே"

(வெற்றிவேற்கை-17)

வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் சமூகத்திற்கு ஒரு ஆலமரம் போல் கிளை பரவி நல் நிழல் தந்து அனைவர்க்கும் ஆறுதல் தரும் பெருமகனாக வாழ்ந்து அனைவர்க்கும் ஒரு முன்னுதாரணமாக காணப்படுவர்.

அன்பு, அமைதி, இரக்ககுணம் நிறைந்த பண்பாளர். நிலமதிர நடக்க மாட்டார். அதே போல் மனித மனமதிர பேசமாட்டார். தனது பணி முழுமையையும் மக்களின் தேவை கருதியே செயற்படுவார். தனது துறை சார்ந்து மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் தனது சேவையை வழங்கி வருகிறார். வடமாகாணத்தின் வைத்தியத் துறையின் வளர்ச்சியில் தனது முழுநேரத்தையும் செலவிட்டு வருபவர். வடமாகாண வைத்திய சாலைகள் பெற்றுள்ள நவீன வசதிகள் அவரின் அயராத உழைப்பினாலும் அவர் கொண்டிருந்த நல்லெண்ணத்தினாலும் கூடிவரப் பெற்றவையே எதனையும் நன்றாகத் திட்டமிட்டு, சரியான செயற்திட்டத்தை வகுத்து அதற்கான பௌதீக வளங்களை உரிய இடங்களிலிருந்து பெற்று செய்து முடிப்பதில் ஒரு போராளியாக விடாமுயற்சியுடன் செயற்படுவதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கண்டுள்ளோம். தனக்கு இருந்த அறிமுகங்களையும் நட்பினையும் பயன்படுத்தி புலம்பெயர்ந்தோரையும் மற்றும் சமூக ஆர்வலர்களையும் இணைத்து பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

வடமராட்சியில் இவரின் செயற்பாட்டின் சாட்சிகளாக திகழும் வைத்தியசாலைகளை காணமுடியும். கரவெட்டி பிரதேச வைத்தியசாலை புதுப் பொலிவுடனான கட்டங்களையும், வசதியான நோயாளர் தங்குமிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. இதில் இவரின் உழைப்பு மிக உயர்வானது. அதேபோன்று மந்திகை ஆதார வைத்தியசாலை இன்று அனைத்து வசதிகளையும் கொண்ட வடமராட்சி மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய நவீன வசதிகளை கொண்டதாகவும், அழகான கட்டடங்களையும் கவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையையும் அதே போன்று நவீன உபகரணங்களையும், வைத்திய நிபுணர்களையும், தாதியர்களையும் கொண்டு இயங்குகின்றது. இதில் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் கனவுகள் நனவாக்கப்பட்டமையால் விளைந்தவையே ஆகும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் தன்னை பெற்று, வளர்ந்த வடமராட்சி மண்ணிற்கு தன்னால் ஆன நன்றியை தனக்குக் கிடைத்த பதவியை கொண்டு சிறப்பாக ஆற்றியுள்ளார். மேலும் வடமாகாணத்தின் அனைத்து வைத்தியசாலைகளையும் ஒரே நோக்கொடு வளர்த்து வந்துள்ளார். இவரின் மேற்பார்வைகளின் போது வைத்தியசாலைகளின் குறைகளை கேட்டறிந்து அவற்றை அடைவதற்கான பாதையை நலன்விரும்பிகள் மூலமோ அரசு, அரசு சாரா நிறுவனங்கள் ஊடாகவோ பெற்றுக்கொள்ள சிறப்பாக வழிகாட்டி வந்துள்ளார். தனது நடுநிலை தவறாத (நிர்வாகத்தினால்) வடமாகாணம் முழுவதும் வைத்தியர்களிடமும் சுகாதார பணியாளர்களிடமும் நன்மதிப்பை பெற்றுள்ளதுடன் வடமாகாண வைத்திய சேவையை சமத்துவமாகவும் சம வாய்ப்புடனும் மேற்கொண்டுள்ளார். இதனால் வடமாகாண சுகாதார சேவை குறுகிய காலத்தில் பெருவளர்ச்சி அடைந்துள்ளது.

கொரோனா பேரிடரின் போது வடமாகாண வைத்தியத்துறையை சிறப்பாக வழிநடத்தினார். இதன் மூலம் வைத்தியத் துறையின் மாண்பிற்கும், சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கும் முரண்நிலை ஏற்படாதவாறு நிர்வாக்தை மேற்கொண்டார்.

யா/ நெல்லியடி மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவில் மிக நீண்ட காலமாக உறுப்பினராக இருந்து தனது வேலைப்பளுவின் மத்தியிலும் கல்லூரியின் அபிவிருத்தியிலும் அதன் கீர்த்தி காலத்தின் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றினார். கல்லூரிக்கு ஒரு பேருந்தை பெறவேண்டும் என்பது இவரின் பெரும் கனவாக இருந்தது. அதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். குழுவாகவும், தனியாளாகவும் பல்வேறு நலன்விரும்பிகளுடனும், பல்வேறு நாடுகளின் தூ துவர்களுடனும் தனது நட்பினையும், அறிமுகத்தையும் பயன்படுத்தி கல்லூரிக்காக எமது கோரிக்கயை முன்வைத்து உழைத்தார். பேருந்து ஒன்றை கல்லூரி பெற்றுக் கொண்டதை அறிந்தவுடன் பேருவகை கொண்டு வாழ்த்துரைத்தார். எமது கல்லூரிக்குக் கிடைத்த மிகச்சிறந்த பெற்றோரில் ஒருவராக இன்றுவரை செயற்பட்டு வருகிறார்.

வடமராட்சியில் சமூகம் சார்ந்த எந்த நிகழ்வுகளிலும், முன்னின்று உழைப்பார். பாராட்ட வேண்டியவற்றை பாராட்டியும், திருத்த வேண்டியவற்றை ஆராய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்படுத்தியும் வருகின்ற ஒரு சமூக சிற்பியாகிய வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் மணிவிழா காண்பதில் பெருமகிழ்வடைவதுடன் பல்லாண்டுகாலம் மக்களிற்கான சேவையை மேற்கொண்டு பெருவாழ்வு வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**க.கிருஷ்ணகுமார்**
அதிபர்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் மகிழ வாழ்த்துகிறேன்



வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் அகவை அறுபதை பூர்த்தி செய்து மணிவிழா காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கொழும்பில் வாழ்ந்த நான் நிரந்தரமாக கரவெட்டியில் வசிக்க வந்த காலத்தில் தாங்களும் சுகாதார சேவைப் பணிப்பாளராக யாழ்ப்பாணத்தில் பதவியேற்றுக் கொண்டீர்கள். அதனூடாக எனது தலைமையிலான கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழு, கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் ஆகியவற்றின் போசகராக இருந்து கரவை முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்ட தங்களை வாழ்த்துவதிலே பெருமை கொள்கிறேன்.

கரவையின் முன்னேற்றத்திற்காக இவ்விரு அமைப்பினூடாக தீவிரமாக பல திட்டங்களை செயற்பட முனைந்தபோது அத்திட்டங்களிற்கான உயர் அதிகாரிகளை தொடர்பு கொள்வதற்கும் ,நிதியீட்டங்களைப் பெறுவதற்கும், செயற்படுத்துவதில் வரும் தடைகளை நீக்குவதற்கும் தங்களின் வேலைப்பழுவிற்கு மத்தியில் எமக்காக நேரத்தை ஒதுக்கி செயற்பட்டமை எனது நெஞ்சில் ஆழப்பதிந்துள்ளது.

நாம் பிறந்த மண்ணின் வாழும் மக்களின் பயன்பாட்டிற்குரிய பொதுத் தளங்கள் தொடர்ந்தும் இடையூறின்றி சிறப்பாக செயற்படுவதற்கு தாங்கள் முயற்சி எடுப்பீர்கள் என்ற திட சங்கற்பத்தோடு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

உபாலி சி.பொன்னம்பலம்
(தலைவர் - கரவை அபிவிருத்தி ஒன்றியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்து



எனக்கு கடந்த 2010 ம் ஆண்டில் இருந்து வைத்திய கலாநிதி Dr.A.கேதீஸ்வரனுடன் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்திலும் ,மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்திலும் அவருடைய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் வாய்ப்பபு் கிடைத்ததை நான் பெருமையாகக் கருதுகின்றேன். கடந்த 30 வருடங்களாக மருத்துவப் பணியில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பலருடைய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றியுள்ளேன். ஒவ்வொருவரது நிர்வாகமும் ஒவ்வொரு விதமாக இருந்தாலும் இவருடைய நிர்வாகம் முழுமையாக வேறுபட்டிருந்ததை என்னால் உணரக்கூடியதாகவும் அறியக்கூடியதாகவும் இருந்தது.

நான் முதன் முதலில் பல வருடங்களுக்குப் பின்னர் யுத்தகாலத்தில் (2009) யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தேன். அப்போது இரண்டு விடயங்கள் என்னைக் கவர்ந்தன. ஒன்று சிறப்பான கவர்ச்சிமிக்க கோவில்கள் மற்றையது RDHS அவர்களின் நிர்வாகத்தின் கீழ் அமைந்த வைத்தியசாலைகள் . ஏனெனில் வைத்தியசாலைகளில் ஆளணிப்பற்றாக்குறைகள் நிறைய இருந்தாலும் அவை தூய்மையாகவும் அழகாகவும் காணப்பட்டதைக் கொண்டு RDHS அவர்களின் நிர்வாகத்திறனே காரணம் என அறிந்து கொண்டேன்.

2010 ம் ஆண்டு தொடக்கம் RDHS அவர்களின் தூண்டுதலினால் நான் யாழ்ப்பாணத்தில் பணியாற்றி வருகின்றேன். இவருடைய நிர்வாகத்தில் சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய விடயம் பௌதீக வளங்களையும் மனிதவள முகாமைத்துவத்தையும் கையாளும் திறன் மிக்கவராக விளங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. அரச நிதியாக இருந்தாலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியாக இருந்தாலும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தும் திறன் பெற்றவர். எத்தனை மணிநேரம் கூட்டம் நடந்தாலும் அனைவரது கவனத்தையும் சிதறாது கொண்டு நடாத்தும் திறமை வாய்க்கப் பெற்றவர். மேலும் அவர் எந்த சூழ்நிலையில் காணப்பட்டாலும் ஏதாவது தேவை கருதி தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளும் போது அதற்குரிய பதிலை மிக விரைவாகவும் நேர்த்தியாகவும் வழங்கும் திறன் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவற்றுக்கும் மேலாக தமிழ்ப்புலமையும், எளிமையும், அனைத்து உத்தியோகத்தருடனும் நட்புறவுடன் பழகும் தன்மையும், பக்தி நிரம்பிய சாதாரண மனிதனாகவும் உள்ள இவர் நீண்ட ஆயுளோடு நோய் நொடியின்றி சந்தோசமாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவார் என்று வேண்டுகின்றேன்.

**வைத்திய கலாநிதி. சி.சுதோகுமார்**
சுகாதார வைத்திய அதிகாரி
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நிர்வாகத்தின் மகுடத்திற்கு மனமார்ந்த மணிவிழா வாழ்த்துகள்



வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சமூக வாழ்வின் சிறப்பான இயங்குதன்மைக்கு மருத்துவத்துறை பெரிதும் பங்களிக்கின்றது. எமது நாட்டின் வளர்ச்சிப் போக்கில் இலவச மருத்துவமும் இலவசக்கல்வியும் இரண்டு கண்களாகும். எமது தேசத்தின் சுகாதாரத்துறையில் இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன.

1. நோய் வருமுன் பாதுகாப்போம் என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற சுகாதாரப் பிரிவு
2. நோய்களைக் குணப்படுத்துவதன் மூலம் உயிர் காக்கின்ற வைத்தியசாலைகளும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் இவற்றையெல்லாம் சிறப்பாக நிர்வகிக்கின்ற மருத்துவ நிர்வாகிகள் சுகாதாரத் துறையின் மூலாதாரம் என்பதில் ஐயமில்லை. தன்னுடைய கடின உழைப்பாலும் விடா முயற்சியினாலும் படிப்படியாக வளர்ந்து சிறப்பாக சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற மூத்த மருத்துவ நிர்வாகிதான் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள்.

மருத்துவ நிர்வாகத்துறையினுள் நுழைந்து வவுனியா, யாழ்ப்பாணம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றியவர். வைத்தியர்கள் என்பவர் நோயாளரின் பிணி தீர்க்கும் மருத்துவ சேவையை வழங்குகின்ற அதே வேளையில் அவற்றுக்கு மேலாக வைத்தியசாலைகளையும் சுகாதார நிறுவனங்களையும் சிறப்பாக நிர்வகிக்கின்ற பொறுப்பை செவ்வனே செய்து கொண்டிருப்பவர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள்.

அவரிடம் காணப்படுகின்ற ஆளுமைப் பண்புகள் அவரை ஒரு சிறந்த மருத்துவ நிர்வாகியாக திகழ வைத்திருக்கின்றன. அவருடைய கனிவான பேச்சு, தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன், சிறந்த திட்டமிடல், எளிமையான நடத்தைக் கோலம், தனது நிர்வாகத்தின் கீழ் செயற்படும் உத்தியோகத்தர்களிடமிருந்து சிறப்பான சேவையைப் பெற்றுக் கொள்கின்ற ஆற்றல் போன்றன அவரை ஒரு மேம்பட்ட நிர்வாகியாக மிளிர வைத்துள்ளது.

போர் மேகங்கள் சூழ்ந்த நெருக்கடியில் கூட யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக இருந்து தன்னுடைய சேவைகளை சிறப்பாக ஆற்றிய பெருமை இவருக்குரியது. 2013ம் ஆண்டிற்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் ஒன்றிரண்டு MBBS வைத்தியர்களைவிட ஏனைய அனைத்து வைத்தியர்களும் பதிவு வைத்திய அதிகாரிகளாக காணப்பட்டார்கள். அந்நெருக்கடியான காலகட்டத்தில் கூட இவருடைய தலைமையில் மிகச்சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டது. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் கோவிட் பரவல் தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக ஆற்றியமைக்காக மத்திய சுகாதார அமைச்சினால் வட மாகாண சுகாதார திணைக்களம் பாராட்டப்பட்டது அனைவரும் அறிந்ததே. அக்காலப் பகுதியில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக இருந்து தன்னுடைய பணியை சிறப்பாகச் செய்தவர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள். மேலும் அவரோடு இணைந்து பணியாற்றியவர்களுக்கு தெரியும் அவர் இலகுவில் தொடர்பு கொள்ளக்கூடிய நிர்வாகி என்று.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நான் இரண்டரை வருடங்கள் பதில் வைத்திய அத்தியட்சகராகப் பணியாற்றியிருந்தேன். அக்காலப்பகுதியில் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்களுடைய வழிகாட்டலில் பணிபுரியக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. வைத்தியசாலையின் வளர்ச்சியை பிரதான இலக்காகக் கொண்டு வைத்தியசாலை நிர்வாகத்தை சிறப்பாக வழிநடாத்த உறுதுணையாக இருந்து வெற்றியும் கண்டவர்.

அரச துறைகளில் பணிபுரிகின்ற அனைவரும் மக்கள் மனங்களில் இடம்பிடிப்பதில்லை. தனது காலத்தால் அழியாத சேவை மூலம் மக்கள் மனங்களை வென்ற மருத்துவ நிர்வாகி வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் என்றால் மிகையாகாது. நானும் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்களும் பாடசாலைப் பருவத்தில் சம காலத்தில் ஒரே தரத்தில் கல்வி கற்றவர்கள் அன்று தொட்டு இன்று வரை அவர் என்னுடைய ஒரு சிறந்த நண்பனாக இருந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உயர்ந்த மனிதரின் எதிர்காலம் சிறக்க வேண்டும் அவருக்கு நிறைந்த மன அமைதியும் நீண்ட ஆயுளும் கிடைக்க வேண்டும். ஆண்டவன் அருளால் அவருக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும். அவருடைய மருத்துவப் பணிகள் சிறக்க வேண்டும். அவரது எதிர்காலம் சிறக்க எல்லாம் வல்ல ,றைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**வைத்திய கலாநிதி வே.கமலநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவமும் கேதீஸ்வரனின் வாழ்வியலும்



பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

பண்புடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் இடையறாது தொடர்ந்து இயங்குகின்றது. அங்ஙனம் இல்லையானால் அது மண்ணில் புகுந்து அழிந்துவிடும் என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. அத்தகைய பண்புடையவர்கள் அவ்வப்போது இந்த மண்ணில் பிறந்து வாழ்ந்து இவ்வுலகைக் காப்பாற்றி வருகின்றார்கள். வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனும் அத்தகைய ஒரு பெருந்தகை என்றால் அது மிகை அல்ல. ஒரு வைத்தியராக அவரது சேவைப்பயணம் ஆரம்பித்தது. ஆனால் விரைவில் ஒரு மருத்துவ நிர்வாகியாக உயர்ந்தவர் அன்றிலிருந்து தனது திறமையால் ஆற்றிய, ஆற்றி வரும் பணிகள் பல. அவை வடமாகாண சுகாதார சேவையின் மைல்கற்களாக, அடுத்தவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கி வருகின்றன. இப்பணிகளினூடே மனிதாபிமானமும் அர்ப்பணிப்பும் ஆளுமையும் பண்பும் ஒருமித்து இழையோடியிருப்பதை நாம் காணலாம்.

வைத்திய கலாநிதி கேதீஸவரன் அவர்களைப்பற்றிக் கூறவிழையும்போது அவரது அருளுடைமை அழையாமலேயே சிந்தையில் வந்துதிக்கும். ஆம்.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

வள்ளுவப்பெருந்தகைஇக்காலத்திற்கும்பொருத்தமாகஅக்காலத்திலேயேஎவ்வளவு அழகாகக் கூறியுள்ளார். அருளாகிய செல்வமே செல்வத்துள் எல்லாம் சிறந்தசெல்வமாகும். பொருள்களாகிய பிறவகைச் செல்வங்கள் எல்லாம் இழிந்தவர்களிடத்திலும் உள்ளன என்று கூறிச் சென்றுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. அவ்வழியில் பார்க்கும்போது வைத்தியக் கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் பெருஞ்செல்வர் ஆவார். தன்னுடன் வேலை செய்பவர்களுடனோ அல்லது உதவி நாடிவரும் பொதுமக்கள்மீதோ அவர் எப்போது கரிசனையுடனேயே நடந்துகொள்வார். அவர்களின் மனங்கோண அவர் எப்பொழுதும் வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொண்டதில்லை. அனைத்திலும் மேலாக தனது சக ஊழியர்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் இருப்பதில் ஒரு சகோதரனைப் போலவும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைப் போலவும் செயற்படும் இவரது அன்பு என்றும் மறக்க முடியாதது.

பொதுவாக அரச பணிகளில் அமர்பவர்களின் நோக்கம் தம் வாழ்விற்கான பொருளை ஈட்டுவதுதான். அதில் தவறும் இல்லை. ஆனால் சிலர்தான் அப்பதவி தமக்களிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு என்ன செய்யலாம் என சிந்திக்கின்றார்கள். அவர்களில் ஒரு சிலர் தான் அத்தகைய புத்தாக்க வழிமுறைகளைக் கண்டடைகின்றார்கள். அவர்களிலும் சிலர்தான்,

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு

அதாவது அன்பு, அறிவு, ஐயமின்றித் தெளியும் ஆற்றல் பேராசை இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாகக் கொண்டவர், செயலுக்கு உரியவராக செயற்கரிய செய்து விளங்குவர். வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு தற்போதும் செயற்பட்டுவரும் பலவற்றைப் பார்க்கும்போது வள்ளுவர் கூறும் அத்தகு வினையாடல் செய்வபர் இவர் என்பது புலனாகும்.

ஒரு சிறந்த நிர்வாகியை அனர்த்த நிலைகளிலும் அவசர நிலைகளிலும் தான் அடையாளம் காண முடியும் என்பார்கள். வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிர்வாகி என்பதை 2006 - 2009 காலப்பகுதியில் நிலவிய அனர்த்த நிலைக்காலமும் 2020 முதல் நிலவிய கோவிட் பெருந்தொற்றுக்காலமும், அதன் பின்னான பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சிக்காலான காலமும் மேலும்நிரூபித்தன.

உதாரணமாக இறுதிப்போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையானது இவ்வகையில் நாட்டிலேயே முதலாவது வெற்றிகரமான சேவையாகும். இது அக்காலத்தில் இருந்த ஊரடங்குச் சட்டம் மற்றும் பயங்கரமான அச்ச சூழ்நிலையில் பல நூறு அவசர நோய்களுக்கு ஆட்பட்டவர்களையும் காயப்பட்டவர்களையும் உரிய நேரத்தில் வைத்தியசாலைகளில் சேர்த்து உயிர்களைக் காப்பாற்ற பெரிதும் உதவியது. யாழ்ப்பாணத்தின் சுகாதாரத் துறையிலிருந்த நோயாளர் காவுவண்டிகளையும் சாரதிகளையும் அர்ப்பணிப்புள்ள சில இணைந்த சேவை உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்ததன் மூலமாகவே இச்சேவை வெற்றிகரமாக இயக்கப்பட்டது. இச்சேவை பின்னர் முதலாவது வடமாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக்காலத்தில் வட மாகாண சுகாதார அமைச்சராக இருந்த வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் அவர்களின் முன்னெடுப்பில் மாகாணம் முழுவதும் பரவலாக்கப்பட்டது.

இதே போல் உளவியல் ஆரோக்கியம் தொடர்பாக பல்வேறு முன்னெடுப்புகளை யாழ்ப்பாணத்திலும் பின்னர் வடமாகாணத்திலும் ஆரம்பிப்பதற்கான தலைமையை வழங்கினார். உள மருத்துவ நிபுணர் பேராசியரியர் சா. சிவயோகனுடன் இணைந்து பல்வேறு முன்னெடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்கொலை எண்ணம் கொ்ணடவர்களுக்கான அவசர அழைப்பு சேவையான நேயம் தொலைபேசிச் சேவை சுகாதாரத் துறையிலிருந்த ஊழியர்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

உள நோயாளிகளுக்கான புனர்வாழ்வு நிலையமாக 'குடில்' என்ற நிலையம் பொது-தனியார் (புலம்பெயர் தமிழர்கள்) கூட்டு மூலம் (Public-Private Partnership) ஆரம்பிக்கப்பட்டது. இன்று இவ்வமைப்பு உலக சுகாதார நிறுவனத்தினால் ஏனைய நாடுகளுக்கான முன்மாதிரி (model) அமைப்பாக அடையாளங்காணப்பட்டுள்ளது. இதை விட மதுவடிமைப் புனர்வாழ்வு நிலையமான குருந்தம் ஆரம்பிக்கப்பட்டதிலும் வைத்திய கலாநிதி கேதீஸ்வரனின் தலைமைத்துவத்திற்கு பங்குள்ளது.

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான விசேட சிகிச்சை நிலையமான மாதவம், தீரா நோய்களால் மரணத் தறுவாயை நெருங்கிய நோயாளிகளுக்கு அளிக்கப்படும் நடமாடும் அல்லது வீட்டிலேயே வழங்கப்படும் மரணவலி தணிப்பு சிறப்பு மருத்துவ பராமரிப்பு (Home-based Mobile Palliatice Care) என்பனவும் இவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றை விடவும் யாழ்ப்பாணத்தில் 2005ம் ஆண்டின் தொடக்கத்தில் பதவியேற்றவுடனேயே சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்த அதே வேளை பொதுச்சுகாதார விடயங்கள் தொடர்பான கண்காணிப்பு, மீளாய்வுக் கலந்துரையாடல்கள் போன்றவற்றை யாழில் அறிமுகப்படுத்தியதுடன் அவற்றுக்காக யாழிலிருந்த சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்களை வலுவூட்டும் ஏற்பாடுகளை தானே நேரில் செய்து இன்று யாழ்ப்பாணத்தின் பொதுச் சுகாதார சேவைகளின் தரத்தையும் அடைவுகளையும் நாட்டின் முன்னிலையில் உள்ள ஒன்றாக மாற்றுவதற்கு பிரதான காரணமாக இருந்தவர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கும் மேலாக கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் வட மாகாணத்தில் சுகாதாரத் துறையினரின் நடவடிக்கைகளை திட்டமிட்டு ஒருங்கிணைத்து வெற்றிகரமாக இக்காலப்பகுதியைக் கடக்க இவரின் தலைமைத்துவமே பெரும் பங்காற்றியது. நெருக்கடியான நேரங்களில் மட்டுமல்லாது ஏனைய நேரங்களிலும் ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்களுடன் இணைந்து இதற்காக பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரமாகச் செயற்பட்டார். அந்த நேரங்களில் வைத்திய கலாநிதி கேதீஸ்வரனுடன் பணியாற்றியமை ஒரு மருத்துவ நிர்வாகியாக எனக்கு நிறைந்த அனுபவத்தைத் தந்தது.

நயனொது நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

என்பதற்கு அமைய வடமாகாணத்தினதும் நாட்டினதும் சுகாதாரத் துறைக்கான வைத்திய கலாநிதி கேதீஸ்வரனின் பங்களிப்பு எப்போதும் மக்களாலும் நண்பர்களாலும் அவரின் வழி தொடர்வோராலும் போற்றிப்பாராட்டப்படும்.

தனது சமூகம் மீதான அவரது பற்று அவரோடு இணைந்து பயணித்தவர்களுக்கே தெரியும் .தனது நிர்வாகப் பதவி மூலமும் அத்துறையிலிருந்த தனது தனித் திறன் மூலமும் எமது சமூகத்திற்கு அவர் செய்ய பங்களிப்புகளை விடயம் தெரிந்தவர்களால் ஒரு போதும் மறக்க முடியாது.

2013 ஆம் ஆண்டு முதல், அவரது தலைமையின் கீழ் பணிபுரியும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது, அந்த நேரத்திலிருந்து, அவர் எனது நிறுவனத் தலைவராக மட்டுமல்லாமல், சுகாதார நிர்வாகம் பற்றிய எனது புரிதலையும் மனப்பாங்கையும் வடிவமைத்த ஒரு முன்மாதிரியாகவும் இருந்து வருகின்றார்.

2013 நவம்பரில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பணிக்கு வந்த போதுதான் முதன்முதலில் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்களை நேரில் சந்தித்தேன். யாழ்ப்பாண மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி வந்த அவர் எனது வாழ்வின் வழிகாட்டிகளுள் ஒருவராகவும் முன் மாதிரியாகவும் படிப்படியாக என்னை ஆகர்சித்துக் கொண்டார்.

எப்போதும் அமைதியாகவும் நிதானமாகவும் எதையும் அணுகும் இவரின் நிர்வாகப்பாணி அனைவரும் பின்பற்றக் கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற குறளுக்கு ஏற்ப தன்றுடன் பணிபுரிபவர்களுள் திறமையானவர்களை கண்டெடுத்து அவர்களுக்குரிய பணியை வழங்கி சுகாதாரத் துறைக்கு மட்டுமல்லாது அவர்களது வளர்ச்சிக்கும் உதவி புரிவதில் திறன் வாய்ந்தவராக வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் இருந்து வருகின்றார் .இவரின் கை பட்டு புடம் போடப்பட்ட பலர் இன்று பல்வேறு நிலைகளில், திணைக்களங்களில் திறமையானவர்களாக பணியாற்றி வருகின்றார்கள்.

இளையவர்கள் தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் என யாரேனும் நல்ல முன் மொழிவுகளை முன்வைத்தாலோ அல்லது திருத்தங்களைச் சொன்னாலோ அவற்றைக் கவனமாகச் செவி மடுத்து உள்வாங்கி செயற்படுத்துவதிலும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் தயங்காதாவர்.

இலங்கையில் தற்போது கடமையிலிருக்கும் மருத்துவ நிர்வாகிகளுள் கூடிய சேவைக்காலத்தைக் கொண்ட மிகச் சிலருள் வைத்திய கலாநிதி கேதீஸ்வரனும் ஒருவர். குறிப்பாக தமிழ் மருத்துவ நிர்வாகிகளுள் சிரேஸ்ட நிலையிலுள்ளவர். ஆனாலும் ஒருபோதும் அந்த சிரேஷ்ட நிலையை தூக்கிப்பிடித்தவரல்ல. மிகவும் எளிமையான இந்த மானிடனை எனது சிரேஷ்ட அதிகாரியாகவும் வழிகாட்டியாகவும் அடைந்தது நான் செய்த பாக்கியமாகும். அவர் மேலும் மேலும் தனது தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் பணி வாழ்விலும் சிறப்புற்று பேர் புகழுடன் ஆரோக்கியமாக நீண்ட நாள், நிறைவுடன் வாழ வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**வைத்திய கலாநிதி. சிங்காரவேலு குமரவேள்**
வைத்திய அத்தியட்சகர்
ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமான தலைமைத்துவம்



வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களுடன் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக ஒன்றாகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும். வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் துறையின் பாரிய முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டு அதனை மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் பேணிப் பாதுகாத்ததில் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்களின் பங்கு அளப்பரியது. நான் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் காலத்தில் கேதீஸ்வரன் சேர் அவர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார். எமது பணி நிமித்தம் அவருடன் சேர்ந்து கடமையாற்ற வேண்டிய பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றன. கோவிட் பெருந்தொற்று போன்ற சவால்கள் பலவற்றை வெற்றிகரமாக முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களும் கிடைக்கப்பெற்றன. இவருடன் பணியாற்றும் காலத்தில் எமக்கு நல்லதொரு ஆசானாகவும் வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்ததுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் நல்லதொரு நண்பராகவும் இருந்துள்ளார்.

இவரிடம் நான் கற்றுக்கொண்ட, பார்த்து வியந்த சிறந்த தலைமைத்துவப் பண்புகள் சிலவற்றைப் பகிர விரும்புகின்றேன்.

1. தூர நோக்கு: இவரால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் தூர நோக்கு ஒன்று மறைந்திருப்பதனை அவதானிக்க முடியும். இன்று வடக்கு மாகாண சுகாதாரத் துறையானது மற்றைய துறைகளை விடவும் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் ஆதார வைத்தியசாலை வரையும் கட்டிட மற்றும் உபகரண வசதிகளில் முன்னிற்பது இதற்கு நல்ல உதாரணமாகும்.

2. செவிமடுத்தலும் பதிலளித்தலும்: வைத்திய நிபுணர்கள் முதல் சாதாரண உத்தியோகத்தர்கள் வரை இவரைத் தொடர்பு கொண்டு கலந்துரையாட முடியும். பல விடயங்களுக்கு உடனேயே பொருத்தமான பதில் கிடைப்பதுடன் சில விடயங்கள் உடனடியாக நிறைவு செய்யப்பட்டிருக்கும். நாம் கேட்டவற்றை நாமே மறந்தாலும் மறக்காமல் அதற்கான பதில் அன்றிரவோ மறுநாளோ கிடைப்பது இவரின் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முடிவெடுத்தலும் பொறுப்பு நிற்றலும்: மருத்துவ நிர்வாகத்தில் பல்வேறு நிலைமைகளில் சில முடிவுகளைத் துணிவாக எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். பல்வேறு அனர்த்த நிலைமைகளிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகள் வரும் போதும் "நான் சொன்னேன் என்று சொல்லி நீங்கள் அப்படிச் செய்யுங்கோ" என்ற பதில் எமக்கு மிகவும் துணிவளிப்பதாக இருக்கும்.

4. சேர்ந்து பணியாற்றுதல்: வடக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளாலும் மிகவும் விரும்பப்படுகின்ற சுகாதாரத் துறைசார் உயர் அதிகாரி வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் என்பது அனைவரும் அறிந்ததே. பொதுச் சுகாதார சேவைகள் பெரும்பாலும் பல்வேறு துறைகள் சார்ந்திருப்பதனால் இவரின் இலாவகமாக ஏனைய துறைகளைக் கையாளும் திறனானது பாராட்டப்படவேண்டிதொன்று என்பதுடன் சுகாதாரத் துறையின் பல்வேறு வெற்றிகளுக்கும் காரணமானதாகும்.

5. நேர்மறை சிந்தனை: தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு முன்னேற்றமான சுகாதாரத் துறை சார்ந்த புதிய முயற்சிகள் வடக்கு மாகாணத்திலோ அல்லது யாழ் மாவட்டத்திலோ முதலில் நடைமுறைப்படுத்தப்படுவதும் அது பின்னர் நாட்டின் வேறு பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுவதும் வழமையானதொன்றாகும். புதிய, ஆரோக்கியமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் கேதீஸ்வரன் சேர் அவர்களைத் நேரடியாகவே தொடர்பு கொள்வதும் நாம் அனைவரும் அதற்கு ஆதரவளிப்பதும் அனைவரும் அறிந்ததே. எதுவும் எம்மால் முடியும் என்பதுடன் எதை எவரின் மூலம் நிறைவேற்ற முடியும் என்பதனையும் இவர் நன்கு அறிவார்.

6. பிரச்சினைகளைத் தீர்த்தல்: சுகாதார உத்தியோகத்தர்களில் பல்வேறு வகையினர் கடமையாற்றி வரும் நிலையில் அனைவரும் அர்ப்பணிப்போடு கடமையாற்றுபவர் எனக் கூறமுடியாது. சில உத்தியோகத்தர்கள் மிகவும் சுயநலத்துடன் தமது கடமைகளைத் தவறுவதும் உண்டு. அவ்வாறான நிலைமைகளில் கேதீஸ்வரன் சேர் அவர்களிடம் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் பெரும்பாலும் தீர்க்கப்பட்டுவிடுவது உண்டு. சில வேளைகளில் சில உத்தியோகத்தர்கள் நிர்வாக ரீதியான தண்டனைகளைப் பெற்றதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளல்: வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் புதிய தொழிநுட்ப மாற்றங்களுக்கும் தலைமுறை மாற்றங்களுக்கும் ஏற்ப தன்னையும் மாற்றிக்கொண்டார். மேலும் புதிய வகையில் சிந்திக்கும், செயற்படும் ஏனைய உத்தியோகத்தர்களைத் தட்டிக் கொடுக்கத் தவறுவதில்லை.

8. தொடர்பாடல்: கேதீஸ்வரன் சேர் அவர்கள் ஒரு விடயத்தை முன்னிலைப்படுத்தி அது தொடர்பான தெளிவான விளக்கங்களை அளித்து அதனைச் செயற்படுத்தும் திறனானது நாம் அனைவரும் கண்டு வியந்த ஒரு விடயமாகும். பல்வேறு விடயங்கள் தொடர்பான அனுபவம் மற்றும் மும்மொழிகளிலும் திறன் என்பன இதற்கான பக்கபலமாகும்.

9. களத்தில் நிற்றல்: தீர்க்க முடியாத பல பிரச்சினைகள் வரும் போது அலுவலகத்திலிருந்து கட்டளைகளைப் பிறப்பிக்காமல் களத்தில் நின்று பிரச்சினைகளைத் தீர்ப்பது யுத்த காலத்திலும் சரி, கோவிட் பெருந்தொற்றுக் காலத்திலும் சரி நாம் அவதானித்த ஒரு விடயமாகும். இதற்கான பல்வேறு உதாரணங்களை எம்மால் கூற முடியும்.

10. முன்னுதாரணமாதல்: நேர முகாமைத்துவம், அழகாக ஆடை அணிதல் மற்றும் இன்முகத்துடன் உரையாடுதல் இவரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களாகும். இவர் பல்வேறு விடயங்களைக் கையாளும் 'ஸ்டைல்' இனைப் பார்த்து நம்மில் பலபேர் எம்மை மாற்றிக் கொண்டதுமுண்டு. எங்கே விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதும் எங்கே கடுமையாக இருக்க வேண்டும் என்பதும் இவரிடம் இன்னும் நாம் கற்றுக் கொண்டிருக்கும் விடயங்களாகும். சொற்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இன்னும் பல விடயங்களைக் கூறாமலேயே மணிவிழாக் காணும் எமது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அவர்களை வாழ்த்தி நிற்கிறேன்.

நன்றி

**டாக்டர். க. செந்தூரன்,**
சுகாதார வைத்திய அதிகாரி,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்மாவட்ட சுகாதாரக் குடும்பத்தின் ஓர் அச்சாணி



இலங்கை திருநாட்டின் சிரசாம் யாழ்ப்பாணத்தின் மூளையாகிய வடமராட்சி மண் தந்த எமது அன்புக்கும் பெருமதிப்புக்குரிய யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களது மணிவிழா மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்கும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு பெரிதும் உவகையடைகின்றேன்.

நான் 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதல் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை குழந்தைகள் விடுதியில் வைத்தியராக கடமையேற்ற காலத்திலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக இவரது நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருக்கின்றது. இருந்த போதிலும் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையின் 2020 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் நிகழ்ந்த நிர்வாக மாற்றத்தின் பின்னரான பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையின் துரித அபிவிருத்தித்திட்டம் 2020 இன் கீழ் தாபிக்கப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளராக பங்கெடுத்த போது அடிக்கடி கேதீஸ்வரன் சேருடன் அளவளாவும் வாய்ப்பு கிடைத்தது. அந்தச்சந்தர்ப்பங்களில் அவரது சாதுரியமான நிர்வாகத்திறமை கண்டு வியந்துமிருக்கின்றேன். மிகவும் இலகுவாக அணுகக்கூடியவர். மிகவும் மென்மையான குரலிலே உரையாடலை சுமூகமாக கொண்டுசெல்லக்கூடியவர். மற்றொருவர் கூறுவதை பொறுமையாக செவிமடுக்கக் கூடியவர். பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையின் துரித அபிவிருத்தித்திட்டங்களிலே பல்வேறு முறைகளிலும் சரியான வழிகாட்டல்களை வழங்கியிருந்தார். இதன் பயனாக, 08 மாதகாலப்பகுதியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையானது மறுமலர்ச்சி அடைந்ததனை இப்பிரதேச மக்கள் நன்கு அறிவார்கள்.

பின்னர் 2020 ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டிலே பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்ற பின்னர் நிர்வாக ரீதியாக பல்வேறு தடவைகள் சேருடன் கலந்துரையாடும் தேவையிருந்துள்ளது. ஒரு சிறந்த நிர்வாகிக்கு இருக்கவேண்டிய தலைமைப்பண்புகள் இவரிடம் ஏராளம். நன்கு செயற்திறனாக செயலாற்றுபவர்களை ஊக்குவித்தல், வழிகாட்டல் தேவைப்படும் போது அது எந்நேரமாக இருந்தாலும் உதவ தயங்காதவர். ஏப்போதும் கையில் ஓர்குறிப்பேட்டுடன் காணப்படுவார். முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை குறித்துவைத்து ஒன்றையும் தவறவிடாது அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் திட்டங்களை வகுப்பதும் தொடர்ச்சியாக அற்பணிப்புடன் கடமையாற்றுவதிலும் இவரிற்கு நிகர் வேறுயாருமில்லை.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்னும் சுகாதாரத்துறையின் மிகப்பெரிய பொறுப்புக்களை ஒரேநேரத்தில் திறம்பட வகித்தவர். இவரது காலத்திலே யாழ் மாவட்ட சுகாதாரத்துறை பௌதீக வளரீதியில் மிகப்பெரும் வளர்ச்சியை கண்டுள்ளது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

சுகாதாரத் துறையின் இக்கட்டான பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் மிகத்திறம்பட சுகாதாரத்துறையினை வழிநடத்தியவர். கோவிட் - 19 பெருந்தொற்று காலத்திலும் கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் காலத்திலும் பல்வேறு சவால்களிற்கு மத்தியில் எம்மை ஒழுங்கமைத்து வழிப்படுத்தியது என்றும் வரலாற்றில் நிலைத்திருக்கும்.

தலைமைத்துவம் என்பது ஒருவருக்கொருவர் வேறுபட்டாலும் இவரது நடை, உடை, பாவனை, சொல், செயல், சிந்தனை என்போன்ற பலரில் செல்வாக்குச் செலுத்தியமையையும் எம்மிலும் பல நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தியமையையும் யாராலும் மறுக்கமுடியாது.

இவரது நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் வாய்ப்பு இன்னும் சில வருடங்கள் எமக்கு உண்டு. என்பதோடு, இவர் சிறந்த ஆரோக்கியத்தோடும் வளத்தோடும் தெடர்ந்து சமுதாயத்திற்கு சிறந்த சேவையாற்ற வேண்டும். என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு அவரது மணிவிழா சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி. (திருமதி) பிறிந்திகா செந்தூரன்,**
சுகாதார வைத்திய அதிகாரி,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு மணிவிழா நாயகன்



"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்"

என்ற வள்ளுவர் வாய்மொழி போல் யாழ் மண்ணிற்கும் அதன் சிறப்பிற்கும் யார் பொருத்தமான பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் என இறைவன் ஆராய்ந்து இறைவனால் தீர்மானித்த ஒரு பணிப்பாளரே மாண்புமிகு வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆவார். தன்னலமற்ற சேவைக்கும் தலைமைத்துவத்திற்கும் வழிகாட்டலிற்கும் இரவு பகல் எனப் பாராது சுகாதாரத்திற்கும், மருத்துவ சேவைக்கும் என அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொள்பவரே எங்கள் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆவார்.

24 மணி நேரமும் அணையா தொலைபேசி, எந்த நேரமாக இருக்கட்டும், எந்த தேவையாக இருக்கட்டும் அது டெங்குவாக இருந்தாலும் சரி, கொரோனாவாக இருந்தாலும் சரி, கொலராவாக இருந்தாலும் சரி சலிக்காமல் அந்தந்த நேரத்திலே முடிவெடுத்து தானும் முன் நின்று களம் இறங்கி கட்டுப்படுத்தும் திறன் கொண்ட மேல் அதிகாரி என்று சொன்னால் அது மிகையாகாது.

துறைக்கப்பால் நல்ல கவிஞராக மிளிர்வதும் மற்றவர்களுடன், நல் உறவைப் பேணுவதிலும், மதிப்புக்குரியவராக திகழ்வதும், நிர்வாகத் திறன், 5S முறைமை, எந்த ஒரு வைத்தியசாலைகளாகட்டும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகட்டும், பிராந்திய சுகாதார அலுவலகங்கள் ஆகட்டும், அங்கு தோன்றும் பிரச்சினைகளை நன்கு அறிந்து, அந்தந்த நிறுவனத் தலைவர் அணுகும் முன்னரே அதற்குரிய தீர்வையும் அங்குள்ள அடிப்படை நிலைமையையும் தெரிந்து வைத்திருக்கும் மாண்மியம் அவரின் சாதனையே.

நினைவாற்றல், மற்றோரை மதிக்கும் பண்பு, அவர்களுடைய மன நிலையிலிருந்து சிந்திக்கும் சிறப்பு, இடர்களை, வெற்றிகளை கையாளும் விதம் என்பன இவர் கடமையாற்றிய "மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும்" பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையிலும், பொது வைத்தியசாலை வவுனியாவிலும், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த காலத்திலும் மட்டுமல்லாது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றிற்கு கிடைத்த பல உயரிய விருதுகள், சான்று பகரும், இவரின் சிறப்பைச் சொல்லும்.

கரவை மண்ணில் - நற்
கதிரெனவே தோன்றி
இரவின் சிறப்பாய் - நோய்
இடர்தனைக் களைந்து
பரவிடும் கேதீஸ்வரன் - எனும்
பார் நாமம் கொண்டு
சிரஞ்சீவியாய் என்றும் - சூழும்
சிறப்புடன் வாழ்க

அகவை அறுபதை
அமைதியாய் அடிவைக்கும்
தகமை சுகாதார
தன்னலமற்ற பணிப்பாளர்
அகமும் புறமும் நல்
ஆளுமை மிக்க
மகத்தான மனிதனிற்கு
மணி விழா வாழ்த்துக்கள்

"வாழ்க என்றும் சிறப்புடன் பல நூற்றாண்டு"

**Dr. அ.ஜெயகுமாரன்**
சுகாதார வைத்திய அதிகாரி
வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Greeting Massage from Dr.T.Balamuraly



"I write to offer my warmest congratulations to Dr.A.Ketheeswaran on the happy occasion of his Diamond Jubilee celebration. During the past thirty-four years, his unflagging commitment to maintain the principle of dignity in the health sector of the Northern Province by virtue of his prestigious medical profession is highly admirable.During the war in the Island, the health status of the North kept on gradually deteriorating. His dedication in organizing humanitarian action in the medical field has touched my heart deeply. For instance, his crucial role in launching an emergency ambulance services with communication centre (1-1-0) which moved door to door to pick the patients was a priceless effort. In fact, this kind of his merciful and humanitarian actions were very helpful to the patients who had no access to reach the hospitals during the difficult time, and his timely action in launching the ambulance services, at the time, was a great acquisition, and it reduced mortality by saving countless lives. I do feel that it is a very suitable topic to honour the memory of him.

It is with great pleasure, I am truly grateful for his exceptional care, advice, and the bond I share. During my office as a Medical Officer of Health of Jaffna municipal council, his guidance and technical support played a pivotal role in fighting the deadly COVID-19 and Dengue outbreak situations. It was immensely helpful in combating the unprecedented emergency situations.

Due to his high-profile medical administrative leadership, many certificates of recognition and appreciations were presented to Jaffna District and the Northern Province by the central ministry of health for its great achievement and improvement in the health care services.

Holding the prominent positions as a Regional Director of Health Services in Jaffna and Provincial Director of Health Services in the Northern Province, his personal resilience, integrity, honesty, openness and the ability to communicate effectively with a wide range of our health staff are highly appreciable.

May this special day bring him well-deserved recognition and joy, both personally and professionally!

I want to wish him many great
years ahead so that he can carry
on doing all the great that he does.

**Dr. Tharmalingam Balamuraly (MBBS / DFM)**
Former Medical Officer of Health (Jaffna Municipal Council)
Medical Officer (Teaching Hospital Jaffna)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்து வியந்த ஆளுமை
# எங்கள் சுகாதாரப் பணிப்பாளர்
# வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்



இரு தசாப்தங்களிற்கு மேலாக வடமாகாணத்தின் பல் பரிணாம சுகாதாரத்துறை வளர்ச்சியில் அரும்பெரும் பங்காற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளராகிய எம் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஐயா பற்றி அவர் மணிவிழாக் காணும் இத்தருணத்தில் அந்த பேராளுமையின் கீழ் 14 ஆண்டுகளாக சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றியவர் என்கின்ற வகையில் எனது அனுபவங்களை பகிர்வதில் மகிழ்வடைகின்றேன்.

11.11.11 இது சுகாதார வைத்திய அதிகாரியாக தெல்லிப்பளையில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக கேதீஸ்வரன் ஐயாவின் கீழ் எம் முதல் நியமனம். வட மாகாணத்தின் சனத்தொகை நிறைந்த 12 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளையும் 4 ஆதார வைத்தியசாலைகளையும் பல பிரதேச வைத்திய சாலைகளையும் கொண்டிருந்த யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிமனை மிகக் குறைந்த வைத்திய அதிகாரிகளோடு இருந்த காலம். ஒரு புதுயுக வைத்திய அதிகாரியாக இந்த நோய் தடுப்பு பொதுச் சுகாதாரத்துறையில் காலடி எடுத்து வைத்த எமக்கு சில நாட்களிலேயே எமது பணிப்பாளர் கேதீஸ்வரன் ஐயாவின் மிகச்சிறந்த ஆளுமையும் அர்ப்பணிப்பும் குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவையை வழங்க அவர் கையாண்ட உத்திகளும் பிரமிக்க வைத்தன.

வைத்திய அதிகாரிகள் இல்லாத நிலையிலும் அனைத்து பணிமனைகளையும் அன்றைய நாட்களில் இயங்க வைத்து தாய்சேய் நல தொற்றுநோய் கட்டுப்பாடுகளில் ஏனைய பிராந்தியங்களிற்கு சற்றும் சற்றும் சளைக்காத அதனையும் தாண்டி அவற்றை விட ஒருபடி மேலான உன்னத நிலையில் யாழ் மாவட்ட சுகாதாரத்துறையை கட்டியெழுப்பியது என்பது வார்த்தைகளிற்கு அப்பாற்பட்டது. கடைநிலை ஊழியர் முதல் உயர்மட்ட சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள் வரை திறம்பட கையாண்டு உரிய நேரத்தில் தங்கு தடையின்றி மக்களிற்கு சுகாதார சேவைகள் கிடைக்க அவரின் நேர்த்தியான அணுகுமுறைகள் காரணமாய் அமைந்தன.

யுத்தக் கெடுபிடிகளின் மத்தியில் ஊரடங்கு வேளையிலும் நோயாளர் காவு வண்டிகளினூடாக 24 மணி நேர சேவையை ஒருங்கிணைத்து கிராமங்கள், பிரதேச வைத்தியசாலைகளிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு உரிய நேரத்தில் அவசர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளிகளை கொண்டு வந்து சேர்க்க அவர் உருவாக்கிய மிகச்சிறந்த நோயாளர் பரிமாற்ற வலைப்பின்னல் மகத்தானது.

தனக்குக் கீழ் பணியாற்றும் வைத்திய அதிகாரிகளிற்கு அவர்கள் பணிகளை செவ்வனே எந்தவித தலையீடுகளுமின்றி தொடர்வதற்கு முழுச் சுதந்திரமும் அளித்த பணிப்பாளர் கேதீஸ்வரன் ஐயா சுகாதார வைத்திய அதிகாரியாக மிகச் சர்ச்சைக்குரிய விடயங்களான மிருகபலி, வேள்விதடை, சுன்னாகம் கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலந்த வழக்குகளை தொடர்ந்த போது மிக நெருக்கீடுகளின் மத்தியிலும் முழுச் சுதந்திரம் அளித்து பக்கப்பலமாக நின்ற அவரின் நிறைந்த நேர்மனப்பாங்கை இன்றும் எண்ணிப் பார்க்கின்றேன். சுதந்திரம் தந்தது மட்டுமன்றி பல தொடர் நெருக்கீடுகளிலிருந்து எம்மை பாதுகாக்கவும் வழியேற்படுத்தி தந்த பெருமகனார் அவர்.

எந்தவொரு உத்தியோகத்தர் ஊழியரையும் தட்டிக் கொடுத்து பாராட்டி அவர்களின் சேவைகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதில் அவரிற்கு நிகர் அவரே. எம் தாய்மார் கழகங்களை என்றும் நெஞ்சில் நிறுத்தி உதாரணம் காட்டுவதையும் அந்த நிகழ்வுகள் சகலவற்றிலும் கலந்து எம் சுகாதாரக் குடும்பத்தையே உற்சாகப்படுத்திய பல சந்தர்ப்பங்களையும் நினைத்துப் பார்க்கின்றோம். அது எமக்கு மட்டுமல்ல அனைத்து அவரின் கீழான சுகாதார நிறுவனங்களுக்கு அந்த அனுபவம் வாய்த்திருந்தது.

எத்தகையை ஆளணி பற்றாக்குறை, பிற நெருக்கீடு அதிகரித்த வேலைப்பளு இருந்த போதிலும் பிரார்த்திக்கும் நிலை நிறுவனத் தலைவர்கள் மற்றும் பொதுச் சுகாதாரக் கலந்துரையாடல்களை கிரமம் தவறாது உரிய நிகழ்ச்சி நிரலில் பயனுறுதி வாய்ந்த தலைமைத்துவ ஒழுங்கு வகையில் நடாத்தி செல்லும் அவரின் வார்த்தைக்கு அப்பாற்பட்டது.

இவரது காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் பல சுகாதாரப் பணிமனைகள் கட்டப்பட்டதும் புதிதாக உருவாக்கப் பெற்றதும் இடம்பெற்றது. அதில் தெல்லிப்பளை, காரைநகர் பணிமனைகளில் நாமும் சுகாதார வைத்திய அதிகாரியாக ஐயாவின் தலைமைத்தவத்தில் திறந்து வைத்து மறக்க முடியாத இனிய அனுபவம்.

பல்துறை சார்ந்த திணைக்களங்களை இணைத்து முன்னெடுக்கும் பல்நோக்கு அணுகுமுறையில் (Multi Sectord approach) கேதீஸ்வரன் ஐயா மிகுந்த விற்பன்னர். டெங்கினும் கொரோனாவிலும் போசாக்கு மேம்பாட்டிலும் பல சந்தர்ப்பங்களில் அது சுடர்விட்டு பிரகாசமாய் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்களை கையாள்வதிலும் அவரின் அணுகுமுறை அலாதியானது. நோயாளர்களின் நலனை மீறாத வகையில் அதேநேரம் உத்தியோகத்தர் சுகாதார பொறிமுறைகளை முன்னகர்த்தவதில் வல்லவர் அவர்.

அவருடைய சேவைக்கு இன்னொரு மகுடம் கொவிட் - 19 கால கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் மிக துரிதமான தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடுகளும் எனலாம். ஒரே நேரத்தில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் அதே நேரம் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கொவிட் பெருந்தொற்றை மகாணத்தில் மாவட்டத்தில் கட்டுப்படுத்தி உயிர்பலி எண்ணிக்கையை மிகக் குறைந்த மட்டத்தில் பேணியமைக்கு அவர் காட்டிய அர்ப்பணிப்பும் தலைமைத்துவமும் உன்னதமானது. எமது ஒவ்வொரு அழைப்புக்களுக்கும் உடனுக்குடன் பதில் தந்து திணைக்கங்கள் படைகள் என அனைவரையும் ஒரு புள்ளியில் இணைத்து முடக்கங்களை சரிவர செய்து வெற்றிகரமாக பரவலைத் தடுப்பதில் சிறப்புக்களை தவிர்ப்பதில் பெரும் பங்காற்றினார். தினசரி இரவு நேரம் அட்டவணைகளுடன் அவர் தந்த பின்னூட்டல்களும் தனது ஆளணியை தொடர் உற்சாகத்துடன் உத்வேகத்துடன் இயக்க கையாண்ட சதவீத கணக்கு வைபர் குழுமச் செய்திகளும் நினைந்து பாராட்டத் தக்க கடந்த காலத்தின் பதிவுகள்.

இந்த 20 ஆண்டுகளில் பிராந்தியப் பணிப்பாளராக மாகாணப் பணிப்பாளராக பல சாதனைகளிற்கு சொந்தகாரரான எம் கெதீஸ்வரன் ஐயா பல சோதனைகளையும் நெருக்கீடுகளையும் உள்ளேயும் வெளியேயும் கடந்து வந்திருக்கின்றார். அவற்றை எல்லாம் புன்முறுவலோடு மிகச் சாதுரியமாக கடந்து வடக்கின் யாழின் சுகாதார சேவைகளில் காலத்தால் அழியாத முக்கிய தடத்தை வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் ஐயா படைத்துள்ளார் என்றால் அது மிகையில்லை.

இத்தகைய பேராளுமையின் கீழ் சுகாதார வைத்திய அதிகாரியாக பணியாற்ற எமக்கு கிடைத்த வாய்ப்பு வரமே. உங்கள் நேரந் தவறாத, தொடர் பின்னூட்டல் ஊடனான கரிசனை மிக்க செயற்றின் மிக்க எந்த சந்தர்ப்பத்தையும் சாதுரியமாக கையாளும் தலைமைத்துவம் என்றும் எம்மை வழிப்படுத்தும் வழிகாட்டும் என்பதை நிறைவாக பதிவு செய்து எல்லாம் வல்ல இறை சிவன் தங்களிற்கு நிறைந்த சுகத்தையும் ஆயுளையும் தர வேண்டி நிற்கின்றேன்.

**வைத்தியகலாநிதி பரா.நந்தகுமார்**
(சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய கலாநிதி Dr.A. Ketheeswaran
# அவர்களின்
# மணிவிழா வாழ்த்துப்பாமாலை



மணிவிழா நாயகனே! மருத்துவத்தின் நாடியே!
மலையென சுமைகள் சூழ்ந்த போதும் சுடராய் ஒளிர்ந்தவரே!
கரவை மண் பெற்ற மைந்தா கணபதியின் பக்தர் இவர்
கர்வம் பெற்றதையா வடமராட்சி உன்னால் இன்று

எம்மண்ணின் மீதான பிணி எதிர்ப்பு மன்னவரே!
எதிர்பார்த்த பணிதனை நிறைவாக தந்தவரே
நின் கீழ் பணியாற்ற நிச்சயமாய் கிடைத்த காலம்
நினைவில் கொள்வோம் என்றென்றும் நின் வழியில் நின்றிடுவோம்

மாகாணம் தோறும் மனதார சேவை பல
மகத்தாக செய்ததை நினைந்து நாம் பார்க்கிறோமே
கொடிய கொரேனாவானாலென்ன கொல்லும் டெங்குவானாலென்ன
கொண்ட சவால் அனைத்தும் தவிடு பொடியாக்கியவா!

யாழ்ப்பாணம் மட்டுமல்ல யார் வாழும் ஊரென்றாலும்
யாம் நினைக்கும் முன்னர் வந்து கண்ணியமாய் வழிநடத்தி
"உஸ்"கள் பல கூறி எம்மை உரிமையுடன் கண்டித்து
உம் வழியில் பயணிக்க ஒப்புடனே உதவினீரே!

திடமுடனே நீங்கள் பல திட்டங்கள் வகுத்து-மட்டுமன்றி
திசைகள் எட்டும் தாங்களாற்றிய தற்துணிவு செயல்கள் கோடி
உயர்வாக எண்ணுகின்றோம் உம்மைமிஞ்ச யாருமில்லை -அவனிதனில்
உத்தமனாய் வாழ்ந்தவரே உச்சம் தொட்டவரே! -மருத்துவத்தில்

தச்சன் தோப்பான் அருள் பெற்று தரணியில் பல செல்வம் கூடி
தம் ஆரோக்கியம் நீண்டு நிம்மதியாய் நீவிர் வாழ
வாழ்த்துகிறேன் மனமார மனிதருள் மாணிக்கமே !
வாழ்க நின் பணி! வாழ்க உம் புகழ் !
வாழ்க நின் கொள்கை! வாழ்க உம் குலம்!
வாழ்க! வாழ்கவே!

**வைத்தியகலாநிதி சத்தியரூபன் சூரிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன்



எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய கேதீஸ்வரன் ஐயா அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் வரையறைக்குள் வாழ்ந்துகொண்டிருப்பவர். ஒரு வைத்தியசாலையில் வைத்தியர் தொடக்கம் சிற்றூழியர் வரை அன்புடனும் மதிப்புடனும் நடாத்துபவர்.

அவர் யாழ் மாவட்டத்தில் பி.சு.சே. பணிப்பாளராகக் கடமையேற்ற காலகட்டத்தில் யுத்த சூழ்நிலை காரணமாக யாழ. மாவட்ட சுகாதாரத்துறை பலத்த பின்னடைவைச் சந்தித்திருந்தது. இந்தத் துறையை தனது அயராத முயற்சியினாலும் திறமையினாலும் கட்டியெழுப்பி, தென்மாவட்ட வைத்திய சாலைகளுடன் ஒப்பிடக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்த பெருமை அவரையே சாரும்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள், தாய், சேய் சிகிச்சை நிலையங்கள் பலவற்றை புதிதாக நிர்மாணித்ததுடன், சேதமடைந்த பல வைத்திய சாலைகளை புனரமைத்து சிறந்த சுகாதார சேவைகளை வழுங்க ஆவன செய்துள்ளார். அத்துடன் கரவெட்டியில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் மிகப்பெரும் அனுசரணையுடன் ஒரு கம்பீரமான பிரதேச வைத்தியசாலையை கட்டியமுப்பி கரவெட்டி மக்களுக்கு முழுமையான ஒரு வைத்திய சேவையை வழாங்கி வருகின்றார்.

அவர் ஒரு திறமையான நிர்வாகி. அவரது நிர்வாகத்தின் கீழ் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக நான் கடமைபுரிந்தது ஒரு மன நிறைவைத் தருகின்றது. என்னை தனது ஒரு உடன்பிறவாச் சகோதரியாகத்தான் மதிப்புடன் நடாத்துவார். இந்த அன்பிற்கு என்றென்றும் நான் தலை வணங்குகின்றேன்.

அவரும், அவரது குடும்பத்தினரும் என்றென்றும் மன அமைதியுடனும், நல்ல ஆரோக்கியத்துடனும் வாழவேுண்டும் என தச்சை ஐங்கரனை வேண்டுவதுடன், எனக்கு இவ்வாழ்த்துரையை வழங்குவதற்கு சந்தர்ப்பம் தந்த மணிவிழாக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr. ம.மங்கையர்மணி**
பதிவு வைத்திய அதிகாரி (ஓய்வு நிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவையை அடையாளப்படுத்தும் இன்றைய ஆளுமைகளில் ஒருவர் வைத்தியக்கலாநிதி கேதீஸ்வரன்



சிலரைப் பதவிகள் பெருமைப் படுத்துகின்றன. வேறு சிலர் பதவிகளைப் பெருமைப்படுத்துகிறார்கள். இதில் நிச்சயமாக இரண்டாவது வகையான ஆளுமையாகவே நான் வைத்தியக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனைப் பார்க்கிறேன். மிகவும் இளம் வயதில் இலங்கை சுகாதாரத்துறையின் பல உயர்பதவிகளை வகித்து அளப்பரிய சேவையைச் செய்துவந்திருக்கும் அவர் ஒருபுறத்தில் எனது உறவினர் என்பதும் மறுபுறத்தில் எனது மண் கரவெட்டியைச் சேர்ந்தவர் என்பதும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள்.

வடமராட்சியின் கரவெட்டி காலங்காலமாக பல்வேறு துறைகளிலும் தலைசிறந்த ஆளுமைகளைத் தோற்றுவித்த மண். மணிவிழாக்காணும் கேதீஸ்வரன் இன்றைய காலகட்டத்தில் கரவையை அடையாளப்படுத்தும் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவர். அவர் எம்மவர் என்பது எமக்கு அளவிலாப் பெருமையைத் தருகிறது.

சோவியத் ரஷ்யாவில் தனது மருத்துவக் கல்வியைப் பெற்ற கேதீஸ்வரன் சமுதாய மருத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார்.

தனது 25 வது வயதில் கேதீஸ்வரன் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரியாக முதல் நியமனத்தைப் பெற்றார்.

அதற்கு பிறகு வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்து தற்போது யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார்.

சுகாதார சேவையில் இளவயதில் இருந்தே முக்கியமான பதவிகளை வகித்து வளமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் இன்று இலங்கையில் உள்ள முக்கியமான சுகாதார சேவை அதிகாரிகளில் ஒருவராக விளங்குகிறார். தனது நிருவாகத்தின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் பிராந்தியங்களின் சுகாதார சேவைகளின் சிறப்புக்காக அரசாங்கத்தின் கௌரவத்தையும் அவர் பல தடவைகள் பெற்றிருக்கிறார்.

கேதீஸ்வரனின் எளிமையும் நயநாகரிகமான அணுகுமுறையும் மக்களுடனான தொடர்புகளில் அவரின் கண்ணியமான நடத்தையுமே அவரை இன்றைய உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தன என்பதில் சந்தேகமில்லை. அவர் அதிர்ந்து பேசியதை எவரும் கண்டிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. சுகாதாரசேவை அதிகாரிகளுக்கு இருக்கவேண்டிய சகல பண்புகளையும் உருவகப்படுத்தும் சிறந்த ஒரு ஆளுமையாக கேதீஸ்வரன் பிரகாசிக்கிறார் எனலாம்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் கேதீஸ்வரன் செய்துவந்திருக்கும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவைகளை நான் அறிவேன். வவுனியாவில் அவர் பல வருடங்கள் சேவைசெய்து அந்த பிராந்திய மக்களினதும் பிரதிநிதிகளினதும் பெரு மதிப்புக்குரியவராக திகழ்ந்த மாண்பை காலஞ்சென்ற மூத்த பத்திரிகையாளரான வவுனியா மாணிக்கவாசகம் என்னிடம் கூறுவார். கேதீஸ்வரின் நிருவாகத்தின் கீழ் அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் சுகாதாரசேவையில் முன்னெடுக்கப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் அவருடைய நிருவாகத் திறமைக்குச் சான்று பகர்கின்றன.

கரவெட்டி பிரதேச வைத்தியசாலையை இன்று பல்வேறு வசதிகளையும் கொண்டதாக மேம்படுத்தியதில் கேதீஸ்வரன் செய்த பங்களிப்பு அவரின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவையை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு எமக்கு நெருக்கமாக முன்னால் உள்ள ஒரு சான்று மாத்திரமே.

கேதீஸ்வரனின் மணிவிழாவை கரவை மக்கள் கொண்டாடுவது அளவிலா ஆனந்தம் தருகிறது. அவர் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து இலங்கை சுகாதார சேவைக்கு மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பை வழங்கிச் சிறக்க வாழ்த்துகிறேன்.

**வீரகத்தி தனபாலசிங்கம்**

பத்திரிகையாளர்

சம்பந்தர் கடையடி

கரவெட்டி மத்தி

10 ஏப்ரில் 2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வணங்குகிறேன்



இன்று மணிவிழாக் காணும் வைத்திய கலாநிதி திரு. ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களை வாழ்த்துவதை பாக்கியமாக கருதுகிறேன். அவர் யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வவுனியாவில் இருந்து மாற்றலாகி வந்தகாலம் முதல் அவருடன் இணைந்து சேவையாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அந்த அனுபவங்களைஒருதரம் மீட்டிப் பார்த்து பகிர்ந்து கொண்டால்தான் அவரது சேவையில் தன்னலம் கருதாத பண்பையும் மகத்துவத்தையும் புரிந்து கொள்ளலாம்.

2005ம் ஆண்டு நாட்டில் பல பிரச்சினைகள் நடந்து கொண்டிருந்த வேளை முந்நாள் மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்யட்சகர் அமரர் Dr. கதிரவேற்பிள்ளை அவர்கள் சேவையாற்றிய காலத்தில் முந்நாள் யாழ்மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ் மாவட்டச் செயலாளருமாகிய அமரர் கணேஷ் அவர்களின் தலைமையில் வடமராட்சி மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களது பொதுக் கூட்டத்தில் மந்திகை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்பட்டது. திரு. V.T. தங்கவேல் அவர்கள் செயலாளராகவும் நான் உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டேன். திரு அகிலன் (MLT) பொருளாளராக நியமிக்கப்பட்டார்.

அந்த காலகட்டத்தில் அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு சதமேனும் நிதி இருக்கவில்லை. இச் சந்தர்ப்பத்தில் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியேற்று எம்மை சந்திக்க வந்தார். அதன் பின் எங்கள் காட்டில் மழை. எமக்கு நிதி பெறுவதற்கு பல வழிகளில் ஆலோசனை வழங்கினார்.

முதலில் கொடி விற்றோம். பின்பு அரச நிறுவனங்களில் பாடசாலைகளில் பணியாற்றிய அரச உத்தியோகத்தரிடம் இருந்து நிதி சேகரித்தோம். வல்லிபுரக் கோவில் திருவிழாக்காலத்தில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நடத்தினோம். கொஞ்சம் நிதி சேர்ந்தது.

2005ம் ஆண்டிற்கு முன் மந்திகை ஆதார வைத்திசாலைக்கு வந்தவர்களுக்கு தெரியும் வைத்தியசாலை எப்படி இருந்தது என்பது. மலசலகூடங்கள் சுவர்கள் நிலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றும் குளியுமாகவும் சுவர்கள் உடைந்து விழுந்து நோயாளர்கள் தங்குவதற்கு ஏற்ற இடமாக இருக்கவில்லை. இவை அனைத்தும் முற்று முழுதாக மாற்றி அமைக்கப்பட்டன. மலசலகூடங்கள் நவீனமயப்படுத்தப்பட்டன. நிலங்கள் சுவர்கள் எல்லாம் மாபிள் கற்கள் பதிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டன. இந்த வேலைகள் அனைத்து வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களின் ஆலோசனைப்படியும் வழிகாட்டலிலும் நடந்தன. சிறு சிறு வேலைக்களைச் செய்வதற்கு எமக்கு அதிகாரமளிக்கப்பட்டது. திருத்த வேலைகள் கட்டட வேலைகள் ஒப்பந்த அடிப்படையில் செய்வதற்காக எமக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் அனுமதி அளிக்கப்பட்டது.

திரு.ஆ.கேதீஸ்வரன் அவர்களது நண்பர்கள் பலர் அவர் மேற்கொண்ட வேண்டுகோளின் பேரில் எமது வேலைத் திட்டங்களுக்கு நிதி உதவிகள் வழங்கினர். அடிக்கடி அவரது ஆலோசனைக்கமைய எமது தேவைகளும், பூர்த்தி செய்யப்பட்ட வேலைத்திட்டங்களும் அறிக்கைகள் மூலம் வெளிநாட்டு நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் அனுப்பிவைக்கபட்டன. இதனால் எமது அபிவிருத்திக் குழுவின் மேல் எல்லோருக்கும் அதே நம்பிக்கை ஏற்பட்டது. நிதி உதவிகள் கிடைக்கப் பெற்றன. வைத்தியசாலை விடுதிகளுக்கு புது கட்டிடங்கள் மெத்தைகள் விரிப்புக்கள் கிடைக்கப் பெற்றன.

அபிவிருத்திக் குழுவின் நிர்வாகசபைக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெற்றது. ஆ.கேதீஸ்வரன் அவர்கள் காப்பாளர் என்றமையால் அவருக்கு அழைப்பு விடுக்கப்படும். தவறாது கூட்டங்களுக்கு குறித்த நேரத்திற்கு முன்பே வந்து காத்திருப்பார். அவர் அடிக்கடி உத்தியோக நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்வார். நிர்வாக சபைக் கூட்ட திகதியை அறிந்து குறித்த நாளில் கூட்டத்திற்கு சமூகமளிப்பார். அவரது பெறுமதி மிக்க ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தியதாலேயே தற்போது மந்திகை ஆதார வைத்தியசாலை பொலிவுடன் காணப்படுகிறது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வடமராட்சியில் மந்திகை வைத்திய சாலையில் பிறந்த திரு.இயன் கரன் என்பவரால் அன்பளிப்பாக கட்டப்பட்ட பாரிய விடுதிகள் அமைந்த கட்டடம் வேறும் பல Dr.கேதீஸ்வரனது முயற்சியாலேயே மந்திகைக்கு அமையப்பெற்றது.

அண்மையில் திறப்புவிழா நடைபெற்ற நெதர்லாந்து நாட்டின் உதவியுடன் பல கோடிகள் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அடங்கிய பாரிய கட்டடமும், வைத்தியசாலையில் இயங்குகின்ற உபகரணங்களும் மந்திகைக்கு கிடைக்கப் பெற்ற மூலகர்த்தா Dr. கேதீஸ்வரன் அவர்கள். தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம்கண்டு எவ்வழியில் உதவிகள் கிடைக்கும் என்பதை அறிந்து அதை மந்திகைக்கு பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அவரது தனித் திறமை ஆகும். மந்திகை ஆதார வைத்திய சாலையில் அபிவிருத்திக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட அனைத்தும் Dr. A. கேதீஸ்வரனுடன் ஆசீர்வாதத்துடனும், ஆலோசனைகளுடனுமே நடைபெற்றன.

இவைகள் எல்லாம் சிறப்புற நடைபெற்ற எமது அபிவிருத்திக் குழு பொருளாளர் அகிலன், உப தலைவர் கலாநிதி செ.சேதுராஜா (ஓய்வுநிலை அதிபர்), திரு.இ.இராகவன் (ஓய்வுநிலை அதிபர்), திரு.சி.தங்கராசா (வர்த்தகர்) ஆகியோர் நேரகாலம் பார்க்காது உறுதுணையாக இவருடன் செயலாற்றினர்.

இறுதியாக ஆ.கேதீஸ்வரன் அவர்கள் வைத்தியத்துறை மட்டுமல்லாது பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டவர் என்பது எல்லோரும் அறிந்ததே. ஓய்வுபெறும் வயதல்லையை அடைந்ததால் சட்டப்படி ஓய்வுபெறுகின்ற அவர் எனும் பல ஆண்டுகள் இதேபோன்று செயற்படக் கூடிய உடல் உள ஆரோக்கியத்தோடு தனது பணியைத் தொடரவேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**மு.சுந்தரலிங்கம்**
(பிரபல வர்த்தகர்,
முன்னாள் மந்திகை ஆதார வைத்தியசாலை
நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Beacon of Service and Love: Celebrating Dr. Arumugam Ketheswaran at 60's



In the heart of Northern Province, a man named Arumugam Ketheswaran was born to Velupillai Arumugam and Arumugam Meenachchi on May 4, 1964. Little did they know, their son would grow up to touch countless lives through his service as the Regional Director of Health Services for over two decades. His journey took him to Russia to finish his medical education, and he served in multiple places in Sri Lanka. His name reached every corner of the Northern Province.

My father's journey is a testament to his resilience and dedication. He has always strived to make his father proud, serving his people with unwavering commitment even in his 60s. His ability to balance work and home life is nothing short of extraordinary. His skills in instant problem-solving, decision-making, and writing articles and poetry are testament to his multifaceted personality.

His relationship with his family truly sets him apart. Despite our differences, our bond is more like that of best friends. We've shared deep care, little fights, and most importantly, countless moments of friendship. His love for my mother is unparalleled, their understanding and companionship unlike any I've seen. Their bond always reminds me of "Sita and Ramar" from Ramayanam. I really admire their 33 years of married life. I never ever saw my father overspeak to my mother.

Among them, the first and the best moment stands out, a moment I don't want to miss but sadly lost my chance. Despite this, I hold onto the hope that I'll always have a place in their hearts. He would play a lullaby to help me sleep. We played and watched cricket together, watched Kamal Hassan movies, sang his songs, and went out for long drives. He's the one who opened the door for me to get into the Computing field, he actually found that I can do much more than him, but I've realized it way too late he taught me how to survive alone, allowing me to explore the world on my own terms. There were times when things went wrong, even terribly so, but he was always there, standing by my side, ready to solve any problem.

While I may not be the perfect child, my father is the epitome of perfection to me a best friend and a beacon of belief, inspiring me to strive for



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the impossible. As he steps into his 60th year and embraces retirement, I am filled with immense gratitude for him and my Uncle Arumugam Subramaniyam, who has been a father figure in my life. My commitment to their happiness is unwavering, as is my hope to continue seeing my father's joyous smile. Although I question whether I can proudly claim to be Arumugam Ketheswaran's son, having not lived up to what I feel makes him proud, that judgment I leave to him. Life granted me a golden opportunity by being his son, and I hope to one day feel deserving of it. Wishing a very happy birthday to my dad, the extraordinary man he is, may we have countless moments of joy and years of health ahead. I love you.

**Ketheswaran Gauthaman (Son)**
Liverpool, UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த மண்ணை பெருமைப்படுத்திய பெருந்தகை



மண்ணோடு செரித்த பண்பு

பிறப்போடு வளர்ந்த ஆளுமை

கல்வியில் கிடைத்த அடக்கம்

இரத்தத்தோடு ஊறிய உதவும் குணம்

இவற்றை அணிகலணாகப் பூண்ட அர்ப்பணிப்பான சேவையாளன் மதிப்பிற்குரிய ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள்.

இளமைக் காலத்தில் தீவிர வாசகனாகிய நான் வீரகேசரியில் வெளிவந்த கரவையூர் கேதீஸ்வரனின் சிறுகதைகள் ஊடாக இவரை அறிந்து கொண்டேன்.

வெல்லன் விநாயகப் பெருமானின் அப்பழுக்கற்ற தொண்டனான ஆறுமுக அண்ணனின் மகன் என்பது மேலும் இவர் மீதான அவதானத்தைச் செலுத்த காரணமானது. மகன் ரஸ்யாவில் மருத்துவம் படிப்பதாக ஆறுமுகம் அண்ணன் தெரிவித்து இருந்தார். கால ஓட்டங்கள், கால மாற்றங்கள் இவருடன் நெருங்கி ஊடாடும் வாய்ப்பை வழங்கியது.

கரவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினராக திரு. உபாலி பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் செயற்பட்ட போது எம்மண்ணின் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் செயற்பாடு தொடர்பாகவும் இந்த மண்ணைச் சேர்ந்தவர் என்ற வகையில் உரிமையோடும் நெருக்கமாகவும் செயற்படும் வாய்ப்புகள் கிடைத்தன.

தூர நோக்குடைய திட்டமிடல் செயற்படுத்தல், வழிகாட்டல், வழிப்படுத்தல், ஆர்ப்பாட்டமற்ற அர்ப்பணிப்பான சேவை, உறுதிப்படுத்தல், செயற்படு களத்தில் தற்துணிவோடு நிற்றல், தொடர்பாடும் மொழித்திறமைகள், தனதாற்றலூடாக உயர் அதிகாரிகளின் தொடர்பு, செயற்படும் திட்டத்திற்கான வளங்களை ஒருங்கமைத்தல் போன்ற பலவிதமான சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட ஆற்றலாளனோடு பல தளங்களில் பணியாற்ற கிடைத்தமை ஒரு பேறாகவே கருதுகிறேன்.

பதவி என்பது அதிகாரம் செலுத்துவதற்கானதல்ல. மக்களிற்கு கிடைக்க வேண்டிய தேவையை பூர்த்தி செய்வதற்கான அனைத்து வழிகளையும் இனங்கண்டு செயற்படுத்துதல். அதற்கான முயற்சிகளை தனது நிர்வாகப் பரப்பினில் மிகச் சிறப்பாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தியமையை வடமாகாண வைத்தியசாலை வளங்களைப் பயன்படுத்துவோர் நன்கறிவர்.

கரவெட்டி வைத்தியசாலையின் இன்றைய சிறப்பிற்கும் அதன் கட்டுமானங்களிற்கும் பெருமளவமான மக்கள் அதனுடைய சேவையைப் பெறுவதற்கும் அடித்தளமிட்டு வழிப்படுத்தி வருபவர். கரவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினை வழிப்படுத்துவதனூடாக அதனுடைய சிறப்பான செயற்பாடுகளை மனதிலே இருத்திய கேதீஸ்வரன் மந்திகை வைத்தியசாலை அபிவிருத்தியின் அவசிய அபிவிருத்தி கருதி அதன் அபிவிருத்திக் குழுவில் என்போன்றவர்களை இணைத்து தீவிரமானதும் விரைவானதுமான செயற்பாட்டின் ஊடாக நாட்டின் சிறந்த வைத்தியசாலை என மகுடம் சூட வைத்தார். மந்திகை வைத்தியசாலை கடந்த இருபதாண்டு கால கட்டுமாணங்கள் அனைத்தும் இவரது முயற்சியின் பெறுபேறே ஆகும். அதன் முத்தாய்ப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு நிகழ்வுகள் அனைத்தும் இவரது வழிகாட்டலின் கீழ் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த அபிவிருத்திக் கட்டுமாணங்கள் மக்களைச் சிறப்பாக சென்றடைய வேண்டும் என்ற வேணவாவின் ஊடாக உயர் நிலையில் நின்று செயற்பட்டாலும் சேவையை வழங்குபவர்கள் அர்ப்பணிப்புடனும் சிறப்பாகவும் தொழிற்படுவதனூடாகவே மக்களை மகத்துவமாக சென்றடையும்.

கரவை எனும் பேரூரின் தலை மகன்களில் சிறப்பான ஒருவராக கேதீஸ்வரன் அவர்களின் நாமம் நிலைபெறும்.

மாணிக்க வாசகர் வித்தியாலயத்தின் அபிவிருத்தி
திரு இருதயக் கல்லூரியின் அபிவிருத்தி
கரவை சிந்தாமணி முன்பள்ளியின் கட்டுமாணங்கள்
வீட்டுக்கு வீடு நன்னீர் வழங்கும் திட்டம்
கரவெட்டி பிரதேச வைத்திய சாலையின் சிறப்புக்கள்
கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை உருவாக்கியமை,
அதற்கான புதிய கட்டடத்தை அமைத்தமை

என பல்வேறு விடயங்களை நடைமுறைப் படுத்தியதன் ஊடாக தான் பிறந்த மண்ணிற்கு நிலைபேறான சேவை ஆற்றியவர்.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய போசகராக இருந்து அதன் தலைவர் உபாலி பொன்னம்பலம் அவர்களின் வழிகாட்டலின் கீழ் அனைத்து நிர்வாகக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை வகுத்து கரவெட்டி அபிவிருத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியம் மிகச் சிறப்பாக கரவை மக்களின் வாழ்வியலில் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதன் நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்றிக்கொண்டிருப்பவர். எவரும் இலகுவாக அணுகக்கூடிய மனித நேயம் மிக்கவராக மக்கள் மனதில் இடம்பிடித்தவர்.

தான் பிறந்த ஊரின் சிறப்புக்களை மேலும் மெருகூட்ட வேண்டுமென்ற மனத்துடிப்போடு பங்காற்றுகின்ற இவர் வைத்திய நிர்வாகி என்பதற்கப்பால் சிறந்த இலக்கியவாதி, கவி புனையும் ஆற்றல், மிகச்சிறந்த பேச்சாளன், இலங்கையின் மிக உயர் விழுமியம் மிக்க கருத்தரங்குகள் மட்டுமன்றி சர்வதேச கருத்தரங்குகளிலும் தனது மொழியாற்றலின் ஊடான பேச்சாற்றல் மூலமாக மதிப்புப் பெற்றவர். அதன் மூலம் தாம் பிறந்த மண்ணிற்கும் பெருமை சேர்த்தவர்.

பல இடையூறுகளை பல தளங்களில் இவர் எதிர்கொண்ட சந்தர்ப்பங்களிலும் தனது கடமையின் சிறப்பாலும் இராஜதந்திரமான நகர்வுகளாலும் அவற்றை தனது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்த சிறப்பிற்குரியவர்.

கரவை வெல்லன் விநாயகர், தச்சை சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய மூர்த்திகளின் செல்லப் பிள்ளையாக வலம்வரும் இவர் அவ்வாலய சிறப்புக்களை அடிக்கடி ஞாபகப்படுத்தி உளமுருக வழிபடுபவர். தன் வாழ்வின் சிறப்பிற்கும் தன் கடமையில் சிறப்போடு செயற்படுவதற்கும் அருளாட்சித் தெய்வங்களாக இவ்வாலயங்களின் மூல மூர்த்திகளையே உளமார நம்புபவர். மண்ணின் மகிமையையும் பெருமைகளையும், ஒறுப்பான வாழ்க்கை முறைகளையும் கற்றுத் தந்தது இந்த மண்தான் என கூறிக்கொள்வதில் பெருமை கொள்பவர்.

ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்களை எதிர்கால சந்ததி அவரின் பல தளத்தினூடாக அறியவேண்டும். அவரது சிறப்பான நுணுக்கங்களை தெரிந்து தமது வாழ்வியல் தடங்களை பதிக்க வேண்டும் எனும் நோக்கோடு **"ஆற்றலாளன்"** எனும் நூல் வடிமைக்கப்பட்டது. இந்த நூலில் எனது பார்வையும் இடம்பெறுவது மகிழ்வான தருணம்.

நீடு காலம் வாழ்க... நிலைபெற்ற புகழோடு மேலும் வளர்க...

**இ.இராகவன்**
(ஓய்வுநிலை அதிபர், கரவெட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வின் வழித் தடங்கள்

வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்

## அறிமுகம்

அகவை அறுபது. வாழ்க்கைப் புத்தகத்தை வாசித்துப் பார்க்கையிலே முடிவுரைக்கு முன்னரான அத்தியாயம் ஆரம்பம். ஆயுட்காலத்தில் அறுபது ஓர் முக்கியமான மைல்கல். நம் சாதனைகளையும் சோதனைகளையும், வெற்றிகளையும், தோல்விகளையும், பலங்களையும் பலவீனங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் நேரம். என் வாழ்வின் வழித்தடங்களை சற்று திரும்பிப் பார்க்கிறேன். என் வாழ்க்கைப் புத்தகத்தில் நான் வாசித்த அத்தியாயங்களை திருப்பிப் பார்க்கிறேன்.

## எனது கிராமம் - கரவையூர்

பெற்றதாயும், பிறந்த பொன்னாடும் நெஞ்சுக்கு நெருக்கமானவை. அந்த வகையில் நான் பிறந்த கரவையூர் எனக்கு மிகவும் நெருக்கமானது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி பிரதேசத்தில் அமைந்த ஓர் அழகிய, தனித்துவமான கிராமம் கரவெட்டி. தமிழ் தலைவர் சிவசிதம்பரம், தமிழறிஞர் பேராசிரியர் சிவத்தம்பி உட்பட பல அறிஞர்கள், கலைஞர்கள் பிறந்த மண். அங்கு நான் பிறந்ததை பெருமையாகவும் ,பெரும் பேறாகவும் கருதுகிறேன். படித்த, பண்பட்ட மக்களை கொண்ட ஓர் தனித்துவமான கிராமம். இயற்கை வளம் கொழிக்கும் மருதநிலம்.

ஒரு காலத்தில் இந்த கிராமத்தில் பெரும்பாலும் எல்லோரும் விவசாயிகளாகவே இருந்தனர். வானத்தை நம்பிய வயல்செய்கை. நிலத்தடி நீரை நம்பிய தோட்ட பயிர்ச்செய்கை. இந்த வரண்ட மண்ணை சுரண்டிச் சுரண்டி தமது வாழ்வைத் தேடினார்கள். கடின உழைப்பு என்பது அவர்களது உதிரத்தில் ஊறிப் போனது. அந்த ஏழை விவசாயிகள் தாம் கஷ்டப்பட்டது போல் தமது அடுத்த சந்ததிகளும் கஷ்டப்படக்கூடாது. அவர்களை கல்வி கற்கவைத்து நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டுமென நினைத்தார்கள். ஆனால் அந்த காலத்தில் எமது கிராமத்தில் கல்லூரிகள் எதுவும் இருக்கவில்லை.

அந்தக் காலகட்டத்தில்தான் எமது கிராமத்தில் இருந்த சித்த மணியம் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பாடசாலைகளை நிறுவினார்கள்; விக்னேஸ்வராக் கல்லூரி, மாணிக்கவாசகர் வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், விநாயகர் வித்தியாலயம், அந்த குடும்பத்தினர் தூர நோக்கோடு ஆரம்பித்த அந்த முயற்சிதான் எமது கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றாக அமைந்தது. ஆரம்பத்தில் எமது கிராமத்தில் ஏராளமான ஆசிரியர்கள் உருவானார்கள். அடுத்த தலைமுறைகளில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள் என பல்துறை சார்ந்த கல்விமான்கள் உருவானார்கள். இன்று எமது கிராமத்தில் பெரும்பாலான குடும்பங்களில் குறைந்தது ஒரு கல்விமானாவது இருப்பார்.

எமது கிராம மக்களை படித்தவர்களாக மட்டுமல்லாது பண்பட்ட, பக்குவமான மனிதர்களாக உருவுாக்கியதில் எமது கிராமத்தில் அமைந்துள்ள இரண்டு ஆலயங்களுக்கு பெரும் பங்குண்டு; தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம், வெல்லன் விநாயகர் ஆலயம். இன்று பெரும்பாலான ஆலயங்களில் கேளிக்கை, களியாட்ட நிகழ்வுகள் வழக்கமாகிவிட்டன. ஆனால் இந்த இரண்டு ஆலயங்களும் அன்று முதல் இன்றுவரை ஆலயம் என்பதற்கு இலக்கணமாக புனிதமாக பேணப்பட்டு வருகின்றன. இங்கு மஹோற்சவ கால பத்து நாட்களும் சமய சொற்பொழிவு இடம்பெறும். திருமுருக கிருபானந்த வாரியார், கி.வா.ஜெகநாதன், சிவத்தமிழ்ச்செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி, வசந்தா வைத்தியநாதன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், தமிழருவி சிவகுமாரன், செந்தமிழ் சொல்லருவி லலீசன் போன்ற தமிழ் அறிஞர்கள் பலர் இங்கு அருளுரை ஆற்றியுள்ளனர். இந்த இரண்டு ஆலயங்களிலும் சகல சமய நிகழ்வுகளும் பக்திபூர்வமாக, புனிதமாக இடம்பெறுவது வழமை. இந்த இரண்டு ஆலயங்களும் எமது மக்களை பக்குவப்படுத்தி நல்வழிப்படுத்தின என்றால் மிகையாகாது.

இந்த மண்ணினால்தான் நாங்கள் நல்ல மனிதர்களாக்கப்பட்டோம். ஆலமரம் எவ்வளவுதான் உயர்ந்தாலும் அதன் ஆணிவேர் அந்த இடத்திலேதான் இருக்கும். நாம் எவ்வளவுதான் உயர்ந்தாலும் எங்களை பெற்று வளர்த்து ஆளாக்கிய மண்ணை என்றும் மறக்கமாட்டோம். நாங்கள் கேவளை தோட்டத்து கீரையும், கட்டையடி தோட்டத்து கத்தரியும் உண்டு வளர்ந்தவர்கள். எங்கள் உயிர் உள்ளவரை அவை எங்கள் உதிரத்தில் இருக்கும்.

**எனது குடும்பம்**

மிகவும் எளிமையான சாதாரணமான விவசாய குடும்பம். எனது பாட்டனார் ஒரு பாரம்பரியமான விவசாயி. எருதுகள் வளர்த்து ஏர் பூட்டி வயல் விளைத்து, தோட்டம் செய்து கடினமாக உழைத்து விவசாயம் செய்தவர். எனது பாடசாலை விடுமுறைக் காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு வயல், தோட்ட வேலைகளில் உதவி செய்திருக்கிறேன். அப்போதுதான் எமது கிராமத்து விவசாயிகள் படும் கஷ்டங்களை கண்கூடாக பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்கள் மிகவும் ஆரோக்கியமானவர்களாக இருந்தார்கள். எனது பாட்டனார் எண்பது வயதுவரை எந்தவித நோய்நொடியுமின்றி ஆரோக்கியமாக வாழ்ந்தார். அவர்களது வாழ்க்கை முறையும், உணவு முறையும் அவர்களின் ஆரோக்கியத்தின் இரகசியமாக இருந்தது.

எனது பெற்றோர்கள் ஆறுமுகம், மீனாட்சி தம்பதியினர் மிகவும் எளிமையாக, சாதாரணமாகவே தமது குடும்ப வாழ்வை ஆரம்பித்தனர். பின்னாளில் எனது தந்தையார் வர்த்தகம் செய்து எமது குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்தினார். எனது தாயும் தந்தையும் பெரிதாக படிக்கவில்லை. ஆனால் தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து நல்ல நிலைக்கு கொண்டுவர தங்களை அர்ப்பணித்து பாடுபட்டார்கள்.

அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்பது முதுமொழி. அதேபோல் நாம் எமது கண் முன் கண்ட தெய்வங்கள் எமது தாயும், தந்தையும். தங்களை மெழுகுவர்த்தி போல் உருக்கி எங்களை உயர்த்தியவர்கள். தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. இந்த முதுமொழியை நாங்கள் எமது வாழ்க்கையில் உணர்வுபூர்வமாக அனுபவித்தோம்.

எமது பெற்றோருக்கு இரண்டு பிள்ளைகள். நானும், எனது தம்பி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் அவர்களும். எமது பெற்றோர்கள் எம்மை வளர்க்கும் போது மூன்று விடயங்களை எம்மிடம் எதிர்பார்த்தனர். முதலாவதாக நல்ல ஒழுக்கமான பண்பான மனிதர்களாக வரவேண்டும். எமது பெற்றோர் தாமும் எமக்கு உதாரணமாக வாழ்ந்து எம்மை கட்டுப்பாட்டுடனும், கண்டிப்புடனும் வளர்த்தனர். ஒருபோதும் தண்டித்ததில்லை. அதற்கு தேவையேற்பட்டதுமில்லை. இரண்டாவதாக நாம் கல்விமூலம் உயர்ந்து வாழ்வில் சிறந்த கல்விமான்களாக வரவேண்டுமென விரும்பினார்கள். அவர்களது விருப்பப்படியே நான் வைத்திய கலாநிதியாகவும், சகோதரர் முகாமைத்துவ துறையில் கலாநிதியாகவும் உயர்ந்தோம். மூன்றாவதாக நாம் உயர்ந்தால் மட்டும் போதாது. எம்மால் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டுமென எதிர்பார்த்தனர். எனது தந்தையார் சமூகத்தில் பலருக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்திருக்கிறார். எமது பெற்றோர்கள் எதிர்பார்த்தது போலவே நானும், எனது சகோதரரும் அவர்களது கனவுகளை நனவாக்கியுள்ளோம். நான் மாண்புறும் இந்த வேளையில் எமது பெற்றோர் வானகத்தில் இருந்து எம்மை வாழ்த்தி நிற்பார்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயபூர்வமாக நம்புகிறேன்.

எமது தந்தையார் மிகுந்த கலை ஆர்வம் உடையவர். எமது கிராமத்தின் புகழ் பூத்த அண்ணாவியார் கிருஷ்ணாழ்வார் அவர்களின் நாட்டுக் கூத்தில் நடித்திருக்கிறார். நன்றாகப் பாடுவார். ஆலய மகோற்சவங்களில் நாதஸ்வர கச்சேரிகள் நடைபெறும் போது எம்மையும் அழைத்துச் சென்று ரசித்து மகிழ்வார். நாதஸ்வர, நாட்டுக்கூத்து கலைஞர்களை அழைத்து எமது கிராமத்தில் பல நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார். கலைஞர்கள் மீது மிகுந்த மதிப்புடையவர். ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஆலய மகோற்சவ காலங்களில் தொண்டு செய்தவர் ஆலய திருப்பணிகளில் பங்கெடுத்தவர்.

எமது தந்தையார் அந்த காலத்தில் பாவித்த றலி சைக்கிள் எமது கிராமத்தில் பிரபலமானது. எந்த ஒரு பொருளையும் மிகவும் கவனமாகவும், பத்திரமாகவும் பாவிப்பார். ஒவ்வொரு முறையும் வெளியே போய் வந்தபின் சைக்கிளை நன்றாக ஒருமுறை துடைத்து விட்டுத்தான் வீட்டின் உள்ளே வருவார். அவரது அந்த சைக்கிள் அவரது 25 வருட பாவனைக்குப் பின்னரும் புத்தம் புதிதுபோல இருந்தது. அவரது நினைவாக அந்த சைக்கிள் இன்றும் எமது வீட்டில் உள்ளது. தனது சைக்கிளையே அவ்வளவு பொக்கிஷமாக பாதுகாத்தவர் தனது பிள்ளைகளை எப்படி வளர்த்திருப்பார் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்.

எமது பெற்றோர் எங்கள் உறவுகள் அனைத்தையும் அரவணைத்து ஒற்றுமையாக ஒரு கூட்டு குடும்பமாக வளர்த்தனர். அவர்கள் ஆலமரம் போல் நின்று அந்த நிழலில் நாங்கள் ஒரே குடும்பமாக, ஒற்றுமையாக வளர்ந்தோம்.

எனது மனைவி பாஸ்கரி. அவரை நான் முதன்முதலாக பார்த்தது 1981 ம் ஆண்டு கார்த்திகை தீபத் திருநாள் அன்று. அவரது பெயரும் தெரியாது. ஊரும் தெரியாது. ஆனால் அவரை பார்த்ததும் இவர்தான் எனது வாழ்க்கைத் துணையாக வரவேண்டுமென மனதிற்குள் ஓர் மகாயாகம். எனது விருப்பத்தை அவரிடம் தெரிவித்தேன். தயங்கியபடி சம்மதம் தந்தார். ஆரம்பத்தில் இரு வீட்டிலும் எதிர்ப்பு. ஒன்பது வருட போராட்டம். இறுதியில் 1990 ம் ஆண்டு இருவீட்டார் சம்மதத்துடன் இல்லறத்தில் இணைந்தோம்.

34 வருட இல்லற வாழ்க்கை இனிதாக தொடர்கிறது. எனது மருத்துவப் பணி மிகவும் கடினமானது. 24 மணி நேரமும், 365 நாட்களும் கடமை அழைக்கும். அர்த்த ராத்திரியில் அலைபேசி அலறும். வைத்தியருக்கு வாழ்க்கைப்படுவதில் சந்தோசங்களும் உண்டு. சங்கடங்களும் உண்டு. எனது நிலையை உணர்ந்து வீட்டுப் பொறுப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பத்தினருடன்



பெற்றோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரருடன்



உடன்பிறவா சகோதரங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதிவுத் திருமணத்தின் போது



திருமண நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கிலாந்தில் மனைவி, மகனுடன்



மனைவி, மகனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூட்டுக் குடும்பம்



கூட்டுக் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் சுமந்து எனக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்பவர். எனது பெருமை, புகழ் எல்லாவற்றிற்கும் பின்னால் அவரது தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் நிறையவே உள்ளன.

2000ம் அண்டு அவரது சிறுநீரகங்கள் இரண்டும் திடீரென செயல் இழந்து அவரது உடல்நிலை மிக மோசமானது. அந்த வேளையில் நான் இடிந்து போனேன். எனது உறவுகள், நண்பர்கள் என்னைத் தாங்கி நின்று பல்வேறு வழிகளிலும் உதவிக்கரம் நீட்டினார்கள். அவரை குற்றுயிராக சென்னை அப்பலோ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று 3 வாரங்கள் போராடி அவரை மரணத்தின் வாயிலிருந்து மீட்டு வந்தேன். பின்னர் 2001ம் ஆண்டு அவருக்கு இந்தியாவில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு அவரது உடல்நிலை முன்னேற்றமடைந்தது. பின்னாளில் அவரது இரண்டு முழங்கால்களிலும் முழங்கால் மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இவ்வளவு நோய்களுக்கு மத்தியிலும் நான் எனது பணியை செய்வதற்காக தான் வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் சுமந்து எனக்கு ஆதாரமாகவும், உறுதுணையாகவும் நிற்கிறார். எனது வாழ்வின் மிகப்பெரிய பலம் அவரே.

எங்களது ஒரேயொரு மகன் கௌதமன். ஒரேயொரு பிள்ளை என்பதால் செல்லமாக வளர்ந்தவர். அவர் எப்போதும் கலகலப்பாக இருப்பார். தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் கலகலப்பாக வைத்திருப்பார். தான் கஷ்டப்பட்டேனும் தன்னைச் சுற்றியுள்ளவர்களிற்கு உதவி செய்வார். அவரது விருப்பப்படி தற்போது இங்கிலாந்தில் உயர்கல்வி பயின்று வருகிறார்.

எனது ஒரேயொரு சகோதரர் கலாநிதி சுப்பிரமணியம் முகாமைத்துவ துறையில் பட்டம் பெற்று யாழ் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார். இராமனுக்கு இலக்குவன் கிடைத்தது போல் எனக்கு அரிய சகோதரராக கிடைத்தவர். எனது இன்பத்திலும், துன்பத்திலும் முதலாவதாக வந்து நிற்பவர். என் வாழ்வின் இன்னொரு பலம் அவரே.

எமது பெற்றோரின் விருப்பப்படி நான், எனது சகோதரர், எமது ஒன்றுவிட்ட சகோதரங்கள் எல்லோரும் சிறு வயது முதல் ஒன்றாகவே ஓர் கூட்டு குடும்பம் போல் வளர்ந்தோம். இன்றும் எனது சகோதரர், ஒன்றுவிட்ட சகோதரர்கள், அவர்களது வாழ்க்கைத் துணைகள், எனது பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் விரும்பியபடி ஒற்றுமையாக வாழ்கிறோம். எனது இன்பத்திலும், துன்பத்திலும் அவர்கள் முதலாவதாக வந்து துணை நிற்பார்கள். எனது வாழ்வின் மிகப்பெரிய பலமாக அவர்களை நான் கருதுகிறேன்.

**கல்விப் பயணம்**

எனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பித்தேன். கரவெட்டி கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றில் இந்தக் கல்லூரியும் ஒன்று. எனது கல்விப் பயணத்திற்கு இந்தக் கல்லூரி சிறந்த அடித்தளமிட்டது.

எனது இடைநிலைக் கல்வியை வதிரி திரு இருதயக் கல்லூரியில் பயின்றேன். அந்தக் காலகட்டத்தில் இக் கல்லூரியின் அதிபராக புகழ்பூத்த கணித ஆசான் தோமஸ் ஈப்பன் அவர்கள் இருந்தார். இக் கல்லூரி அக்காலத்தில் கல்வி, விளையாட்டு, கலை என அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கியது. இந்தக் கல்லூரி ஓர் கிறிஸ்தவ கல்லூரியாக இருந்தாலும் இந்துசமய மாணவர்களும், கிறீஸ்தவ சமய மாணவர்களும் ஒன்றாக ஒற்றுமையாக கல்வி கற்றோம்.

இங்கு இடம்பெற்ற கிறிஸ்தவ மத விழாக்களிலும், இந்துமத விழாக்களிலும் அனைத்து மாணவர்களும் ஒற்றுமையாக பங்குகொண்டோம். எனது மதத்தை நேசிப்பது போல் ஏனைய மதங்களையும் நேசிக்க வேண்டும், மதிக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்பை நான் இக் கல்லூரியில் கற்றுக் கொண்டேன்.

நான் இக் கல்லூரியில் க.பொ.த (சாதாரணம்) வரை கல்வி பயின்றேன். 1978ம் ஆண்டு க.பொ.த (சா/த) புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றினேன். பரீட்சையில் எட்டு பாடங்கள், யாழ் மாவட்டத்தில் யாருக்கும் எட்டு பாடங்களிலும் 8D கிடைக்கவில்லை. யாழ் மாவட்டத்தில் எட்டு பேருக்கு 7D 1C கிடைத்தது. அதில் 4 பேர் யாழ் நகர பாடசாலை மாணவர்கள் 4 பேர் வடமராட்சி, 2 பேர் ஹாட்லிக் கல்லூரி, 2 பேர் திரு இருதயக் கல்லூரி. நானும் நண்பர் Dr.ஜேம்ஸ் அவர்களும் திரு இருதயக் கல்லூரியில் இந்த பெறுபேற்றை பெற்றோம். யாழ் மாவட்டத்திலேயே அவ்வாறான ஓர் சிறந்த பெறுபேற்றை பெற என்னை வளர்த்த திருஇருதயக் கல்லூரிக்கு என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

அதன்பின்னர் உயர்கல்வியை ஹாட்லிக் கல்லூரியில் பயின்றேன். அப்போது அதிபராக இருந்தவர் புகழ்பூத்த திரு. W.N.S. சாமுவேல் அவர்கள். மிகவும் அர்ப்பணிப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், ஆசிரியர் குழாம். மிகவும் தரமான, சிறந்த கல்வியை பெற்றேன். இக் கல்லூரி மிகுந்த கட்டுப்பாட்டுடனும், கட்டுக்கோப்புடனும் எங்களை வளர்த்தது. வாழ்க்கைக்கு தேவையான பல உயர்ந்த பண்புகளையும், பழக்கவழக்கங்களையும், விழுமியங்களையும் கற்றுத் தந்தது. பாடசாலைக் கல்வி வெறுமனே ஏட்டுக் கல்வியை வழங்கும் நிலையமல்ல. நாட்டுக்கும் சமூகத்திற்கும் நல்ல பிரஜைகளை உருவாக்கும் உயர்ந்த கோவில் என்பதை இக்கல்லூரி கண்கூடாக காட்டியது.

**மருத்துவக் கல்வி**

நான் எனது மருத்துவக் கல்வியை சோவியத் யூனியனில் பயில உயர்கல்வி அமைச்சின் மூலம் எனக்கு புலமைப்பரிசில் கிடைத்தது. இன்று பிரிந்திருக்கும் 15 நாடுகள் ஒன்றாக சோவியத் யூனியன் என்ற குடையின் கீழ் இருந்த காலம் அப்போதைய Belarus மாநிலத்தின் தலைநகர் Minsk ல் அமைந்திருந்த Minsk State Medical Institute ல் மருத்துவக் கல்வியைப் பயின்றேன். 1982ம் ஆண்டு முதல் ஒருவருடம் ரஷ்ய மொழியை பயின்றேன். அதன் பின்னர் 1983 முதல் 1989 வரை ரஷ்ய மொழியிலேயே மருத்துவம் பயின்றேன்.

நாம் கல்வி பயின்ற பல்கலைக்கழகத்தில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, லத்தீன், அமெரிக்கா ஆகிய கண்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டு மாணவர்களுடன் ஒன்றாகப் படித்தோம். அக் காலத்தில் பல்வேறு நாட்டு மக்களின் கலாசாரம், மொழி உணவுமுறைகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றை அறியக் கிடைத்தது. இனம், மதம், மொழி, கண்டம் கடந்து மனிதம் என்ற குடையின் கீழ் நாம் ஒன்றாக வாழ்ந்தோம்.

நாம் கல்வி பயின்ற காலத்தில் சோவியத் யூனியனில் கம்யூனிசம் நடைமுறையில் இருந்த காலம். அங்கு எல்லோரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். அவர்களது கல்வித் தகைமைக்கேற்ப வேலை வழங்கப்படும். எல்லோரும் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும்.

வேலையற்றவர்கள் என்று யாரும் இருந்ததில்லை. அங்கு வழங்கப்படும் மாதாந்த வேதனம் ஏறத்தாழ அனைவருக்கும் சமமாக இருந்தது. பாரிய ஏற்றத்தாழ்வுகள் இல்லை. ஒரு வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணரின் மாதாந்த வேதனத்திற்கும், தொழிற்சாலையில் பணிபுரியும் சாதாரண தொழிலாளியின் சம்பளத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு இல்லை. எனவே சமூகத்தில் அனவரது வாழ்க்கைத் தரமும் ஏறத்தாழ சமமாகவே இருந்தது. சமத்துவத்தை சமூகத்தில் நான் கண்கூடாக கண்டேன். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷ்ய மொழியைக் கற்றிருந்தபடியால் ரஷ்ய மக்களுடன் சுதந்திரமாக பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களது கலாச்சாரம், உணவு முறைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றை அறியக்கூடியதாக இருந்தது.

### மருத்துவப்பணி - மட்டக்களப்பு மாவட்டம்

மருத்துவ கல்வியை நிறைவு செய்த பின் சுகாதார திணைக்களத்தில் இணைந்து உள்ளக பயிற்சியை (Internship) 1989ம் ஆண்டு முதல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொண்டேன். பின்னர் 1990ம் ஆண்டு எனது முதல் நியமனம் களுவாஞ்சிக்குடி ஆதாரவைத்தியசாலையில் வைத்திய பொறுப்பதிகாரியாக கிடைத்தது. 1992ம் ஆண்டு வரை 3 வருடங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மருத்துவ பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

மட்டக்களப்பு மாவட்டம் கடல், கடல் நீர் ஏரிகள், மருத நிலங்கள் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் அழகிய ஊர். அந்த ஊரின் அறுசுவை உணவுகளும், மக்களின் விருந்தோம்பல் பண்பும் மறக்க முடியாது. குறிப்பாக நான் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் பணியாற்றிய காலம் இன்றும் நினைவில் நிற்கின்றது.

அந்த பிரதேசத்தின் அப்பாவி, ஏழை கிராம மக்களின் நன்றியுணர்வு என்னை மெய்சிலிர்க்க வைத்தது. அந்த வெள்ளந்தி மனிதர்களின் அப்பழுக்கற்ற வெள்ளை உள்ளங்கள் இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளன.

### வவுனியா மாவட்டம்

அதன் பின்னர் வவுனியா பொது வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக 1992 முதல் 1998 வரை பணியாற்றினேன். அப்போது யுத்த காலம், யுத்தத்தில் காயமடைந்துவரும் மக்களுக்கு சிகிச்சையளிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அங்கு பணியாற்றிய MSF France மருத்துவ குழுவினருடன் இணைந்து பணியாற்றிய காலம் மறக்க முடியாது.

அடுத்து 01/06/1998 முதல் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்றேன். அப்போது வவுனியா மாவட்டத்தில் ஓர் நெருக்கடியான சூழ்நிலை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து யுத்தம் காரணமாக மக்கள் வவுனியா மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தனர். 20க்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கியிருந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஷ்யாவில் பட்டமளிப்பு விழாவில்



பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ரஷ்ய அதிபர் லெனின் அவர்களின்
கிரெம்ளின் நினைவிடத்தில்



ரஷ்யா, மொஸ்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தனர். அக் காலகட்டத்தில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருந்தனர். நான் பதவியேற்ற முதல் வாரத்திலேயே வவுனியாவில் கொலரா நோய் பரவ ஆரம்பித்தது. இது நிலைமையை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியது. இதை விட எனது பிரிவில் 55 பாடசாலைகள், 80 உணவகங்கள், 25 வெதுப்பகங்கள். ஒரு சுகாதார வைத்திய அதிகாரியாக இவ்வளவு நிறுவனங்களையும் கண்காணித்து அவ்வளவு மக்களுக்கும் சேவையாற்ற வேண்டியிருந்தது.

ஆனால் எனது பணிமனையில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களே இருந்தன. 2 பொது சுகாதார பரிசோதகர்கள், 5 குடும்ப நல உத்தியோகத்தர்கள். எனக்கும் எனது பணிக் குழாமிற்கும் இது மிகப்பாரிய சவாலாக இருந்தது. ஆனால் அந்த சவாலை ஏற்றுக் கொண்டு இரவு, பகல் பாராது அர்ப்பணிப்போடு கடினமாக உழைத்தோம். அக்கால கட்டத்தில்தான் நான் ஒரு குழுவை வழிநடத்தும் தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கெண்டேன். சமூகத்தில் பொதுமக்களோடு நல்லுறவை பேணும் கலையை கற்றுக் கொண்டேன். ஏனைய திணைக்களங்களுடன், நிறுவனங்களுடன் பரஸ்பர புரிந்துணர்வுடனும், நட்புறவுடனும் ஒத்துழைத்து பணியாற்ற வேண்டியதை நடைமுறையில் உணர்ந்து செயற்படுத்தினேன். அப்போது வவுனியா மாவட்ட அரசாங்கஅதிபராக திரு.கணேஸ் அவர்களும், பிரதேச செயலாளராக திரு.சத்தியசீலன் அவர்களும் பணியாற்றினார்கள். அவர்களது பூரண ஒத்துழைப்பு எனக்கு கிடைத்தது. இதனால் நானும், எனது பணிக்குழுவினரும் மிகச் சிறப்பாக பணியாற்ற முடிந்தது.

1999 ம் ஆண்டு நான் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டபின் கற்கை நிறுவனத்தில் சமுதாய மருத்துவ துறையில் எனது பட்ட பின் படிப்பை முதுமானி பட்டத்தை பெற்றேன். அந்த பயிற்சியில் பெற்ற அறிவு, அனுபவத்துடன் மீண்டும் 2000ம் ஆண்டு முதல் 2002ம் ஆண்டுவரை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியாக பணியாற்றினேன்.

அடுத்து 2002ம் ஆண்டு முதல் வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியேற்றினேன். அக் காலப்பகுதியில் யுத்தத்தால் சேதமடைந்த பல வைத்தியசாலைகளை புனருத்தாரணம் செய்து மீள கட்டியெழுப்பினோம். அக்காலப் பகுதியில்தான் வவுனியா ஆதார வைத்தியசாலை பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்டம்

பின்னர் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக 2005 முதல் 2015 வரை 10 வருடங்கள் தொடர்ச்சியாக பணியாற்றினேன். யாழ்ப்பாண மாவட்டத்தில் 44 வைத்தியசாலைகள் இருந்தன. நெடுந்தீவு முதல் முள்ளியான் வரை பரந்த பிரதேசம். நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய 4 வைத்தியசாலைகளை கடல் பயணம் மூலமே அடைய முடியும். 2005ம் ஆண்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வெளியே பருத்தித்தறை வைத்தியசாலை மட்டுமே ஆதார வைத்தியசாலையாக இருந்தது. எனது முயற்சியினால் தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை வைத்தியசாலைகளை மாவட்ட வைத்தியசாலை தரத்திலிருந்து ஆதார வைத்தியசாலைகளாக தரமுயர்த்தினேன். அந்த சந்தர்ப்பத்தில் சங்கானை வைத்தியசாலையையும் தரமுயர்த்த முயற்சி எடுத்தேன். ஆனால் அனுமதி கிடைக்கவில்லை.

2005ம் அண்டு நான் பதவியேற்ற போது யாழ் மாவட்டத்தில் பல வைத்திய சாலைகள் வாடகை வீடுகளிலும், தற்காலிக இடங்களிலும் இயங்கிக் கொண்டிருந்தன. அவற்றிற்கு சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் சொந்த கட்டிடங்கள் அமைக்க தீர்மானித்தேன். யாழ் மாவட்டத்தில் வைத்தியசாலைகள் அமைப்பதற்கு பொருத்தமான அரச காணிகள் கிடைப்பது மிக கடினம். எனவே அந்தந்த ஊர் மக்களை சந்தித்து அவர்களை தெளிவுபடுத்தி அவர்களிடமிருந்தே வைத்தியசாலை அமைப்பதற்கான காணிகளை சுகாதார திணைக்களத்திற்கு பெற்றுக் கொண்டேன். அந்த அடிப்படையில் பின்வரும் ஊர்களில் உள்ள 10 வைத்தியசாலைகள் பொதுமக்கள் நன்கொடையாக வழங்கிய காணிகளில் அமைக்கப்பட்டன; பருத்தித்துறை, கரவெட்டி, உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மானிப்பாய், இளவாலை, வட்டுக்கோட்டை, தொல்புரம், எழுவைதீவு. இதே போன்று பின்வரும் 5 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் பொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகளிலேயே நிர்மானிக்கப்பட்டன; நல்லூர், கரவெட்டி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், காரைநகர், இவற்றை விட ஏராளமான கிராமிய சுகாதார நிலையங்களை அமைக்க பொதுமக்கள் காணிகளை அன்பளிப்பாக வழங்கினர். இவற்றிலேயே கரப்பவதிகளுக்கும், சிறுவர்களுக்குமான சிகிச்சை நிலையங்கள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு வைத்திய சாலையிலும் அதை சார்ந்த சமூகத்தின் அக்கறையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா பொது வைத்தியசாலையில் MSF France
மருத்துவ குழுவுடன்



வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்து
விடைபெற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து விடைபெற்றபோது



யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து விடைபெற்ற போது (2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலைய திறப்பு விழாவில்
அரசாங்க அதிபர் திரு.கணேஸ் அவர்களுடன்



வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து
விடைபெற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிஷா புயல் வெள்ள இயற்கை அனர்த்தத்தின் போது




டெங்கு விழிப்புணர்வு ஊர்வலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பும் இருக்க வேண்டும் என எதிர்பார்த்தேன். ஒவ்வொரு ஊர் மக்களுக்கும் இது எங்கள் வைத்தியசாலை என்ற உணர்வு வரவேண்டும். அதனை செயற்படுத்த வைத்தியசாலைகளில் நோயாளர் நலன்புரி சங்கங்களை உருவாக்கினேன். இன்று யாழ் மாவட்டத்தில் பல வைத்தியசாலைகளில் நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் மிகச் சிறப்பாக பணியாற்றி வைத்தியசாலைகளின் வளர்ச்சியில் பங்கெடுக்கின்றன. உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் உள்ள நன்கொடையாளர்களின் உதவியுடன் பல கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பல மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே யாழ் மாவட்டத்தில் வைத்தியசாலைகளின் வளர்ச்சியில் சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக் கொண்டதில் பெருமையடைகிறேன்.

யாழ் மாவட்டத்தில் பணியாற்றிய காலத்தில் 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் யுத்தம் தீவிரமடைந்து யாழ் குடாநாட்டிற்கான தரைவழிபாதை மூடப்பட்டது. இரவுநேர ஊரடங்கு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் சுகாதார சேவைகளை முன்னெடுப்பதில் பாரிய சவால்களை எதிர்கொண்டோம். அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் யாவும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே கொண்டுவர முடியும். அப்போது யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கணேஸ் அவர்கள் எமக்கு சுகாதார சேவைகளை முன்னெடுப்பதில் மிகவும் உறுதுணையாக இருந்தார்.

**அவசர அம்புலன்ஸ் சேவை**

2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தொடர்ச்சியாக இரவுநேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலகட்டத்தில் இரவு வேளைகளில் அவசர மருத்துவ நிலைகளின் போது வைத்தியசாலைகட்கு வரமுடியாது அநியாயமாக பல உயிரிழப்புகள் ஏற்பட்டன. அப்போது சமுதாய வைத்திய நிபுணர் Dr.சிவராஜா அவர்கள் அவசர அம்புலன்ஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கினார். அரச அதிபர் திரு.கணேஸ் அவர்களின் உதவியுடன் யாழ்மாவட்ட பாதுகாப்பு கட்டளை தளபதியின் அனுமதியுடன் ஆரம்பத்தில் இரவுநேர அம்புலன்ஸ் சேவையை ஆரம்பித்தோம். பின்னர் அதை 24 மணிநேர அம்புலன்ஸ் சேவையாக விஸ்தரித்தோம்.

அந்த வேளையில் Medical Team International என்ற தொண்டு நிறுவனம் எமது அம்புலன்ஸ் சாரதிகளுக்கு முதலுதவி பயிற்சி வழங்கி முதலுதவிக்கான மருத்தவ உபகரணங்களையும் வழங்கினார். அத்துடன் 110 என்ற அவசர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இலக்கத்தையும் அறிமுகப்படுத்தி உதவினார்கள். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அவசர அம்புலன்ஸ் சேவை அக்காலகட்டத்தில் பல உயிர்களை காப்பாற்ற உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் இந்த அம்புலன்ஸ் சேவை முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் Dr.ப.சத்தியலிங்கம் அவர்களால் வடமாகாணம் முழுவதற்குமான அம்புலன்ஸ் சேவையாக விஸ்தரிக்கப்பட்டது. அக் காலகட்டத்தில் வடமாகாண அம்புலன்ஸ் சாரதிகளுக்கு London Ambulance Service ஐ சேர்ந்த Professor Will Broughton அவர்களால் விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

**மாகாணப் பணிப்பாளராக**

2015 முதல் ஒரு வருடம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும், 2016 முதல் 2022 வரை 6 வருடங்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பணியாற்றினேன். வடமாகாண சுகாதார திணைக்களம் பாரிய சுமை நிறைந்தது. 5 மாவட்டங்களில் 117 வைத்தியசாலைகள், 34 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள். ஏறத்தாழ 7000 உத்தியோகத்தர்கள். பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து எனது பணியை முன்னெடுத்தேன். 2020, 2021 ம் ஆண்டுகளில் கொவிட் பெருந்தொற்றினால் பல நெருக்கடிகளை சந்தித்தோம். அதன் பின்னர் தொடர்ந்த பொருளாதார நெருக்கடியும் நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

சுகாதாரத் திணைக்களத்தில் 33 வருடங்கள் 8 மாதங்கள் எனது சேவையை நிறைவு செய்துள்ளேன். இக் காலப் பகுதியில் 1990 முதல் 2009 வரை 19 வருடங்கள் யுத்த காலம். 2004ம் ஆண்டு ஆழிப் பேரலை அனர்த்தம். 2020, 2021ம் ஆண்டுகளில் கொவிட் பெருந்தொற்று. எனது சேவைக் காலத்தில் ஏறத்தாழ 20 வருடங்கள் நெருக்கடி மிகுந்த காலமாகவே இருந்தது. பல்வேறு சோதனைகள், நெருக்கடிகளை சந்தித்தாலும் அக்காலகட்டத்தில் ஆற்றிய பணி மனநிறைவை தருகின்றது.

**நெதர்லாந்து நாட்டு உதவியுடனான வடமாகாண சுகாதாரத்துறை மேம்பாட்டு திட்டம்**

இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்த நெதர்லாந்து அரசாங்கம் முன்வந்தது. அப்போது மத்திய சுகாதார அமைச்சராக இருந்த Dr.ராஜித சேனாரட்ண அவர்கள் அப்போதைய காலகட்டத்தில் வடமாகாண சுகாதார அமைச்சராக இருந்த Dr.P.சத்தியலிங்கத்துடன் இருந்த நல்லுறவு காரணமாக இத்திட்டத்தை வடமாகாணத்திற்கென ஒதுக்கினார். அதன் அடிப்படையில் 2016ம் ஆண்டு நெதர்லாந்து குழுவினர் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டு திட்டவரைபை முன்வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட அவசர அம்புலன்ஸ் சேவை**



**வடமாகாண அம்புலன்ஸ் சாரதிகளுக்கு பயிற்சி வழங்கிய London Ambulance Service ஐ சேர்ந்த Prof. Will Broughton உடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவும், வவுனியா பொது வைத்தியசாலையில் இருதய மற்றும் சிறுநீரக சிகிச்சை பிரிவும், மாங்குளம் வைத்தியசாலையில் புனருத்தாரண வைத்தியசாலையும், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் விசேட மகப்பேற்று பெண்ணோயியல் சிகிச்சை பிரிவும் அமைக்கப்பட்டன. கட்டிட நிர்மாணத்துடன் மருந்து உபகரணங்கள், தளபாடங்களும் வழங்கப்பட்டன. உயர்ந்த தரத்தில் நிர்மாணிக்கப்பட்டன.

## உதாரண புருஷர்கள் (Role Models)

என் வாழ்வில் வழிகாட்டிகளாக உதாரண புருஷர்களாக இருவர் இருந்தனர். முதலாவது இந்திய முன்னாள் ஜனாதிபதி A.B.J. அப்துல்கலாம் அவர்கள். இராமேஸ்வரத்தில் ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து சிறுவயதில் ஏழ்மையில் கஷ்ரப்பட்டு உழைத்து தனது கடின உழைப்பால் உயர்ந்து விண்வெளி விஞ்ஞானியாகி பின்னாளில் இந்தியாவின் குடியரசு தலைவரானவர். எவ்வளவு உயர்ந்தாலும் இறுதிவரை எளிமையாகவே வாழ்ந்தவர். மிக உயர்ந்த கருத்துக்கள், சிந்தனைகள் மூலம் எல்லோராலும் உயர்வாக மதிக்கப்படுபவர். அவரது கருத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. அவரது சுயசரிதை நூலான அக்கினிச் சிறகுகளை நான் பல தடவைகள் படித்துள்ளேன். அவரது வாழ்க்கை என்னில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

இரண்டாவது உதாரண புருஷராக நான் மதிப்பது முன்னாள் அரசாங்க அதிபர் திரு.கணேஸ் ஐயா அவர்கள். அவருடன் நான் வவுனியாவில் 10 வருடங்களும், யாழ்ப்பாணத்தில் 5 வருடங்களும் இணைந்து பணியாற்றியுள்ளேன். அவரது அர்ப்பணிப்பு, ஆளுமை, கடின உழைப்பு என்பவற்றை பார்த்து வியந்திருக்கிறேன். நேரந் தவறாமை (Punctuality) என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர். ஒரு அரசாங்க சேவகன் எப்படி மக்கள் சேவகனாக வாழ வேண்டும் என்பதற்கு வழிகாட்டியவர். என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே வாழ்ந்தவர். அந்த பல்கலைக் கழகத்தில் நான் பல பாடங்களைப் பயின்றேன். அவர்மீது நான் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தேன். அவரும் என் மீது நல்ல அன்பு வைத்திருந்தார். அவர் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றலாகி வந்தபோது நானும் யாழ்ப்பாணம் வர விரும்பினேன். ஆனால் எனது மனைவிக்கு சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை செய்திருந்ததால் யாழ்வர சற்று தயங்கினேன். அப்போது எனக்கு நம்பிக்கையூட்டி நான் எப்போதும் உதவியாக இருப்பேன் என கூறி என்னை தன்னுடன் யாழ்ப்பாணம் அழைத்து வந்தவர் அவரே. என்னிடம் பலதடவைகள் மனம்விட்டுப் பேசுவார். அவர் அடிக்கடி கூறும் ஒரு வாசகம் "மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையில் கிடைக்கின்ற ஆத்ம திருப்தியை என்ன விலை கொடுத்தும் வாங்க முடியாது." இப்படிப்பட்ட ஓர் உயர்ந்த மனிதருடன் நான் வாழ்ந்ததை, ஒன்றாக பணியாற்றியதை என் வாழ்வின் பெரும் பேறாக கருதுகிறேன்.

**இலக்கிய ஈடுபாடு**

நான் திருஇருதயக் கல்லூரியில் கல்வி பயன்ற காலத்தில் அங்கு திரு செல்வநாயகம் என்ற தமிழ் ஆசிரியர் இருந்தார். அவர் மாணவர்கள் மத்தியில் தமிழ் புலமையை வளர்ப்பதில் வல்லவர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கட்டுரை எழுத ஒரு தலைப்பு தருவார். சனி, ஞாயிறு வார விடுமுறையில் நாம் அந்த தலைப்பில் கட்டுரை எழுதி திங்கட்கிழமை அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் அந்த கட்டுரைகளை படித்து மதிப்பு வழங்குவார். உத்தமம், மத்திமம், அதமம் என மதிப்புகள் கிடைக்கும். எமது எழுத்தாற்றலை வளர்க்க எம்மை நிறைய புத்தகங்கள், சஞ்சிகைகளை வாசிக்க சொல்வார். நானும் நிறைய வாசித்து எழுத்தாற்றலை படிப்படியாக வளர்த்து எனது கட்டுரைகளுக்கு அடிக்கடி உத்தமம் வாங்கினேன். நாம் க.பொ.த சாதாரண வகுப்பை நிறைவு செய்யும் போது என்னை அழைத்து கூறினார். "உம்மிடம் நல்ல எழுத்தாற்றல் உள்ளது. அதனை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக நிறைய வாசிக்க பழகிக் கொள்ளும்"

நான் க.பொ.த சாதாரண பரீட்சை முடித்துவிட்டு பெறுபேறுகள் வரும்வரையான விடுமுறை காலத்தில் நிறைய வாசித்தேன். புத்தகங்களை பணம் கொடுத்து வாங்கி பெற்றோரை கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை. பல நூலகங்களில் அங்கத்தவராக சேர்ந்து புத்தகங்களை எடுத்துப் படித்தேன். வாராந்த, மாதாந்த சஞ்சிகைகளை கிரமமாக வாங்கும் எனது வசதியான நண்பர்களிடம் அவர்கள் படித்து முடித்த சஞ்சிகைகளை இரவல் வாங்கிப் படித்தேன். அவற்றைப் படிக்க படிக்க எழுத வேண்டும் என்ற ஒரு வெறி எனக்குள் வளர்ந்தது. அக் காலகட்டத்தில் பல சிறுகதைகள் எழுதினேன்.

எனது முதலாவது வெளிவந்த படைப்பு இலங்கை வானொலியில் ஒலிபரப்பான இசையும் கதையும். அக்காலத்தில் இலங்கை வானொலியில் இசையும் கதையும் மிகப் பிரபலமானது. 1980ம் ஆண்டு எனது "அஸ்தமனத்தில் ஓர் அவதாரம்" என்ற இசையும்கதையும் ஒலிபரப்பானது. அப்போது நான் ஹாட்லிக் கல்லூரியில் க.பொ.த உயர்தர மாணவன். பாடசாலை பி.ப 3.30 க்கு முடிந்ததும் வீட்டிற்கு ஓடிவந்து 4.30ற்கு எனது கன்னிப் படைப்பை கேட்டது. மறக்கமுடியாதது. பின்னர் 1982ம் ஆண்டு பாரதி நுற்றாண்டு விழாவையொட்டி பாரதியின் பாடல்களை வைத்து நான் எழுதிய இரண்டாவது இசையும் கதையும் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காலப் பகுதியில் எனது 5 சிறுகதைகள் வீரகேசரி வார வெளியீட்டில் வெளியாகின. 1983ம் ஆண்டு எனது நண்பர் ஒருவரின் உண்மைக் கதையை அடிப்படையாக வைத்து எழுதிய "கண்ணீரில் நீந்தும் கனவுகள்" என்ற சிறுகதை இந்திய வார சஞ்சிகையான ஆனந்த விகடனில் வெளியானது. அது எனது எழுத்திற்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாக கருதுகிறேன்.

இப்படியாக எனது படைப்புகள் வெளியாக எனக்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் கிடைத்தன. அப்போது எனது பிறந்த மண்ணை நேசித்து கரவையூர் கேதீஸ்வரன் என்ற பெயரிலேயே எழுதினேன். இதனால் ஊருக்கும் பெருமை கிடைத்ததால் ஊர் மக்களாலும் பாராட்டப்பட்டேன். எழுத்தின் மீது எனது கவனம் திரும்பியதால் க.பொ.த உயர்தர பரீட்சையில் நான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை. இலங்கையில் மருத்துவம் கற்க எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. விலங்கியல் கற்கை துறைக்கே வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அந்த பெறுபேற்றின் உதவியுடன் உயர்கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் பெற்று சோவியத் யூனியனில் மருத்துவம் பயின்றேன்.

அப்போது எனது தந்தையார் என்னை அழைத்து ஓர் அறிவுரை சொன்னார். "க.பொ.த சாதாரண பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றை பெற்று க.பொ.த உயர்தரத்தில் பெறுபேறு சரிவடைந்ததற்கு உமது எழுத்தின் மீதான ஈடுபாடே காரணம். எமது நாட்டில் இந்த எழுத்து மட்டும் உமது குடும்பத்திற்கு சோறு போடாது. உமது குடும்பத்தை பராமரிக்க முதலில் படித்து ஒரு நல்ல தொழிலை தேடிக் கொள்ளும் அதன் பின்னர் தாராளமாக எழுதும்" தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பார்கள். அவரது அறிவுரையில் இருந்த உண்மையை உணர்ந்தேன். நான் எழுதுவதை அத்துடன் நிறுத்திவிட்டு எனது மருத்துவப் படிப்பை சிறப்பு சித்தியுடன் பூர்த்தி செய்து எனது தந்தைக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றினேன். பின்னர் நான் மருத்துவப் பணி குறிப்பாக மருத்துவ நிர்வாகப் பணியில் இணைந்த பின் பணிச்சுமை காரணமாக என்னால் எழுத முடியவில்லை. அவ்வப்போது கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதுண்டு. ஓய்விற்குப் பின்னர் எழுத வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் எழுதுவேன்.

**விருதுகள்**

எனது சேவைக் காலத்தில் பல விருதுகளை வாங்கியிருக்கிறேன். 2010ம் ஆண்டு மத்திய சுகாதார அமைச்சால் நடாத்தப்பட்ட தேசிய சுகாதார மேன்மைக்கான விருதுகள் போட்டியில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையும் விருதுகளை வென்றன. பின்னர் 2013ம் ஆண்டு யாழ்ப்பாணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தேசிய உற்பத்தித்திறன் விருதை வென்றது. 2014ம் அண்டு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாகாண சுகாதார மேன்மைக்கான விருதை வென்றது. 2016ம் ஆண்டு வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனை பொது நிதி முகாமைத்துவ விருதை வென்றது.

நான் பணியாற்றிய நிறுவனங்களில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் எனக்கு மிகுந்த ஒத்தழைப்பை வழங்கி சிறப்பாக பணியாற்றினார்கள். வைத்தியசாலைகளிலும், களத்திலும் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் தமது கடின உழைப்பை வழங்கினார்கள். அது ஒரு சிறப்பான குழுச் செயற்பாடாக (Team Work) இருந்தது. நான் அந்த குழுக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கி வழிநடத்திச் சென்றேனே தவிர இந்த விருதுகள் அனைத்திற்கும் அவர்களே சொந்தக்காரர்கள். நாங்கள் ஒருபோதும் விருதுகளை எதிர்பார்த்து பணியாற்றவில்லை. ஆனால் இந்த விருதுகள் எமது பணிக்கான அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் வழங்கி எமது பணியை அடுத்த நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல உதவின.

### வெளிநாட்டு பயணங்கள்

எனது சேவைக் காலத்தில் பல வெளிநாடுகளுக்கு பயிற்சிக்காகவும், சர்வதேச மருத்துவ கருத்தரங்குகளில் பங்குபற்றவும் வாய்ப்பு கிடைத்தது. அந்த வகையில் இந்தியா, சீனா, நேபாளம், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, பில்ப்பைன்ஸ், வியட்நாம், Costa Rica, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு சென்றிருக்கிறேன். இதைவிட சோவியத் யூனியனில் 7 வருடங்கள் கல்வி கற்றதுடன் இங்கிலாந்திற்கு தனிப்பட்ட பயணமாகவும் சென்றுள்ளேன்.

இந்த வெளிநாட்டு பயணங்களின் போது பல நாடுகளில் சுகாதார சேவை கட்டமைப்புக்களை அறியும் வாய்ப்பு கிடைத்தது. அவற்றின் பலம், பலவீனம் ஆகியவற்றையும் அறியக் கிடைத்தது. பல்வேறு நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளின் அறிமுகம் கிடைத்தது. எனது சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து பயணம்தான் என்னை இங்கு Japanese 5S, உற்பத்திதிறன் கோட்பாடுகளை அறிமுகப்படுத்த தூண்டியது. அவை தான் பின்னர் எனக்கு விருதுகளையும் வாங்கித்தந்தன.

எமது நாட்டிலுள்ள இலவச மருத்துவத்தின் அருமை பலருக்கு தெரியாது. நான் பல நாடுகளுக்கு சென்றபோது அங்கு மக்கள் மருத்துவத்திற்காக தமது வருமானத்தில் கணிசமான பகுதியை செலவிடுவதை கண்கூடாகக் கண்டேன். சில பாரிய நோய்நிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய சுகாதார மேன்மைக்கான விருது
யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு



தேசிய சுகாதார மேன்மைக்கான விருது
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய சுகாதார மேன்மைக்கான விருதுகள் பெற்றபின்
உத்தியோகத்தர்களுடன்



தேசிய சுகாதார மேன்மைக்கான விருதுடன்
பணிமனை திரும்பியபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## National Health Excellence Awards, 2009 - 2010



**RDHS Team with the Bronze Medal**

26 . 03 . 2011

**விருது பெற்ற யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிக் குழாமுடன்**

## National Health Excellence Awards, 2009 - 2010



**Hon Governor Major General GA Chandrasiri with RDHS & Staff of RDHS Office, Jaffna**

26 . 03 . 2011

**விருதுடன் வடமாகாண ஆளுநரால் கௌரவிக்கப்பட்ட போது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய உற்பத்தி திறன் விருது
யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு




தேசிய உற்பத்தி திறன் விருது
யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாண சுகாதார மேன்மைக்கான விருது
யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு




பொதுநிதி முகாமைத்துவ விருது
வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியா, குஜராத், அகமதாபாத்தில் விசேட பயிற்சி நெறிக்கு
சென்றபோது அப்போதைய இந்திய மத்திய சுகாதார அமைச்சர்
Dr.அன்புமணி ராமதாஸ் அவர்களுடன்



இந்தியா, குஜராத், அகமதாபாத்தில் இடம்பெற்ற விசேட பயிற்சிநெறியில்
வடக்கு கிழக்கு மாகாண பிராந்திய சுகாதார பணிப்பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியா, குஜராத், அகமதாபாத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் சபர்மதி ஆச்சிரமத்தில்




நண்பர் சிவபாலன் அவர்களின் 60 ஆவது பிறந்தநாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனாவில் விசேட பயிற்சிக்காக சென்ற போது




சீனாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மலேசியாவில்



மலேசியாவில் விசேட பயிற்சிக்காக சென்றவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூரில் விசேட பயிற்சிக்கு சென்றவேளை



தாய்லாந்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூரில் விசேட பயிற்சிநெறி




வியட்நாமில் சர்வதேச மருத்துவ கருத்தரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Costa Rica ல் விசேட பயிற்சிநெறி




கனடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவில் கருத்தரங்கில் உரையாற்றிய போது



அமெரிக்காவில் IMHO (USA) ன் வருடாந்த மாநாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்காவில் IMHO (USA) ன் வருடாந்த
மாநாட்டில் உரையாற்றிய போது



பிலிப்பைன்ஸில் விசேட பயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



London Madam Tussaud அருட்காட்சியகத்தில்
இந்திராகாந்தி அம்மையாரின் உருவச் சிலையுடன்



முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு சந்திரிகா
பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக வங்கியின் New York தலைமையகத்திலிருந்து செயற்பாட்டு
முகாமைத்துவ பணிப்பாளரின் Ms Anna Bjued குழுவினர்
கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதந்தபோது



உலக வங்கியின் உயர்மட்டகுழு
கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதந்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது அவர்கள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகின்றனர். அந்த வகையில் எமது நாட்டில் எமக்கு கிடைக்கும் இலவச மருத்துவ முறை எமது மிகப்பெரிய பாக்கியம்.

மேலும் எமது நாட்டிலுள்ள நோய்தடுப்பு கட்டமைப்பு மிகவும் வலுவானது. தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதில் இந்த கட்டமைப்பின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. குறிப்பாக கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் இது மிகப்பெரும் உதவியாக இருந்தது. பல வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட இவ்வாறான நோய்த்தடுப்பு கட்டமைப்பு இல்லை. எமது நாட்டின் நோய்த்தடுப்பு கட்டமைப்பானது உலகில் பலராலும் பாராட்டப்படுகின்றது.

**கரவை அபிவிருத்தி ஒன்றியம்**

என்னை இந்த நிலைக்கு உயர்த்திய எனது கிராமத்தின், அதன் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக எனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற வேட்கை எப்போதும் என்னிடம் இருந்தது. 2005ம் ஆண்டு நான் யாழ் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று நீண்ட காலத்திற்கு பின்னர் ஊரில் பணியாற்ற வந்த காலம். உபாலி பொன்னம்பலம் அண்ணா, அதிபர் இராகவன், செல்வரட்ணம் அண்ணா போன்ற ஊர் பெரியவர்கள் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடினர். அந்த வைத்தியசாலையின் அபிவிருத்தி பற்றிய எனது எதிர்காலத்திட்டங்களை எடுத்துரைத்தேன்.

அதன் அடிப்படையில் கரவெட்டி பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திகுழு உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவின் அங்கத்தவர்கள் எமது கிராமத்தில் வீடு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் வைத்தியசாலை பற்றிய விழிப்புணர்வை ஊட்டி நிதி சேகரித்து அப்போதிருந்த வைத்தியசாலையை புனரமைத்தனர். ஆனால் அப்போது வைத்தியசாலை அமைந்திருந்த காணியின் விஸ்தீரணம் பிரதேச வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்திக்கு போதாது என்பதால் புதிய காணிக்கான தேடல் ஆரம்பமானது.

அபிவிருத்தி குழு உறுப்பினர்களின் முயற்சியால் கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் அறங்காவலர் சபையால் ஆலயத்திற்கு சொந்தமான காணி வைத்தியசாலை அமைப்பதற்கு வழங்கப்பட்டது. அந்தக் காணியில் சுகாதார திணைக்களத்தால் வெளிநோயாளர் பிரிவு கட்டிடமும், மகப்பேற்று விடுதியும் அமைக்கப்பட்டது. பின்னர் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம், கனடா கிளையின் உதவியுடன் வைத்திய உத்தியோகத்தருக்கான தங்குவிடுதியும், லண்டன் கிளையின் உதவியுடன் குடும்பநல உத்தியோகத்தருக்கான தங்குவிடுதியும் அமைக்கப்பட்டன. பின்னர் அபிவிருத்திகுழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களின் முயற்சியால் அரசாங்க அதிபரின் நிதியுடன் நோயாளர் தங்கு விடுதியும் அமைக்கப்பட்டது.

இன்று இந்த வைத்தியசாலை பூரணமான உட்கட்டுமான வசதிகளுடன் திகழ்ந்து இப்பிரதேச மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வருகின்றது. ஒரு வைத்தியசாலையின் வளர்ச்சியில் அதனை சார்ந்த சமூகத்தின் அக்கறையும், பங்களிப்பும் இருக்குமானால் அந்த வைத்தியசாலை மிகக் குறுகிய காலத்திலேயே துரிதமாக வளர்ச்சியடையும் என்பதற்கு இந்த வைத்தியசாலை ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

கரவெட்டி கிராமம் தண்ணீருக்காக தவித்து கண்ணீர் சிந்திய தேசம். இக் கிராமத்தின் பல பகுதிகளில் நிலத்தடி நீர் அதிக உவர்த்தன்மையானது. அதனால் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு. அதிகாலையிலேயே குடிநீருக்காக எமது மக்கள் குடங்களுடன் அலைந்த அவலக்காட்சிகள் இன்னமும் மனதில் நிற்கின்றன. கரவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக்கென உருவாக்கப்பட்ட குழு இந்த மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க முயற்சித்தது. இதற்காக வைத்தியசாலை அபிவிருத்திக்குழு கரவை அபிவிருத்தி ஒன்றியமாக உதயமானது. அதன் முயற்சியால் மாயக்கையில் புதிய நீர்மூலம் பெறப்பட்டு குடிநீர்த்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. இன்று இத்திட்டத்தின் மூலம் பெரும்பாலான வீடுகளுக்கு குழாய்நீர் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இதனால் இக்கிராமமக்களின் குடிநீர் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டது.

கரவை அபிவிருத்தி ஒன்றியம் எமது கிராமத்திலுள்ள வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாதாந்த ஊக்குவிப்பு தொகையை வழங்கி வந்தது. தொடர்ந்து கரவையூர் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக கரவை அபிவிருத்தி ஒன்றியம் பாடுபட்டு வருகிறது. அதன் போஷகராக இருந்து வருவதையிட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன்.

கரவெட்டி கிராமத்தின் வளர்ச்சிக்காக இந்த மண்ணில் பிறந்த பல நன்கொடையாளர்கள் உள்ளூரிலும், புலம்பெயர் தேசங்களிலிருந்தும் உதவி வருகின்றனர். கரவை அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாகவும், நேரடியாகவும் பலர் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். எமது கிராமத்தில் உள்ள வைத்தியசாலை, பாடசாலைகள், ஆலயங்கள் என்பவற்றின் அபிவிருத்திக்காகவும் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்குகின்றனர். கடல்கள் பல கடந்தாலும், கண்டங்கள் பல கடந்தாலும் தாய் மண்ணின் மீது அவர்கள் காட்டும் அக்கறை அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் German Councellor Ian Karan
மற்றும் Barbara Karan அவர்களுடன் பருத்தித்துறை
ஆதார வைத்தியசாலை நோயாளர் விடுதி திறப்பு விழாவில்



MJF Foundation மற்றும் Dilmah Tea ஸ்தாபகர்
Merill J Fernando அவர்களுடன் ஊர்காவற்துறை ஆதார
வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டிட திறப்பு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள மருத்துவ நிபுணர் Dr.சிவயோகனின் எண்ணக்கருவில் அவருடன் இணைந்து இவரால் உருவாக்கப்பட்ட தெல்லிப்பழையில் அமைந்துள்ள உளநல புனருத்தாரண நிலையம் "குடில்"



உள மருத்துவ நிபுணர் Dr.சிவயோகனின் எண்ணக்கருவில் அவருடன் இணைந்து இவரால் உருவாக்கப்பட்ட ஓட்டிசம் குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் "மாதவம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




MJF Foundation மற்றும் Ian and Barbara Karan Foundation இணைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அன்பளிப்பாக வழங்கிய நோயாளர் விடுதி திறப்பு விழாவில்




கரவெட்டி பிரதேச வைத்தியசாலை, வெளிநோயாளர் பிரிவு கட்டிட திறப்பு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2005ம் ஆண்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் புற்றுநோய்
சிகிச்சைப் பிரிவில் முதலாவது நோயாளிக்கு சிகிச்சை ஆரம்பித்த போது



முன்னாள் சுகாதார அமைச்சர் Dr.ராஜித சேனாரட்ண
அவர்களுடன் நயினாதீவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெதர்லாந்து அரச உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட வடமாகாண சுகாதார மேம்பாட்டு திட்டத்திற்கான கள ஆய்வு. ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் நெதர்லாந்து குழுவுடன் முன்னாள் சுகாதார அமைச்சர் Dr.P.சந்தியலிங்கமும், செயலாளர் திருவாகரனும் (2016)



நெதர்லாந்து அபிவிருத்தி திட்டத்தின் கட்டுமாண பணிகளை பார்வையிட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெதர்லாந்து அரச உதவியுடன் பருத்தித்துறை ஆதார
வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய
விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு




நெதர்லாந்து அரச உதவியுடன்
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய
விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெதர்லாந்து அரச உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்டபோது



நெதர்லாந்து அரச உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விபத்து மற்றும் சிகிச்சைப் பிரிவு திறப்புவிழாவில்
அதிமேதகு ஜனாதிபதியுடன்




திறப்புவிழாவில் நெதர்லாந்து தூதுவருக்கான
நினைவுப் பரிசில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு திறப்பு விழாவில்
உரையாற்றும் போது



திறப்பு விழாவின் பின் அதிமேதகு ஜனாதிபதி
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பணிக்குழாமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கொவிட் பெருந்தொற்று தடுப்பு செயலணிக் குழுக் கூட்டத்தில்



கனடா நயாகரா நீர்வீழ்ச்சியில் நண்பர் Dr.மணிவண்ணனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊடக சந்திப்பு




ஹாட்லி கல்லூரி 1981 A/L அணி ஒன்றுகூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும்.



முன்னாள் சுகாதார அமைச்சர் Dr ராஜித சேனாரட்ன அவர்களுடன் பிரதேச வைத்தியசாலை நெடுந்தீவுக்கு களத்தரிசிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் எமது கிராமத்தின் வளர்ச்சியில் தனது சிறப்பான பங்களிப்பை வழங்கிய ஒருவரை குறிப்பிட வேண்டும். எமது மண்ணில் பிறந்து தற்போது நோர்வேயில் வதியும் எனது பள்ளித்தோழர், உறவினர். நெருங்கிய நண்பர் சிவபாலன் அவர்களது பங்களிப்பு அளப்பரியது. எமது கிராமத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது கடின உழைப்பால் உயர்ந்தவர். எனது வேண்டுகோளின் பேரில் எமது கிராமத்தில் பல திட்டங்களுக்கு உதவிக்கரம் நீட்டியவர் கரவை சிந்தாமணி விநாயகர் முன்பள்ளிக்கான கட்டிடத்தையும் சுற்று மதிலையும் தனி ஒருவராக கட்ட உதவியவர் மாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்கு முகப்பு வளைவை அமைத்து தந்தவர். தனது 50வது பிறந்த நாளில் தான் பிறந்த கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு பல தளபாடங்களை அன்பளிப்பு செய்தவர். எமது கிராமத்தின் வளர்ச்சிக்காக அவர் வழங்கிய பங்களிப்பிற்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

**முடிவுரை**

நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து இந்த நிலைக்கு உயர்ந்து வந்து இன்று இவ்வளவு கௌரவத்தையும், பாராட்டையும் பெறுகிறேன். இதற்கு அடிப்படையாக அமைந்த இந்த நாட்டின் இலவச கல்வித் திட்டத்திற்கு என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளேன். இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஒன்றை கூற விரும்புகிறேன். நீங்கள் எவ்வளவு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தாலும் அதையிட்டு கவலைப்படாதீர்கள். உங்கள் திறமை மீது நம்பிக்கை வையுங்கள். கடுமையாக அர்ப்பணிப்போடு உழையுங்கள். நேர்மையாக இருங்கள். நிச்சயம் ஒருநாள் நீங்களும் உயர்ந்து வருவீர்கள்.

இந்த வேளையில் நான் இந்த நிலைக்கு உயர்ந்து இவ்வளவு பெயரையும் புகழையும் சம்பாதிக்க எனக்கு உறுதுணையாக இருந்த எனது பெற்றோர்கள், துணைவியார், குடும்பத்தினர், உறவினர்கள் எனக்கு கல்வி புகட்டிய ஆசான்கள், என்னை நல்வழிப்படுத்தி பக்குவப்படுத்திய எனது கிராமம், எனக்கு வழிகாட்டியாக, ஆலோசகர்களாக இருந்த மேலதிகாரிகள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன். நான் பணியாற்றிய நிறுவனங்களில் எல்லாம் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி எனக்கு பெருமையை தேடித்தந்த உத்தியோகத்தர்களுக்கும், மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்கிறேன்.

இறுதியாக என்னை உயர்த்திய மண்ணிற்கும், மக்களிற்கும் என்னால் இயன்ற சேவைகளை செய்தேன் என்ற ஆத்ம திருப்தியுடன் நிறைவு செய்கிறேன்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரை - தலைவர் சிவசிதம்பரம் அவர்களின் நூற்றாண்டு மலருக்கு வரையப்பட்டது)

# "தலைவர் சிவாவும் தாய்மண் கரவையூரும்"

வைத்திய கலாநிதி.ஆறுமுகம் கேதீஸ்வரன்
சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்மாவட்டம்.

வைத்திய கலாநிதி. ஆறுமுகம் கேதீஸ்வரன் சில ஊர்களில் பிறந்ததால் சிலருக்குப் பெருமை. சிலரைப் பெற்றதால் சில ஊருக்கே பெருமை. அந்தவகையில் தன்னிகரில்லா தன்னலமற்ற தமிழினத்தலைவர் சிவாவைப் பெற்றதில் கரவையூர் பெருமை கொள்கின்றது. கரவைத்தாய் தமிழினத்திற்குத் தந்த தவப்புதல்வன் தலைவர் சிவா. அவர், கரவை மண்ணின் மீதும் மக்கள் மீதும் அளவுகடந்த அன்பையும் ஆத்மார்த்தமான ஓர் பிணைப்பையும் கொண்டிருந்தார். இந்த மண்ணின் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காகத் தன் இறுதிமூச்சுவரை உழைத்தார். அதனால் இந்த மண்ணின் மக்களால் தம் தலைவனாக எப்போதும் நேசிக்கப்பட்டார். இந்த மண்ணின் மக்களின் இதயக்கோவில்களில் இன்றும் வாழும் உன்னதமான உத்தமர் அவர். கரவையூர் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காகத் தலைவர் சிவாவும் அவரது குடும்பத்தினரும் ஆற்றிய அளப்பரிய பணிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது இத்தருணத்தில் சாலப் பொருத்தமாகும்.

கரவையூரில் படித்த, பண்பட்ட சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற தூரநோக்குடன் தலைவர் சிவா அவர்களது முன்னோர்கள் எமது ஊரில் விக்னேஸ்வரா கல்லூரி, மாணிக்கவாசகர் வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், விநாயகர் வித்தியாலயம் ஆகிய நாலு கல்லூரிகளை நிறுவினார்கள். இதன்மூலம் அக்காலத்திலேயே எமது ஊரில் தரமான இலவசக் கல்வியை அனைவராலும் பெற முடிந்தது. விவசாயமே எமது கிராமத்தின் முக்கிய ஜீவனோபாயமாக விளங்கியது. விவசாயிகள் தங்கள் பிள்ளைகளை இந்தக்கல் லூரிகளில் சேர்த்துக் கல்வி கற்க வைத்தனர்.

அன்று இடப்பட்ட அந்த அடித்தளத்தில் எமது மண்ணில் ஏராளமான கல்விமான்கள் உருவாகினார்கள். அவர்கள் அன்று கண்ட கனவு நனவானது. கரவையுஸ்ரீரில் ஓர் படித்த பண்பட்ட பக்குவப்பட்ட ஓர் சமூகம் உருவானது. பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் இந்த மண்ணின் மைந்தர்கள் இன்று உலகம் முழுதும் தமது முத்திரைகளைப் பதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணிற்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள். அன்று அவர்கள் இட்ட விதைகள் இன்று விருட்சங்களாகி வியாபித்து நிற்கின்றன. எமது மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அவரது குடும்பம் ஆற்றிய மகத்தான பணி காலத்தால் அழியாதது. அதுவே கரவை மண்ணிற்கு ஒரு தனித்துவமான அடையாளத்தைத் தந்தது. அடுத்து அவரது குடும்பத்தினர் எமது கிராமத்தின் மருத்துவ சேவைக்காக ஆற்றிய பணிகளை ஆராய்வோமானால் அக்காலத்தில் எமது கிராமத்தில் மருத்துவமனைகள் எதுவுமே இருக்கவில்லை. எல்லோரும் மருத்துவத் தேவைகளுக்கு மந்திகை வைத்தியசாலைக்குத்தான் செல்ல வேண்டும். அக்காலப்பகுதியில் பெரும்பாலான பிரசவங்கள் வீட்டுப்பிரசவங்களாகவே நடந்தன. இதன்போது பல தாய் மரணங்களும் சிசு மரணங்களும் இடம்பெற்றன. தலைவர் சிவா அவர்களது தாயாரும் சிறிய தாயாரும் பிரசவத்தின்போதே துரதிஸ்டவசமாக உயிர்நீத்தனர். இந்த சோகம் எமது கிராமத்தில் பல குடும்பங்களை உலுக்கியது. இந்தத் துயர தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக தலைவர் சிவா அவர்களது குடும்பத்தினர் தமது சொந்தக் காணியையும் வீட்டையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து. அதில் மகப்பேற்று மருத்துவமனை அமைக்கப்பட்டது.

அதன்பின்னர் பெரும்பாலான பிரசவங்கள் இங்கேயே இடம்பெற்றன. பல தாய் மரணங்கள் சிசு மரணங்கள் தடுக்கப்பட்டன. அந்தத் துயரத் தொடர்கதைக்கு முடிவுரை எழுதப்பட்டது. அன்று அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிறிய மருத்துவமனைதான் இன்று கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலையாக கம்பீரமாக எழுந்து நிற்கிறது. கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 50,000 இற்கும் அதிகமான மக்களுக்கு உன்னதமான உயர்ந்த சேவையை வழங்கிவருகிறது. அன்று அவரது குடும்பம் ஆரம்பித்த அந்த பணி இன்று எமது மண்ணில் மகோன்னத மருத்துவ சேவையாக வளர்ந்து நிற்கின்றது. எமது கரவையூருக்கு தண்ணீருக்காக கண்ணீரில் தவித்த வரலாறு உண்டு. எமது ஊரில் பெரும்பாலான கிணறுகள் உவர்நீர் ஊற்றுக்கொண்டவை. சில பொதுக் கிணறுகள் தான் பெரும்பாலான குடும்பங்களுக்கு அடைக்கலம் தந்தன. இரவு பகலாக தண்ணீர்க் குடங்களுடன் தவித்த காலம் எமது கிராம வரலாற்றில் துன்பியல் அத்தியாயம் ஆகும். இவர்களது வாழ்வில் பெரும்பகுதி தண்ணீருக்கான தவிப்புடனேயே கழிந்தது.

எமது மக்களின் கண்ணீர்க் கதைக்கு முடிவுகட்ட தலைவர் சிவா அவர்கள் அத்துளு குடிநீர்த் திட்டத்தை முன்னெடுத்தார். அதன்மூலம் எமது கிராமம் முழுவதும் வீதியோர குழாய்கள் மூலம் மக்களுக்கு குடிநீர் கிடைத்தது. எமது கிராமத்தின் நீண்டதோர் துன்பியல் வரலாற்றிற்கு அவர் விடிவு தந்தார். அதன்பின்னர் அண்மையில் கரவை அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியத்தின் முயற்சியால் அவரவர் வீடுகளுக்கே தற்போது குடிநீர் கிடைக்கின்றது. 2 ஒரு கிராமத்தின் வளர்ச்சியில் எழுச்சியில் மதத்தலங்களுக்கு பெரும் செல்வாக்கு உண்டு.

அந்தவகையில் எமது கிராம மக்களால் மிகவும் நேசிக்கப்படும் பூஜிக்கப்படும் இரண்டு ஆலயங்கள் உள்ளன. அவையாவன தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் மற்றும் வெல்லன் விநாயகர் ஆலயம் ஆகும். அன்று முதல் இன்றுவரை ஆலயம் என்பதற்கு இலக்கணமாக ஆகம விதிப்படி மகோற்சவங்களும் நித்திய பூசைகளும் சிறப்பாக இடம்பெறுகின்றன. இந்த நவீன யுகத்திலும் ஆலயத்தின் புனிதத் தன்மை சற்றேனும் குறையாது எழுந்து நிற்கின்றன. எமது கிராம மக்களைப் பண்பட்ட பக்குவப்பட்ட மக்களாக வளர்த்ததில் இந்த ஆலயங்கள் இரண்டிற்கும் பெரும்பங்குண்டு.

தலைவர் சிவா அவர்களுக்கு இந்த இரு ஆலயங்கள் மீதும் மிகுந்த இறைபக்தியும் மதிப்பும் இருந்தது. அவர் கொழும்பில் வாழ்ந்தாலும் ஊருக்கு வரும்போதெல்லாம் இந்த இரண்டு ஆலயங்களையும் தரிசிக்க தவறமாட்டார். அவர் வெல்லன் விநாயகர் ஆலய மகோற்சவத்தின் தீர்த்த உற்சவத்தன்று தாழங்குழி முருகன் ஆலயத்தில் இருந்து வெல்லன் விநாயகர் ஆலயத்திற்கு பாற்காவடி எடுப்பது வழமை. தச்சன் தோப்பு விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் பத்து நாட்களும் ஒரே பேச்சாளரால் தொடர் சமய சொற்பொழிவு இடம்பெறுவது வழக்கம். அக்காலத்தின் கிருபானந்தவாரியார், கி.வா.ஜெகநாதன், தங்கம்மா அப்பாக்குட்டி முதல் இக்காலத்தின் ஆறுதிருமுருகன், தமிழருவி சிவகுமாரன் வரை இந்த ஆலயத்தில் சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தி உள்ளனர். மகோற்சவத்தின் இறுதி நாளில் தலைவர் சிவா அவர்களால் சொற்பொழிவாளர் கௌரவிக்கப்படுவது எழுதப்படாத ஒரு மரபாக இருந்து வந்தது.

அந்தவகையில் அவரை ஒரு உயர்ந்த ஆன்மீகவாதியாகக் காண்கின்றோம். பல அரசியல் தலைவர்கள் அரசியலுக்கு வந்து சொத்து சேகரிப்பதை கண்கூடாக இன்று நாம் காண்கின்றோம். ஆனால் தலைவர் சிவா அவர்கள் தனது மூதாதையர் சேர்த்து வைத்திருந்த சொத்தை விற்று அரசியல் செய்தார்.அவரை ஒரு அப்பழுக்கில்லாத அரசியல் வாதியாக நாம் காண்கின்றோம். தலைவர் சிவா அவர்கள் ஒரு சிறந்த பேச்சாளர். தான் சொல்ல வந்த கருத்தை அழுத்தமாகவும் ஆணித்தரமாகவும் தனது சிம்மக்குரலில் எடுத்துரைப்பார். அவரது பேச்சைக் கேட்பதற்காக எமது கிராம மக்கள் மணிக்கணக்கில் காத்திருந்து கேட்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மிகவும் எளிமையான தலைவராக விளங்கினார். எமது கிராம மக்கள் தமது குறைகளுக்காக எப்போதும் இலகுவில் அணுகக்கூடிய ஒரு மனிதராக அவர் விளங்கினார். ஒவ்வொரு கரவையூரனுக்கும் ஓர் கடைசி ஆசை உண்டு. சோனப்பு மயானத்தில் வேக வேண்டும். தலைவர் சிவாவிற்கும் அந்த இறுதி ஆசை இருந்தது. அவர் மறைந்தது யுத்த காலத்திலாகும் பல கெடுபிடிகள், போக்குவரத்துப் பிரச்சனைகள் அவ்வளவு நெருக்கடிகளின் மத்தியிலும் அவரது விருப்பப்படி அவரது பூதவுடல் கரவை மண்ணுக்குக் கொண்டுவரப்பட்டது. பல அரசியல் தலைவர்கள் கரவையூருக்கு வந்து இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர். கரவை மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் அவரது பூதவுடல் அவர் நேசித்த தாய்மண்ணிலேயே அக்கினியுடன் சங்கமமானது. தன் இறுதி மூச்சுவரை தாய் மண்ணுக்காக உழைத்த உன்னத தலைவனுக்கு தன் தவப்புதல்வனுக்கு கரவைத்தாய் விடைகொடுத்தாள். தலைவர் சிவாவின் தனிப்பட்ட வாழ்வும் அரசியல் வாழ்வும் கரவையூருடன் பின்னிப்பிணைந்தது. பிரிக்க முடியாதது. கரவை மண்ணை அவர் அந்தளவிற்கு நேசித்தார். கரவை மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக உழைத்தார். அதனால் இந்த மண்ணின் மக்களால் தங்கள் தலைவனாக என்றும் நேசிக்கப்பட்டார். அவரது ஆத்மா கரவையூரின் காற்றிலே என்றும் கலந்திருக்கும். கரவையூர் உள்ளவரை தலைவர் சிவாவின் நாமமும் நிலைத்திருக்கும். கரவை மக்களின் இதயக்கோவில்களில் அவர் என்றென்றும் வாழ்ந்திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரை - பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் மறைந்தபோது வரையப்பட்டது)

# "தமிழ்த் தாயின் தவப்புதல்வனுக்கு கரவையூரின் கண்ணீர்க் காணிக்கை"

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

தமிழ்த்தாய் தன் தவப் புதல்வனை இழந்து தவிக்கிறாள். கரவையூர் தன் மகுடத்தில் ஓர் மாணிக்கத்தை இழந்து நிற்கிறது. சாகாவரம் பெற்ற சரித்திரப் படைப்புகளைத் தந்த ஓர் மகாநதி சாவெனும் சாகரத்தில் சங்கமித்துள்ளது. ஓர் நடமாடும் பல்கலைக் கழகம் தன் முடிவுரைக்கு முகம் கொடுக்கிறது. எங்கள் பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி பேரிடியாய் வீழ்ந்தது. இந்த இழப்பு ஜீரணிக்க முடியாதது. ஈடு செய்ய முடியாதது.

கரவையூருக்கு ஓர் தனித்துவமான கல்விப் பாரம்பரியம் உண்டு. கரவையூர் உருவாக்கிய பல கல்விமான்கள் உலகம் முழுவதும் உள்ளனர். எங்கள் ஊரில் பிறந்ததால் இவர்களுக்கு சிறப்பு. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இவர்களிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கிறார். இவரால் எங்கள் ஊர் இன்று உயர்ந்து நிற்கிறது. இன்று உலகெங்கிலுமுள்ள ஊடகங்களில் பேராசிரியரின் பெயர் குறிப்பிடப்படும் போது எங்கள் ஊரின் பெயரும் கூடவே உச்சரிக்கப்படுகிறது. அந்த மகாநதியின் ஊற்று இந்த ஊரில் உற்பத்தியானதில் நாம் பெருமையடைகிறோம்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தன்னைப் பெற்று வளர்த்த மண்ணின் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். கரவையூரின் வாழ்வியலை அந்த மண்வாசனையோடு யதார்த்தமாக, தத்ரூபமாக தனது படைப்புக்களில் சித்தரிக்கிறார். உலகின் எத்தனையோ புகழ்பூத்த பல்கலைக் கழகங்களில் பணியாற்றி இருந்தாலும் தான் கரவையூரில் ஆரம்ப காலத்தில் கல்வி கற்ற மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும், விக்னேஸ்வராக் கல்லூரியிலும் மட்டற்ற மதிப்பை வைத்திருந்தார். தனது பல படைப்புகளில் அந்த பாசத்தைப் புடம்போட்டுக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கம்யூனிஸ சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவராக இருந்தாலும் கரவையூர் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வணங்கப்படும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். தனது ஒரு ஆக்கத்தில் சிதம்பரத்தில் நின்றாலும் சீர்காழியில் நின்றாலும் தச்சந்தோப்பு நினைவுகள் நெஞ்சை நிறைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கரவை அபிவிருத்தி ஒன்றியம் சில வருடங்களுக்கு முன் கரவெட்டியின் வரலாற்றை, வாழ்வியலை, ஓர் நூலாக ஆவணப்படுத்த முடிவெடுத்தது. அந் நூலை எழுத மிகப்பொருத்தமானவர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களே என முடிவு செய்யப்பட்டது. அப்போது அவர் கொழும்பில் இருந்தார். யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்ட காலம். விமான, கப்பல் பயணங்களே இருந்தன. நான் அக்காலப் பகுதியில் கடமை நிமித்தம் அடிக்கடி விமானமூலம் கொழும்புக்கு சென்று வந்தேன். எனவே இந்நூல் விடயமாக பேராசிரியரை சந்தித்து அவரைச் சம்மதிக்க வைக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்விடயம் சம்பந்தமாக இரண்டு தடவைகள் பேராசிரியரைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. என்னை அவருக்கு முன் அறிமுகமில்லை. இருந்தாலும் கரவெட்டியிலிருந்து வந்திருக்கிறேன் என்றதும் பல்லாண்டு காலம் பழகிய ஒருவரை வரவேற்பது போல் வரவேற்று உபசரித்தார். உலகப் பகழ்பெற்ற ஓர் உயர்ந்த அறிஞர் தன்னை பெற்று வளர்த்த மண்ணின் மீது வைத்திருந்த பாசத்தைப் பார்த்து மலைத்து நின்றேன். கரவெட்டியின் வரலாற்றை, வாழ்வியலை மடைதிறந்த வெள்ளம் போல் வர்ணித்தார். அந்த நடமாடும் பல்கலைக் கழககத்திடம் நான் பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். கரவையூரைப்பற்றி பேசும்போது பாசம், பக்தி, பரவசம் போன்ற உணர்வலைகளின் நர்த்தனத்தை அவரிடம் நான் கண்டேன். தான் பிறந்து வளர்ந்த மண்ணை இவ்வளவு தூரம் நேசித்த அவர் ஓர் மனிதர்குல மாணிக்கம்.

இறுதியாக நான் இவரைச் சந்தித்த போது தனது இறுதிப் பயணத்திற்கு தன்னைத் தயார்படுத்தியது போன்றே சில விடயங்களைக் குறிப்பிட்டார். சோனப்பில் தனது இறுதி யாத்திரை இடம்பெற வேண்டுமென்பதே தனது இறுதி ஆசை என்றும் ஆனால் தற்போதைய சூழலில் அது சாத்தியமாவது கடினம் என்பதால் தனது அஸ்தியின் ஒரு பகுதியை சோனப்பு மயானத்தில் தூவ வேண்டும் என்ற ஆசையை வெளியிட்டார். தான் பிறந்து வளர்ந்த மண்ணிலேயே தான் இறுதியில் சங்கமமாக வேண்டுமென விரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவையூரைப் பொறுத்தவரை சோனப்பு என்பது வெறுமனே ஒரு மயானமல்ல. சந்ததி சந்ததியாக இம்மக்களின் உணர்வுகள் ஊறிப்போன ஓர் புனித பூமி. ஒவ்வொரு கரவையூரானும் தன் முடிவுரைக்கு இங்குதான் முற்றப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என விரும்புகிறான். அந்த உப்புக்காற்றில் உலர்ந்து போவதில் அப்படியொரு சுகம்.

கரவையூர் பெற்றெடுத்த தமிழ்த்தலைவர் சிவசிதம்பரம் அவர்களது கடைசி ஆசைப்படி அவரது இறுதி யாத்திரையும் சோனப்பில்தான் இடம்பெற்றது. அப்போது தலைவரைப் பற்றியும் சோனப்பைப் பற்றியும் பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய பிரியாவிடை குறிப்பு என்றும் மறக்க முடியாதது. பல நூல்களில் மீள்பதிப்பு செய்யப்பட்டது.

உலகில் எங்கு வாழ்ந்தாலும் எவ்வளவுதான் உயர்ந்தாலும் தன்னை உருவாக்கிய மண்ணை இறுதி மூச்சுவரை மறக்காது வாழ்ந்து அந்த மண்ணிலேயே சங்கமிக்கத் துடித்த மனிதர்குல மாணிக்கமே! கரவை மண்ணும் மக்களும் கண்ணீர் மல்க இறுதிவிடை தருகின்றனர். எங்கள் ஊரின் மதிப்பை உலகில் உயர்த்திய உத்தமரே சென்று வாருங்கள்.

தமிழ் இங்கு உள்ளவரை
தரணியில் நிலைக்கும் உங்கள் திருநாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரை - திரு இருதயக் கல்லூரியின் நூற்றாண்டுவிழா மலருக்காக எழுதப்பட்டது)

# "என்னை உருவாக்கிய கலைக்கோயில்"

**வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## அறிமுகம்

அகவை நூறில் திருஇருதயக் கல்லூரி அன்னை அகவை நூறை அடையும் போது ஆனந்தமடையும் மகனின் மனநிலையில் நான். மாணவர்களை மனிதர்களாக செதுக்கும் கலைக்கூடமே கல்லூரி. இந்த தேசத்திற்கு சிறந்த பண்பட்ட நற்பிரஜைகளையும், கல்விமான்களையும் ஈன்றெடுத்த பெருமையுடன் அமைதி யாகவும், அடக்கமாகவும் நூறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது திரு இருதயக் கல்லூரி. என்னை உருவாக்கிய கலைக் கோயிலின் நூற்றாண்டு விழா மலரில் இக்கட்டுரை வரைய கிடைத்ததை என் பாக்கியமாக கருதுகிறேன். இக் கல்லூரியில் எனது காலப்பகுதியின் நினைவுப் பதிவுகளை மீட்டிப்பார்க்கின்றேன்.

## இக் கல்லூரியில் எனது காலம்

இக் கல்லுரியில் நான் 1972 முதல் 1978 வரை தரம் 4 முதல் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி பயின்றுள்ளேன். இக் கல்லூரியின் ஆரம்ப பிரிவில் நான் தரம் 4 இல் இணைந்த போது அருட்சகோதரி ஒருவரே அப்பிரிவின் அதிபராக இருந்தார். பல அருட்சகோதரிகள் எமக்கு ஆசிரியர்களாக இருந்தனர். அவர்களது மிகச்சிறந்த வழிகாட்டல்களுடன் எனது கல்விப் பயணம் இக் கல்லூரியில் ஆரம்பித்தது.

## இக் கல்லூரியின் சிறப்புக்கள்

அக் காலகட்டத்தில் இக் கல்லூரி வடமராட்சி பிரதேசத்தில் புகழ்பூத்த ஓர் கல்லூரியாக விளங்கியது. பல கல்விமான்களையும், உயர்ந்த மனிதர்களையும் உருவாக்கிய பெருமையுடன் இயங்கிக் கொண்டிருந்தது. இக் கல்லூரி கரவெட்டி பிரதேசத்தில் அமைந்திருந்தாலும் பருத்தித்துறை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, மணற்காடு, மருதங்கேணி போன்ற பல பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் எனது காலத்தில் இங்கு கல்வி கற்றனர். அக் காலத்தில் மிக வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் முதல் நெல்லியடியைச் சேர்ந்த பிரபல செல்வந்தர்களின் பிள்ளைகளும் எந்தவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றத்தாழ்வுமின்றி இங்கே ஒன்றாகக் கல்வி கற்றது இக் கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

**மத நல்லிணக்கத்திற்கான அடையாளச் சின்னம்**

இக் கல்லூரி கிறிஸ்தவ பாரம்பரியத்தில் உருவாகி தேவாலயத்துடன் இணைந்து அமைந்தாலும் இங்கே கிறிஸ்தவ, இந்து மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாக பரஸ்பர புரிந்துணர்வுடன் கல்வி கற்று வந்தனர். இது ஓர் கிறிஸ்தவக் கல்லூரியாக இருந்தாலும் ஏனைய கல்லூரிகளை போன்றே சகல இந்துமத விழாக்களும் சிறப்பாக கொண்டாடப்படும். கிறிஸ்தவ விழாவாக இருந்தாலும் சரி, இந்து மத விழாவாக இருந்தாலும் சரி அனைத்து மாணவர்களும் கலந்து மற்றைய மதத்தை மதித்து கௌரவிப்பார்கள். அருகிலுள்ள தேவாலய ஆராதனைகளில் இந்து மாணவர்களும் கலந்து கொள்வோம். மொத்தத்தில் மத நல்லிணக்கத்திற்கான ஓர் அடையாளச் சின்னமாக இக் கல்லூரி திகழ்ந்தது.

**சாதனைகள்**

அக்காலத்தில் இக் கல்லூரி மாணவர்கள் கல்வி, கலை, விளையாட்டு போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கினார்கள். மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல சாதனைகள் படைத்தார்கள். அப்போது விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக இருந்த புலோலியைச் சேர்ந்த அமரர் கிறிஸ்தோபர் என்ற ஆசிரியரின் நெறிப்படுத்தலில் இக் கல்லூரி மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட "பண்டாரவன்னியன்" நாடகம் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்றது. இந் நாடகத்தில் பண்டார வன்னியனாக மணற்காட்டைச் சேர்ந்த மிக உயரமான ஆஜாபாகுவான தோற்றமுடைய ஒரு மாணவன் மிகச்சிறப்பாக நடித்திருந்தார்.

இதே போல இக் கல்லூரியின் உடற்பயிற்சி குழாமும், உதைப்பந்தாட்ட குழாமும் பல்வேறு மட்டங்களிலும் பல சாதனைகளை படைத்திருந்தார்கள். அக் காலத்தில் விளையாட்டுத்துறையிலும், நாடகத்துறையிலும் இக் கல்லூரி நாட்டிய பல சாதனைகளின் பெருமை அமரர் கிறிஸ்தோபர் ஆசிரியரையே சாரும்.

**எனது அதிபர்**

நான் இக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் புகழ்பூத்த கணித ஆசான் அமரர் தோமஸ் ஈப்பன் அதிபராக இருந்தார். மிகுந்த ஆளுமை மிக்கவர். பண்பட்ட மனிதர். கண்டிப்பானவர். மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தை நிலை நாட்டியவர். இக் கல்லூரியின் எழுச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் பாடுபட்டு உழைத்தவர். அவரது மனைவியும் இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாக பணியாற்றியவர். அவரது சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இக் கல்லூரி கீர்த்திமிக்க ஓர் நிலையை அடைந்தது.

**எனது ஆசிரியர்கள்**

என் வாழ்வில் ஆளுமை செலுத்திய சில ஆசிரியர்கலை இங்கு நன்றியுடனும் பெருமையுடனும் நினைவுகூர விரும்புகின்றேன். இக் கல்லூரியில் தரம் 6 முதல் க.பொ.த சாதாரணம் வரை எனக்கு ஆங்கில ஆசிரியராக இருந்தவர் அருட்சகோதரி ஜெரோம் அவர்கள். சாந்தமே உருவானவர். மிகவும் அன்பானவர். பண்பானவர். அனைவருடனும் மிகவும் மென்மையாகவும், பணிவாகவும்பேசுவார். கண்டிப்பான வார்த்தைகளை அவரிடம் நான் ஒருபோதும் கேட்டதில்லை. அவரது கையில் ஒருபோதும் பிரம்பையோ அல்லது தடியையோ நான் பார்த்ததில்லை. அன்பால் அனைவரையும் ஆட்கொள்ளமுடியும் என்பதற்கு அவர் ஒரு சிறந்த உதாரண புருஷராக விளங்கினார்.

மாணவர்களை எப்பொழுதும் அன்புடனே வழிநடத்துவார். பல அன்பான அறிவுரைகளைக் கூறுவார். மாணவர்கள் ஏதும் தவறு செய்தால் ஏசமாட்டார். அந்த தவறு செய்த மாணவர்களை அழைத்து "ஏன் இப்படி செய்தீர்கள்" என்று அன்போடு கேட்பார். அவ்வளவு தான் அவன் அழ ஆரம்பித்து விடுவான். அவரது அன்பான கேள்வியே அவனுக்கு ஆயிரம் அடிகள் போல வலிக்கும். அந்த தவறை அந்த மாணவன் மீண்டும் செய்ய மாட்டான். அன்பையும் ஆயுதமாக பாவிக்கலாம் என்ற உயரிய வாழ்வியல் தத்துவத்தை நான் அவரிடமிருந்து அறிந்துகொண்டேன்.

எனது இளம் வயதில் அவரிடம் பார்த்த இந்த உயர்ந்த பண்பு என் மனதில் ஆழமாகப் பதிந்தது. இயலுமான வரை அதை என் வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டுமென விரும்பினேன். இன்று யாழ் மாவட்ட சகாதார திணைக்களத்தில் எனது நிர்வாகத்தின் கீழ் ஏறத்தாழ இரண்டாயிரம் பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவருடனும் நான் மிக அன்பாகவே எனது நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுப்பேன். பெரும்பாலானவர்கள் எனது அன்பான அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்பு வழங்கி தமது சேவைகளை ஆற்றுகின்றனர். ஒரு சிலர் தவறிழைக்கும் போது அன்பாக சுட்டிக்காட்டியவுடன் தம்மை திருத்திக் கொள்வார்கள். மீண்டும் மீண்டும் தவறிழைக்கும் சந்தர்ப்பங்களிலேயே தண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுண்டு. அந்த அருட்சகோதரியான ஆசிரியையின் உயர்ந்த பண்பு என் வாழ்வில் ஏற்படுத்திய ஆளுமை மாற்றத்தையிட்டு பெருமைப்படுகிறேன். அவரை எப்போதும் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பொதுவாக மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு சிறப்பாக இருந்தாலும் அவர்கள் அதைப் பேசிப்பழகும் வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு. அதனால் அவர்கள் ஆங்கிலம் பேச வேண்டிய சூழ்நிலைகட்கு செல்லும்போது உச்சரிப்பில் சிரமப்படுவதுண்டு. பாடசாலைக் காலத்தில் ஆங்கிலத்தில் பேசினால் ஏனைய மாணவர்கள் கிண்டலடிப்பார்கள் அல்லது தற்பெருமை என்பார்கள். இதனால் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கில அறிவு இருந்தாலும் அதனைப் பேசிப் பழகிப் பார்ப்பதில்லை.

எமது ஆங்கில ஆசிரியையான அருட்சகோதரி அவர்கள் இக் குறையை போக்க ஓர் நடைமுறையை அறிமுகப்படுத்தினார். அவரது ஆங்கிலப் பாட நேரத்தில் சகல மாணவர்களும் தங்களுக்குள் கதைத்தாலும் சரி, ஆசிரியருடன் கதைத்தாலும் சரி தனியே ஆங்கிலத்தில் மட்டுமே பேச வேண்டும். அவரும் எங்களுடன் மிக எளிமையான ஆங்கிலத்தில் எமக்கு புரியும்படி எம்முடன் உரையாடுவார். ஆரம்பத்தில் சற்று சிரமமாக இருந்தது. பின்னர் போகப் போக பழகிவிட்டது. எல்லா மாணவர்களும் தமக்கு இயன்ற வரையில் படிப்படியாக பேசிப்பழக கற்றுக்கொண்டார்கள். எங்களுக்கும் ஆங்கிலம் பேசுவதில் இருந்த கூச்சம் அற்றுப்போனது. இதுவே பின்னாளில் எமது ஆங்கிலப் புலமைக்கு சிறந்த அடித்தளமாக அமைந்தது. ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன் அவர் நடைமுறைப்படுத்திய அணுகுமுறை எம்மில் ஏற்படுத்திய தாக்கத்தை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

அடுத்ததாக என் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய எனது மதிப்பிற்குரிய தமிழாசிரியர் அமரர் செல்வநாயகம் அவர்களை நினைவுகூர விரும்புகின்றேன். அக்காலத் தமிழ் ஆசிரியர்களிடம் ஒரு தனித்துவம் இருந்தது. அவர்கள் எங்களுக்கு தமிழ்ப்பால் ஊட்டிய முறை தனித்துவமானது. அமரர் செல்வநாயகம் ஆசிரியர் தனித்துவமானவர். சிறந்த பண்பட்ட மனிதர். கண்டிப்பானவர். தன் மாணவர்களிடமிருந்து நிறைய எதிர்பார்ப்பவர்.

எங்களுக்கு உள்ளேயிருந்த எழுத்துத் திறமையை வெளிக் கொணர அவர் ஓர் யுக்தியை கையாண்டார். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் ஒரு கட்டுரைக்கான தலைப்புத் தருவார். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நாம் கட்டுரை எழுதி திங்கட்கிழமை அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். திங்கட்கிழமை எமது கட்டுரைகளைப் படித்து மதிப்பிட்டு செவ்வாய்க்கிழமை எமக்கு மதிப்பீட்டை அறிவிப்பார். மதிப்பீடும் சுத்த தமிழிலேயே இருக்கும். சிறந்த கட்டுரைகட்கு "உத்தமம்" என்றும், சாதாரண கட்டுரைகட்கு "மத்திமம்" என்றும், மோசமான கட்டுரைகட்கு "அதமம்" என்றும் மதிப்பிடுவார். அவரது மனதைத் தொட்ட மிகச் சிறந்த கட்டுரைகளுக்கு "உத்தமத்தில் உத்தமம்" என்று மதிப்பு வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சிறந்த கட்டுரையை வகுப்பில் எல்லா மாணவர்கட்கும் படித்துக் காட்டுவார்.

இந்த நடைமுறை எங்களுக்குள் இருந்த எழுத்துத் திறமையை தூண்டிவிட்டது. மாணவர்களிடையே ஓர் ஆரோக்கியமான எழுத்துப் போட்டி எழுந்தது. நாமும் எமது கற்பனைக் குதிரைகளை தட்டி ஓடவிட்டு எழுத ஆரம்பித்தோம். எங்களுக்குள்ளேயே உறங்கிக் கிடந்த எழுத்தாற்றலை எமக்கே புடம் போட்டுக் காட்டியது.

எங்கள் எழுத்தை வளம்படுத்த வேண்டுமானால் நிறைய வாசிக்க வேண்டும் என்ற அறிவுரையை வழங்கினார். எங்கள் தேடல் தொடங்கியது. வாசிப்புப் படலம் ஆரம்பமானது. நடுத்தர வர்க்க குடும்பம். புத்தகங்களை விலை கொடுத்து வாங்கி வாசிக்கும் நிலை இல்லை. நூலகங்களை தேடிச் சென்று வாசித்தேன். வசதியான நண்பர்களிடம் இரவல் வாங்கி வாசித்தேன். வாசிக்க வாசிக்க எழுத்தின் மேல் பற்றும், எழுத வேண்டும் என்ற வெறியும் அதிகமானது.

எனது பல கட்டுரைகட்கு "உத்தமம்" என்ற மதிப்பீடு கிடைத்தது. சில கட்டுரைகட்கு "உத்தமத்தில் உத்தமம்" கிடைத்தது. எனது பல கட்டுரைகள் வகுப்பில் வாசித்துக் காட்டப்பட்டன. இவை என்னை மேலும் மேலும் உற்சாகப்படுத்தின. செல்வநாயகம் ஆசிரியரும் என்னை தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தினார். எழுத வேண்டும் என்ற வெறி எனக்குள் பெரும் சுவாலையாக கொழுந்து விட்டெரிந்தது.

அக் காலகட்டத்தில் க.பொ.த சாதாரண தரம் பரீட்சை எழுதிய பின் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கும் வரை மூன்று மாதங்கள் இடைவெளி கிடைக்கும். இக் காலத்தில் எனது வாசிக்கும் படலத்தை தீவிரப்படுத்தினேன். முதல் முதலாக பத்திரிகைகட்கு சிறுகதைகள் எழுத ஆரம்பித்தேன். "இளம் கன்று பயமறியாது, உலகமறியாது" என்பார்கள். அதே போல நான் எழுதிய சிறுகதைகளை பல பத்திரிகைகட்கும், சஞ்சிகைகட்கும் அனுப்பிவைத்தேன். 1979 முதல் 1982 வரையிலான காலப்பகுதியில் சுமார் ஐந்து சிறுகதைகள் பெரும்பாலும் வீரகேசரி வாரவெளியீட்டில் வெளியாகியுள்ளன. எனது "கண்ணீரில் நீந்தும் கனவுகள்" என்ற சிறுகதை 1983 ம் ஆண்டு தமிழ் நாட்டு சஞ்சிகையான ஆனந்த விகடனில் வெளியானது.

1980 இல் நான் க.பொ.த உயர்தர வகுப்பில் பயின்ற போது இலங்கை வானொலியில் "அஸ்தமனத்தில் ஓர் அவதாரம்" என்ற இசையும் கதையும் ஒலிபரப்பானது. 1982ம் ஆண்டு பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நான் எழுதிய இன்னுமோர் இசையும் கதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது. "நீந்தும் நினைவுகள்" என்ற பெயரில் ஓர் முழு நீள நாவலை எழுதி;னேன். ஆனால் அது பிரசுரமாகும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

பின்பு நான் மருத்துவ கல்வியை ஆரம்பித்தவுடன் எழுதும் பணியை குறைத்துக் கொண்டேன். தற்போது சுகாதார பணிப்பாளராக இருப்பதால் என் பணிக்கு முழு நேரத்தையும் அர்ப்பணிக்க வேண்டியுள்ளதால் எழுதும் வாய்ப்புக்களும் அருகிவிட்டன.

எனக்குள் கிடந்த எழுத்துத் திறமையை தட்டியெழுப்பி என்னையும் சில படைப்புக்களை எழுதவைத்த பெருமை என் தமிழ் ஆசான் அமரர் செல்வநாயகத்தையே சாரும். அவரை நன்றியோடும் பெருமையோடும் நினைவு கூர்ந்து என் எழுத்துக்களை அவருக்கு காணிக்கையாக்குகிறேன். ஓர் அர்ப்பணிப்பான ஆசிரியரின் அணுகுமுறை ஒரு மாணவனில் ஏற்படுத்திய மறுமலர்ச்சிக்கு இது சிறந்த உதாரணம்.

இப்படிப் பல அர்ப்பணிப்பான ஆசிரியர்கள் இக் கல்லூரியில் எமக்கு ஆசிரியர்களாக விளங்கினார்கள். எமது கணித ஆசிரியர் கனகசபை, விஞ்ஞான ஆசிரியர்கள் திருமதி. சுப்பிரமணியம், திரு.சுப்பிரமணியம், சுகாதார ஆசிரியை திருமதி.மரியாம்பிள்ளை என பலரது நினைவுகளை என் இதய வீணையில் மீட்டிப் பார்க்கின்றேன். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் விரித்து எழுதிச் செல்லலாம். கட்டுரையின் நீளம் குறித்து இருவரைப் பற்றி மட்டுமே விபரித்து எழுதியுள்ளேன்.

**சிறந்த பெறுபேறுகள்**

க.பொ.த சாதாரண தரத்தில் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 1978 ம் ஆண்டு முதன் முதலாக நாம் பரீட்சைக்கு முகம் கொடுத்தொம். யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த பெறுபேறாக எட்டு மாணவர்கட்கு 7 D, 1 C கிடைத்தது. 8 D யாருக்கும் கிடைக்கவில்லை.

சிறந்த பெறுபேறு பெற்ற எட்டு மாணவர்களில் நான்கு பேர் யாழ் நகரப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள். நான்கு பேர் வடமராட்சியை சேர்ந்தவர்கள். அதில் இருவர் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். (Dr.ஜெகநாதன், திரு.வித்தியானந்தன்). மற்ற இருவரும் திருஇருதயக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். நானும், Dr.விக்ரர் ஜேம்ஸ் ஞானராஜ் அவர்களும். இந்த நான்கு பேருமே கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலகட்டத்தில் நாம் பெற்ற சிறந்த பெறுபேறுகள் எமது கல்லூரியின் கீர்த்தியை மீண்டும் ஒருமுறை ஓங்கி ஒலிக்கச் செய்தன. இந்த பெருமையை நாம் பெற அடிப்படைக் காரணமாக இருந்தவர்கள் எம்மை வழிநடத்திய அதிபரும், ஆசிரியர்களுமே. அந்த புகழ், பெருமை யாவும் அவர்கட்கே சமர்ப்பணம். அந்தப் பெருந்தகைகளை இன்றும் நன்றியுடன் தலைவணங்கி நினைவுகூருகின்றேன்.

### உயர்விற்கு காரணம்

நாம் இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருப்பதற்கு நாம் கல்வி கற்ற கல்லூரிகளும் அதன் அதிபர்களும், ஆசிரியர்களுமே காரணம். எம்மை ஏற்றிவைத்த ஏணிப்படிகளை என்றும் நன்றியுடன் நினைவு கூறுகிறோம். எனது இன்றைய நிலைக்கு இக் கல்லூரியின் பங்களிப்பை என்றும் மறக்கமுடியாது.

### கல்லூரியின் இன்றைய நிலை

ஒரு காலத்தில் சீரோடும், சிறப்போடும், பேரோடும், புகழோடும் புகழ் பூத்து விளங்கிய இக் கல்லூரியின் இன்றைய நிலை சற்று கவலையளிக்கிறது. கல்லூரித் தாய் நூற்றாண்டு விழாக் காணும் இச் சந்தர்ப்பத்தில் கல்லூரிச் சமூகமும் ,பழைய மாணவர்களும், பிரதேச மக்களும் இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக சில காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

### நிறைவுரை

இக் கல்லூரியின் புதிய அதிபராக சிறந்த ஆளுமையும், அர்ப்பணிப்பும் மிக்க திரு.இ.இராகவன் அவர்கள் மிக முக்கியமான காலகட்டத்தில் பொறுப்பேற்றுள்ளார். அவரது சிறந்த தலைமைத்துவத்துடனும், வழிகாட்டல் களுடனும் இக் கல்லூரி புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து வீறுநடை போட வேண்டும். மீண்டும் சீரோடும், சிறப்போடும், பேரோடும், புகழோடும், கீர்த்திமிக்க கல்லூரியாக மிளிர வேண்டும். இதுவே இக்கல்லூரித் தாயின் தனயர்களின் கனவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்விற்கு அறுபது ஆலோசனைகள்

தாய் நலம்

1. ஒரு பெண் தாய்மையடையும்போது அவரது உடற்திணிவுச் சுட்டெண் 18.5 இற்கும் 25 இற்கும் இடையில் இருத்தல் வேண்டும். உடற்திணிவுச்சுட்டெண் 18.5 ற்கு குறைவாக இருப்பின் பிறக்கப்போகும் குழந்தை பிறப்பு நிறை குறைவான குழந்தையாகவும், ஆரோக்கியமற்ற குழந்தையாகவும் வரும் சாத்தியம் அதிகம்.

2. பொதுவாக எமது சமூகத்தில் பெண்கள் தாய்மையடைந்த பின்னரே அவர்களது போசாக்கில் அதிக கவனம் செலுத்துவதுண்டு. ஒரு பெண் தாய்மையடையும்போது உடற்திணிவுச் சுட்டெண் 18.5 இற்கு குறைவாக இருப்பின் கர்ப்பகாலத்தில் அவரது போசாக்கு நிலையை மேம்படுத்தி கருவறையில் வளரும் சிசுவின் உரிய வளர்ச்சியை உறுதிப்படுத்துவது கடினம். எனவே பெண்களின் போசாக்கில் அவர்களது யௌவனப் பருவத்திலிருந்தே கவனம் செலுத்த வேண்டும்.

3. கர்ப்ப காலத்தின் முற்பகுதியில் தாய்க்கு ரூபெல்லா (Rubella) எனப்படும் வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டால் கருவில் வளரும் சிசுவிற்கு பாதிப்பு ஏற்படலாம். இதனால் கருச்சிதைவு ஏற்படலாம். அல்லது பிறக்கும் குழந்தை கண், காது, இதயம் போன்ற உறுப்புக்களில் பிறப்பு குறைபாடுடன் பிறக்க வாய்ப்புண்டு. எனவே இளம் பெண்கள் அனைவரும் தமது யௌவனப் பருவத்திலேயே ரூபெல்லா தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. கர்ப்ப காலத்தின் முதல் மாதங்களில் சிசுவின் மூளை, முண்ணான், நரம்புத்தொகுதியின் பெரும்பாலான வளர்ச்சி இடம்பெறுகின்றது. இக்காலப்பகுதியில் தாயின் உடலில் போதியளவு போலிக்கமிலம் இல்லாவிடில் இவற்றின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மூளை, முண்ணான் குறைபாடுகளுடன் குழந்தை பிறக்க வாய்புண்டு. எனவே தாய்மையடைய எதிர்பார்த்திருக்கும் பெண்கள் திருமணத்திலிருந்தே போலிக் அமில வில்லைகளை கிரமமாக எடுத்து வரவேண்டும்.

5. கர்ப்ப காலத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் ஸ்கானிங் (Scanning) செய்வது நல்லது. இதன் மூலம் கர்ப்பம் சம்பந்தமான பல விடயங்களை உறுதிப்படுத்தி ஆரோக்கியமான குழந்தையை பெற்றுக்கொள்ள உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கர்ப்ப காலத்தில் பெண்கள் தமது குருதி வகையை பரிசோதித்து கொள்ள வேண்டும். கர்ப்பவதியின் குருதியின் Rh – Negative ஆக இருப்பின் அவரது கணவரின் குருதி வகையும் பரிசோதிக்கப்பட வேண்டும். கர்ப்ப காலத்தில் ஏற்புத்தடை ஊசி மருந்தை போட்டுக் கொள்ள வேண்டும்.

7. எமது நாட்டில் பெண்கள் மத்தியில் இரும்புச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் குருதிச்சோகை அதிகமாக காணப்படுகின்றது. இதனைத் தவிர்க்க இரும்புச்சத்து அதிகமாகவுள்ள பச்சைநிற இலைவகைகளையும் (கீரை, அகத்தி, வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கை) இறைச்சி, ஈரல் போன்றவற்றையும் போதியளவில் உட்கொள்ள வேண்டும்.

8. குருதிச் சோகையைத் தடுக்க கர்ப்பவதிகளுக்கு சிகிச்சை நிலையங்களில் வழங்கப்படும் இரும்புச்சத்து போலிக்கமில வில்லைகளை கிரமமாக உட்கொள்ள வேண்டும். இவ்வில்லைகளை தேநீர், கோப்பி போன்ற பானங்களுடன் எடுப்பதை தவிர்க்க வேண்டும் இப்பானங்கள் சிறுகுடலில் இரும்புச்சத்தின் அகத்துறிஞ்சலை குறைக்கும். அதேவேளை விற்றமின் C வில்லைகளுடன் சேர்த்து உட்கொண்டால் இரும்புச்சத்தின் அகத்துறிஞ்சல் கூடும்.

9. கர்ப்ப காலத்தில் கருவில் வளரும் சிசுவின் வளர்ச்சிக்கு புரதச்சத்து மிகவும் அவசியமானது. எனவே கர்ப்பவதிகள் உழுந்து, பயறு, கௌபி, சோயா அவரை போன்ற தாவர புரதங்களையும் மீன், முட்டை, இறைச்சி, கருவாடு, பால் போன்ற விலங்கு புரதங்களையும் போதியளவில் உட்கொள்ள வேண்டும். கர்ப்பவதிகளின் புரதச்சத்து நிலையை மேம்படுத்த சிகிச்சை நிலையங்களில் திரிபோசா போன்ற சத்துணவுகள் வழங்கப்படுகின்றன. இவற்றை கர்ப்பவதிகள் தமது குடும்ப உறுப்பினருடன் பகிர்ந்து கொள்ளாது கிரமமாக உட்கொள்ள வேண்டும்.

10. தாயினதும், சேயினதும் ஆரோக்கியம் பேண ஒரு பெண்ணின் பிரசவங்கட்கிடையில் ஆகக்குறைந்தது இரண்டு வருட இடைவெளி இருக்க வேண்டும். இதற்கு உங்கள் பகுதி குடும்பநல உத்தியோகத்தரின் சிபார்சுடன் பொருத்தமான குடும்பத்திட்ட முறையை தெரிவு செய்யலாம்

11. நெருங்கிய உறவினரிடையே குறிப்பாக சொந்த மைத்துனர், மைத்துனி ஆகியோரிடையே திருமணம் இடம்பெறும்போது இத்தம்பதியினருக்கு பிறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் பல்வேறு பிறப்பு குறைபாடுகளுடன் பிறக்க வாய்ப்புண்டு. எனவே நெருங்கிய உறவினர்களிடையே திருமணங்களை தவிர்த்தல் ஆரோக்கியமானது.

சேய் நலம்

12. குழந்தைகள் பிறந்து முதல் ஆறு மாதங்கள் தனியே தாய்ப்பால் மட்டும் கொடுக்க வேண்டும். பின்னர் துணை ஆகாரங்களை சேர்க்க வேண்டும். தாய்ப்பாலை இரண்டு வருடங்கள் வரை கொடுக்கலாம்.

13. உங்கள் குழந்தையின் நிறையை கிரமமாக சிகிச்சை நிலையத்தில் அளந்து குழந்தையின் வளர்ச்சியை அவதானியுங்கள். வளர்ச்சியில் குறைபாடு காணப்படின் வைத்திய ஆலோசனையை நாடுங்கள். உங்கள் குழந்தையின் வளர்ச்சி நல பதிவேட்டை 18 வயது வரை கவனமாக பேணுங்கள். குழந்தை நோய்வாய்ப்பட்டு மருத்துவரிடம் செல்லும்போது இப் பதிவேட்டை எடுத்துச்செல்லுங்கள்

14. உங்கள் குழந்தைகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க தடுப்பு மருந்துகளை கிரமமாக வழங்குங்கள். இது பற்றிய ஆலோசனைகளை உங்கள் பிரதேச குடும்பநல உத்தியோகத்தரிடம் பெறலாம்.

15. குழந்தைகட்கு காய்ச்சல் ஏற்படும் போது பரசிற்றமோல் வில்லைகளை வைத்திய ஆலோசனைப்படி சரியான அளவில் கொடுக்க வேண்டும். ஒரு தடவை பரசிற்றமோல் வில்லை கொடுத்து 8 மணித்தியாலங்களின் பின்னரே அடுத்த வில்லை வழங்கலாம். அதிக அளவிலும், அடிக்கடி கொடுப்பதும் குழந்தையின் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கலாம். பரசிற்றமோல் வில்லை கொடுத்தும் காய்ச்சல் தணியாவிடின் ஈரத்துணியால் குழந்தையின் உடம்பை துடைத்து காய்ச்சலை தணிக்கவேண்டும். இன்றேல் வலிப்பு ஏற்படலாம்.

16. உங்கள் குழந்தைகட்கு வயிற்றோட்டம் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படும்போது போதிய நீராகாரங்களை வழங்குவதுடன் தொடர்ந்து உணவு ஊட்டி வரவேண்டும். வயிற்றோட்டத்தின் போது வயிற்றை காயப்போடும் பழைய மூடநம்பிக்கையை கைவிடவேண்டும்.

17. குழந்தைகட்கு குடற்புழுவிற்கான சிகிச்சை 3 மாதங்களிற்கு ஒருமுறை கிரமமாக வழங்கப்பட வேண்டும். குழந்தைகள் மண்ணில் செல்லும் போது பாதணிகள் அணிய வேண்டும். மண்ணிலுள்ள கண்ணிற்கு புலப்படாத மிகச் சிறிய குடற்புழுக்கள் பாதத்தினூடாக உடலினுள் பிரவேசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு கல்வி மட்டுமல்ல போதியளவு உடற்பயிற்சியும், ஓய்வும் அவசியம். எனவே குழந்தைகட்கு கல்வி, உடற்பயிற்சி, ஓய்வு என்பன தேவைக்கேற்ப சமச்சீராக வழங்கப்படவேண்டும்.

19. குழந்தை பிறக்கும் போது அதன் பிறப்பு நிறை 2.5Kg இற்கு குறைவாக இருப்பின் பிற்காலத்தில் இக்குழந்தை நீரிழிவு நோயாளியாக வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். எனவே கர்ப்பவதிகள் தமது போசாக்கில் கவனம் செலுத்தி பிறக்கப்போகும் குழந்தைகளை 2.5Kg ற்கு கூடிய பிறப்பு நிறையுள்ள குழந்தைகளாக பெற்றெடுக்க வேண்டும்.

போசாக்கு

20. வயது வந்த ஒவ்வொருவரும் தமது உயரத்திற்கேற்ப நிறையைப் பேண வேண்டும். இதனை மதிப்பிட உடற்திணிவுச் சுட்டெண் (Body Mass Index) என்ற குறிகாட்டியை பயன்படுத்துவர்.

உடற்திணிவுச் சுட்டெண்ணை கணிப்பிடும் முறை

$$\text{உடற்திணிவுச் சுட்டெண்} = \frac{\text{நிறை}}{(\text{உயரம்})^2}$$

நிறை – கிலோ கிராமில் இருக்க வேண்டும்
உயரம் - மீற்றரில் இருக்க வேண்டும்

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரினதும் உடற்திணிவுச்சுட்டெண் 18.5 இற்கும் 25 இற்கும் இடையில் இருக்க வேண்டும். இச் சுட்டெண் 18.5 இற்கு குறைவாக இருப்பின் அது போசாக்கின்மையை குறிக்கும். 25 ஐ விட கூடினால் அது அதீதநிறை எனப்படும். இந்நிலையில் உயர்குருதி அழுத்தம், நீரழிவு, இருதய நோய்கள் ஏற்படலாம்

21. எனவே அனைவரும் தமது உயரத்தையும், நிறையையும் மூன்று மாதங்கட்கு ஒரு தடைவயேனும் சரிபார்த்து 18.5 இற்கும் 25 இற்கும் இடையில் உடற்திணிவுச் சுட்டெண் இருக்கத்தக்கதாக தமது நிறையை பேணிவர வேண்டும்

22. 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகட்கு உடற்திணிவுச் சுட்டெண் வயதிற்கேற்ப வேறுபடும். குழந்தைகளின் உடற்திணிவுச் சுட்டெண்ணை விசேட அட்டவணைகளில் ஒப்பிட்டு மதிப்பிடலாம். தற்போது 15 வயது வரையிலான குழந்தைகளின் போசாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அவர்களது நிறை, உயரம், வயதினை புதிய சிறுவர் வளர்ச்சிப்பதிவேட்டில் ஒப்பிட்டு அறியலாம்.

23. உடற்பருமன் கூடியவர்கள் அல்லது உடற்திணிவுச்சுட்டெண் 25 ஐ விட கூடியவர்கள் தமது நிறையை குறைக்க பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்கலாம்.

உடல் உழைப்புள்ள வேலைகளைச் செய்ய வேண்டும்

போதியளவு உடற்பயிற்சி செய்ய வேண்டும்

தினமும் குறிப்பிட்டளவு தூரம் உடல் வியர்க்கும்படி வேகமாக நடக்க வேண்டும்

கொழுப்புச்சத்துள்ள உணவுகளை குறைக்க வேண்டும்

மரக்கறிகள், இலைக்கறிகள், பழவகைகள் என்பவற்றை கூடுதலாக உட்கொள்ள வேண்டும்

அடிக்கடி உணவு உண்பதை தவிர்க்க வேண்டும். இடை உணவுகளாக நொறுக்குத்தீனிகள் உண்பதை தவிர்க்க வேண்டும்

உணவில் உப்பை அளவாக பாவிக்க வேண்டும்.

24. எமது நாட்டில் விற்றமின் A குறைபாடு பலரிடம் காணப்படுகிறது. இதனால் மாலைக்கண், உலர் கண், விழிவெண்படல நலிவு, கருவிழிப்படல அழற்சிப்புண், தேரைத்தோல் போன்ற நோய்கள் ஏற்படலாம். இவற்றைத் தவிர்க்க விற்றமின் A அதிகமாக உள்ள ஈரல், முட்டை, பால், பட்டர், மீன், மஞ்சள் நிற பழங்கள் (பப்பாசி, மாம்பழம்), மஞ்சள் நிற காய்கறிகள் (பூசணி, கரட்), பச்சை நிற இலைவகைகள் (வல்லாரை, பசளி, பொன்னாங்காணி) ஆகியவற்றை எமது உணவில் கிரமமாக எடுக்கவேண்டும். குழந்தைகட்கு செறிவூட்டப்பட்ட விற்றமின் A வில்லைகளை குடும்ப நல உத்தியோகத்தரிடம் பெறலாம்.

25. அயடீன் பற்றாக்குறையால் தொண்டைக்கழலை(கண்டமாலை), மந்த புத்தி, பார்வைக்குறைபாடு, கேட்டல் குறைபாடு போன்ற குறைபாடுகளும் பெண்களிற்கு கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல் போன்ற குறைபாடுகளும் ஏற்படலாம். இதனைத் தவிர்க்க அயடீன் கலந்த உப்பைப் பாவிக்கவேண்டும். போதியளவு கடலுணவுகளை உட்கொள்ள வேண்டும். கறியுப்பிலுள்ள அயடீன் வெப்பத்தால் அழிக்கப்படும். எனவே வீடுகளில் சமையலறையில் அயடீன் கலந்த கறியுப்பை சூரிய ஒளி உட்செல்லாத கருமையான போத்தல்களில் அடுப்பின் வெப்பம் படாத இடத்தில் வைக்க வேண்டும். கடைகளில் சூரிய ஒளிபடாது வைக்கவேண்டும். கறியை இறக்கி ஆறிய பின்பே கறியுப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்க வேண்டும்.

நீரிழிவு நோய்

26. நீரிழிவு நோயின் அறிகுறிகள்

அதிகளவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல்.

இரவில் சிறுநீர் கழித்தல்.

அதிகமான தாகம்.

அதிகமான பசி.

கண்பார்வை மங்குதல்.

உடல் நிறை குறைதல்.

மேற்படி அறிகுறிகள் காணப்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனையுடன் நீரிழிவிற்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

27. நீரிழிவு நோய் இனங்காணப்பட்டால் கிரமமான மருத்துவ ஆலோசனையுடன் இந் நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இன்றேல் பின்வரும் உறுப்புக்களில் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

மூளை / நரம்புத்தொகுதி பக்கவாதம், நரம்புத் தளர்ச்சி, காலில் உணர்ச்சி குறைதல், வலி ஏற்படல் / புண்கள் ஏற்படல்

கண் - கண் பார்வை குறைவு / இழப்பு, கண்ணின் உயர் அழுத்தம் (Glaucoma)

இதயம் - மாரடைப்பு, உயர்குருதி அழுத்தம்.

சிறுநீரகம் - சிறுநீரக செயலிழப்பு (Kidney failure)

ஈரல் - செயலிழப்பு

28. நீரிழிவு நோயாளர்கள் மருந்துக்கட்டுப்பாட்டுடன் தமது உடல் நிறையையும் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு உணவுக் கட்டுப்பாடும், போதிய உடற்பயிற்சியும் மிக அவசியம்.

29. நீரிழிவு நோய்க்கு மருந்து பாவிப்பவர்கட்கு குருதியில் சீனியின் மட்டம் அதிகளவில் குறைந்தால் Hypoglycaemia என்ற நிலை ஏற்படலாம். இதன் அறிகுறிகள்:- களைப்பு, தலைச்சுற்றல், கொட்டாவி, மயக்கம் வருதல், வலிப்பு. இந்நிலை உயிருக்கு ஆபத்தாகவும் முடியலாம். இந்நிலை ஏற்பட்டால் குளுக்கோஸ் அல்லது சீனி கொண்ட பாணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக அருந்தச் செய்ய வேண்டும். எனவே நீரிழிவு நோயாளர்கள் தம்முடன் எப்போதும் குளுக்கோஸ் பக்கெற் ஒன்றை வைத்திருப்பது நன்று.

30. நீரிழிவு நோயாளர்கள் கவனிக்க வேண்டியவை:

தினமும் - ஆரோக்கியமான உணவு

30 நிமிட உடற்பயிற்சி / மருந்துகளை ஒழுங்காக எடுத்தல்.

மாதாந்தம் - நீரிழிவிற்கான இரத்த / சலப் பரிசோதனை

இரத்த அழுத்தத்தை பரிசோதித்தல்.

வருடாந்தம் - குருதியில் கொழுப்பின் அளவை பரிசோதித்தல்.

கண்ணின் விழித்திரையை பரிசோதித்தல்.

சிறுநீரகத்தின் செயற்பாட்டை பரிசோதித்தல்.

காலின் உணர்ச்சியையும். குருதிச் சுற்றோட்டத்தையும் பரிசோதித்தல்.

31. பல பெண்களுக்கு நீரிழிவு நோய் கர்ப்ப காலத்தில் இனங்காணப்படுவதுண்டு. இது கர்ப்ப காலத்தில் உருவாகியதாகவோ அல்லது ஏற்கனவே இருந்து கர்ப்பகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ இருக்கலாம். பின்வரும் பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

உடல் நிறை கூடிய பெண்கள்

வயதான கர்ப்பவதி

பரம்பரையில் நீரிழிவு நோயுள்ள கர்ப்பவதி

முந்தைய குழந்தை இறந்து பிறந்த அல்லது பெரிய குழந்தையைப் பெற்ற கர்ப்பவதி எனவே கர்ப்பவதிகள் யாவரும் கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோய்க்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

32. நீரிழிவு நோயாளர் தவிர்க்க வேண்டிய உணவுகள்:

சீனி, தேன், சர்க்கரை, இனிப்பு வகைகள், ஐஸ்கிறீம், பாயாசம், தவிடு நீக்கிய தானிய வகைகள், (வெள்ளையரிசி, கோதுமை மா, வெள்ளைப் பாண், கேக்) கொழுப்புணவுகள் (பட்டர், நெய், தேங்காய், எண்ணெய்) கிழங்கு வகைகள் (உருளைக்கிழங்கு, மரவள்ளி, வற்றாளை) குளிர் பானங்கள், பழச்சாறுகள், பொறித்த உணவுகள்.

33. நீரிழிவு நோயாளர் அதிகமாக பாவிக்கக் கூடிய உணவு வகைகள்:

தேநீர், கோப்பி, (சீனி, பால் அற்ற), தேசிக்காய் பழச்சாறு (சீனி அற்ற), இரசம், மோர், பச்சை காய் கறிகள், பயற்றங்காய், பாகற்காய், வெண்டிக்காய், கீரை வகைகள், கோவா, லீக்ஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறி சூப்.

34. நீரிழிவு நோயாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உண்ணக்கூடிய உணவுகள்: தானியங்கள், கடலை வகைகள், காய்கறிகள், பழவகைகள், மீன், கோழி இறைச்சி, முட்டை ஆட்டிறைச்சி (வாரம் 1 முறை)

உயர் குருதி அழுத்தம்

35. உயர்குருதி அழுத்த நோயின் (Hypertension) ஆரம்ப அறிகுறிகளாக தலையிடி, தலைச்சுற்று போன்றவை காணப்படலாம். உயர்குருதி அழுத்தம் கூடிச் செல்லும் போது மாரடைப்பு, பாரிச வாதம், சிறுநீரக செயலிழப்பு, வலிப்பு போன்றவை ஏற்படலாம். எனவே உங்கள் குருதி அழுத்தத்தை கிரமமாக வைத்தியரிடம் அளவிட வேண்டும். நோய் இனங் காணப்பட்டவர்கள் ஒழுங்காக மருந்தை எடுத்து குருதி அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

36. உயர் குருதி அழுத்தம் உடையவஉகள் பின்வரும் விடயங்களை கடைப்பிடித்தல் அவசியம்.

- புகைப்பிடித்தலை தவிர்த்தல்
- கிரமமாக நடத்தல் / உடற்பயிற்சி செய்தல்
- உடல் நிறையை குறைத்தல்
- கொழுப்பு உணவுகளை குறைத்தல்
- மரக்கறிகள், இலைக்கறிகளை கூடுதலாக உட்கொள்ளல்
- உப்பின் அளவைக் குறைத்தல்
- தியானம் / யோகாசனம்

37. உடலில் கொழுப்பின் (Cholestrol) அளவைக் குறைக்க செய்ய வேண்டியவை.

- உணவில் கொழுப்பு வகைகளை குறைத்தல்
- எண்ணைய் சேர்க்க அவசியம் ஏற்படின் மரக்கறி எண்ணெய்களை பாவித்தல்
- மரக்கறி / இலைக்கறி வகைகளை கூடுதலாக உண்ணல் போதிய உடல் உழைப்பு / உடற்பயிற்சி
- வெள்ளைப்பூடு / கருவேப்பிலையின் பாவனையைக் கூட்டல்.
- இவற்றிற்குக் கட்டுப்படாவிடில் மருத்துவ ஆலோசனையுடன் மாத்திரைகளைப் பாவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதய நோய்கள்

38. இருதய நோய்கள் ஏற்படுபவர்கட்கு பின்வரும் அறிகுறிகள் காணப்படலாம்

- நெஞ்சை அமுக்கும் உணர்வு
- நெஞ்சை இறுக்கும் உணர்வு
- நெஞ்சுநோ, கழுத்து, முதுகு, கைகளுக்கு பரவுதல்
- சுவாசிக்க கஸ்டமாக இருத்தல்
- வியர்வை
- வாந்தி

மேற்கண்ட அறிகுறிகள் காணப்படின் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனைக்காக அருகிலுள்ள வைத்தியசாலையை நாடவேண்டும்.

39. நாற்பது வயதிற்கு மேல் நான்கு வெள்ளை நிறமான உணவுப்பதார்த்தங்கட்கு நாம் நாவை அடக்கிக் கொள்ள வேண்டும்: சீனி, உப்பு, பால், கொழுப்பு. அதாவது இவற்றை அளவாகவே உட்கொள்ள வேண்டும் சீனியை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் நீரழிவு நோய் ஏற்படலாம். உப்பு, பால், கொழுப்பு போன்றவற்றை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் உயர்குருதி அழுத்தம், இருதய நோய்கள் ஏற்படலாம்

40. இன்றைய நவீன கால வாழ்வில் உடல் உழைப்பு குறைவானபடியால் பல நோய்கள் ஏற்படுகின்றன. எனவே இந்நோய்கள் ஏற்படாது தவிர்க்க பின்வரும் செயற்பாடுகளை வீடுகளில் செய்யலாம்.

- வேகமாக வியா்க்கும் படி நடத்தல்.
-. துவிச்சக்கரவண்டி ஓடுதல்..
- வீட்டுத்தோட்டம் செய்தல்.
- வீட்டுச்சுற்றாடலை துப்புரவு செய்தல்.

டெங்கு காய்ச்சல்

41. டெங்கு காய்ச்சல் ஈடிஸ் வகை நுளம்புகளால் பரப்பப்படும் ஒருவகை வைரஸ் காய்ச்சலாகும். இந்நுளம்புகள் எமது வீடுகளிலும், சுற்றாடலிலும் காணப்படும் சிறிய நீர் கொள்கலன்களில் முட்டையிட்டு பெருகுகின்றன. எனவே எமது வீடுகளிலும் சுற்றாடலிலும் காணப்படும் நீர் தேங்கி நிற்கக்கூடிய சிரட்டைகள், பொலித்தீன் பைகள், தகரப்பேணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை புதைக்க அல்லது எரிக்க வேண்டும். மீன்தொட்டியில் உள்ள நீரை அடிக்கடி மாற்ற வேண்டும். சுற்றாடலை சுத்தமாக பேண வேண்டும்.

42. டெங்கு நோய் மூன்று நிலைகளில் ஏற்படலாம். டெங்கு காய்ச்சல், டெங்கு குருதிப்பெருக்கு நிலை, டெங்கு அதிர்ச்சி நிலை.

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள்:
கடுமையான காய்ச்சல்
தலைவலி
வாந்தி
கடுமையான மூட்டு / உடல்வலி
பொதுவாக காய்ச்சல் 3 - 5 நாட்கள் வரை நீடிக்கும்

டெங்கு குருதிப்பெருக்கு நிலையின் அறிகுறிகள்:
தோலில் செந்நிற புள்ளிகள்
கண்கள் சிவப்பு நிறமடைதல்
மூக்கு, முரசிலிருந்து இரத்த கசிவு
வாந்தியுடன் இரத்தம்
மலத்துடன் இரத்தம் வெளியேறல்
வயிற்றுநோ

டெங்கு அதிர்ச்சிநிலையின் அறிகுறிகள்:
மயக்கம்
உடல் குளிர்தல்
அதிக வியர்வை
வேகமான நாடித்துடிப்பு
வேகமான சுவாசம்

43. டெங்கு நோயில் இறப்புக்கள் பெரும்பாலும் டெங்கு குருதிப்பெருக்கு நிலையிலும், டெங்கு அதிர்ச்சி நிலையிலுமே ஏற்படுகின்றன. இந்த அறிகுறிகள் ஏதும் காணப்படின் உடனடியாக தகுந்த மருத்துவ சேவை வழங்கப்படும் வைத்தியசாலையை நாட வேண்டும்.

44. ஒருவருக்கு டெங்கு காய்ச்சல் என சந்தேகித்தால்:
பூரண ஓய்வில் இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 - 5 நாட்களுக்கு பாடசாலைக்கு / வேலைத்தளத்திற்கு செல்லக்கூடாது
போதிய நீராகாரம் வழங்கப்பட வேண்டும்
காய்ச்சல் இருப்பின் பரசிற்றமோல் வில்லைகள் மட்டும் வழங்க வேண்டும்
எக்காரணம் கொண்டும் அஸ்பிரின். புறுபென் போன்ற வில்லைகள் பாவிக்கக்கூடாது.

உணவு நீர் சுகாதாரம்

45. நாம் குடிக்கும் நீர் சுத்தமாக இருத்தல் வேண்டும். இன்றேல் நீர் மூலம் பரவும் நோய்களான வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், கல்லீரல் அழற்சி, வாந்திபேதி போன்றவை ஏற்படலாம். எனவே நாம் பருகும் நீரை பின்வரும் முறைகள் மூலம் சுத்தம் செய்யலாம்.
கொதித்து ஆறவைத்தல்
கிணறுகளுக்கு குளோரின் இடல்
சூரிய ஒளிமூலம் நீரை சுத்திகரித்தல் (SODIS)
குழாய்நீர் விநியோகம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீரை பெறல்

46. மலங் கழிப்பதற்கு மலகூடங்களையே பயன்படுத்த வேண்டும். குழந்தைகளின் மலக்கழிவுகளை கண்டபடி வீசக்கூடாது. அவற்றை மலசலகூடத்தில் போட வேண்டும். அல்லது குழி ஒன்றில் போட்டு மூட வேண்டும். இல்லாவிடில் ஈக்கள் மூலம் உணவு / நீர் மூலம் பரவும் நோய்கள் ஏற்படலாம். மலம் கழித்த பின்னர் கைகளை நன்கு சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும். மேலும் சாப்பிட முன்பும் சமைக்க முன்பும் கைகளை நன்கு சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும்.

47. மலச்சிக்கலை தவிர்க்க உணவில் தினமும் மரக்கறிகள், இலைக்கறி வகைகள், பழங்கள் போன்றவற்றை உட்கொள்ள வேண்டும். மேலும் போதியளவு நீர் அருந்த வேண்டும்.

48. வயிற்றோட்டம் ஏற்படும் போது உடலில் இருந்து நீரும் கனியுப்புகளும் வெளியேறுகின்றன. இதனால் உடலில் நீர் வரட்சி (Dehydration) ஏற்படுகிறது. குழந்தைகளில் இதனால் இறப்புகளும் ஏற்படலாம். எனவே வயிற்றோட்டத்தின் போது கொதித்தாறிய நீர், இளநீர், பழரசங்கள், கஞ்சி போன்ற நீராகாரங்களை போதியளவு வழங்க வேண்டும். மேலும் ஜீவனி என்ற கனியுப்பக்கள் அடங்கிய பைக்கற்றை கொதித்தாறிய நீரில் கரைத்து வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. உணவை நன்றாக வேகவைத்து சமைக்கவும். சமைத்த உணவை ஈக்கள் மொய்க்காது மூடிவைக்கவும். பச்சையாக உட்கொள்ளும் மரக்கறிகள், பழங்களை நன்றாக கழுவி உண்ணவும். கடைகளிலும் வீதியோரங்களிலும் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு விற்கப்படும் தின்பண்டங்களை இயன்றளவு தவிர்க்கவும்.

பற்சுகாதாரம்

50. பற்சூத்தை ஏற்படாது தவிர்க்க

- உணவு உண்ட பின் ஒவ்வொரு முறையும் வாயை நன்றாக கழுவி கொப்பளிக்க வேண்டும்.
- காலையிலும், இரவிலும் பற்களை Brush கொண்டு தீட்டவேண்டும்.
- இனிப்பு பண்டங்கள் உண்பதை குறைக்கவேண்டும். அவற்றை சாப்பிட்டபின் வாயை நன்றாக கொப்பளிக்க வேண்டும்.

உடல் நலத்திற்கு கேடான பழக்க வழக்கங்கள்

51. புகைத்தல் பழக்கமுடையவர்கட்கு சுவாசப்புற்றுநோய், வாய், தொண்டை, உணவுக்கால்வாய் போன்றவற்றில் புற்றுநோய், குடற்புண், உயர்குருதி அழுத்தம், இருதய நோய்கள், பாரிசவாதம், ஆண்மைக்குறைவு போன்ற நோய்கள் ஏற்படலாம். புகைப்பிடிப்பவர்களால் அவர்கட்கு மட்டுமன்றி உடனிருந்து அப்புகையை சுவாசிப்பவர்கட்கும் மேற்படி பாதிப்புகள் ஏற்படும். இலங்கையில் பொது இடங்களில் புகைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. புகைப்பிடிப்பதை கைவிட்டால் உடல் ஆரோக்கியம் மேம்படும். குடும்பப் பொருளாதாரமும் வளம் பெறும்.

52. வெற்றிலையுடன் புகையிலை போடுவதால் அல்லது புகையிலையை வாய்க்குள் வைத்து நீண்டநேரம் மெல்லுவதால் வாய்ப்புற்றுநோய் ஏற்படலாம். எனவே புகையிலைபோடும் பழக்கத்தை அடியோடு நிறுத்துங்கள் .

53. ஒவ்வொருவருக்கும் தினசரி சராசரியாக 8 - 9 மணித்தியாலம் நித்திரை அவசியம். போதியளவு நித்திரை இல்லாவிடின் ஞாபகசக்தி, கிரகிக்கும் சக்தி, கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும். ஆக்கத்திறன், உற்பத்தித்திறன் குறையும். வாகன விபத்துக்கள் ஏற்படும்.

முதியோர் பராமரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. முதியோர்கட்கு (ஆண்களுக்கு) சிறுநீர் வெளிறேும் பாதையிலுள்ள prostrate சுரப்பி வீக்கம் ஏற்படலாம். இதன் அறிகுறிகள்

- சலம் வெளியேறுதல் குறைவடைதல்.
- சலம் இடையிடையே தடைப்பட்டு வருதல்
- சலம் முழுமையாக வெளியேறாமை
- சலம் இறுதியில் சொட்டு சொட்டாக நீண்டநேரம் வெளியேறல்
- சலப்பை சுழற்சி
- அடிவயிற்றில் நோ

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்படின் உடனடியாக சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெறப்பட வேண்டும்.

55. முதியோரை வீடுகளில் பராமரிக்கும் போது அவர்களது அடிப்படைத்தேவைகளான உணவு. உடை. உறைவிடம் மட்டும் வழங்கினால் போதாது. அவர்களது உணர்வுகளைப்புரிந்து அவர்களை அன்பாகவும், ஆதரவாகவும் நடாத்த வேண்டும். முதியோரை முதியோர் இல்லங்களில் சேர்க்காது இறுதிவரை பிள்ளைகளே பராமரிக்க வேண்டும்.

முதலுதவி

56. ஒருவருக்கு காயம் ஏற்பட்டு குருதிப்பெருக்கு ஏற்பட்டால் செய்ய வேண்டியவை:

- காயத்தை ஓர் சுத்தமான துணியினால் இறுக கட்டவும்.
- காயப்பட்ட அவயவத்தை உயர்த்தி வைத்திருக்கவும்
- காயப்பட்ட பகுதியை ஆட்டாது அசைக்காது வைத்திருக்கவும்.
- நோயாளியை வசதியான நிலையில் படுக்கவைத்து வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லவும்.

57. நாய் கடித்தால் காயத்தை ஓடும் நீரில் 10 நிமிடங்களுக்கு குறையாமல் சவர்க்காரம் இட்டு கழுவ வேண்டும். பின்னர் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். சிலவேளை விலங்கு விசர் நோய்க்கெதிரான தடுப்பூசி ஏற்றவேண்டியிருக்கும். விலங்கு விசர் நோய் ஏற்பட்டு விட்டால் சிகிச்சை ஏதுமில்லை. மரணம் நிச்சயம். எனவே கட்டாயம் மருத்துவ ஆலோசனையைப் பெற்று தடுப்பூசியை தேவையாயின் ஏற்றுவது அவசியம்.

58. உங்கள் வளர்ப்பு நாய்கட்கு வருடாந்தம் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும். ஆண், பெண் நாய்கட்கு கருத்தடை சத்திரசிகிச்சை செய்துகொள்ளலாம். விபரங்கட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பகுதி பொது சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்ளவும்.

59. பாம்பு கடித்தால் முதலில் கடிபட்டவருக்கு ஆதரவு வார்த்தை கூறி அமைதிப்படுத்த வேண்டும். கடிபட்ட இடத்தை ஓடும் நீரினால் சவர்க்காரம் இட்டு நன்றாக கழுவ வேண்டும். கடிபட்ட அவயத்தை ஆடாது வைத்திருக்க வேண்டும். நோயாளியை நடக்கவிடாது படுக்க வைத்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். காயத்தை வெட்டி வாயால் உறிஞ்சுவது, காயப்பட்ட பகுதிக்கு கட்டுப்போடுவது உகந்ததல்ல. இயலுமாயின் கடித்த பாம்பை அடித்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வது சிகிச்சைக்கு உதவும்.

அவசர அம்புலன்ஸ் சேவை

60. அவசர மருத்துவ நிலையின் போது அவசர அம்புலன்ஸ் சேவைக்காக 1990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். அம்புலன்ஸ் உங்கள் வீடு தேடி வந்து உங்களை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்.

**வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரை - கரவெட்டி , பிரதேச வைத்தியசாலையின் சிறப்பு மலருக்காக 2007ல் எழுதப்பட்டது)

## அபிவிருத்திப் பாதையில் அம்பம்

### அறிமுகம்

தச்சை விநாயகர்
வெல்லன் விநாயகர்
அம்பம்
அத்துளு
மாணிக்கவாசகர்
விக்கினேஸ்வரா

இவை காலத்தால் அழியாத
கரவெட்டியின் அடையாளங்கள்
ஒவ்வொரு கரவையூரானின்
வாழ்வும், வரலாறும்
இவற்றோடு பின்னிப்பிணைந்தவை

இவை
பேணிப் பாதுகாத்து
போற்றி வளர்க்கப்பட வேண்டிய
பொக்கிஷங்கள்
நாம்
வளர்ந்திருக்கின்றோம்
உயர்ந்திருக்கின்றோம்
ஆனால்,
அத்துளுவும், அம்பமும்
நாற்பது வருடங்களுக்கு முன்
நாங்கள் பார்த்தபடிதான் உள்ளன.
இவற்றை
பண்டைய கரவெட்டியின்
பசுமையான நினைவுச் சின்னங்களாக
பார்வைக்கு விடப் போகின்றோமா?
இவற்றை
வளர்க்க வேண்டியது ஒவ்வொரு
கரவையூரானதும் கடமை
சாதாரண மக்களுக்கு
குறிப்பாக மூத்தோருக்கு
கரவெட்டி என்பது
ஊரல்ல
உலகம்
அம்பம்தான் - இவர்களுக்கு
ஆறுதல் தரும் ஆரோக்கியசாலை
இந்தப் புண்ணிய
தலத்தை தரிசித்து
"தேவர் ஐயா" கையால்
"பிரசாதம்" வாங்கினால்தான்
பலருக்கு ஆறுதல்
இங்கு
"கைவிரிக்கப்பட்ட கடும்
நோய்களுக்குத்தான்"
மந்திகையும், பெரியாஸ்பத்திரியும்
மற்றப்படி எல்லா நோய்கட்கும்
அம்பம்தான் சர்வரோக நிவாரணி
சுருங்கச் சொன்னால்
சாதாரண கரவையூரானுக்கு
அம்பம்தான் அப்பலோ
இந்த
மண்ணினால்தான் - நாங்கள்
மனிதர்களானோம்
அம்பத்தையும், அத்துளுவையும்
அபிவிருத்தி செய்வதே - இந்த
மண்ணிற்கு வழங்கும்
முதல் மரியாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னணி**

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருக்கும் ஒரேயொரு அரசாங்க வைத்தியசாலை இதுவாகும். எனவே பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் மருத்துவ தேவைக்காக இவ் வைத்தியசாலையில் தங்கியுள்ளனர்.

இவ் வைத்தியசாலை தற்போது அமைந்திருக்கும் காணியும், வீடும் சுகாதாரத் திணைக்களத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இக்காணி உரியமுறையில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாமையால் நீண்டகாலமாக எவ்வித அபிவிருத்தியும் இங்கு செய்யப்படவிலலை. இக்காணியை உத்தியோகபூர்வமாக கையளிக்க பலர் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை.

தற்போது இக்காணியை கையளிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால் இவ்வைத்தியசாலைக்காக அரசினால் இக்காணியை சுவீகரிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதுவரை மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையுமாக இயங்கி வந்த இவ்வைத்தியசாலை மக்களின் தேவை கருதி பிரதேச வைத்தியசாலையாக (Divisional Hospital) அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் தற்போது வைத்தியசாலை அமைந்திருக்கும் காணியின் விஸ்தீரணம் பிரதேச வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்ய போதுமானதல்ல.

**வைத்தியசாலை அபிவிருத்திக்குழு**

இந்நிலையில் இவ் வைத்தியசாலையை எப்படி அபிவிருத்தி செய்வதென்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தவேளையில் உபாலி பொன்னம்பலம் அண்ணன், அதிபர் இராகவன், குணசிங்கம் அண்ணன், செல்வரத்தினம் அண்ணன், இரத்தினசிங்கம் அண்ணன் ஆகியோர் கரவெட்டி மக்களின் சார்பில் இவ்வைத்தியசாலையின் அபிவிருத்தி பற்றி கலந்துரையாட வந்தனர். தமது பூரண ஒத்துழைப்பையும், உதவிகளையும் தரத் தயாராக இருப்பதாக செரிவித்தனர்.

அன்றைய சந்திப்பே கரவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவிற்கு அடித்தளமாக அமைந்தது. பின்பு இவ்வைத்தியசாலையில் அபிவிருத்தியில் அக்கறைகொண்ட பெரியோர்களின் பங்களிப்புடன் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அமைக்கப்பட்டது.

**கொடி வாரம்**

வைத்திய சாலையின் அபிவிருத் திக்கு நிதி சேகரிக்கவும், பொதுமக்கள் மத்தியில் வைத்தியசாலை அபிவருத்தி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கொடிவாரம் ஏற்பாடு செய்யப்பட்டது யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. கே. கணேஸ் அவர்களும், கரவெட்டி பிரதேச செயலாளர் திரு. எஸ். சத்தியசீலன் அவர்களும் கொடிவாரத்தை ஆரம்பித்து வைத்து ஊக்கமளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களின் கடின உழைப்பாலும் அயராத முயற்சியாலும் ஏறத்தாழ 13 லட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தில் எந்தவொரு வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவும் குறுகிய காலத்தில் இப்பெருநிதியை சேர்த்ததில்லை. இப்பணிக்கு கரவை மக்கள் வழங்கிய ஆதரவு மகத்தானது. ஏனைய ஊர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தது.

கொடிவாரத்தில் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு வைத்தியசாலையின் மிகப் பழமையான மகப்பேற்று விடுதி, பிரசவ அறை, நீர் விநியோக தொகுதி யாவும் புனரமைக்கப்பட்டன. அவசியமான தளபாடங்கள் வாங்கி வழங்கப்பட்டன.

**புதிய காணி**

போதிய வளங்களுடன் கூடிய பிரதேச வைத்தியசாலை ஒன்றை அமைக்க புதிய காணி ஒன்றை பெறுவதில் அபிவிருத்திக்குழுவினர் பல முயற்சிகளை முன்னெடுத்தனர். அவர்களது விடாமுயற்சியின் பலனாக தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு சொந்தமான காணி குத்தகை அடிப்படையில் (16 பரப்பு) சுகாதார திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இப் புனிதமான பணிக்காக காணியை பெருந்தன்மையுடன் வழங்கிய தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலய அறங்காவலர் சபையினர் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

புதிய காணிக்கான சுற்றுமதில் FORUT நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டது.

**புதிய கட்டிடங்கள்**

புதிய காணியில் இரண்டு மாடிகளைக் கொண்ட நிர்வாகக் கட்டிடத்தை அமைக்க சுகாதாரத் திணைக்களத்தால் 2006ம் ஆண்டு 55 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இக்கட்டிடத்திற்கான அடிக்கல் தற்போதைய வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ். குமாரவேற்பிள்ளை அவர்களால் நாட்டி வைக்கப்பட்டது.

கட்டிட வேலைகள் ஆரம்பமாகி சுமுகமாக நடந்துவந்த வேளையில் 2006 ஆகஸ்ட் 11ம் திகதிக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையாலும், கட்டிடபட பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுபாட்டினாலும் ஒதுக்கப்பட்ட நிதியில் 20 லட்சம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

2007 இல் சுகாதார திணைக்களத்தால் குறையில் நிற்கும் இக் கட்டிடத்தை பூர்த்தி செய்ய 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

இருப்பினும் கட்டிட வேலைகட்கான அடுத்த நிதிவளம் கிட்டும்போது குறையில் நிற்கும் கட்டிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்யப்படும்.

இப்புதிய காணியில் பின்வரும் ஏனைய கட்டிடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மகப்பேற்று விடுதி (Matemity Ward)
2. ஆண்கள் விடுதி (Male Ward)
3. பெண்கள் விடுதி (Female Ward)
4. வைத்தியர் விடுதி (Doctor's quarters)
5. மருத்துவமாது விடுதி (Midwives quarters)
6. சமையற்கூடம் (Kitchen)
7. பிரேத அறை (Mortuary)
8. கிணறும் நீரத்தாங்கியும் (Open dug well with over head tank)

இவை எதிர்காலத்தில் கிடைக்கும் நிதிவளங்களை பொறுத்து படிப்படியாக அமைக்கப்படும்.

**வைத்திய அதிகாரி**

இவ் வைத்ததியசாலையில் சேவை மனப்பான்மையுள்ள, அபிவிருத்தியில் அக்கறையுள்ள வைத்திய அதிகாரி ஒருவர் இருந்தால் எமது அபிவிருத்தி கனவுகளை நனவாக்க முடியும். அந்த அடிப்படையில் பெரும்பாலான கரவையூர் மக்களின் நன்மதிப்பை பெற்ற வைத்திய கலாநிதி யோகேஸ்வரதேவர் அவர்கள் தமது ஓய்வுக்காலத்திலும் எமது வேண்டுகோளை ஏற்று மீள்நியமனத்தில் தனது சேவையை வழங்க பெருந்தன்மையுடன் முன்வந்தார். அவரது தன்னலமற்ற, அர்ப்பணிப்பான சேவையால் இன்று இவ் வைத்தியசாலை புதுப்பொலிவு பெற்று சிறப்பாக இயங்கிவருகின்றது. அவரது சேவைக்காக கரவையூர் என்றும் நன்றிக்கடன்பட்டிருக்கும்.

**பற்சிகிச்சை நிலையம்**

கரவெட்டி வைத்தியசாலையில் கடந்த வருடம் முதல் பற்சிகிச்சை நிலையம் இயங்கிவருகின்றது. பல்வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையால் நிரந்தர பல்வைத்திய அதிகாரியை நியமிக்கமுடியாதுள்ளது. எனவே மந்திகை வைத்தியசாலை பல் வைத்திய அதிகாரி பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இங்கு வந்து சிகிச்சையளிக்கின்றார். இப்பல் சிகிச்சை நிலையமும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினால் புனரமைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

**தொலைபேசி வசதி (226 4608)**

கடந்த வருடம் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் உதவியுடன் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டது. நோயாளர்கள் அவசர தேவைகட்கு குறிப்பாக இரவில் வைத்தியசாலையை தொடர்புகொள்ளவும், மந்திகை வைத்தியசாலையை தொடர்புகொண்டு அம்புலன்ஸை அழைக்கவும் இது பெரிதும் பயன்படுகின்றது.

**மின்பிறப்பாக்கி (Standby Generator)**

அரசாங்க அதிபரின் உதவியால் இவ்வைத்தியசாலைக்கு மின் பிறப்பாக்கி ஒன்று வழங்ககப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவசர சிகிச்சைப் பிரிவு**

இவ் வைத்தியசாலையில் ஓர் சிறிய அவசர சிகிச்சைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. வைத்தியர் கடமையிலுள்ள பகல் நேரங்களில் நோயாளர்களுக்கு உடனடி அவசர சிகிச்சை இங்கு வழங்கப்படும். மேலதிக சிகிச்சை தேவைப்படின் மந்திகை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்படுவர். வைத்தியர் விடுதி தற்போது இல்லாமையால் இரவு நேரங்களில் இச்சேவையை வழங்கமுடியாதுள்ளது.

**இரவுநேர அம்புலன்ஸ் சேவை**

தற்போது இரவுநேர ஊரடங்கு அமுலில் உள்ளதால் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளர்கள் வைத்தியசாலைகட்கு இரவில் செல்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதற்காக சுகாதார திணைக்களத்தால் இரவுநேர அம்புலன்ஸ் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரவில் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளர்கள் நேரடியாக மந்திகை வைத்தியசாலையை தொடர்புகொள்ளலாம். (226 3262, 226 3261) அல்லது கரவெட்டி வைத்தியசாலைக்கு வந்தால் அங்கிருந்து மந்திகைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்படுவர்.

**தரிசிப்பு நிலையங்கள் (Visiting stations)**

கரவெட்டி வைத்தியசாலையில் மட்டுமன்றி சுகாதார சேவையினை மக்களின் வாழ்விடங்களுக்கு அருகில் கொண்டுசெல்லும் நோக்குடன் தரிசிப்பு நிலையங்களுடாக எமது சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கரவெட்டியிலும் பின்வரும் தரிசிப்பு நிலையங்களில் சேவைகள் வழங்கப்படுகின்றன.

1. கப்பூது - மாதத்தின் 4வது வியாழன்
2. மணியகாரன்தோட்டம் - மாதத்தின் 1வது வியாழன்

**சலரோக சிகிச்சை நிலையம் (Diabetic Clinic)**

கடந்த வருடம் முதல் இவ் வைத்தியசாலையில் சலரோக சிகிச்சை நிலையம் பிரதி சனிக்கிழமைதோறும் இயங்கிவருகின்றது. இங்கு சலரோகத்திற்கான இரத்த, சலப் பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படுகின்றன. தற்போது முந்நூறுக்கும் மேற்பட்ட சலரோக நோயாளர்கள் இச் சிகிச்சை நிலையத்தில் சேவையை பெறுகின்றனர்.

**வைத்தியசாலை அபிவிருத்திக்குழு**

கரவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக்குழு கடந்த இரு வருடங்களில் மிகச் சிறப்பாக செயற்பட்டு யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ் கின்றது. இந்த சிறப்பான நிலையை அடைய கடுமையான அர்ப்பணிப்புடன் உழைத்த அனைத்து அபிவிருத்தி குழு உறுப்பினர்களும் பாராட்டுக்குரியவர்கள். இப்படியொரு முன்னுதாரணமான ஒரு அபிவிருத்திக் குழுவை நான் பிறந்த மண்ணில் உருவாக்கியதையிட்டு பெருமையடைகின்றேன்.

**கரவை அபிவிருத்தி ஒன்றியம்**

அம்பத்தின் அபிவிருத்தியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கிவிடுமா எங்கள் கடமைகள்?
அத்துளுவைப்பற்றி சிந்தித்தோம்
"அம்பம்" என்ற குறுகிய வட்டத்திற்கப்பால்
"கரவெட்டி" என்ற பரந்த பரப்பில் - எங்கள்
சேவைகளின் தேவைகளை உணர்ந்தோம்
கரவை அபிவிருத்தி ஒன்றியம் உதயமானது
அம்பத்தில் ஆரம்பமான பயணம்
அத்துளுவில் தொடர்கிறது.
அம்பம், அத்துளு, சோனப்பு..... என
பரப்பு விரிந்து செல்கிறது
இந்த
மண்ணின் மக்களின்
வாழ்வியலின் வசந்தங்களைத் தேடி - இந்த
நெடும் பயணம் தொடரும்.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
(2007)



**கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் கண்ட சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து"

பயணக் கட்டுரை

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

**அறிமுகம்**

வளர்ச்சியடைந்த, வேகமாக வளர்ந்து வரும் நாடுகள் கடந்து வந்த பாதைகள் ஏனைய நாடுகட்கு பாடங்களாக அமைகின்றன. அவர்கள் வளர்ந்த வழிமுறைகள் சந்தித்த சவால்கள், அடைந்த சாதனைகள் எமது எதிர்காலத்தை திட்டமிட பெரும் உதவியாக அமையும்.

அதனடிப்படையில் கடந்த மார்ச் மாதம் "நல்லாட்சி" என்ற தலைப்பில் ஓர் சர்வதேச பயிற்சிப் பட்டறையும், கல்விச் சுற்றுலாவும் வடமாகாண சுகாதார அமைச்சினால் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுககளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப் பயிற்சியில் வடமாகாண சபையின் உயரதிகாரிகளும், வடமாகாண சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளும், வடமாகாணத்தின் ஐந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர். இப் பயிற்சியில் பங்கு பற்றிய அங்கத்தவர் என்ற ரீதியில் இந்நாடுகளில் படித்த பல பாடங்களையும், பெற்றுக் கொண்ட பல பயனுள்ள அனுபவங்களையும் இப் பயணக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதலில் இம் மூன்று நாடுகளும் 1950 - 1960 களில் எமது நாட்டை விட பின்தங்கிய நிலையிலிருந்தவை. ஆனால் இவை மூன்றும் மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து எமது நாட்டைவிட எவ்வளவோ தூரம் முன்னேறி விட்டன அவை தற்போதுள்ள நிலையை நாம் அடைய இன்னும் 30 முதல் 50 ஆண்டுகள் தேவைப்படலாம் நாம் அந்த நிலைக்கு வரும்போது அவர்கள் எம்மவிட இன்னும் 50 ஆண்டுகள் முன்னோக்கிச் சென்றுவிடுவார்கள். இந் நாடுகளின் வெற்றியின் இரகசியம் என்ன? அவர்களின் அசுர வளர்ச்சியின் பின்னணி என்ன? நான் அறிந்து வந்தவற்றை பகிர்ந்து கொள்கிறேன்.

**சிங்கப்பூர்**

சிங்கப்பூர் என்ற நவீன தேசத்தை கட்டியெழுப்பிய சிற்பியாக முன்னாள் பிரதமர் லி குவான் யூ அவர்கள் மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அவரது மகன் தற்போது பிரதமராகப் பணிபுரிந்து வருகின்றார். தற்போது சிங்கப்பூரின் ஜனாதிபதியாக தமிழரான திரு நாதன் அவர்கள் பதவி வகிக்கின்றார்.

சிங்கப்பூர் ஓர் சுதந்திர நாடாக 1965ம் அண்டுதான் உதயமானது. அதுவரை மலேசியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. 1965ம் ஆண்டு மலேசியாவினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அரச கட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டது. அப்போது சிங்கப்பூர் மிகப் பின்தங்கிய சேரிகள் நிறைந்த ஓர் பிரதேசமாக இருந்தது. நிலப்பரப்பு - 692 சதுர கி.மீ தான். நீளம் 42 கி.மீ. அகலம் 23 கி.மீ. எமது யாழ்ப்பாண மாவட்டத்தை விட சிறியது (யாழ்ப்பாணம் - 1,025 சதுர கி.மீ) சிங்கப்பூரின் நிலப்பரப்பு யாழ்ப்பாண மாவட்ட நிலப்பரப்பின் மூன்றில் இரண்டு பகுதியாகும்.

**நிலவளம்**

நல்ல தண்ணீர் இல்லை. குடிநீர் மலேசியாவிலிருந்தே கொண்டு வரப்பட்டது. விவசாயம் செய்ய போதிய நிலவளம் இல்லை. கனிய வளங்கள் ஏதும் இல்லை மனித வளம் மட்டுமே அவர்களிடம் இருந்தது அத்துடன் ஓர் துறைமுகமும் இருந்தது.

இத்தகைய ஓர் சூழ்நிலையில் தான் சிங்கப்பூர் என்ற நாடு உதயமாகி தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது. அத் தேசம் உதயமான போது அப்போது நாட்டின் தலைவராக பொறுப்பேற்ற லீ குவான் யூ அவர்கள் வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது செய்வதறியாது வார்த்தைகள் வராது வாய் விட்டு அழுதாராம். எந்த ஒரு வளமும் இல்லாத இந்த நாட்டை எவ்வாறு கொண்டு நடாத்தப் போகிறோமென்று தெரியாது திகைத்து நின்றாராம்.

அப்போது "சிலோன்" என்று அழைக்கப்பட்ட இலங்கை சிங்கப்பூரை விட முன்னேறியிருந்தது. என்வே லீ குவான் யூ அவர்கள் கொழும்பிற்கு வந்து எமது நாட்டின் அனுபவங்களை அறிந்து சென்று சிலோன் போல சிங்கப்பூரை மாற்றுவோம் என உறுதி எடுத்தார்.

இன்று சிங்கப்பூர் எமது நாட்டை விட பல வருடங்கள் முன்னணியில் உள்ளது. உலகில் உள்ள வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் அசுர வளர்ச்சியடைந்துள்ளது. சிங்கப்பூர் தனது துறைமுகத்தை உலகின் இரண்டாவது மிகப் பெரிய துறைமுகமாக கட்டியெழுப்பியுள்ளது உலகின் தலைசிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக காட்சியளிக்கிறது.

சிங்கப்பூரின் சனத்தொகை 3.87 மில்லியன்கள்
சராசரி ஆயுட்காலம் - 81.6 வருடங்கள்

இங்கு ஆங்கிலம், சீனம், மலே, தமிழ் ஆகிய நான்கு மொழிகளும் அரச மொழிகளாக வழக்கத்திலுள்ளன. இங்கு நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாக சுற்றுலாத்துறையும், துறைமுகமும் விளங்குகின்றன. சிங்கப்பூருக்கு செல்வதற்கு முன்கூட்டியே விசா பெற்றுக் கொள்ளத் தேவையில்லை சிங்கப்பூருக்குள் நுழையும் போது தேவைக்கேற்ப காலத்திற்கு விசா வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாத்தறை

இலகுவான, தளர்வான விசா நடைமுறை மூலம் ஏராளமான உல்லாசப்பயணிகள் இங்க வந்து குவிகின்றனர். அவர்களை கவரும் விதத்திலும், அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும் திட்டமிட்டு சிங்கப்பூரை அபிவிருத்தி செய்துள்ளார்கள்.

சிங்கப்பூர் முழுவதும் உல்லாசப் பயணிகட்கான நட்சத்திர விடுதிகள், கேளிக்கை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் மிருகக்காட்சிசாலை, பூங்காங்கள் மற்றும் பல்வேறு கண்கவர் அருட்காட்சியகங்கள் அமைக்கப்பட்டள்ளன. மேலும் சிங்கப்பூரை ஓர் சிறந்த கொள்வனவு நிலையமாகவும் (Shopping Center), சந்தைப்படுத்தல் நிலையமாகவும் (Marketing Centre) மாற்றியுள்ளனர். இது மேலும் இங்கு ஏராளமானோர் வந்து செல்வதை ஊக்குவிக்கின்றது. எனவே சுற்றுலாத்துறை இந்நாட்டில் அந்நிய செலாவணியின் அடித்தளமாகவும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் அமைகின்றது.

சிங்கப்பூருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது நாட்டில் சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய பல இயற்கை தலங்கள் உள்ளன. எமது நாட்டில் சுற்றுலாத்துறையை திட்டமிட்ட முறையில் மேம்படுத்தினால் பொருளாதார ரீதியில் சிறந்த பலனை அடையலாம். உல்லாசப் பயணிகளை திருப்திப்படுத்தும் சர்வதேச தர்த்திலான தங்கு விடுதிகள் அமைக்கப்படவேண்டும். இயற்கை சுற்றுலா மையங்கள் சுற்றுலாப் பயணிகட்கான வசதிகளுடனும் மேம்படுத்தப்படவேண்டும். எமது சேவை வழங்கல்களை சர்வதேச தரத்திற்கு முன்னேற்ற வேண்டும் இது சம்பந்தமான பயிற்சிகள் இங்கு ஆரம்பிக்கப்படவேண்டும். (உ + ம் Hotel Management)

## துறைமுகம்

சிங்கப்பூர் ஆசிய கண்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாயந்த நிலையத்தில் அமைந்திருப்பதால் உலகின் இரண்டாவது பாரிய கொளள்கலன்களை கையாளும் துறைமுகமாக வளர்ச்சியடைந்துள்ளது. ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வரும் கப்பல்கள் ஆசியாவிலுள்ள ஏனைய துறைமுகங்கட்கு கொள்கலன்களை விநியோகிக்கும் ஓர் இடைத்தங்கல் (Transit) துறைமுகமாகவும் இது விளங்குகின்றது. மேலும் புதிய கப்பல்களை கட்டும் நிலையமாகவும் கப்பல்களை திருத்தும், எரிபொருட்கள் நிரப்பும வசதிகளையும் கொண்டுள்ளது. இவற்றின் மூலம் ஏராளமான அந்நிய செலாவணி கிடைக்கின்றது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கும் ஓர் முக்கிய துறையாக விளங்குகின்றது.

எமது நாடு ஆசியாவின் ஓர் கேந்திர முக்கியத்துவமான இடத்தில் அமைந்துள்ளது. இங்கும் பல இயற்கையான, செயற்கையான துறைமுகங்கள் உள்ளன. இவற்றை திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்தால் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கும் வலுச்சேர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திட்டமிடல்**

இந் நாட்டில் வெற்றியின் பின்னணியில் உள்ள மிக முக்கியான இரகசியம் மிகச் சிறந்த துல்லியமான திட்டமிடல், எதிர்காலத்தைப் பற்றிய தெளிவான தூரநோக்கு தங்களிடம் உள்ள இயற்கை வளங்கள் மிகச் சொற்பமானவை. மட்டுப்படுத்தப்பட்டவை என்பதை தெளிவாக மனதில் வைத்துக்கொண்டு எதிர்காலத்தை திட்டமிடுகிறார்கள். இருக்கின்ற சொற்ப வளங்களைக் கொண்டு அதி உச்ச பயன்பாட்டின் மூலம் அதிகூடிய பலன்களை அடைய திட்டமிடுகிறார்கள்.

**நிலவளம்**

இங்கு நிலப்பரப்பு மிகவும் மட்டுப்படுத்தபட்டது எனவே ஒவ்வொரு அங்குல நிலத்ததையம் சரியான முறையில் திட்டமிட்டே பயன்படுத்துகின்றனர். இங்க பெரும்பாலான காணிகள் அரச காணிகளாகவே காணப்படுகின்றன தனியார் காணிகள் மிகக்குறைவு. மிகவும் விலை உயர்ந்தவை.

10, 20, 30 ஆண்டுகளுக்குப் பின்னர் சிங்கப்பூரின் நில பயன்பாடு எப்படி அமைய வேண்டுமென்பதை இப்போதே திட்டமிடுகிறார்கள் இங்கு நிலவளம் மட்டுப்படுத்தப்பட்டதால் தற்போது கடலிற்குள் மண்ணை நிரப்பி அதன்மேல் கட்டிடங்களை கட்டிவருகின்றனர். திட்டமிடும் போது 10, 20, 30 வருடங்களிற்கு பின் இருக்கப்போகும் மக்கள் தொகையை மதிப்பிட்டு அவர்களின் தேவையை பூர்த்திசெய்யக்கூடியவாறு இப்போதிருந்தே திட்டமிடுகின்றனர்.

சிங்கப்பூரில் (Urban Authority Gallery) நகர அதிகார அருங்காட்சியகத்தில் தற்போதுள்ளன நாட்டின் மாதிரி (Model) காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் எப்படி சிங்கப்பூர் அபிவிருத்தி செய்யப்படும் என்பதையும் மாதிரியாக இங்கு காணலாம்.

சிங்கப்பூருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது நாட்டில் போதிய நிலவளம் உள்ளது இந்த நிலவளத்தின் அருமையை நாம் உணர்ந்திருக்கிறோமா? அதனை திட்டமிட்டமுறையில் நாம் பயன்படுத்துகிறோமா? என்பவை கேள்விக்குறியே எமது நகரப்புறங்களில் நிலத்தின் அருமையை தற்போது உணரத்தொடங்கியுள்ளோம். ஆனால் வெளியே நிலவளம் பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது.

ஒரு நகரமாக இருக்கலாம் கிராமாக இருக்கலாம், நிறுவனமாக இருக்கலாம் நம்மிடம் உள்ள நிலவளத்தை தூரநோக்குடன் திட்டமிட்டு பயன்படுத்த வேண்டும். 20, 30, 50, வருடங்கட்கு பின்னர் வரபோகும் சனத்தொகையின் தேவையை பூர்த்தி செய்யக்கூடியவாறு திட்டமிட வேண்டும்.

ஒரு வைத்தியசாலையை எடுத்துக்கொள்வோம் அதனிடம் உள்ள நிலப்பரப்பில் எதிர்காலத்தில் அமைக்கப்படவேண்டிய கட்டிடங்களை தூரநோக்குடன் திட்டமிட வேண்டும் அக்கட்டிடங்கட்கான நில வரைபடம் (Layout plan) வரையப்படவேண்டும் வைத்தியசாலை கட்டிடங்கட்கான Masterplan வரையப்பட வேண்டும். அதன் பிரகாரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிகாலத்தில் கட்டிடங்கள் அமைக்கபப்பட வேண்டும். நிலவளம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் மாடிக்கட்டிடங்கள் அமைப்பது பற்றி சிந்திக்க வேண்டும். கட்டிடங்கள் அமைக்கப்படும் போது மாற்றுவலுவுடையோர் இக்கட்டிடங்களை சுயமாகப் பயன்படுத்தக் கூடியவாறு அமைக்கப்பட வேண்டும் இன்று உலகளாவிய ரீதிளில் அதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுறகிறது. ஆனாலும் எமது பகுதிகளில் கட்டப்படும் பெரும்பலான கட்டிடங்களில் இக்குறை உள்ளது எனவே நாம் இதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

எமது நகரங்களை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவது பற்றிய தெளிவான திட்டங்கள் எம்மிடம் இருக்கவேண்டும். அவற்றின் அடிப்படையிலேயே அவை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆட்சிகள், அதிகாரிகள் மாறலாம் ஆனால் நீண்ட காலத் திட்டங்கள் நிலையானவையாக இருக்க வேண்டும்.

**நீர்வளம்**

சிங்கப்பூர் நீர் வளம் மிகவும் மட்டுபடுத்தப்பட்ட ஓர் நாடு. இங்கு குடிநீர் வளம் இல்லை. மலேசியாவிலிருந்து குடிநீர் இறக்குமதி செய்யப்படுகிறது. எனினும் சிங்கப்பூர் நீர் வளத்திற்காக எந்த ஒரு நாட்டிலும் தங்கியிருக்ககூடாது தனது சொந்தக் காலில் நிற்கவேண்டும் என்ற தூர நோக்குடன் திட்டமிட்டு பல திட்டங்களை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மழைநீர்: சேமிப்பு, கடல் நீரிலிருந்து உப்பை நீக்கி குடிநீராக்கல், கழிவு நீரை சுத்திகரித்து சுத்திகரிக்கும் தேவைகட்காக மீளப்பயன்பாட்டுக்கு உட்படுத்தல், மட்டுப்படுத்தப்பட்ட நிலத்தடி நீரை சுத்திகரித்து சிக்கனமாக குடிநீராக மாற்றல் போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர் தற்போது மழைநீரை கடலில் சேரவிடாது சேமித்து வைக்கும் பல நீர்த்தேக்கங்ககள் அமைக்கப்பட்டுவருகின்றன. இன்னும் சில வருடங்களில் சிங்கப்பூர் தனது நீர்த் தேவையை பூரணமாக பூரத்தி செய்யும் என எதிர்பார்க்கின்றனர்.

சிங்கப்பூரில் நில வளதும் நீர் வளமும் மட்டுப்பபடுத்தப்பட்டதால் விவசாய செயற்பாடுகள் மிகவும் குறைவு, மரக்கறிகள், பழங்கள் யாவும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

சிங்கப்பூருடன் ஒப்பிடும்போது எமது பிரதேசத்தில் ஓரளவு நீர்வளம் உள்ளது. ஆனாலுல் அதனை தூர கோக்குடன் சிக்கனமாக பாவிக்கிறோமா என்பது கேள்விக்குறியே. எமது நிலத்தடி நீர் வளம் மட்டுப்படுத்தப்பட்டது. அதனை அளவுக்கதிகமாக பாவித்தால் ஒரு காலத்தில் எமது பிரதேசம் பாலைவனமாக மாறிவிடும் அபாயமுள்ளது.

எமது பிரதேசத்தில் முன்பு காணபட்ட பல குளங்கள் மழைநீரை தேக்கி வைத்து நிலத்தடி நீரை வளம் செய்தன. ஆனால் இன்று அவற்றில் பல குளங்கள் தூர்ந்து விட்டன. அவற்றை நாம் மீள புனரமைக்க வேண்டும். எமது கடல்நீர் ஏரிகளுடாக கடலில் கலக்கும் மழைநீரை இயன்றளவு மட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நிறுவனங்களிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளிலும் மழைநீர் சேமிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மழைநீர்: சேமிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டும். குடிநீர் தேவைக்காக முழுக்க முழுக்க நிலத்தடி நீரில் தங்கியிராது நீர்தேக்கங்களிலிருந்து நீரை சுத்திகரித்து வழங்கும் நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**வனவளம்**

சிங்கப்பூர் நிலப்பரப்பு மட்டுப் படுத்தப்பட்டிருப்பினும் எங்கு பார்த்தாலும் வானுயர்ந்த கட்டடங்கள் அமைக்கப்படடிருப்பினும் கட்டிடங்கள் தவிர்ந்த எஞ்சியுள்ள நிலப்பரப்பு யாவும் மரங்கள் நடப்பட்டு பசுமையாக காட்சி தருகின்றது. மரம் வளர்ப்பிற்கு இங்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள்.

எமது பிரதேசத்தில் மரவளம் அழிக்கப்பட்டு வருகின்றது. மழைவீழ்ச்சி வருடாவருடம் வீழ்ச்சியடைந்து செல்கிறது. இதே போக்கு நீடிக்குமானால் எமது பிரதேசம் படிப்படியாக பாலைவனமாக மாறலாம்.

எனவே நாம் மரம் வளர்ப்பிற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்... ஒவ்வொரு வீட்டிலும், நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் ஒவ்வொரு வருடமும் புதிய புதிய மரங்கள் நடப்பட வேண்டும். நடப்பட்ட மரங்கள் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும். மர நடுகையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டும். பொது நிறுவனங்கள் மக்கள் மத்தியில் மரநடுகையை ஊக்குவிக்க உதவிகள் புரியமுன்வரவேண்டும்.

**போக்குவரத்து**

சிங்கப்பூரில் நிலப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் வீதிகளின் வளமும் மட்டுப்படுத்தப்பட்டது. ஒரு எல்லைக்கு மேல் வீதிகளை அபிவிருத்தி செய்யமுடியாது. எனவே வீதிகளில் வாகனங்களின் ண்ணிக்கையினை குறைக்க திட்டமிடுகின்றனர். ஒவ்வொரு குடும்பமும் ஒரு தனியான வாகனத்தை வாங்கினால் இங்கு வாகன நெரிசலை கட்டுப்படுத்த முடியாது. எனவே தனியார் வாகனங்களுக்கு பல கட்டுப்பாடுகளை விதித்து தனிப்பட்ட வாகனங்களை வைத்திருப்பதை ஊக்கவிப்பதில்லை.

தனியான வாகனத்தை வைத்திருக்க மிகக்கூடிய கட்டணம் செலுத்தி முதலில் ஓர் அனுமதி பெறவேண்டும். தனியார் வாகனங்களின் விலைகள் சுங்கத்தீர்வைகளை உயர்த்தியதன் மூலம் கூட்டப்பட்டுள்ளன. சில முக்கியமான நெரிசலான வீதிகளில் பயணம் செய்வதற்கு கட்டணம் செலுத்த வேண்டும் எனவே ஒரு தனியார் வாகனம் வைத்திருப்பது மிகவும் செலவான ஒருவிடயம். எனவே இதற்கு மாற்றீடாக மக்களுக்கு வசதியான, இலகுவான, செலவு குறைந்த பொது போக்குவரத்து சேவைகளை ஏற்பாடு செய்துள்ளனர். இங்கு மிகச்சிறந்த நிலத்தடி ரயில் (Udergroundtrain) வான்ரயில் (Sky train) சொகுசுபஸ்கள், ரயில்கள், டாக்சிகள் போன்ற பல வசதியான பொது போக்குவரத்து வசதிகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாம் செல்லவேண்டிய இடத்தை குறுகிய நேரத்தில் சௌகரிகமாக செல்லக்கூடிய வகையில் இவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் இச்சேவைகள் யாவும் ஒரு அரச நிறுவனத்தால் திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரில் போக்குவாத்து சேவைகளைப்பற்றி விளக்கமளிக்கும் Land Transit Gallery எனப்படும் அருங்காட்சியகம அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சிங்கப்பூரின் போக்குவரத்து சேவைகள் 60ம், 70ம், 80ம், 2000 ஆண்டுகளில் எப்படி அமைந்திருந்தன என்று விபரணப்படங்களுடனும் காட்சிப் பொருட்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சிங்கப்பூரின் போக்குவரத்து சேவைகள் 2020ம் 2030ம் ஆண்டில் எப்படியிருக்க வேண்டும் என்பதை திட்டமிட்டு இப்போதே அதை ஒளிக்காட்சியாக படமாக காண்பிக்கின்றனர்.

நாமும் இவ்விடங்களில் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். வீதிகளில் வாகன நெரிசலைக்குறைக்க பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தினால் தனியார் வாகனங்களின் எண்ணிக்கையை வீதிகளில் குறைக்கலாம். பொதுப் போக்குவரத்து சேவைகளை நாம் மேம்படுத்தும்போது மக்கள் தாம் செல்ல வேண்டிய இடத்தை இயலுமான குறுகிய நேரத்தில் இயலுமானவளவு நியாயமான செலவுடன் சௌகரிகமாக பிரயாணம் செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பல்வேறு போக்குவரத்து சேவைகட்கிடையே ஒருங்கிணைப்பு வசதிகள் காணப்பட வேண்டும். பாவனையாளரின் நலன் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்.

**வீதி வலையமைப்பு (Road Network)**

இம் மூன்று நாடுகளின் துரித வளர்ச்சியின் பின்னணியில் உள்ள இன்னோர் முக்கிய காரணம் இந்நாடுகளில் காணப்படும் சிறந்த நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி வலையமைப்பு. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த வீதி வலையமைப்பு மிகவும் இன்றியமையாதது.

மக்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு குறுகிய நேரத்தில் சென்றடைவதால் மனித மணித்தியாலங்கள் (நேரம்) மீதப்படுத்தப்படுகின்றது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படும். உற்பத்திப்பொருட்கள் உரிய இடங்களுக்கு உரிய நேரத்தில் கொண்டு செல்லப்படும். எரிபொருள் மீதப்படும். வாகனங்களின் தேய்மானம் குறையும். அவசர மருத்துவ நிலைகளின்போது நோயாளரை குறுகிய நேரத்தில் உரிய சேவை கிடைக்கக்கூடியதாக வைத்தியசாலைகட்கு கொண்டு சென்று பல உயிரிழப்புக்களைத் தவிர்க்கலாம். வாகன விபத்துக்களைக் குறைக்கலாம். மொத்தத்தில் மக்களின் வாழ்வியலில் மேம்பாட்டைக் காணலாம்.

எமது நாட்டில் பெரும்பாலான மக்கள் தமது கணிசமான நேரத்தை வீதிகளிலேயே வாகனங்களிலேயே கழிக்கின்றனர். இதனால் மனிதவளம் வீணடிக்கப்படுகின்றது. எனவே எமது நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமானால் எமது வீதி வலையமைப்பை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். எமது நாட்டில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது பல்வேறு எதிர்ப்புக்கள். முட்டுக்கட்டைகள் போடப்படுவது வழக்கம். எனவே நாம் எல்லோரும் வீதி வலையமைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து தூர நோக்குடன் சிந்தித்து வீதி வலையமைப்பு அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அடித்தளமாக அமைவது வீதி வலையமைப்பு என்பதை அனைவரும் உணர வேண்டும். ஒரு மனிதனின் உடலில் உயிர் வாழ்வதற்கு நாடி, நாளங்கள் எவ்வளவு அவசிமானவையோ அந்தளவிற்கு ஒரு நாட்டின் உயிர்ப்பிற்கு, துடிப்பிற்கு வீதி வலையமைப்பு அவசியமானது.

## சுற்றாடல் சூழல் முகாமைத்துவம்

சிங்கப்பூர் நகரம் எங்கும் எப்போதும் துப்புரவாக பேணப்படுகின்றது. தமது நாட்டு மக்களை இதற்காக தயார்ப்படுத்தி உள்ளனர். ஆனால் இங்கு தினமும் உலகின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். இவர்களை எவ்வாறு இப்பழக்கத்திற்கு கொண்டு வருவது கடினமான விடயம். பலவேறு வழிகிளல் முயன்று பார்த்தார்கள் முடியவில்லை. இறுதியில் இதற்கென கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இச்சட்டங்களின் கீழ் இங்கு கண்ட கண்ட இடங்களில் ஏதாவது ஒரு குப்பைத் துண்டை வீசினால் கடும் அபராதம் விதிக்கபப்டும். எல்லா இடங்களிலும் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. கண்ட கண்ட இடங்களில் சாப்பிடமுடியாது. இந்நாட்டில் சுவிங்கம் விற்பதற்கும் சாப்பிடுவதற்கும் கடந்த 18 வருடங்களாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறினால் கடும் அபராதம். இப்படியாகச் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க பல சட்டங்களை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் தமது நகரத்தை அழகாகவும் துப்பரவாகவும் பேணி வருகிறார்கள்.

நாங்கள் ஒவ்வொருவரும் எமது வீட்டை அழகாகவும் துப்பரவாகவும் வைத்திருக்க வேண்டும் என விரும்புகிறோம். அதேபோல எமது நகரத்தையும், நாட்டையும் அழகாக துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்ற உணர்வு வளர வேண்டும். எமது நகரங்களில் பொது இடங்களில் போதியளவு குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டு கிரமமாக குப்பைகள் அகற்றப்பட வேண்டும். பொது மக்கள் மத்தியில் பொது இடங்களையும் துப்பரவாகப் பேணவேண்டும் என்ற விழிப்பணர்வு ஏற்பட வேண்டும்.

## நெடுஞ்சாலைகள்

நாம் சிங்கப்பூரிலிருந்து மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரிற்கு தரைவழியாக நெடுஞ்சாலை மூலம் சென்றோம். இடைப்பட்ட தூரம் 350 கி.மீ. எடுத்த நேரம் 4 மணித்தியாலங்கள் மட்டுமே. மலேசியா, தாய்லாந்து இரு நாடுகளிலும் பெரிய நகராங்கட்கிடையே நெடுஞ்சாலைகள் (high way) காணப்படுகின்றன. இவை மக்கள் குடியிருப்புகளையும், நகரங்களையும் தவிர்த்து நேரான பாதைகளாக அமைக்கப்பட்டுள்ளன. இந் நெடுஞ்சாலைகளில் நகரங்கட்கிடையே பயணம் செய்யும் வாகனங்கள் மட்டுமே செல்லலாம். எனவே வாகன நெரிசல் இல்லை.

இந் நெடுஞ்சாலைகள் மிகவும் விசாலமானவை. சீராக பராமரிக்கப் படுபவை. எனவே வாகனங்கள் கூடிய வேகத்தில் (100 - 140km/h) செல்லமுடியும் கூடிய தூ ரத்தை குறைவான நேரத்தில் சென்றடையலாம். வாகனத்தில் பிரயாணம் செய்பவர்கட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணக்களைப்பு பெரிதாக தெரிவதில்லை. எரிபொருள் செலவீனம் குறைவு. வாகனாங்களின் தேய்மானம் குறைவு.

இந் நெடுஞ்சாலைகள் பெரும் பாலும் தனியார் நிறுவனங்களாலேயே பராமரிக்கப்படுகின்றன. எனவே இந் நெடுஞ்சாலைகளில் செல்வதற்கு கட்டணம் செலுத்த வேண்டும். இந்நடைமுறை உலகின் பெரும்பாலான நாடுகளில் நடைமுறையிலுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற நாடுகளில் இந்நடைமுறையை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

எமது நாட்டிலும் பெரு நகரங்கட்கிடையே இப்படிப்பட்ட நெடுங்சாலைகளை தனியார் துறையின் பங்களிப்புடன் அமைத்து அவர்களின் பராமரிப்பில் ஒப்படைக்கலாம். அரசாங்கம் அத்தனை நெடுஞ்சாலைகளையும் அமைத்து பராமரிப்பதென்பது சாத்தியமான தல்ல. எனவே இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் பின்பற்றும், எமது அண்டை நாடான இந்தியா கூட பின்பற்றும் இந்த நடைமுறையை நாமும் ஏன் பின்பற்றக்கூடாது?

எல்லாம் இலவசமாக வாங்கி வாழ்ந்து பழகிய எமது நாட்டில் நிச்சயம் சில எதிர்ப்புகள் எழும். நாம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் நாம் கட்டணமாக செலுத்தும் சிறிய தொகை பணத்தைவிட எனக்கு கிடைக்கும் அனுகூலங்களின் பணமதிப்பீடு கூடுதலாக இருக்கும்.

இவை எல்லாவற்றையும்விட மிக முக்கியாமானது நேரத்தை மீதப்படுத்தலாம். உதாரணமாக இப்படியொரு நெடுஞ்சாலை கொழும்பு - யாழ்ப்பாணம் நகரங்களிற்கிடையே அமைக்கப்பட்டால் 4 மணி நேரத்தில் பிரயாணம் செய்யலாம். எமது பிரயாண நேரத்தை அரைவாசியாக குறைக்கலாம்.

**நேர முகாமைத்துவம்**

எமது நாட்டில் நேரத்தின் மதிப்பை ஒருவரும் பெரிதாகக் கணக்கெடுப்பதில்லை. பணத்தின் மதிப்பிலேயே எல்லோரும் குறியாக இருப்பார்கள். ஆனால் உண்மையில் நேரத்திற்கும் பெறுமதி உண்டு. அதனால்தான் நேரம் பொன்னானது என்கிறார்கள்.

எந்த மனிதன் நேரத்தை முககாமைத்துவம் செய்யக் கற்றுக்கொள்கிறானோ அவன் வெற்றி பெற்ற மனிதனாகின்றான். இதற்கு உதாரணமாக பலர் உங்கள் மத்தியில் உதாரண புருஷர்களாக வாழ்கிறார்கள். நேரம் தவறாமை (Punctualty) - இதுதான் வெற்றியின் முதற்படி. முதற்படியே சறுக்கினால் முற்றும் கேணலாகவே முடியும்.

நாம் தரிசித்த இம்மூன்று நாடுகளினதும் வெற்றியின் இன்னோர் ரசகிசயம் சரியான நேர முகாதைத்துவம். அலுவலகமானாலும் சரி, கூட்டமானாலும் சரி சந்திப்பாயினும் சரி. விரிவுரையாயினும் சரி சரியான நேரத்திற்கு ஆரம்பிப்பார்கள். சுரியான நேரத்திரத்திற்கு நிறைவு செய்வார்கள். நேர முகாமைத்துவத்தில் மிகுந்த கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனித மணித்தியாலமும் பெறுமதி மிக்கது. வினைத்திறன் உடையது. அதன்மூலம் பெறுமதிமிக்க வெளியீட்டை பெற்றுக்கொள்ளமுடியும்.

எமது நாட்டிலும் நேர முகாமைத்துவத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். சிறு வயதிலிருந்தே பாடசாலைகளிலிருந்தே பழக வேண்டும். அலுவலகங்களில் இவை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படல் வேண்டும். ஒரு மனித மணித்தியாலமேனும் வீணடிக்கப்படாது பயன்படுத்தப்பட வேண்டும். கூட்டங்கள், சந்திப்புக்கள் சரியான நேரத்தில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். குறிப்பட்ட காலவரையறைக்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

**மலேசியா**

| | | |
|---|---|---|
| சனத்தொகை | - | 28 மில்லியன் |
| நிலப்பரப்பளவு | - | 332,633 சதுர கிலோ மிற்றர் |
| பேசப்படும் மொழிகள் | - | மலே, சீனம், தமிழ். |
| மதம் | - | இஸ்லாம், பௌத்தம், இந்து, கிறிஸ்தவம். |
| நாணயம் | - | றிங்கெற் |
| தலைநகரம் | - | கோலாலம்பூர் |
| நிர்வாகத் தலைநகரம் | - | புற்றஜாயா |

மலேசியாவில் சம்பிரதாயமான மன்னராட்சியுடன் பாராளுமன்ற ஆட்சியும் காணப்படுகிறது. இன்றைய நவீன மலேசியாவைக் கட்டியெழுப்பிய சிற்பியாக முன்னாள் பிரதமர் மகதீர் முஹமட் அவர்கள் மக்கள் அனைவராலும் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அவரது ஆட்சிக்காலம் பொற்காலமாக மக்களால் போற்றப்படுகிறது. தொழில் ரீதியில் வைத்தியரான இவர் அரசியலில் இறங்கி நாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி நாட்டை புதிய வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்றுள்ளார்.

**புற்றஜயா - நிர்வாகத் தலைநகரம்**

பொதுவாக நாடுகளின் தலைநகரங்களில் நிர்வாகக் கட்டமைப்பகளும், வர்த்தக மையங்களும், சுற்றுலா மையங்களும் ஒன்றாக கலந்திருப்பதால் எப்போதும் சன நெருக்கடியாகவும், வாகன நெருக்கடியாகவம் காணப்படும்.. இதனால் சேவைகளை வழங்குவதிலும், பெற்றுக்கொள்வதிலம் பல கஷ்டங்கள் அசௌகரியங்களும் காணப்படும்.

மலேசியாவில் முன்னாள் பிரதமர் மகதீர் முகமட் தனது காலப் பகுதியில் இந் நிலையை மாற்ற விரும்பினார். நாட்டின் அரச நிர்வாக கட்டமைப்பை கோலாலம்பூருக்கு வெளியே 30 கி.மீ. தொலைவில் புற்றஜாயா என்ற இடத்திற்கு மாற்றினார். பழைய இறப்பர் தோட்டம் இருந்த இடத்தில் மலேசியாவின் நிர்வாகத் தலைநகரை கட்டியெழுப்பினார்.

இத்தலைநகர் அமைக்கப்பட்ட இடத்தில் மிகச்சிறந்த, உயரிய, துல்லியமான திட்டமிடல் பண்புகளை நாம் காணலாம். இதனைத் திட்டமிடும்போது பின்வரும் விடயங்களிற்கு முக்கயத்துவம் கொடுத்திருக்கிறார். அழகாக அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையாக கவர்ச்சிகரமானதாக, தனித்துவமானதாக இருக்க வேண்டும். தமது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கவேண்டும். இயற்கையின் வனப்புடன் ஒன்றியதாக இருக்க வேண்டும்.

இந்நிர்வாக தலைநகரத் தொகுதியைச் சுற்றி செயற்கையான முறையில் ஓர் அழகான ஏரியை உருவாக்கி இதனை ஓர் சிறிய தீவாக அழகுற அமைத்துள்ளனர். பிரதமரின் அலுவலகம் ஏறத்தாழ இந்தியாவின் தாஜ்மகால் போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமைச்சு கட்டிடமும் தனித்தனியான கட்டடக் கலையமைப்பில் கட்டப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான இரண்டு கட்டிடங்களை இங்கு காணமுடியாது. ஒவ்வொன்றும் தனித்துவமானவை.

இங்கு பணிபுரியும் உத்தியோகத்ததர்கள் அனைவரு க்கும் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன. கோலாலம்பூரிலிருந்து இங்கு குறுகிய நேரத்தில் சென்று வர விசேட ரயில், பஸ் சேவைகள் நடாத்தப்படுகின்றன. இங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் ஓய்வு நேரங்களில் தமது பொழுதை இனிமையாகக் கழிக்க அழகான பூங்காக்களும், பொழுது போக்கு மையங்களும், வணக்கத்தலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டதின்படி கோலாலம்பூர் நகரத்தில் சனநெருக்கடியும், வாகன நெருக்கடியும் குறைந்துள்ளது. கோலாலம்பூர் நகரம் வர்த்தக மையமாகவும் சுற்றுலா நகரமாகவும் மாற்றப்படுகிறது. எமது நாட்டிலும் எமது தலைநகரை கோட்டைக்கு இடமாற்ற முயற்சிகள் இடம்பெற்றன. ஆயினும் அந்நகர்வுகள் முற்றுப்பெறவில்லை. இன்னமும் பல அமைச்சுக்கள் கொழும்பு நகரத்திற்குள்ளேயே அமைந்துள்ளன. எனவே கொழும்பு நகரம் நெருக்கடியான ஒரு நகரமாகவே இன்னும் காட்சியளிக்கின்றது.

**திட்டமிலின் முக்கியத்துவம்**

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் திட்டமிடல் பிரிவு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. தூர நோக்குடன் சிறந்த துல்லியமான திட்டங்கள் தீட்டப்படல் வேண்டும். திட்டங்கள் மட்டும் இருந்தால் போதாது. அவை சரியான முறையில் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே முன்னால் பிரதமர் மகதீர் முகமட் தனது காலத்தில் தனது பிரதமர் அலுவலகத்தில் அதிகாரம் மிக்க திட்டமிடல் பிரிவையும் (planning unit) நிறைவேற்றல் மற்றும் ஒருங்கிணைக்கும் பிரிவையும் (implementation and co - ordination unit) அமைத்திருந்தார். மலேசியாவின் துரித அபிவிருத்தியில் இவ்விரு பிரிவுகளின் பங்களிப்புக்களும் அளப்பரியவை. இன்றும் மக்களால் நினைவு கூரப்படுகின்றன. எமது நாட்டில் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை தொடர்ச்சியாக கண்காணித்து நெறிப்படுத்தும் வழிமுறைகளை வலுப்படுத்த வேண்டும்.

**அலுவலக முகாமத்துவம்**

இம்மூன்று நாடுகளிலும் அலுவலகங்களில் 5 'S' முகாமைத்துவ பண்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அலுவலகங்கள் மிக துப்புரவாகவும், நேர்த்தியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவரது மேசை கூட மிக நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

அந்த அலவலகங்களில் சேவை பெறவரும் பாவனையாளரின் நன்மை கருதி அவர்கட்கு எளிமையாக தெளிவாக புரியும்படி பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன. குறுகிய நேரத்தில் சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சேவைபெற வருபவர்களை அன்போடு அழைத்து ஆதரவாகப் பேசி சேவைகள் வழங்கப்பட்டன.

எமது பிரதேசத்தில் யப்பானிய 5 'S' நடைமுறைகள் சில வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சில அரச நிறவனங்களில் அறிமுகப்படுத்தி வருகின்றன. நாமும் அனைத்து அரச நிறுவனங்களிலும் இதனை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். இதன்மூலம் பாவனையாளர்கட்கு தரமான வினைத்திறன் மிக்க சிறந்த சேவையை நாம் வழங்கமுடியும்.

**புற் ஜாயா வைத்தியசாலை**

எமது குழு புற்றஜாயா அரச வைத்தியசாலையை பார்வையிட்டது. மிகச்சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலை எங்கும் துப்புரவாக பேணப்பட்டதுடன் எல்லாம் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. நோயாளர்கட்கு இங்கு சிறந்த சேவை வழங்கப்படல் வேண்டும். என்ற நோக்கில் இங்கு பணியாற்றம் உத்தியோகத்திர்கட்கு 10 's' நடைமுறைகள் பயிற்றுவித்துள்ளனர். மலே மொழியில் S என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் 10 சொற்களெ இந்த 10 's' ஆகும்.

தமிழில் அவை பின்வருமாறு அர்த்தப்படும்.

1. புன்னகை செய்யுங்கள்
2. வணக்கம் செலுத்துங்கள்
3. நோயாளியை ஆதரவாக தாங்கிக் கொள்ளுங்கள்
4. நோயாளியின் வலியை உணர்ந்து கொள்ளுங்கள்
5. பண்பாக அன்பாக பழகுங்கள்.
6. நோயாளிக்கு நம்பிக்கை யூட்டங்கள்.
7. உங்களிற்குரிய சீருடையில் பணியாற்றுங்கள்
8. உங்கள் பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளுங்கள்.
9. உங்களின் கீழ் பணியாற்றுவோரை சரியாக மேற்பார்வை செய்யுங்கள்.
10. உங்கள் சேவையின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்துங்கள்.

நோயாளர் பராமரிப்பில் இவை மிகவும் முக்கியமானவை. நோயாளியின் உளநலம் துரிதமாக குணமடையும் எமது வைத்தியசாலைகளிலும் இந்நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வைத்தியசாலை பணியாளாட்கட்கு இதில் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பணியாளர்களிடம் போதிய அறிவு, ஆற்றல் இருக்கலாம். ஆனால் சரியான நல்ல மனப்பாங்கு வேண்டும். அதில் நல்ல மாற்றத்தை நாம் ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரட்டை கோபுரங்கள் (Twin towers)

மலேசியாவில் மகதீர் முகமட் பிரதமராகவிருந்த காலத்தில் உலக அளவில் மலேயாவின் புகழையும் தனித்துவத்தையும் உயர்த்த விரும்பினார். அக்காலத்தில் உலகத்திலே உயரமான இரட்டைக் கோபுரங்களைக் கட்டுவித்தார். ஆனால் தற்போது இதனைவிட உயரமான கோபுரம் துபாயில் கட்டப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இக்கோபுரம் 1993இல் ஆரம்பித்து 1999 இல் கட்டி முடிக்கப்பட்டது. இக்கோபுரத்தின் உயரம் - 452 மீற்றர். 88 மாடிகளைக் கொண்டது. 41வது மாடியில் இரு கோபுரங்களையும் இணைக்கும் பாலம் உள்ளது. ஒரு கோபுரத்தின் நிறை 300 ஆயிரம் தொன்கள். இக்கோபுரத்தின் பாலம் அமைந்துள்ள 41வது மாடிக்கு செல்ல நவீன லிப்ற் (Lift) வசதிகள் உள்ளன. 41 வது மாடிக்கு செல்ல எடுக்கும் நேரம் 40 செக்கனக்கள்.

கோலாலம்பூர் நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் இக்கட்டிடத்தை அமைக்க காணி வழங்கியவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட மலேசியாவைச் சேர்ந்த ஆசியாவின் முன்னனி செல்வந்தர்களில் ஒருவரான திரு அனந்தகிருஸ்ணன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பலர் மலேசியாவில் செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்தவர் கூட்டுறவுச் சங்கம் என்ற பலமிக்க ஒரு அமைப்பை நடாத்தி வருகின்றனர். அதன் அலுவலகத்தையம் நாம் கோலாலம்பூரில் காணமுடிந்தது.

இந்த இரட்டைக் கோபுரத்தைப் போல இன்னுமோர் அதிசயமான தொலைத்தொடர்பு கோபுரம் உள்ளது. இக் கோபுரத்தின் 25 வது மாடியில் கண்ணாடிக்குமிழ் உருவத்தின் உள்ளே இரவு உணவு விடுதி உள்ளது. இந்த உணவு அருந்தியபடி கோலாலம்பூர் நகரின் இரவு நேர அழகை ரசிக்கலாம். இதுவும் உல்லாசப்பயணிகளை கவரும் இன்னொரு சுற்றுலா மையமாகம்.

### கற்குகை முருகன் கோவில்

மலேசியாவில் கோலாலம்பூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் பகழ்பெற்ற கற்குகை முருகன் கோவில் அமைந்துள்ளது. இங்கு மிக உயரமான மலையின் குகைக்குள் ஒரு அழகான முருகன் கோவில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு 300க்கு மேற்பட்ட படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். மலையின் முன்னால் மிகவும் உயர்ந்த பாரிய அழகான முருகன் சிலை காட்சி தருகின்றது.

## தாய்லாந்து

### அறிமுகம்

சனத்தொகை - 62 மில்லியன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நிலப்பரப்பளவு | - 517,000 சதுர கி.மீ |
| இனங்கள் | - தாய் - 75%, சீனர் - 11%, மலே - 3.5% |
| மதங்கள் | - பௌத்தம் 95%, இஸ்லாம் - 4% |
| தலைநகரம் | - பாங்கொக் |
| நாணயம் | - பாத் |

தாய்லாந்து பாராளுமன்ற நடைமுறை கொண்ட ஓர் ஜனநாயக நாடு எனினும் இன்னும் மன்னர் பரம்பரை, அதிகாரங்கள் ஏதும் இல்லாவிடினும் மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றனர். குறிப்பாக தற்போதுள்ள மன்னர் சிறந்த கல்விமானாகவும், நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவராகவும் இருப்பதால் அனைத்து தரப்பினராலும் மிக உயர்வாக மதிக்கப்படுகின்றார்.

தாய்லாந்து மக்கள் எப்போதும் புன்னகை பூத்தபடி அனைவரையும் அன்போடு அரவணைத்து வரவேற்கும் பண்புடையவர்கள். குறிப்பாக தமது நாட்டிற்கு விருந்தினராக வந்திருப்பவர்களை மிகவும் அன்புடன் வரவேற்று பண்பாக நடாத்துகின்றனர்.

தாய்லாந்து நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது அங்கு காணப்படும் சிறந்த வீதி வலையமைப்பு (Road networks) இங்கு வீதி அபிவிருத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றனர். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இது மிகவும் அவசியமாகும்.

இங்கும் பொதுப்போக்குவரத்து (Public transport) சேவைகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர். பஸ்சேவை, நிலத்தடி ரயில் சேவை (Undergound train) வான் ரயில் சேவை (Sky trani) போன்ற சேவைகள் மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தனிப்பட்ட வாகனங்களை பொதுமக்கள் பாவிப்பதை குறைக்க முடிந்துள்ளது.

இங்கு பொதுமக்களுக்கு அரச நிர்வாக சேவைகளை வழங்குவதற்கு ஒரே இடத்தில் பல சேவைகளை வழங்கக்கூடிய One stop Services என்ற சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒரே இடத்தில் பலவிதமான சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இங்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் இலகுவாக்கப்பட்டுள்ளன. விண்ணப்ப படிவங்கள் எளிமையாக்கப் பட்டுள்ளன. அல்லது அவற்றை பூர்த்தி செய்ய சிரமப்படுபவர்கட்கு உதவிசெய்யும் ஏற்பாடுகள் செய்ப்பட்டுள்ளன. சேவைகளை குறுகிய நேரத்தில் வழங்கக்கூடிய ஒழுங்குகள் காணப்படுகின்றன.

**கிராமிய பொருளாதாரம்**

தாய்லாந்தில் "One Village One Product" (ஒரு கிராமம், ஒரு உற்பத்திப்பொருள்) என்ற பிரபல்யமான திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் கிராமிய கைத்தொழில்களை இனங்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை ஊக்குவிக்க அரசாங்கத்தால் பல உதவிகள் வழங்கப்படுகின்றன. முதலீட்டு உதவிகள், தொழில்நுட்ப வசதிகள், விசேட பயிற்சிகள், சந்தைப்படுத்தல், ஏற்றுமதி வசதிகள் போன்றன அரசினால் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் உற்பத்தியின் அளவும், தரமும் பன்மடங்கு அதிகரிக்கன்றன. பல கிராமங்களிலிருந்து உற்பத்திப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் கிராமங்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்ற மடைந்து வளர்ந்து வருகின்றன. நாட்டின் பொருளாதாரமும் வலுவடைந்து வருகின்றது. இத்திட்டம் கிராமிய உற்பத்திப்பொருட்களை சர்வதேச சந்தைக்கு கொண்டு சென்றுள்ளது. இதன்மூலம் இலைமறைகாயாக உள்ள பல கிராமிய கைத்தொழில்கள் வளம் பெற்றுள்ளன.

இத்திட்டத்தின் சில தத்துவங்களை எமது பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்த முடியும். எமது கிராமங்களில் காணப்படும் கைத்தொழில்களை இனங்கண்டு அவற்றை ஊக்குவிக்க, விஸ்தரிக்க மூலதன உதவிகள் வழங்கப்பட வேண்டும். இக்கைத்தொழில்களை வினைத்திறன் மிக்கதாக்க நவீன தொழில்நுட்ப வசதிகளும், விசேட பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். மேலும் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி வசதிகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அதேபோல எமது பிரதேசத்தில் காணப்படும் விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்த நவீன தொழல்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அதன்மூலம் எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

**சமூக வலுவூட்டல்**

தாய்லாந்தில் சமூக வலுவூட்டலுக்கு மிகச்சிறந்த முன்னுதாரணமாக நாம் தரிசித்த ஒரு கிராமத்தின் கதையைக் குறிப்பிட வேண்டும். பாங்கொக் நகரில் நகரை அழகுபடுத்த இயற்கையாகவும், செயற்கையாகவும் அமைந்த பல கால்வாய்கள் உள்ளன. இதன் கரையோராமாக மிக ஏழ்மையான மக்கள் சேரிகளில் குடிசை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மழைக்காலங்களில் இக்கால்வாயக்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிரிழப்புகளும், சொத்து இழப்புகளும் குடிசைகளை இழந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்வது வழமை.

இதில் பாங்பூவா என்ற கிராமத்தினை சேர்ந்த பெண்கள் தமது மக்களின் தலைவிதியை மாற்ற திடசங்கற்பம் பூண்டனர். அக்கிராமத்தை சேர்ந்த குடும்பத்தலைவர்கள் பெரும்பாலும் கூலித்தொழிலாளர்கள். அவர்களது வருமானத்தின் பெரும்பகுதி மதுபாவனைக்கு சென்றதால் குடும்பங்கள் பெரும்பாலும் ஏழ்மை நிலையிலேயே வாழந்தன.

எனினும் இக்குடும்ப பெண்கள் அன்றாட வருமானத்தின் ஒரு பகுதியை சேமிக்க ஆரம்பித்தனர். மகளிர் சேமிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கினர். இதன்மூலம் ஒருசில வருடங்களில் கணிசமான ஒரு தொகையை சேகரித்தனர். அதன் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளப்பெருக்குக்கு தாக்குப் பிடிக்க கூடிய இருமாடிகளைக்கொண்ட நிரந்தர வீட்டுத்தொகுதி ஒன்றைக் கட்டத்தீர்மானித்தனர். தாம் சேகரித்த பணத்துடன் வங்கி ஒன்றின் மூலம் மீதிப்பணத்தை கடனாகப்பெற்று இவ்வீட்டுத்திட்டத்தை கட்டி முடித்தனர்.

மேலும் தமது கிராமத்திற்காக இருமாடிகளைக் கொண்ட சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, நூலகம் என்பவற்றையும் அமைத்தனர். இன்று தாய்லாந்தில் ஏனைய கிராமங்கட்கு இக்கிராமம் ஒரு முன்மாதிரியான கிராமமாக திகழ்கின்றது. ஒரு கால்வாய் கரையோர சேரிக்கிராமம் மகளிர் சேமிப்பு அமைப்பின் மூலம் ஒரு நவீன வீடமைப்பு தொகுதியையே அமைத்து சாதனை புரிந்துள்ளது.

ஒரு சமூகம் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருந்தாலும் வலுவான சமூக அமைப்புக்கள் உறுதியாக நின்று உழைத்தால் நிச்சயம் தமது சமூகத்தை மேம்படுத்த முடியும். அவர்களால் தனித்தனி மனிதர்களாக சாதிக்க முடியாத பல விடயங்களை அவர்கள் சமூக அமைப்பாக ஒன்றிணையும் போது சாதிக்க முடியும். இது எமது பிரதேச கிராமங்களுக்கும் பொருந்தும். எமது கிராம மட்ட சமூக அமைப்புகட்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றை வலுவூட்டி சிறு உதவிகள் வழங்குவதன் மூலம் எமது கிராமங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

**தலைமைத்துவம்**

தாய்லாந்திலும் அதன் தரித வளர்ச்சிக்கு அதன் முன்னாள் பிரதமர் தக்சின் சினவத்ராவும். ஏனைய தலைவர்களும் வழங்கிய சிறந்த தலைமைத்துவமும் ஓர் முக்கிய காரணம். மேலும் தாயலாந்திலும் திட்டமிடலுக்கும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவதை கண்காணிப்பதற்கும் முக்கியத்தவம் அளிக்கப்படுகின்றது. இங்கு அமைக்கப்படும் கட்டிடங்கள் யாவும் நவீன கட்டிடக்கலையுடன் கண்ணைக்கவரும் விதத்தில் அமைக்கபட்டு வருகின்றன.

**சிக்கனம்**

நாம் தாய்லாந்திலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு சென்றபோது மதியபோசன நேரம். உத்தியோகத்தர்கள் ஓய்வு அறையில் மதிய உணவு அருந்திக் கொண்டிருந்தனர். அந்தவேளையில் அலுவலகத்தில் சகல விளக்குகளும் மின்விசிறிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. இதன்மூலம் தேவையற்ற நேரங்களில் இவற்றை நிறுத்தி மின்சாரத்தை சேமிக்கின்றனர். எமது நாட்டைவிட எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்ட அந்த நாட்டு உத்தியோகத்தர்களின் சிறந்த மனப்பாங்கை நாம் காணக்கூடியதாக இருந்தது. இதனை ஏன் எமது அலுவலகங்களில் நடைமுறைப்படுத்த முடியாது? சிறிய சிறிய மனப்பாங்கு மாற்றத்தின் மூலம் பெரிய பொருளாதார நலன்களைப் பெறலாம்.

**மக்களின் மனப்பாங்கு**

இம் மூன்று நாடுகளினதும் வெற்றிக்கு அடித்தளமாக நாம் கண்ட இன்னோர் முக்கிய காரணம் மக்களின் மனப்பாங்கு இது எனது நாடு இதனை முன்னேற்ற நான் உழைக்க வேண்டும் என்ற உணர்வை நாம் அனைவரிடமும் கண்டோம். இது எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகம், இது எனது கிராமம், இது எனது மாவட்டம் தேசம் அந்த பொது உணர்வு அனைவருக்கும் வரவேண்டும். இது எனது நகரம் இதனை நான் அழகாகவும் துப்பரவாகவும் வைத்திருக்கவேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். பொதுச்சொத்துக்களை எமது சொந்த சொத்துக்கள் போல் பாது காக்கும் உணர்வு வளரவேண்டும் பொது இடங்களில் மின்சாரத்தை, தண்ணீரை சிக்கனமாகப்பாவிக்கும் மனப்பக்குவம் வளரவேண்டும்.

கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் மட்டும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் போதுமானவையல்ல ஒரு தேசத்தின் மேம்பாட்டிற்கு மக்களின் மனப்பாங்கில் மாற்றம் தேவை. மாற்றத்திற்கேற்ற மக்களின் மனப்பக்குவமும் வளரவேண்டும். இம்மூன்று நாடுகளிலும் மக்களின் மாற்றத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியுள்ளனர்.

எமது பிரதேசங்களில் பலவிதமான வளங்கள் உள்ளன பல விதமான தொழில்கள் உள்ளன இவற்றை நாம் திட்டமிட்ட முறையில் நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் முன்றேற்றினால் எமது பிரதேசங்களை துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியும் எம்மிடம் போதியளவு மனிதவளம் உள்ளது. எமது மக்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும். உலகம் எங்கோ சென்று கொண்டு இருக்கின்றது. நாம் எவ்வளவோ பின்தங்கியிருக்கிறோம். உலகத்துடன் ஈடு கொடுக்கக்கூடியவாறு நாம் எமது நாட்டையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

**நிறைவுரை**

இப் பயிற்சிப்பட்டறையின் இணைப்பாளராகவும் முக்கிய வளவாளராகவும் விளங்கியவர் பேராசிரியர் டாக்டர் பெனம் தாய் அவர்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக தற்போது பணிபுரிகின்றார். இவர் எண்பதாம் ஆண்டுகளில் 4 வருடங்கள் இலங்கையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்தவர் எமது நாட்டை நன்கு அறிந்தவர் அக்காலப்பகுதியில் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்துசென்றவர் இங்கு பல நண்பர்களை கொண்டவர் எமது பிரதேசத்தைப்பற்றியும், மக்களைப் பற்றியும் நன் மதிப்பு வைத்திருப்பவர். அவர் கூறிய கருத்துக்களுடன் இக்கட்டுரைய நிறைவு செய்கிறேன்.

"உங்கள் பிரதேச மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் படித்தவர்கள் திறமைசாலிகள், கடும் உழைப்பாளிகள் உங்களிடம் எத்தனையோ வளங்கள் உள்ளன. நீங்கள் மனம் வைத்தால் உங்கள் பிரதேசங்களை குறுகிய காலத்தில் துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியும் அது உங்களின் கைகளில் தான் தங்கியுள்ளது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை (யாழ். தினக்குரல் 16 செப்ரெம்பர் 2014 ல் வெளிவந்தது)

# தரமான சேவையை நோக்கிய திடமான பயணம்

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**

(தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நாடளாவிய ரீதியில் நடாததப்பட்ட தேசிய உற்பததித்திறன் விருதுக்கான போட்டியில் அரச திணைக்களங்களுக்கான பிரிவில் யாழ்ப்பாணம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையும் மூன்றாம் இடத்தைப் பிடித்து விருதுகளைப் பெற்றதையிட்டும் இதே போட்டியில் இதே பிரிவில் சங்கானை பிரதேச வைத்தியசாலை விசேட பாராட்டுக்குரிய விருதைப் பெற்றதையிட்டும் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.)

**அறிமுகம்**

இலங்கையில் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் செயற்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இச்செயலகம் அரச, தனியார் நிறுவனங்களின் சேவைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் வருடாந்தம் நிறுவனங்கள் மத்தியில் தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டிகளை நடாத்தி வருகின்றது. 2012/2013 ஆம் ஆண்டுக்கான இப்போட்டியில் அரச திணைக்களங்களுக்கான பிரிவில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையும் மூன்றாம் இடத்தைப் பிடித்து விருதுகளைப் பெற்றுள்ளன. இதே பிரிவில் சங்கானை பிரதேச வைத்தியசாலை விசேட பாராட்டுக்குரிய விருதைப் பெற்றுள்ளது.

மேலும் 2010 ஆம் ஆண்டில் மத்திய சுகாதார அமைச்சால் நடாத்தப்பட்ட தேசிய சுகாதார மேன்மைக்கான விருதுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதரா சேவைகள் பணிமனையும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையும் தேசிய மட்டத்தில் விருதுகளைப் பெற்றது இங்கு நினைவு கூரத்தக்கது.

இலங்கை மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தால் நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 300 சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகள் மத்தியில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ செயற்றிறன் போடடியில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரமேம்பாட்டுத் திட்டம்

இலங்கையில் பல நிறுவனங்கள் தமது உற்பத்தித் திறனையும் சேவையின் தரத்தையும் மேம்படுத்த ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகளின் (Japanese 5s) அடிப்படையிலான தரமேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. ஆரம்ப காலத்தில் இலங்கையில் தனியார் நிறுவனங்களே இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வந்தன. 1990 ஆம் ஆண்டுகளில் அரச நிறுவனங்களும் இத்திட்டத்தை பின்பற்ற ஆரம்பித்தன. சுகாதாரத் திணைக்களத்தைப் பொறுத்தவரை 1995 ஆம் ஆண்டு கொழும்பு காசல் வீதி பெண்கள் மகப்பேற்று மருத்துவமனை வைத்திய கலாநிதி கரந்தகொடவினது தலைமைத்துவததின் கீழ் வெற்றிகரமாக இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதனை முன்னுதாரணமாகக் கொண்டு பல வைத்தியசாலைகள் இத்திட்டத்தை பின்பற்றி வருகின்றன. அதேபோன்று ஏனைய பல திணைக்களங்களைச் சேர்ந்த பல அரச நிறுவனங்களும் இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன.

### ஜப்பானிய 5s கோட்பாடு

ஜப்பான் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது முற்றாக நிர்மூலமாக்கப்பட்ட தேசம். இயற்கை வளங்கள் குறைந்த ஓர் நாடு. அழிவடைந்த தேசத்தை இருந்த சொற்பவளங்களுடன் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய சவாலை ஜப்பானியர்கள் எதிர்நோக்கினர் இருக்கின்ற சொற்ப வளங்களைப் பயன்படுத்தி அதி உச்ச பயனைப் பெற ஜப்பானியர்கள் அறிமுகப்படுத்திய முகாமைத்துவ நடைமுறையே ஜப்பானிய 5s. இக் கோட்பாட்டை பின்பற்றி இன்று ஜப்பான் சர்வதேச மட்டத்தில் ஓர் பொருளாதார வல்லரசாக மிளிர்கின்றது. ஜப்பானின் வெற்றியின் இரகசியங்களில் இது அடிப்படையானது.

ஜப்பானின் முன்மாதிரியைப் பின்பற்றி தென்கிழக்காசியாவில் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, தென்கொரியா, தாய்வான் போன்ற பல நாடுகள் மிகத் துரிதமாக வளர்ந்து வருகின்றன. வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை போன்ற மனித வளத்தில் அதிகம் தங்கியுள்ள வளர்முக நாடுகளுக்கு இக்கோட்பாட்டை பின்பற்றுவது வரப்பிரசாதமாக அமையும். எனவேதான் இதனை ஒருங்கிணைத்து ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கையில் தேசிய உற்பத்தித் திறன் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

### ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகள் (Japanese 5s Principles)

ஜப்பானிய ஐ விதிக்கோட்பாடுகள் என்பது தர மேம்பாட்டுத்திட்டத்தின் முதற்படி அல்லது அடிப்படையாகும். ஒரு நிறுனத்தின் உற்பத்தித்திறனையும், சேவையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தையும் மேம்படு த்தும் நோக்குடன் ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகளைப் பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

### S1 Seiri தரம் பிரித்தல்

நிறுவனத்திலுள்ள சகல பொருட்களையும் தேவையானவை, தேவையற்றவை என இருபெரும் பிரிவுகளாக தரம் பிரிக்கவேண்டும். தேவையற்ற பொருட்களை வேலைத் தளத்திலிருந்து அகற்ற வேண்டும்.

### S2 Seiton ஒழுங்குபடுத்தல்

நிறுவனத்தில் தற்போது எஞ்சியுள்ள தேவையான பொருட்களை மிகக் குறுகிய நேரத்தில் உடனடியாக எடுக்கக் கூடியவாறு ஒழுங்காக அடுக்கிவைத்தல்.

### S3 Seiso துப்புரவாக்கல்

நிறுவனத்தை தொடர்ச்சியாக கிரமமாக முழுமையாக துப்புரவாக வைத்திருத்தல்.

### S4 Seiketsu நியமப்படுத்தல்

நிறுவனத்தின் சகல பிரிவுகளிலும் முதல் மூன்று விதிகளையும் (S1, S2, S3) ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தல், நிறுவனத்தின் செயற்பாடுகளை துரிதப் படுத்தவும் இலகுவாக்கவும் நியமங்களை வகுத்தல்.

### S5 Shitsuke சுய ஒழுக்கம்

மேற்குறிப்பிட்ட நான்கு விதிகளையும் (S1, S2, S3, S4) நிறுவனத்தின் சகல பணியாளர்களும் சுய ஒழுக்கமாக பின்பற்ற தொடர்பயிற்சி வழங்கல்.

### ஜப்பானிய ஐ விதிகளின் நன்மைகள்

ஒரு நிறுவனத்தில் ஜப்பானிய ஐ விதிக்கோட்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் பின்வரும் நன்மைகள் கிட்டும்.

நிறுவனம் அழகாக துப்புரவாக மாறும் நிறுவனம் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதாக திகழும் நிறுவனத்தின் செயற்பாடுகளை இலகுவாகவும், துரிதமாகவும் நிறைவேற்ற லாம். ஆதிக நேரத்தை மீதப்படுத்தலாம், நிறுவனத்தின் உற்பத்திறன் கூடும். நிறுவனத்தின் சேவையின் தரம் உயரும், பாவனையாளர்களின் திருப்தி அதிகமாகும், பணியாளர்கள் மத்தியில் சுயகௌரவம், அத்ம திருப்தி, குழமனப்பான்மை வளரும், நிறுவனத்தின் நன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பு உயரும், நிறுவனத்திற்கு சமூகத்தின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் கிட்டும்.

இலங்கையில் பல அரசு நிறுவனங்கள் ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்த முயற்சி எடுத்துள்ளன. ஆனால் சில நிறுவனங்கள் மட்டுமே அம் முயற்சியில் வெற்றியடைந்துள்ளன. ஒரு நிறுவனத்தில் ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகளை வெறுமனே அறிமுகப்படுத்தினால் மட்டும் போதாது. அதனை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

யாழ் மாவட்ட சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் சுமார் 15 நிறுவனங்கள் இக்கோட்பாட்டை வெற்றிகரமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இவற்றில் 4 நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் விருதுகளை வென்றுள்ளன. பல நிறுவனங்கள் மாகாண மட்டத்திலும் விருதுகளை பெறவுள்ளன. எமது வெற்றியின் இரகசியம் என்ன? எமது அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

**அறிமுகம்**

யாழ், மாவட்ட சுகாதார திணைக்களத்தில் நாம் 2010 ஆம் ஆண்டு ஜப்பானிய 5s கோட்பாடுகளின் அடிப்படையிலான தர மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த முடிவுசெய்தோம். யாழ் மாவட்ட சுகாதார திணைக்களத்தின் அனைத்து நிறுவனங்களிலும் இதனை ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. எனவே இத் திட்டத்தை பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்த மூன்று நிறுவனங்களை தெரிவு செய்தோம். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.

**அறிமுகப்பயிற்சி**

இம் மூன்று நிறுவனங்களையும் சேர்ந்த பணியாளர்களுக்கு இத் திட்டம் பற்றிய அறிமுகப்பயிற்சியை இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட நிபுணர் திலகசிறியின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் வழங்கினோம். அக்காலத்தில் இத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்திய ஓர் நிறுவனத்திற்கு களத்தரிசிப்பிற்காக செல்ல வடமாகாணத்தில் ஒரு நிறுவனம் கூட இருக்கவில்லை. எனவே இத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய கொழும்பு காசல் வீதி பெண்கள் மகப்பேற்று மருத்துவ மனைக்கும் மோட்டார் வாகன திணைக்களத்திற்கும் இம் மூன்று நிறுவனங்களிலிருந்தும் தெரிவான 60 பணியாளர்களை அழைத்துச் சென்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செயல் முன்னேற்றக்குழு (Work improvement Team)

ஆரம்ப பயிற்சியை நிறைவு செய்த பின்னர் இத்திடத்தை அறிமுகப்படுத்தும் முதல்படியாக நிறுவனத்தில் ஒவ்வொரு பிரிவிலும் செயல்முன்னேற்றக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இக் குழுவில் அப்பிரிவில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமமான அங்கத்துவத்தை வகித்தனர். இக் குழுவிற்கு ஓர் சிறிய நிர்வாக சபை அமைக்கப்பட்டது. இக்குழு எவ்வாறு தமது பிரிவில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அதற்கான தேவைகள், பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தன.

### தர முகாமைத்துவ குழு (Quality Management Team)

ஒவ்வொரு நிறுவனத்திலும் நிறுவனத்தலைவரின் தலைமையில் தர முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டது. இக் குழுவில் ஒவ்வொரு பிரிவினதும் செயல் முன்னேற்றக் குழுக்களின் பிரதிநிதிகள் இடம் பெற்றனர். அவர்கள் தமது பிரிவுகளில் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் தமது பிரிவின் தேவைகள். பிரச்சினைகள் பற்றியும் விளக்கமளித்தனர். ஆதன் அடிப்படையில் நிறுவன மட்டத்தில் தேவைகள் தொகுக்கப்பட்டு அவற்றை பூர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு இயன்றவரை தீர்வுகள் காணப்பட்டன. இப்படியாக இக் குழுவின் கண்காணிப்புடனும் மேற்பார்வையுடனும் தர மேம்பாட்டுத்திட்டம் இந் நிறுவனதங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

## எமது வெற்றியின் இரகசியங்கள்

### 01. குழுச் செயற்பாடு (Team Work)

ஒரு நிறுவனத்தில் ஜப்பானிய 5s கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது அங்கு பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை ஓர் குழுவாக இணைந்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் குழு மனப்பாங்கு வளர்க்கப்பட வேண்டும்.

எமது நிறுவனங்களில் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய போது உயர்மட்ட நடுத்தர உத்தியோகத்தர்களுடன் சிற்றூழியர்களுக்கும் சம உரித்து வழங்கப்பட்டது. அவர்களும் இத் திட்டத்தின் பங்காளர்கள் என்பது ஆரம்பத்திலிருந்தே தெளிவாக உணரவைக்க்ப்பட்டது. ஆரம்ப பயிற்சிமுதல் நடைமுறைப்படுத்தல் வரை அவர்களும் சம பங்காளர்களாக உணர்ந்து செயற்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானிய ஐ விதிக் கோட்பாடுகளில் மூன்றாவதான S3 Seiso வை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ச்சியாக தக்க வைப்பதில் எமது நிறுவனங்களின் சிற்றூழியர்கள் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அவர்கள் தாமும் இத் திட்டத்தின் பங்காளிகள் என்பதை உணர வைப்பதில் நாம் வெற்றி கண்டோம்.

பல அரசாங்க நிறுவனங்கள் ஜப்பானிய 5s கோட்பாடு என்பது மேல், நடுத்தர மட்ட உத்தியொகத்தர்களுடன் மட்டும் சம்பந்தப்பட்ட திட்டம் என தவறாக புரிந்து கொள்கின்றனர். பல நிறுவனங்கள் அறிமுகப்பயிற்சியில் சிற்றூழியர்களை பங்கெடுக்க வைக்கத் தவறுகின்றன. ஆந்த நிறுவனங்களின் கீழ் மட்ட ஊழியர்களும் 5s என்பது தமக்கு சம்பந்தமில்லாத மேல், நடுத்தர மட்ட உத்தியோகத்தர்களின் சமாச்சாரம் எனக் கருதுகின்றனர்.

இதனால் அவர்களது பங்களி ப்போ, ஒத்துழைப்போ சரியாக இத்திட்டத்திற்கு கிடைப்பதில்லை.

குழுமனப் பாங்கையும், குழுச் கெயற்பாட்டையும் வளர்ப்பதில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அமைக்கப்படும் செயல் முன்னேற்ற குழுக்களின் பங்கு முக்கியமானது உதாரணமாக எமது வைத்தியசாலை விடுதிகளில் அமைக்கப்பட்ட செயல் முன்னேற்றக் குழுக்களில் வைத்திய நிபுணர், வைத்திய அதிகாரிகள் தாதிய உத்தியொகத்தர்கள் சிற்றூழியர்கள் அனைவரும் இணைந்து ஓர் குழுவாக ஒற்றுமையாக தமது பிரிவின் முன்னேற்றத்திற்காக உழைத்தார்கள்.

எமது நிறுவனங்களில் உள்ள பிரிவுகளிடையே எப் பிரிவு சிறப்பாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது என்பதில் ஓர் ஆரோக்கியமான போட்டியை உருவாக்கினோம். இதனால் உத்தியோகத்தர்களுக்கிடையேயான பதவி நிலை முரண்பாடுகள் வெகுவாகக் குறைவடைந்தன.

## 02. கடுமையான உழைப்பு (Hard Work)

ஒருநிறுவனத்தில் ஜப்பானிய 5s கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அந்நிறுவனததின் கட்டமைப்பையும், செயற்பாடுகளையும் அடிப்படையாக மறுசீரமைக்க வேண்டும். இது மிகப்பாரிய பணி மிகப்பாரிய சவால் 5s என்பதை விலை கொடுத்து வாங்க முடியாது அல்லது சில நிபுணர்களை அல்லது வளவாளர்களை வாடகைக்கு அமர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்ற முடியாது அந் நிறுவனத்தின் உத்தியோகததர்களே அதனை நிறைவேற்றி முடிக்க வேண்டும்.

எமது நிறுவனங்களில் இத் திட்டத்தை அறிமுகப்படுத்த நிறுவனங்களின் வகைக்கு ஏற்ப சராசரியாக மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை எடுத்தன. இக் காலத்தில் எமது உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் இரவு பகலாக மிகக் குடுமையாக உழைத்தார்கள். விடுமுறை நாட்களில் வந்து உழைததார்கள் எந்தவித மேலதிக வேதனமும் எதிர்பார்க்காது அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்கள் தமது பிரிவில் வளர்ச்சிக்காக தமது சொந்தச் செலவில் பல விடயங்களைச் செய்தார்கள். எமது பல நிறுவனங்கள் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான செலவை உத்தியோகத்தர்கள் தமது சொந்த நிதிப்பங்களிப்புடன் ஆரம்பித்தார்கள். மொத்தத்தில் தமது நிறுவனத்தில் இத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காக நமைம்மை அர்ப்பணித்து உழைத்தார்கள். அதில் வெற்றி கண்டார்கள்.

இன்று நான் வாங்கும் விருதுகளுக்குப் பின்னால் நாம் காணும் அழகான, தூய்மையான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களுக்குப் பின்னால் எமது உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் கடுமையான அர்ப்பணிப்பான, இல்சிய வேட்கைக்கான உழைப்பு உள்ளதை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

03. நேர்மறையான மனப்பாங்கு (Positive Attitude)

எமது அரச நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மத்தியில் நல்ல அறிவும், ஆற்றலும் உள்ளது. ஆனால் நல்ல நேர்மறையான மனப்பாங்கு இல்லை. இதனால் தான் பல அரச நிறுவனங்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதில் தோற்றுப் போகின்றன. ஒரு நிறுவனத்தில் யப்பானிய 5S கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் சகல உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் மேலதிகமாக, கடுமையாக உழைக்க வேண்டும். இதற்கு பலர் தயாராக, உடன்பாடாக இல்லை. எமக்கு ஏன் இந்த மேலதிகத் தொல்லை என பலர் கருதுகின்றனர். இதனால் தான் பல நிறுவனங்களில் யப்பானிய 5S விதிகள் பயிற்சி அளிப்பதுடன் நின்றுவிடுகின்றது. நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

எமது நிறுவனங்களிலும் ஆரம்பத்தில் இவ் விடயம் எமக்கு பெரும் சவாலாக இருந்தது. இயல்பாகவே பலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கவில்லை. யப்பானிய 5S கோட்பாடுகளை எமது பணியாளர்களுக்கு புரிய வைப்பது எமக்கு சிரமமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாக இருக்கவில்லை. அதனால் அதனை நடைமுறைப்படுத்த தேவையான நேர்மறை மனப்பாங்கை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மத்தியில் வளர்ப்பதற்காக நாம் கடுமையாக உழைத்தோம். பயிற்சிகளில் கூடுதலான நேரத்தை அதற்காக அர்ப்பணித்தோம்.

நேர் மறை மனப்பாங்கை வளர்க்கும் ஓர் யுக்தியாக எமது பணியாளர்களை யப்பானிய 5S கோட்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களைக் காண்பித்தோம். அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களின் அனுபவங்களை எமது பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ள வைத்தோம். வெற்றிகரமாக இதனை நடைமுறைப்படுத்திய நிறுவனம் அதன் மூலம் கண்ட பலன்களை நேரடியாக காண வைத்தோம். இது எமது பணியாளர்கள் பெரும்பாலானோர் மத்தியில் பாரிய மன மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஆரம்பத்தில் இருந்தே நூற்றுக்கு நூறு வீதமான பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. ஆரம்பத்தில் 50 - 60 வீதமான பணியாளர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். சிலர் பார்வையாளர்களாக ஒதுங்கி இருந்தார்கள். ஆனால் இத்திட்டத்தை மெல்ல மெல்ல வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்த பின்னர் அதன் பலன்கள் தெரிய ஆரம்பிக்க படிப்படியாக ஏனையோரும் இணைந்து கொண்டனர். தற்போது எமது நிறுவனங்களில் 90 - 100 % வரையிலான பணியாளர்கள் நல்ல நேர் மறையான மனப்பாங்குடன் இத் திட்டத்தின் பங்காளர்களாக உள்ளனர்.

## 04. தலைமைத்துவம் (Leadership)

ஒரு நிறுவனத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும் அதன் தலைமைத்தவத்தில் பெரிதும் தங்கியுள்ளது. ஒரு கப்பல் தனது இலக்கை அடைய அதன் கப்டனின் பங்கு எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று ஒரு நிறுவனம் தனது இலக்கை அடைய அதன் தலைமைத்துவம் மிக முக்கியமானது. பல நிறுவனங்களில் குழு மனப்பாங்குடனும், நேர்மறையான மனப்பாங்குடனும், கடுமையாக உழைத்து யப்பானிய 5S கோட்பாட்டை நடைமுறைப்படுத்த சிறந்த பணியாளர் குழாங்கள் உள்ளன. ஆனால் அவர்களை சிறப்பாக வழிநடாத்தி, வழிகாட்டிச் செல்ல சிறந்த தலைமைத்துவம் இன்மையால் யப்பானிய 5S இந் நிறுவனங்களில் பகற் கனவாகவே இன்னும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தலைவர் தனது அணியை அரவணைத்து வழிகாட்டிச் செல்லும் குழுத் தலைவராக (Team Leader) இருக்க வேண்டும். தான் பணியாளருக்கு உபதேசிப்பதை தானே முன் உதாரணமாக நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். தளத்திலும், களத்திலும் எப்போதும் பணியாளர்களுடன் அவர்களில் ஒருவராக இருக்க வேண்டும். பணியாளர்களின் வெற்றிகளிலும், தோல்விகளிலும், இன்ப, துன்பங்களிலும் பங்கெடுக்க வேண்டும். தலைவர் "தலையைக் காட்டி விட்டு" மறையும் தந்திரத்தைப் பாவித்தால் யப்பானிய 5S கோட்பாடும் நிறுவனத்தில் "தலையைக் காட்டி விட்டு" மறைந்து விடும்.

எமது அனுபவத்தில் எமது நிறுவனங்களில் பல தலைவர்கள் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி இத் திட்டத்தை மிக வெற்றிகரமாகச் செயற்படுத்தினர். மறுபுறம் இத்திட்டம் அவர்களை சிறந்த தலைவர்களாக பட்டை தீட்டியது. அவர்களது சிறந்த தலைமைத்துவப் பண்புகளை, ஆளுமைகளை வெளிக்காட்ட சிறந்த சந்தர்ப்பமாக அமைந்ததுடன் அவர்களுக்கு சிறப்பான சமூக அங்கீகாரத்தையும் தேடித்தந்தது.

05. மேல் மட்ட ஆதரவு (Support of Administrative Hierachy)

எப்போதும் ஒரு அரச நிறுவனத்தின் சிறப்பான சீரான செயற்பாடுகளுக்கு அந் நிறுவனம் சார்ந்த திணைக்களத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள மேல் மட்ட அதிகாரிகளின் ஆதரவும், ஆசீர்வாதமும் மிக அவசியம். இத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த எமக்கு அந்த ஆதரவு சிறப்பாக கிடைத்தது.

எமது நிர்வாகத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளான கௌரவ வடமாகாண ஆளுநர், கௌரவ வடமாகாண சுகாதார அமைச்சர், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் சிறந்த வழிகாட்டல்களும், ஆலோசனைகளும், ஆதரவும் இத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக செயற்படுத்த பக்கபலமாக இருந்தன. நிர்வாக நடைமுறைகளில் இத்திட்டத்திற்கான அங்கீகாரத்தையும், அனுமதிகளையும் வழங்கி எமது பணியை இலகுபடுத்தி எம்மை எப்போதும் ஊக்குவித்து வந்துள்ளனர்.

மேலும் எமக்கு அறிமுகப் பயிற்சியை சிறப்பாக வழங்கிய இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஸ்ட நிபுணர் திரு.திலகசிறி அவர்களும் எமக்கு தொடர் பயிற்சிகளை வழங்கி சிறந்த ஆலோசகராகவும் விளங்கி எம்மை ஊக்கப்படுத்திய மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார அமைச்சின் தர முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிறீதரன் அவர்களும் எமது வெற்றிக்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

06. சமூக பங்களிப்பு (Community Participation)

ஓர் அரச வைத்தியசாலையின் வளர்ச்சியும், எழுச்சியும் அதனைச் சார்ந்த சமூகத்தின் அக்கறை, ஆர்வம், பங்களிப்பு என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. இது ஓர் அரச வைத்தியசாலை. இதனை அபிவிருத்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நோய் வந்தால் இங்கு வந்து மருந்து எடுப்பதுடன் எமது கடமை முடிந்து விட்டது என அப் பிரதேச மக்கள் சிந்தித்தால் வைத்தியசாலையின் வளர்ச்சி மந்தமாகவே இருக்கும். இது எங்கள் வைத்தியசாலை. எங்கள் பிரதேச மக்களுக்கு சேவை வழங்கும் வைத்தியசாலை. எமது அடுத்த தலைமுறைகட்கும் சேவை வழங்கப் போகும் வைத்தியசாலை. எனவே இதை வளர்த்தெடுப்பதில் நாமும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று மக்கள் உணர்ந்த ஊர்களில் உள்ள வைத்தியசாலைகள் துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. யாழ் மாவட்டத்தில் பல ஊர்களில் அந்த உணர்வை ஊட்டுவதில் நாம் வெற்றி கண்டோம்.

யாழ் மாவட்டத்தில் 45 வைத்தியசாலைகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஏராளமான தேவைகள் உள்ளன. எமக்கு கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிதிவளத்தைக் கொண்டு அனைத்து வைத்தியசாலைகளின் தேவைகளையும் திருப்திகரமாக பூர்த்தி செய்ய முடியாது. எனவே தான் சமூகத்தின் பங்களிப்பு இவ் வைத்தியசாலைகளின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. யாழ் மாவட்டத்தில் உள்ள பல வைத்தியசாலைகளில் அப் பிரதேச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் அவ் வைத்தியசாலைகளின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பைச் செலுத்தி வருகின்றன.

பல வைத்தியசாலைகளில் யப்பானிய 5S கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தேவையான நிதி வளத்தை திணைக்களத்தால் வழங்க முடியாத நிலையில் நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் தமது பங்களிப்பின் மூலம் இத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த உறுதுணையாக இருந்துள்ளன. அந்த சமூக அக்கறையும், பங்களிப்பும் எமது மிகப் பெரிய பலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தித்த சவால்கள்

01. ஆளணி பற்றாக்குறை

யாழ் மாவட்ட சுகாதார திணைக்களம் பலத்த ஆளணிப்பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றது. இந்நிலையில் எமது அன்றாட பணிகளையும் செய்து கொண்டு யப்பானிய 5S திட்டத்தை நடைமுறைப்படுத்த அதற்கு மேலதிகமாக பற்றாக்குறையான ஆளணியுடன் நாம் உழைக்க வேண்டிய பாரிய சவாலை எதிர்கொண்டோம். ஆனால் எமது பணியாளர்கள் அந்த பலவீனத்தையே பலமாக மாற்றிக்காட்டினார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற இலட்சிய வெறியுடன் உழைத்து எமது கனவை நனவாக்கினார்கள்.

02. நிதிவளப்பற்றாக்குறை

யப்பானிய 5S திட்டத்தை சிறப்பாக, முழுமையாக நடைமுறைப்படுத்த ஏராளமான நிதி தேவை. ஆனால் எமக்கு கிடைக்கும் நிதி மூலம் அதனை திருப்தி செய்ய முடியாது. சில திட்டங்கள் மூலம் சில பணிகளை செய்ய முடிந்தது. வைத்தியசாலைகளில் நோயாளர் நலன்புரிச்சங்கங்கள் எமக்கு சமூகத்தின் பங்களிப்பை பெற்றுத்தந்தார்கள். எமது ஊழியர் நலன்புரிச்சங்கங்களும் தமது பங்களிப்பை வழங்கினார்கள். எமது பணியாளர்கள் சிலர் தமது சொந்த செலவிலேயே சில சிறிய விடயங்களை செய்து முடித்தனர்.

03. களத்தரிசிப்பிற்கான நிறுவனம் இல்லாமை

நாம் இத்திட்டத்தை 2010ம் ஆண்டு அறிமுகப்படுத்த எமது பணியாளருக்கு பயிற்சி வழங்கிய போது இதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய ஒரு நிறுவனத்தை அவர்கட்கு களத்தரிசிப்பிற்காக காட்ட வடமாகாணத்தில் ஒரு நிறுவனம் கூட இருக்கவில்லை. எனவே கொழும்பிலுள்ள காசல் வீதிப் பெண்கள் மகப்பேற்று மருத்துவமனைக்கும், மோட்டார் வாகன திணைக்களத்திற்கும் அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் சகல பணியாளரையும் அழைத்துச் செல்ல முடியவில்லை. ஒரு பகுதியினரை மட்டுமே அழைத்துச்செல்ல முடிந்தது.

ஆனால் தற்போது நாம் ஏனைய எமது நிறுவனங்கட்கு பயிற்சி வழங்கும்போது யாழ்ப்பாணம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலை, சங்கானை, பிரதேச வைத்தியசாலை, சாவகச்சேரி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய நிறுவனங்களை களத்தரிசிப்பு நிலையங்களாக பயன்படுத்தி வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பணியாளர்களின் தொடர் இடமாற்றம்

அரச நிறுவனங்களில் பணியாளர்களின் இடமாற்றங்களும், புதிய நியமனங்களும் இயல்பானவை. நாம் இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய நிறுவனங்களில் தொடர்ச்சியாக புதிய பணியாளர்கள் இணைந்த வண்ணம் இருந்தனர். எனவே புதிதாக வரும் பணியாளர்கட்கு தொடர்ச்சியான அறிமுகப் பயிற்சியை ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்ய வேண்டி இருந்தது.

முடிவுரை

யப்பானிய 5S கோட்பாடுகள் எமது நிறுவனங்களில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின. பணியாளர்கள் மத்தியில் புத்துணர்ச்சியையும், புதிய உத்வேகத்தையும் தந்தது. மக்கள் மனங்களில் எமது நிறுவனங்கள் பற்றிய நன்மதிப்பு உயர்ந்தது.

தர மேம்பாட்டுத் திட்டத்தில் யப்பானிய 5S திட்டம் என்பது முதற்படியே. ஒரு நிறுவனத்தை இதன் மூலம் அழகாக, துப்பரவாக, ஒழுங்கமைக்கப்பட்டதாக மட்டும் வைத்திருந்தால் போதாது அது மக்களுக்கு வழங்கும் சேவையில் முன்னேற்றம் காண வேண்டும். அதுவே தர மேம்பாட்டுத் திட்டத்தின் இறுதி இலக்கு.

அந்த தரமான சேவையை நோக்கிய எமது திடமான பயணம் தொடரும்.

(நிறையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை - வீரகேசரி வார இதழில் 16.09.1984ல் வெளிவந்தது

## ஒரு வீணை அரங்கேற்றம் தேடி

**கரவையூர் கேதீஸ்வரன்**

மேலை வானில் மாலை அப்படியென்ன விலை செய்தது. ஏன் இப்படிச் செக்கச் சிவந்து போய்விட்டது. அந்த மனிதர் நடந்து கொண்டிருக்கிறார். தோற்றத்தில் பழுத்த சைவப்பழம், உள்ளத்திலும்தான். ஆயகலைகள் எத்தனையோ அது தான் அவருக்கு வயது. அன்பானவர், பழக இனியவர். இவர்தான் எங்கள் மயில்வாகனம் மாஸ்ரர். கவிஞர் கண்ணதாசனை "கவிஞர்" என்பது போல் மயில்வாகனம் மாஸ்ரரையும் "மாஸ்ரர்" என்றாலே ஊரறியும்.

நடையில் ஒரு புதுவேகம்; புத்துணர்வு; எதையோ யாரிடமோ சொல்ல வேண்டும் போலொரு தவிப்பு. அவர் புளியடி மதகை நெருங்கி விட்டார். இன்னும் வீட்டிற்குக் கொஞ்சத் தூரம்தான்.

புளியடி மதகு; வேலை வெட்டியின்றித் திரியும் சிலர் உத்தியோகம் பார்க்கும் "திறந்த கூரைக்" காரியாலயம். மாலை நேரங்களில் காரியாலயம் களைகட்டும், ரியூசன்களுக்கு "படிக்கச்" செல்லும் மாணவியர் ஊர்வலம் இந்தவழியாகத்தான் செல்லும். மழை வெள்ளத்தை அருமையாகக் கண்ட புளியடி மதகெங்கும் "கலை" வெள்ளம் பெருக்கெடுத்தோடும். சுருக்கமாகச் சொன்னால் அம்பிகைகள் ஊர்வலம். அடியார்கள் தரிசனம்.

மாஸ்ரரைக் கண்டதும் சில அடியார்கள் தங்கள் "கலை முகங்களை" மறுபக்கம் திருப்பிக் கொள்கிறார்கள் மாஸ்ரரின் பழைய மாணவர் சங்கம். மாஸ்ரர் மனதிற்குள் சிரித்துக் கொள்கிறார். "காலம் நல்லாக் கெட்டுப் போச்சு" பெருமூச்சு ஒன்றை உதிர்த்துக் கொண்டு வேகமாக நடக்கிறார்.

ஒருவாறாக வீடு வந்துவிட்டது. மாஸ்ரரின் தரிசனத்தை எதிர்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மனைவி பாக்கியம் வாசற்படியில் காத்திருக்கிறாள். அந்த எதிர்பார்ப்பிலும் ஏதோவொன்றை அறிவதில் ஒரு தவிப்பு. வழக்கமான வரவேற்பு, உபசாரப் படலங்களின் பின் மாஸ்ரர் முற்றத்தில்லிருந்த சாய்மனைக் கதிரையில் ஆற அமர சாய்ந்து கொள்ள மனைவி அருகமருகிறாள். போன விசயம் என்ன மாதிரி, காயா, பழமா?" அறிய வேண்டுமென்ற ஆவலும் சொல்ல வேண்டுமென்ற தவிப்பும் சந்தித்துக் கொண்ட வேளையில் ஒரு தளிர்க்கரம் தேநீர்க்குவளையுடன்"அப்பா, இந்தாங்கோ தேத்தண்ணியைக் குடியுங்கோ" அந்த குரல் எந்த தேவதையிடமிருந்து? அவள் பாஸ்கரி மாஸ்ரரின் இளைய மகள். அவள் அழகானவள் என்பதை விட அழகு என்பது அவளைப் போலிருக்கும் என்பது சாலப் பொருந்தும். ஒரு நாளுக்கு மணித்தியாலயம் கொடுக்கும் முத்தங்களின் தொகை அவளது வயது.

"பாஸ்கரி! எங்கை மல்லிகாவைக் காணயில்லை" தேநீரை வாங்கிக் கொண்டே மாஸ்ரர் வினாவுகிறார்.

மல்லிகா - மல்லிகையின் மறுபிறவி; அழகின் அவதாரம்; வசந்தத்தின் வாசல்தலம்; அமைதியின் அந்தரங்கம்; அடக்கத்தின் அந்தப்புரம். மொத்தத்தில் தமிழ் பெண்ணிற்கு அவள் வரைவிலக்கணம். மாஸ்ரரின் மூத்த மகள், இளையவள் தங்கமென்றால் இவள் வைரம். குசேலர் பெற்ற தொகை இவளது வயது.

"அக்கா, தச்சந்தோப்பு பிள்ளையார் கோயிலுக்குப் போயிட்டா" பதில் கூறி விட்டு அவள் வீட்டிற்குள் விரைகிறாள். அவளா நடந்தாள்? இல்லை, அன்னம் ஒன்று அழகு நடை பயிலுகின்றது.

"நாங்கள் நம்பின கடவுள் எங்களைக் கைவிடலை. போன விசயம வெற்றிதான். கலியாணத்தை முற்றாக்கிப் போட்டு வந்திட்டன்" அந்த இரு இதயங்களும் சந்தோஷ சாகரத்தில் நீராடிக் கொள்கின்றன.

இந்த மல்லிகையைப் படர விட அவர் ஒரு கொழுகொம்பு தேடி மாப்பிள்ளைச் சந்தையில் கால் வைத்து மூன்று வருடங்களாகி விட்டன. இன்றுதான் அவரது இலட்சியத்திற்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

இந்த மூன்று வருடங்களும் அவர் கண்ட அனுபவம் ஒரு சரித்திரம். எத்தனை வீடுகளிலெல்லாம் ஏறியிருப்பார் ! எத்தனை மாப்பிள்ளையெல்லாம் பார்த்திருப்பார்? எத்தனை எத்தனையெல்லாம் எதிர்பார்த்திருப்பார். எவ்வளவு எவ்வளவெல்லாம் ஏமாந்திருப்பார்? - அவை எல்லாம் ஒரு சரித்திரம்.

மாடுவிற்ற காலம் மலையேறிப் போகிறது. இன்று மாப்பிள்ளைகள் விற்கும் காலம். வெறும் மார்க்கட்டா என்ன? சுப்பர் மார்க்கட் அல்லவா? மாஸ்ரர் அந்த இரண்டு அழகுச் சிலைகளையும் பெற்றெடுத்து நெஞ்சிலிட்டுத் தாலாட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராட்டி வளர்த்த போது எத்தனை ஆயிரம் கனவுக் கோட்டைகளை அவர் கட்டியெழுப்பியிருப்பார். மல்லிகாவிற்கு ஒரு என்ஜினியர்... பாஸ்கரிக்கு ஒரு டொக்டர்...

இன்று இடிந்து போன அந்தக் கனவுக் கோட்டைகளின் கல்தூண்கள் அவரைப் பார்த்துக் கேலி செய்கின்றன. அந்தளவிற்கு உயர தன்னிடம் பொருளாதார சக்தி இல்லையென்பதை உணர்ந்திருந்த அவர், குணமுள்ள ஒரு அரசாங்க உத்தியோகத்தனே போதுமென்ற நிலையிலேயே மாப்பிள்ளைச் சந்தைக்குள் நுழைந்தார். அவர் சந்தித்த மூன்று வருடப் போராட்டத்தின் பின் இன்று தனது இலட்சியத்தை வென்றுவிட்டார்.

"மாப்பிள்ளை நெல்லியடி பக்கம். பருத்தித்துறையில் படிப்பிக்கிறவர். நல்ல குணம் காசாக ஐம்பதினாயிரம் நகையளும் கேட்கினம். இருக்குறதுகளை யெல்லாம் சேர்த்து ஒருமாதிரி சமாளிக்கலாம். இனியும் பாத்துக்கொண்டிருக்கெலாது. அவளுக்கு வயது ஏறிக்கொண்டு போகுது. இன்னும் ஒரு மாதத்திலை இருபத்தெட்டாகப்பொகுது"

"அவளும் உள்ள விரதமெல்லாம் பிடிச்சு கும்பிட்ட கடவுள் அவளைக் கைவிடவில்லை. அவளின்ரை அழகிற்கும் குணத்திற்கும் கட்டாயம் அவளுக்கு நல்லொரு வாழ்க்கை கிடைக்கும்"

அழகிருந்தென்ன, குணமிருந் தென்ன. பணம் இல்லாவிடின் இந்த சீதைகளின் வில்லை ஒடிக்க ஒரு ராமனேனும் முன்வருவதில்லை. பூஜைக்கு வந்தன மலர்கள். ஆனால் அவை பூஜையைக் காணமுடியாது. புழுதியில் மண்டிக் கிடக்கின்றன. ஏனெனில் அவற்றின் மீது பணமாகிய புண்ணிய தீர்த்தம் தெளிக்கப்படவில்லையாம். மாஸ்ரர் தன் அனுபவத்தில் கண்ட உண்மை.

மாப்பிள்ளை பக்கம் கொஞ்சம் வசதியான இடம், கலியாணத்தைக் கொஞ்சம் பெரிசாச் செய்ய விரும்புகினம். சன்னதியிலைதான் தாலி கட்டு"

"மூண்டு வருசமா இழுத்தசடிச்செண்டாலும் அவளுக்கு நல்ல இடமா வந்து அமைஞ்சு போச்சு" அந்த மல்லிகை மலர்வதில் அவர்கள் இருவருக்கும் அளவிடமுடியாத ஆனந்தம். "சொன்னால் போலை நாளைக்கு வெள்ளிக்கிழமை காலமை சன்னதி முருகனட்டைப் போட்டு வந்துதான் மற்ற அலுவல். அவன்தான் எங்களுக்கு வழிகாட்டியிருக்கான்"

திருமணத்திற்கு இன்னும் ஒரு மாதந்தான். மிதிலை சுயம்வரத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வோரிடத்திலும் ஒரு புத்துணர்ச்சி. மாஸ்ரரை முதுமை என்பவள் முத்தமிட அழைத்தாலும் மகளின் மணக்கோலம் காணப்போகும் பூரிப்பில் அவருக்கு இளமை திரும்பிவிட்டது. இருபது வயது இளைஞனைப் போல் ஓடியாடி இயங்கிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வாய்க்கெல்லாம் அவல் கிடைத்து விட்டது. "மாஸ்ரரின் மகளுக்குக் கல்யாணமாம். அவை தமது வழக்கமான அரைத்தல் தொழிலை ஆரம்பித்து விட்டன. மாஸ்ரருக்கு அவரது குடும்பத்துக்கும் ஊரிலே எப்போதும் ஒரு தனி மதிப்பும் மரியாதையும். இந்தத் திருமண ஏற்பாட்டில் பெரும் பங்கு வகித்த புறோக்கர் புண்ணியமூர்த்தி திருமண ஒழுங்குகளைக் கவனிப்பதில் மாப்பிள்ளை வீட்டிற்கும் பெண் வீட்டிற்குமிடையே மாறி மாறி அலைந்து கொண்டிருந்தார். அவர் அடிக்கடி பெருமையுடன் மாஸ்ரரிடம் சொல்லிக் கொள்வார்.

"மாஸ்ரர் உங்களுக்கு ஒரு மாஸ்ரரையே மருமகனாக கொண்டு வந்திட்டன். உங்கடை மகள் கொடுத்த வச்சவள்" உண்மையில் இந்தத் திருமணம் முற்றாகியதில் அவருக்கு ஆனந்தம்.

ஆனால் அவர் இன்று மாப்பிள்ளை வீட்டிலிருந்து கொண்டு வந்த செய்தி அனைவரையும் அதிரவைத்தது. "மாஸ்ரர் மாப்பிள்ளை பக்கம் ஏதோ திடீரென்று சீதனம் காணாதெண்டு நிக்கினம். காசாக இரண்டு இலட்சம் தரச்சொல்லிக் கேட்கினம்.

மாஸ்ரர் ஒருகணம் திகைத்துப் போனார். இது என்ன பேரிடி, திடீரென்று? மாஸ்ரர் தனது சக்திக்குட்பட்ட ஒரு தொகைக்கே சம்மதித்திருந்தார். தனது சக்தியை மீறிப் போக அவர் விரும்பவில்லை. ஆனால் இன்று அவரது சக்தியை சோதித்தால் அவரால் என்ன செய்ய முடியும்? அவர் நிலைகுலைந்து போனார்.

"என்ன செய்ய மாஸ்ரர். உலகம் நல்லா மாறிப்போச்சு. ஒரு பெண்ணைப் பெத்து இண்டைக்கு வாழ வைக்கிறதெண்டால் எத்தனை கஷ்டங்கள். சோதனைகள்" ஆம். அதை மாஸ்ரர் அனுபவித்து பார்த்தவர், அவர் எத்தனை இடமெல்லாம் ஏறி இறங்கியிருப்பார். எத்தனை மாப்பிள்ளைகளை கோட்டைவிட்டிருப்பார். ஒருநாள் உறுதியளிப்பார்கள். மறுநாள் மாறிவிடுவார்கள். ஐந்து பெண்ணைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்பார்கள். ஆனால் இன்று ஒருபெண்ணே போதும் ஒட்டாண்டியாவதற்கு.

"மாஸ்ரர். உங்களுக்கு உண்மையைச் சொல்லுறன். வேறையொரு இடத்திலையிருந்து நாங்கள் கொடுக்கிறதை விட கூடத் தா றதாகக் கேட்டிருக்கினம். அது தான் அவை மாறிவிட்டினம், இந்தக்காலம் கலியாணமெல்லாம் ஏலவிற்பனை மாதிரிப் போச்சு"

மாஸ்ரர் நிலைகுலைந்து போயிருக்கிறார். அவரால் எதையும் பேசமுடியவில்லை. இடிந்து போய் உட்கார்ந்திருந்த மாஸ்ரரின் மனைவி ஆழமான பெரு மூச்சொன்றை உதிர்த்தபடி தனது வேதனைகளைக் கொட்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கிறார். "எங்கடை சமுதாயத்திலை எத்தனை பெண் பிள்ளையள் வாழ முடியாமல் காலம் முழுவதும் கண்ணீரோடை சாகுதுகள். ஏன் இப்பிடி எல்லோரும் காசுக்காகப் பேயாய் அலையிறான்கள். இந்த அக்கிரமத்தை ஒழிக்க யாருமேயில்லையா?"

என்ன செய்ய பாக்கியமக்கா. நாலு பெடியள் படிச்சு வந்து எங்கடை சமுதாயத்தைத் திருத்துவாங்களெண்டு பார்த்தால் படிச்சு வாறவங்கள் தான் லட்சத்திலை சீதனம் கேட்கிறான்கள். இப்படியிருக்க எப்பிடி எங்க சமுதாயம் திருந்தும்?"

"நீங்கள் சொல்லுறதும் சரிதான். எல்லாரும் படிச்சுப் கூழ்ப்பானைக்கை விழுந்தது தான் மிச்சம்"

"மாஸ்ரர் நீங்கள் எதுக்கும் அவசரப்படாமல் நிதானமாக யோசிச்சு முடிவு சொல்லங்கோ. எனக்கு அவசரமா அச்சவேலிக்குப் போக வேண்டியிருக்கு. நான் போட்டு வாறன்" புறோக்கர் விடைபெற்றுக் கொள்கிறார்.

மௌனம் அங்கு ராகம் பாட பெருமூச்சுகள் தாளம் போட்டுக் கொள்கின்றன. மிதிலையில் மீட்டப்பட்ட மோகனம் முகாரியாய் மாறி விட்டது. நாணயத்திற்காக நாணயத்தைக் கைவிடும் உலகை நினைக்க மாஸ்ரருக்கு வெறுப்பாகவும் ஆத்திரமாயுமிருந்தது. என்ன செய்வது அவர்களுக்கு ஈடுகொடுக்க மாஸ்ரரிடம் "நாணய" பலம் இல்லையே. மல்லிகாவிற்கு வயது ஏறி விட்டது. இனி இப்படியாக ஒவ்வொன்றாகக் கோட்டை விட்டுக்கொண்டே போனால் அவர்களுக்குத் திருமணம் ஐம்பதிலா அல்லது அறுபதிலா? இதை எப்படியாவது முடித்தேயாகவேண்டும். மாஸ்ரர் மனதைத் திடப்படுத்திக் கொண்டு சிந்திக்கிறார்.

ஆம். அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். "இந்தக் கலியாணம் நடக்கத்தான் போகுது. அவை கேட்ட சீதனத்தைக் கொடுக்கதான் போறன்" மாஸ்ரர் புதுவேகம் பெற்றவராகக் கூறுகிறார்.

"நீங்கள் என்ன கதைக்கிறியள்? இவ்வளவு காசுக்கு நாங்கள் எங்கை போறது?" மாஸ்ரரின் மனைவி புரியாமல் கேட்கிறார்.

"எங்களட்டை மிஞ்சி இருக்கிற காணி முழுவதையும் விற்கிறதா முடிவு செய்திட்டன்" - மாஸ்ரர் உறுதியாக கூறினார்.

"உங்களுக்கென்ன விசரே. இருக்கிறதையெல்லாம் வித்துக் கொடுத்திட்டு அடுத்த பெட்டையைக் கடலிலையோ தள்ளப் போறியள்?"

"இப்படியே நாங்கள் பாத்துக் கொண்டிருந்தால் இரண்டு பேரையுமே சேத்து கடலிலே தள்ள வேண்டி வரும். இரண்டு பேருமே கடலிலை தாழிறதை விட முதலிலே ஒண்டாவது கரைசேரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைச்ச கடவுள் மற்றவளுக்கும் வழி காட்டாமலா விடப் போறான்?

அந்த வீணை அரங்கேற்றம் காண்பதற்கு இன்னும் ஒரு வாரம். மிதிலை மீண்டும் களை கட்டிக் கொண்டிருக்கிறது.

ஆம்! அந்த மலர் புனித பூஜைக்காக தயாராகிக் கொண்டிருக்கிறது. திருமணத்திற்கு ஊர் முழுவதும் சொல்லியாகிவிட்டது. அலங்கார வேலைகள் ஆரம்பமாகி விட்டன. மாஸ்ரருக்கு அளவுகடந்த ஆனந்தம். அவர் நெஞ்சிலிட்டுத் தாலாட்டிய அன்பு மகள் மணக்கோலம் காணப்போகிறாள். ஊரெல்லாம் வந்திருந்து அவளை வாழ்த்தப் போகிறது. அவளுக்கு ஒரு வாழ்க்கைத் துணை கிடைக்கப் போகிறது. அவளது கனவுகள் கற்பனைகள், ஆசைகள் எல்லாமே அரங்கேறப் போகின்றன. ஆம்! அந்த அரங்கேற்றம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

பூஜை காணப் போகும் அந்த மலரிடம் மட்டும் ஏனோ பூரிப்பைக் காணவில்லை. மலரப் போகும் அந்த மல்லிகையிடம் மட்டும் ஏனோ மகிழ்வைக் காணவில்லை. இரவும் பகலும் அவளை ஏதோ ஒரு சிந்தனை வாட்டியது. ஊனின்றி, உறக்கமின்றி சிந்தனை வானில் எங்கோ சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தாள்.

பெற்றோரையும், தங்கையையும் பிரியப் போகும் வேதனை அவளை வாட்டுவதாக எல்லோரும் எண்ணிக் கொண்டனர்.

அன்று தனது தோழி ஒருத்திக்கு அழைப்பிதழ் கொடுக்கவென்று இன்னொரு நண்பியுடன் புறப்பட்டுச் சென்றவள் மாலையாகியும், மாலை மயங்கி இரவாகியும், வீடு வந்து சேரவில்லை. எல்லாரிடமும் ஒரே பரபரப்பு, பதற்றம். அதிர்ச்சி. அவள் சென்ற நண்பியின் வீட்டுக்கு விரைந்தார்கள். அங்கு அவள் வரவில்லை என்றறிந்ததும் அவளுடன் கூடச் சென்ற நண்பியின் வீட்டுக்கு விரைந்தனர். அவளும் அங்கில்லை என்றறிந்ததும் அவர்கள் ஒவ்வொருவரினதும் தலைக்குள்ளும் ஆயிரம் அணுகுண்டுகள் வெடித்துக் கொண்டன. இதயத்தின் மூலைகளெங்கும் இரும்பு ஆணிகள் தைத்துக் கொண்டன. மாஸ்ரர் மயங்கும் நிலையிலிருந்தார். மற்றவர்கள் செய்வதறியாது திகைத்தனர். நீண்ட நேரம் வீடெங்கும் நடத்திய தேடுதல் வேட்டையின் பின் அவர்களது கையில் கிடைத்தது. அந்த மலர் வரைந்த மடல்.

அன்புள்ள அப்பாவிற்கு !

உங்களால் எதிர்பார்க்க முடியாததொன்றை எதிர்பார்க்க வைத்ததற்கு முதலில் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் என்றுமே எதையுமே உங்களைக் கேட்டுத்தான் செய்திருக்கிறேன். ஆனால் இன்று மட்டும் உங்களைக் கேட்க முடியாத நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கியிருக்கிறேன். ஏனென்றால் சில சமயம் நீங்கள் எனக்குச் சம்மதம் தரமாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அந்தளவிற்கு என்னை நேசிக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்காவிடினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செல்லும் பாதை சரியானதென்ற அசைக்க முடியாத உறுதியுடனேயே அதில் செல்கிறேன். நீங்கள் என் மீது வைத்திருக்கும் ஆறாத பாசத்திற்கு நான் என்றுமே உங்கள் மகள்தான்.

அப்பா! நீங்கள் எனக்கு ஒரு திருமணம் நடத்தவென்று இந்த மூன்று வருடங்களாக பட்ட கஷ்டமெல்லாம் என் இதயத்தில் ஆறாத காயங்களாக இருக்கின்றன. நீங்கள் பட்ட கஷ்டங்களையெல்லாம் நினைத்து எத்தனையோ இரவுகள் கண்ணீர் விட்டிருக்கிறேன். ஏனப்பா என்னைப் பெண்ணாகப் பெற்றீர்கள். அதனால்தானே உங்களிற்கு இவ்வளவு கஷ்டங்களுமென்று உங்களை மனதினுள் கோபித்திருக்கிறேன். இறுதியாக உங்கள் கஷ்டங்களின் பலனாக ஒரு மாப்பிள்ளையை முடிவு செய்தீர்கள். அவர்கள் எனக்கு வாழ்வளிக்க இரண்டு லட்சம் ரூபாவும் நகையும் கேட்டார்கள். இது எங்கள் சக்திக்கப்பாற்பட்ட தொகையென்று அறிந்திருந்தும் என்னை எப்படியாவது வாழவைத்துவிட வேண்டுமென்ற துடிப்பில் அதற்கு சம்மதித்தீர்கள். இருக்கின்ற எல்லாவற்றையுமே கொடுத்து எனக்கு வாழ்வளிக்கிறீர்கள். என் தங்கைக்கு கடவுள் வழிகாட்டுவான் என நம்புகிறீர்கள்.

அப்பா! கடவுள்தான் வழிகாட்டினாலும் இந்த சமுதாயம் எங்களைப் போன்ற ஏழைப் பெண்களை என்றுமே வாழவிடாது. எத்தனையோ ஏழைப் பெண்கள் வாழ்வின்றி வடித்த கண்ணீர்க்குளத்தில் ஆனந்த நீராடும் இந்த சமுதாயம் எமக்கு என்றைக்குமே வழிகாட்டாது.

நாளுக்கு நாள் விலைவாசி கூடும். அத்தோடு மாப்பிள்ளை விலையும் கூடும். இன்று இலட்சம் கேட்பார்கள். நாளை நான்கு லட்சம். அப்போது எப்படி என் தங்கையை வாழவைப்பீர்கள். அப்பா என் உயிர் தங்கை வாழ்வின்றிக் கண்ணீரில் வாடும்போது என்னால் எப்படி நிம்மதியாக வாழமுடியும். என் தங்கையைக் கடலில் அமிழவிட்டு நான் மட்டும் கரைசேர்வதா?

எனக்கும் ஒவ்வொரு பெண்ணையும் போல வாழ்க்கையில் எத்தனையோ ஆசைகளும், கனவுகளும் இருந்தன. ஒரு பெண்ணின் வாழ்விற்கு விலைபேசும் இந்த சமுதாயத்தின் கொடுமைகளின் மத்தியில் அந்த ஆசைகளெல்லாம் மரத்துப் போய்விட்டன. என் இதயத்தில் வாழவேண்டுமென்ற ஆசையை விட, இந்த சமுதாயத்திற்கு வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற வெறியே மேலோங்கியுள்ளது.

அதனால் என் இடத்தை என் தங்கைக்கு விட்டுக் கொடுக்கப் போகிறேன். எனக்குக் குறித்த அதே இடத்தில் அதே நாளில் அதே மணமேடையில் என் தங்கைக்கு வாழ்வு கொடுங்கள்.

மூத்தவள் நானிருக்க இளையவளுக்கு எப்படி திருமணம் நடக்கலாமென்று கேட்கிறீர்களா? எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையை நானே தேர்ந்தெடுத்துக் கொண்டேன். உலகிற்கு அது புதுமையானதாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அது மிகவும் எளிமையானது.

நான் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டேன். அவர் ஒரு கவிஞர். எழுத்தாளர் அபாரமான திறமை படைத்தவர், ஆனால் விபத்தொன்றில் தனது கண்களை யிழந்தவர். அவரது கவிதைகளில் இழையோடும் அவரது இதயத்தின் ஆழமான வேதனைகளில், மனித குலத்தால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அவரது உள்ளத்தின் வேதனைக் குமுறல்களில் என் இதயத்தின் அனுதாபத்தைப் பறிகொடுத்திருக்கிறேன்.

அந்த இலட்சியக் கவிஞருக்கு வாழ்வு கொடுக்க ஒரு இலட்சியப் பெண் கிடைக்க மாட்டாளா என ஏங்கியிருக்கிறேன்.

இன்று நானே அந்த இலட்சியப் பெண்ணாவதில் பெருமையும் நிம்மதியுமடைகிறேன். இது புதுமையோ புரட்சியோ அல்ல. பெண்களின் வாழ்வுக்கு விலை பேசும் எமது சமுதாயத்துக்கு வாழ்ந்து காட்ட என் வாழ்வை பணயம் வைத்து நான் எடுத்துக் கொள்ளும் சவால்.

சமுதாயம் எதையும் தான் பேசட்டும். வாய்விட்டுக் கத்தட்டும். ஆனால் நான் நிச்சயம் ஜெயிப்பேன்.

நான் எப்படியோ அவரை இந்த திருமணத்திற்கு சம்மதிக்க வைத்துவிட்டேன். எங்கள் அன்புப் பயணம் ஆண்டவன் சந்நிதியில் ஆரம்பமாகிறது. இந்த நிலைகெட்ட சமுதாயத்தின் வாழ்த்துக்கள் என்றுமே எமக்குத் தேவையில்லை.

அப்பா ! நீங்கள் நிச்சயம் என்னைப் புரிந்து கொள்வீர்கள். நான் என்றுமே உங்கள் மகள்தான் அப்பா! தயவு செய்து எங்களை மனப்பூர்வமாக ஆசீர்வதியுங்கள். என் தங்கையின் திருமணத்தைச் சிறப்பாக நடத்துங்கள். அவளை வாழ்த்த நானும் வருவேன். செல்வியாக அல்ல. திருமதியாக.

என்றும் உங்கள் மல்லிகா.

மாஸ்ரரின் விழிகள் அருவியொன்றின் ஊற்றாயின. இதழ்கள், மல்லிகா, "மல்லிகா! நீ என் மகளம்மா" என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டன. அந்த வீணை அரங்கேற்றம் தேடிக் கொண்டது.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுகதை - வீரகேசரி வார இதழ்
31.08.1986 இல் வெளியானது

## மௌனமே கீதமாய்...

**கரவையூர் கேதீஸ்வரன்**

"ஏழு ஸ்வரங்களுள் எத்தனை பாடல்
இதய சுரங்கத்துள் எத்தனை....."

ரி.வி.யில் இன்று "அபூர்வ ராகங்கள்" "கெதியா வாங்கோ. இப்பதான் தொடங்குது..." அந்த வீட்டின் முன் ஹாலில் அந்த வட்டத்து திரை ரசிக உலகம் திரண்டிருந்தது..."

"நல்ல புதுமையான கதை..."

பாலசந்தர் படமெல்லாம் அப்பிடித்தான்..." ரசிகப் பெருமக்களின் விமர்சனங்கள் கண்ணோட்டங்கள். அந்த ரசிக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் அருகேயுள்ள அறையொன்றில் கட்டிலில் புரண்டுகொண்டிருந்தான் சேந்தன்.

அவனது இதயத்திற்கு "இதயமே" இல்லைப் போலும். அவனை அப்படி அவஸ்தைப்பட வைத்துக் கொண்டிருந்தது.

நித்திராதேவியை தழுவத் துடித்தவனால் தலையணைத்தான் தழுவ முடிந்தது.

"சேந்தன் ! படம் தொடங்கி யிட்டுது. பார்க்க வரல்லையோ?

இல்லையம்மா. எனக்கு தலை யிடிக்குது. நான் படுக்க போறன்"

அவன் தாய்க்கு ஒரே மகன். மருத்துவ பீடத்தில் படிக்கும் போது தந்தையை இழந்தவன். அந்த வீட்டு வாசலிருந்த டாக்டர் சேந்தன் எம்.பி.பி.எஸ். போர்ட் அவரது கனவை நனவாக்கிக் கொண்டிருந்தது.

"இண்டைக்கு ஆஸ்பத்திரியில் இருந்து வந்ததிலிருந்து ஒரு மாதிரியாய் இருக்கிறாய். சரி நல்லா தூங்கு. காலை எல்லாம் சரியாகியிடும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியை ஆதரவாக தடவிக் கொடுத்த மருந்து போட்டுவிட்டு அவள் போய்விட்டாள்.

அவனிற்கே தெளிவாக தெரிந்தது. இன்று அவன் அவனாக இல்லை.

"சேந்தன் அண்ணா, "சேந்தன் அண்ணா" என்று அவனைச் சுற்றி சுற்றி வரும் அக்கம் பக்கத்து குழந்தைகளெல்லாம் சேர்த்து மாநாடு கூட்டி வீட்டையே கலகலக்க வைக்கும் அவனா இன்று ஒரு மூலைக்குள் முடங்கி சிந்தனையில் சிறையிருக்கிறான்?

"நாகேஸ்…" "நாகேஸ்…" குரல்கள் குதூகலித்தன. ரி.வி இல் "அபூர்வ இராகங்கள்" அவனே ஓர் அபூர்வ இராகமா? நினைவுத் தீயில் நெஞ்சம் வெந்து கொண்டிருந்தது. எப்படி மறக்க முடியும்?

அந்த நிலவு முகம். துறுதுறுத்த விழிகள். குழந்தையான உள்ளம். வேடிக்கையான பேச்சு. எழுதப்பட்ட சித்திரங்கள். இந்த எழுதாத சித்திரத்தின் முன் எம்மாத்திரம்?

"சித்திரா! - உன்னை உச்சரிப்பதில் இவ்வளவு சுகமா…"

ஆனால் அந்த சுகம் மின்னலாய் மறந்து நெஞ்சில் சுமையாய் கனத்தது.

அந்த சித்திரம் சிதைந்து கொண்டிருக்கிறதா? அவனால் இன்னமும் நம்பமுடியில்லை. இறைவா ! உன் படைப்பின்தான் எத்தனை கொடூரங்கள்.

சில நாட்களிற்கு முன் வாட்டில் அனுமதிக்கப்பட்ட அவளது மருத்துவ பரிசோதனைகளை ஆராய்ந்த போது அவன் அதிர்ச்சிக்குள்ளானான்.

அவளைத் தொற்றியிருந்த புற்றுநோய் அவளை ஆத்மார்த்தமாக காதலித்தது. அந்த சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட தெய்வீகத் "திருமணத்திற்கு" டாக்டர்களால் நிச்சயதார்த்தம் குறிக்க முடிந்ததே தவிர தடைபோட முடியவில்லை. இன்னும் ஐந்தோ, ஆறு மாதங்கள்…

அந்த உண்மையை அவளது உடன்பிறப்பான அவளது அக்காவிடம் தெரிவித்த போது -

அவன் முன்னே அவள் கதறிக் கண்ணீர் வடித்ததை நினைக்க -

புற்றுநோயையே! உனக்கு சாவு வராதா என அவனது மனம் ஏங்கியது.

அவளது அக்காவின் விருப்பப்படி அவளது உண்மை மறைக்கப்பட்டு

"அவள் விரைவில் குணமாகி விடுவாள்" என்ற நாடகத்தை அரங்கேற்ற -

சில மாதங்கள் அவளை வைத்தியசாலையிலேயே தங்கவிட முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனர்.

அவன் இதுபோல் அயிரம் கேஸ்களை பாத்திருக்கிறான். மனம் மரத்துபோயிருக்கிறது. ஆனால் இன்று மட்டும் அவன் ஏன் இப்படி தவிக்கிறான்?

அவளது அன்பான குணமும், அழகான இளமையும் அவனது இதயத்தில் ஏற்படுத்திய பசுமைப் புரட்சியா?

ஒரு வேளை இதுதான் காதலா?

"காதலாவது கத்தரிக்காயாவது. நான் ஒரு டாக்டர். அவள் ஒரு நோயாளி. அதுவும் மரணத்தின் வாயில் நிற்கும் பேசன்ட். வெளியே சொன்னா சிரிப்பார்கள். இதுவும் ஒரு அனுதாபம்தான்..."

தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டு மன அமைதிக்காய் கண்ணதாசனைத் தேடி, "அர்த்தமுள்ள இந்து மதத்தில்" ஆழ்ந்தான்.

கண்ணதாசன் சிலநிமிடங்கள் கைகொடுத்தார். ஆனால் மீண்டும் அதே வானில். அதே துறுதுறுத்த விழிகள். அந்த குழந்தை உள்ளம்...

சே! இந்த நினைவுகளுக்கு விவஸ்தையே கிடையாதா? கூட இருந்தே குழிப்பறிக்கும் பாவிகள்.

இந்தப் பெண்கள் எவ்வளவு பொறாமை பிடித்தவர்கள். அவன் "சித்ரா" தேவியை நினைத்துக் கொண்டதால் நித்திராதேவி அன்றிரவே அனுப்பிவிட்டாள் விவாகரத்து நோட்டீஸ்.

அடுத்த நாள் அவன் வாட்டிற்கு வந்தபோது வாடும் அந்த வாடாத மலர் புதுமலராய் பூத்திருந்தது - மாலையில் மடியப்போவதை அறியாது பூரித்து நிற்கும் காலைப் பூக்களைப் போல்.

அவளது அக்காவின் குட்டி மகன் பாபு " டாக்டர் மாமா! அன்ரி சீக்கிரம் குணமாகி விடுவாளா? நான் அடுத்த வருடம் நேசரிக்கு போகப் போறன். எனக்கு அன்ரிதான் வீட்டில பாடம் சொல்லிதர வேண்டும். எனக்கு அன்ரியில உயிர். தங்கச்சி அம்மா செல்லம். நான் அன்ரிச் செல்லம்..."

"உங்க அன்ரி ரொம்ப சீக்கிரம் குணமாயிடுவாங்க பாபு"

கூறிய போது வேதனை தொண்டையை அடைத்தது. மேலும் அங்கே நிற்கத் திராணியற்றவனாய் வெளியே நடந்தான்.

"பாபுக் கண்ணா! நான் சீக்கிரம் குணமாயிடணும். உனக்கு பாடம் சொல்லித் தரவேனும். நேசறிக்குக் கூட்டிப் போவேனாம். தோப்பிற்கு கூட்டிப் போவனாம். மாம்பழம் பறிச்சுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவேனாம்..."

"சீ எனக்கு மாம்பழம் வேண்டாம். அலுத்துப்போச்சு"

"அப்ப கோயிலுக்கு கூட்டிப் போவேனாம். ஐஸ்கிறீம் வாங்கித் தருவேனாம்"

அஸ்திவாரமில்லாத ஆசைக் கோட்டைகள். விழிகளில் கோலமிட்ட கண்ணீர்த் திவலைகளை துடைத்தபடி மேலே நடந்தான்.

நித்திராதேவியின் "விவாகரத்து" அடுத்து வந்த இரவுகளிலும் தொடர்ந்தது. வேதனைத் தீ... இதயத்தில் வேள்வி செய்தது. நிம்மதி அவனிடத்தில் நிரந்தர ஓய்வு கேட்டது.

யாரோ ஒருத்திக்காக அவன் ஏன் இப்படித் துடிக்கிறான்? அது அவனிற்கே புரியவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. கோயிலுக்குப் போய் வந்தால் கொஞ்சம் நிம்மதியாயிருக்குமென சன்னதி கோயிலுக்குப் போனான். கோயில் வாசலில் சித்ராவின் அக்கா பாபுவுடன்.

"என்ன டொக்டர் லேட்டாயிட்டீங்கள். இப்பதான் பூஜை முடிஞ்சுது"

வாழ்க்கைப் பூஜையிலும் அவன் லேட்டாகி விட்டானா? இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் இலேசாய் வலித்தது.

"பூஜை முடிஞ்சாலும் பரவாயில்லை. முருகன் உள்ளே இருக்கிறார் தானே"

உள்ளத்திலிருந்து விடுபட்டு அவளது உதடுகள் மட்டும் மெல்லியதாய் சிரித்தன.

"சித்ரா முந்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலுக்கு வந்து விரதமிருந்தாள். ஆனால் கடவுள் அவளிற்கு துரோகம் செய்திட்டார்"

நனைந்த விழிகளை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். அவளிற்கு ஆறுதல் கூறி விடைபெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

வழிபட்டு முடிந்ததும் ஏதோ ஒரு வேகத்தில் அர்ச்சனை சீட்டொன்றை வாங்கி வந்து அர்ச்சகரிடம் நீட்டிய போது -

அர்ச்சனையார் பேருக்கு? இதுவரை துணைவந்த தைரியம் அக்கணத்தில் இருந்து அவனைத் தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்தது.

"சி...த்...ரா..." அர்ச்சகர் பார்வையாலேயே ஒரு கேள்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியிட்டார்.

"நட்சத்திரம்?"

அணுகுண்டைப் போடலாம் அல்லது இப்படியும் ஒரு போடு போடலாமென அவனிற்கு இப்போது தான் புரிந்தது.

அவன் ஒரு ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தான்.

- அவளது நட்சத்திரத்தை கண்டு பிடிக்கவல்ல - நட்சத்திரம் தெரியாத பெண்ணிற்கு அர்ச்சனை செய்ய வந்த தன் புத்தியை என்ன செய்யலாமென்று.

ஏதோ ஒரு அப்பாவி நட்சத்திரம் கை கொடுத்தது. ஏன் இப்படி யெல்லாம் புத்தி பேதலிக்கிறது? காதலுக்கு கண்ணில்லை என்பார்களே!அதனாலா? சே! புனிதமான சந்தியில் நின்று கொண்டு எத்தனை அபத்தமான சிந்தனைகள்.

அடுத்த நாள் சித்ரா அவனிடம், "உங்களை நேற்று அக்கா கோவிலில் சந்தித்தாவாமே. அதுசரி நீங்கள் முருக பக்தரா? பிள்ளையார் பத்தரா?"

"ஏன்?"

"முருக பக்தரென்றால் இரண்டு பெண்டாட்டி, பிள்ளையார் பக்தரென்றால் பிரம்மச்சாரி"

"ஓ அதுவும் அப்படியா? அப்படியானால் இரண்டு பேரையும் நான் கும்பிடமாட்டேன். எனக்கு ஒரு பெண்டாட்டி தான் வேணும்"

இருவரும் சில நிமிடங்கள் மனந்திறந்து சிரித்தனர்.

உலரப் போவதை யறியாமல் மலர்ந்து சிரிக்கும் அந்த மலரை நினைக்க இதயமெங்கும் ஆணியடித்தது.

அவனது நினைவுச் சோலையெங்கும் அந்த மலர் மட்டுமே பூத்திருந்தது. தூங்கினால் கனவில் துயில் கலைந்தால் - நினைவில் அவள், அவள், அவள்.

இது நிச்சயமாய் அனுதாபமாய் இருக்க முடியாது. அப்படியானால்..? காதலா?

சாகப்போகும் பெண்ணை காதலிக்கிறேன் என்று வெளியே சொன்னால் கை கொட்டிச் சிரிக்க மாட்டார்களா?

அவனிற்கு தன் மனத்தைத் திறந்து யாருடனாவது பேச வேண்டும் போலிருந்தது. நண்பன் ஜெகநாதனைத் தேடி நெல்லியடிக்குப் போய் - அவனிடம் விபரத்தைக் கூறி தான் அவளை காதலிப்பதாக கூறியபோது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தந்த பதில் -

"நீ சுத்தமான வடிகட்டிய முட்டாள்"

அவன் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே யென்ற வருத்தத்துடன் இன்னும் விபரமாக இன்னும் ஆழமாக தன் உணர்வுகளை எடுத்துக் கூறிய போது -

"நீ மட்டுமல்ல உன் நிலையிலுள்ள ஒவ்வொரு ஆணும் இப்படி சஞ்சலப்படுவான். சாகப்போகும் பெண்ணை யாரும் காதலிப்பானா? நீ அவளிற்காக அனுதாபப்படுகிறாய்!"

"இல்லை. நான் அவளைக் காதலிக்கிறேன்"

" நீ மிகவும் ஆழமாக அனுதாபப்படுகிறாய்"

அப்படியானால் இது வெறும் அனுதாபம்தான். முடிவு செய்தபடி வீட்டிற்கு வந்தான்.

அடுத்தநாள் சித்ரா ரோஜா மலர்கள் பூத்திருந்த கவுணில் ரொம்ப அழகாக இருந்தாள். மலர்களின் ராணியாய்.

வைத்த விழிகள் மொய்த்த அழகு அவனை நிலைதடுமாறச் செய்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?"

சட்டென்று தன்னை சுதாகரித்தபடி,

"உங்களிற்கு சிவசங்கரி கதைகள் ரொம்ப பிடிக்குமோ?

ஒரே சிவசங்கரி புத்தக மயமாய் இருக்கிறதே"

மனதிற்குள் சிவசங்கரிக்கு நன்றி கூறிக் கொண்டான்.

"ஆமாம். சிவசங்கரி என் அபிமான எழுத்தாளர். உங்களிற்கு யார் கதைகள் பிடிக்கும்.

"எனக்கு யார் எழுதினாலும் சரி. காதல்கதை தான் பிடிக்கும்"

"காதலை சிலர் காவியமென்பார்கள். நீங்கள் எப்படியோ?"

ஒருகணம் அதிர்ந்தான் - இன்பத்தில் தான்.

"நான் கவிதை என்கிறேன். ஓர் இதயத்தினால் இன்னோர் இதயத்தில் எழுதப்படும் ஒரு புனிதமான கவிதை"

ஓகோ சொல்கிற தோரணையைப் பார்த்தாலே தெரிகிறது. உங்கள் இதயத்தில் அந்தக் கவிதையை எழுதிவிட்டார்கள் என்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லையில்லை, நான் இன்னமும் சுத்த பிரம்மச்சாரிதான்" என்று கூறுவதில் அவனையறியாமலே ஒரு வேகமிருந்தது.

எதற்கு இந்த குறுக்கு விசாரணை?

மண்டு ! மண்டு ! இருபத்தேழு வயதாகிவிட்டது. இன்னுமா புரிய வில்லை..? தன்னைத்தானே திட்டிக் கொண்டான்.

ஒருவேளை அவளிற்கு அவன் மேல்....

இதயத்தில் இரத்தம் ஓடவில்லை. இன்பவெள்ளம் பாய்ந்தது.

அவனது விழிகள் அவளழகை கொஞ்சம் உரிமையுடனே ஆராய்ந்தன. சட்டெனத் திரும்பிய அவளிடம் வகையாக மாட்டிக் கொண்டான்.

"இன்று நீங்கள் ரொம்ப அழகாயிருக்கிறீர்கள். அவள் மௌனமாக ஜன்னலின் ஊடாக வெளியேபார்த்தாள். ஏதாவது சொல்வாள் என எதிர்பார்த்தவனிற்கு ஏமாற்றம் பதிலாய் கிடைத்தது.

"இன்று நீங்கள் ரொம்ப அழகாயிருக்கிறீர்கள் என்று சொன்னேன்."

அவள் சட்டெனத் திரும்பி -

"நான் இன்று ரொம்ப அழகாய் இருக்கிறேனென்று நீங்கள் சொன்னது எனக்கு கேட்டது நன்றி" என்றவாறு கன்னங்குழிய சிரித்தபடி நாணத்தில் குடிபுகுந்தாள்.

அவனது இதயத்தில் பாலைவனங்க ளெல்லாம் சோலை வனங்களாகி பெரும் பசுமைப்பரட்சி யொன்றே ஆரம்பமானது.

அன்று ஆரம்பித்த பசுமைப் புரட்சி அவனிற்கு காதல் சிறகுகட்டி கனவு வானில் தள்ளி விட்டது.

காதல் என்ற கவிதை ஒரு முறைதான் இதயத்தில் எழுதப்பட முடியும். அவனைப் பொறுத்தவரை அது அவளால் எழுதப்பட்டு விட்டது. அணையப்போகும் விளக்கில் ஒளியைத் தேடும் அவனை உலகம் முட்டாளாக நினைக்கலாம். ஆனால் அதில்தான் அவன் தன் காதலின் ஆத்மார்த்தத்தை உணர்ந்தான்.

அவன் அவளுடன் ஒருநாள் வாழ்ந்தாலும் ஒரு யுகத்தை வாழ்ந்து அனுபவித்த சந்தோஷமும், நிம்மதியும் அவனிற்கு கிடைக்கும்.

உறுதியான மனதுடன் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காதலை அவளிடம் தெரிவித்த போது -

அவள் மௌனமாக சில நிமிடங்கள் வானத்தை வெறித்துப் பார்த்தாள்.

ஒருவேளை தன் நோயைப் பற்றி அறிந்து விட்டாளோ? அதைப் பற்றி யோசிக்கிறாளா..?

உள்ளங்கள் தவிக்கையில் உடல்கள் ஊமையானதால் மௌனம் பேசிக்கொண்டது.

"உங்களிற்கு என்னைப் பிடிக்கவில்லையா?..."

"ச்சே அப்படியில்லை..."

என்றவள் தலைகுனிந்தபடி சற்ற தயங்கியவாறு தொடர்ந்தாள்.

"நீங்கள் தான் சொன்னீர்கள் காதல் ஒரு இதயத்தால் இன்னொரு இதயத்தில் எழுதப்படும் கவிதையென்று. உங்கள் கவிதையை என் இயத்தில் எழுத நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால்..."

அவனது இதயம் படபடத்தது.

"அந்தக் கவிதையை என் இதயத்தில் ஏற்கனவே ஒருவர் எழுதிவிட்டார்"

ஆயிரம் சம்மட்டிகளால் ஓங்கி அறைந்தது போலொரு பிரமை. இதயத்தை இறுகப் பிழிந்து வேதனைச் சாற்றிற்கு வேட்டை நடக்கிறதா? அவன் கட்டியெழுப்பிய காதல் சாம்ராச்சியங்களெல்லாம் கணப்பொழுதில் தவிடுபொடியாகின.

ஆனால், வேதனையை வெளிக்காட்டாமல் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

"இப்போ அவர் எங்கே"?

அவள் பெருமூச்சொன்றை உதிர்த்துக் கொண்டாள்.

"அவர் இப்போ லண்டனில் படிக்கிறார்.. லண்டனிற்கு போன புதிதில் கடிதங்கள் எழுதினார். நானும் பதில் எழுதினேன். அதன்பின் அவரிடமிருந்து கடிதங்களேயில்லை. எத்தனை வழிகளால் அவருடன் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் அவரைப் பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை..."

மீண்டும் ஒரு பெருமூச்சு.

"அவரால் எப்படி என்னை மறக்க முடிந்ததோ தெரியவில்லை. ஆனால் என்னால் அவரை மறக்க முடியவில்லை.

சில நிமிடங்களை மௌனம் விழுங்கிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் காதல் நிறைவேற என்னால் முடிந்த எந்த உதவியையும் செய்யத் தயாராக இருக்கிறேன். தயங்காமல் கேளுங்கள்"

பார்வைக் கணைகள் நேருக்கு நேராய் மோதித் தெறித்தன.

"உங்களால் முடியுமானால் நான் இன்னமும் அவரிற்காக காத்திருப்பதை எப்படியாவது அவரிற்குத் தெரிவியுங்கள். அவர் என்னிடம் திரும்புவார் என்ற நம்பிக்கை இன்னும் என்னிடம் உள்ளது"

அவளது ஆவலை எப்படியாவது பூர்த்தி செய்து விடுவதென்ற முடிவுடன் லண்டனில் இருந்த நண்பனிற்கு அவள் கொடுத்த முகவரியை அனுப்பிஎப்படியாவது அந்த முரளியை கண்டுபிடிக்க உதவுமாறு எழுதினான்.

ஆனால் அந்த முகவரியில் அப்படியொரு முரளியே இல்லையெனப் பதில் வந்தது.

"இந்த முகவரியில் இருந்துதான் அவரது கடைசி கடிதம் கிடைத்தது. ஒருவேளை அவர் இடம் மாறியிருக்கலாம். இது லண்டனிலுள்ள அவரது நெருங்கிய நண்பரின் முகவரி. அவரிடம் கேட்டால் நிச்சயம் அவரைப் பிடிக்கலாம். எனக்காக இந்த உதவியை செய்யுங்கள். ப்ளீஸ்..." அவளது விழிகள் கெஞ்சின.

மீண்டும் லண்டனிற்கு தகவல் கொடுத்துவிட்டு பதிலிற்காக காத்திருந்தான். காலம் மனித மனங்களிட்ட அணைகளையெல்லாம் உடைத்துக் கொண்டு எங்கோ விரைந்து கொண்டிருந்தது. அந்த நிலவு தேயத் தேய அவனது இதய வானமும் இருண்டு கொண்டிருந்தது.

அவனது காதல்தூதன் நிறைவேறாமற் போனாலும் அவளது கடைசி ஆசையை நிறைவேற்றுவதில் அவனிற்கு ஆறுதல் கிடைக்கும்.

அன்று வாட்டிற்கு சென்றபோது அவள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். அவளது மேசையில் அவன் எதையோ எடுக்க முயன்ற போது அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் சிதறி விழுந்தன.

விழுந்த புத்தகங்களை சத்தம் செய்யாமல் அவன் அடுக்கிக் கொண்டிருந்த போது -

ஒரு புத்தகத்திற்குள் இருந்து எட்டிப் பார்த்த அக்கடிதம் அவனை ஒருகணம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. வெளியே கவரில் டொக்டர் சேந்தன்"

அவளது கையெழுத்துத் தான் அவன் அருகில் இருக்க ஏன் அவனிற்கு கடிதம் எழுத வேண்டும். இதில் ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்மம் புதைந்திருக்கிறது.

அவள் இன்னமும் உறக்கத்தில் இருந்தாள். அவளது உறக்கத்தை கலைக்காமல் எச்சரிக்கையாக தன் அறைக்கு வந்து கடிதத்தை பிரித்தான்.

"அன்புள்ள டாக்டர்!

இக் கடிதம் உங்களிற்கு அதிர்ச்சியாயும் எதிர்பாராததாயும் அமையலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக உங்களிடம் மறைத்த சில உண்மைகளை உங்களிற்கு தெரியப்படுத்தவே இதை எழுதுகிறேன்.

என் மனதில் சந்தோஷத்தையும் நிம்மதியையும் ஏற்படுத்த சில மாதங்களில் நான் இறக்கப் போகும் உண்மையை எல்லோரும் என்னிடம் மறைத்தீர்கள். ஆனால் அக்காவும் அத்தானும் பேசியதைக் கேட்ட பாபு என்னிடம் வந்து அழுதபடி எல்லாவற்றையும் கூறிவிட்டான். பெரியவர்களால் பொய் சொல்ல முடியும். ஆனால், குழந்தைகளால் முடியாதே.

எத்தனை மருந்துகளை நீங்கள் எனக்கு தந்தாலும் நாளுக்கு நாள் சீர்கெட்டுச் செல்லும் என் உடல் நிலையில் இருந்து மரணத்தின் கரங்கள் என்னைத் தழுவுவதை உணர்கிறேன். மரணத்தையெண்ணி நான் கலங்கவில்லை. என் விதி அதுவென்றால் யாரை நொந்து என்ன பயன்? ஆனால், என்னைச் சுற்றிநின்று எனக்காக கலங்கும் அந்த அன்பு உலகிற்காகவே வேதனைப்படுகிறேன்.

பணத்திற்காகவும் பொருளிற் காகவும் அன்பை விலைபேசும் இந்த உலகில் என்னைக் காதலிக்கத் துணிந்த உங்களை அன்பு தெய்வத்தின் அவதாரமாகப் பார்க்கிறேன். உங்கள் அன்பு எனக்குக் கிடைத்ததற்காக நான் பெருமைப்படுகிறென். ஆனால் அதை ஏற்கத்தகுதியற்றவள் நான்.

உங்கள் கதைக்கு முன்னுரை எழுதும் நேரம். ஆனால் என் கதையிலோ முடிவுரை. நடக்கின்றது. எனக்காக உங்கள் வாழ்க்கை பாழாகக் கூடாது. உங்களை சொல்லிச்சமாதானப்படுத்த முடியாததென்பதற்கான இன்னொருவரை காதலித்ததாக பொய் சொன்னேன்.

உங்கள் காதலை என்னிடம் தெரிவித்தபோது நான் உங்களைப் காதலிக்கவில்லை யென நீங்கள் வேதனைப்பட்டிருக்கலாம். என் அன்பு தெய்வமே ! நான் உங்களிடம் என் காதலைக் கூற என்னிடம் ஒரு வாழ்க்கையில்லையே என்பதை யெண்ணி எனக்குள்ளே கண்ணீர் வடிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கடிதம் உங்கள் கைகளில் கிடைக்கும் போது என் கதை முடிந்திருக்கும். இந்நோய் என் உயிரைக் குடித்திருக்கும். அதை கனவாக எண்ணி மறந்து விடுங்கள். ஒரு நல்ல பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு உங்கள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பியுங்கள்.

இதுவே என் கடைசி ஆசை. தயவு செய்து அதை நிறைவேற்றுங்கள். உங்கள் நல்வாழ்விற்கு என் நல்வாழ்த்துக்கள். என்றும் அன்பான சித்ரா.

அவனது விழி ஏரிகளில் கண்ணீர் மழை நிறைந்தது. உதடுகள் "சித்ரா" என்ற மூன்றெழுத்து மந்திரத்தை உச்சரித்துக் கொண்டன.

"சித்ரா! உன் கதை முடியவில்லை. இனிமேல் தான் நம் கதை ஆரம்பமாகிறது. என் வாழ்க்கை உன் காதலால் பாழாகிவிடாது - ஒளி பெறப்போகிறது"

தக்க சமயத்தில் அக்கடிதத்தை கிடைக்க வைத்த இறைவனிற்கு மனதிற்குள் நன்றி கூறிக் கொண்டான்.

"சித்ரா ! நான் உன்னுடன் வாழப் போவது ஒரு நாளானாலும் அதில் வாழ்க்கையை வாழ்ந்து அனுபவித்த நிம்மதியையும், சந்தோஷத்தையும் நான் அடைவேன். உலகம் எங்களை பைத்தியங்களாக நினைத்தால் நினைக்கட்டும். வாய்விட்டுக் கத்தட்டும்.

சமுதாயம், சம்பிரதாயங்கள், சடங்குகள் - எதுவுமே வேண்டாம். நான் நீ இரண்டு மாலைகள். அந்த முருகன் எங்கள் அன்பைப் புரிந்து கொள்வார். நம்மைப் புரிந்து கொள்பவர்கள் நம்மை வாழ்த்தட்டும். அது போதும். நாம் வாழ்வோம்"

அவன் அசைக்க முடியாத உறுதியான முடிவுடன் அவளது வார்ட்டை நோக்கி நடந்தான்.

வெளியே இருந்து பார்த்தால் அது வெறும் ஊமை உலகந்தான். மௌனம்தான் அங்கு கீதங்கள். ஆனால், நன்றாக உற்றுக் கேட்டால்தான் தெரியும். அங்கு ஓர் இசைவிழாவே நடந்து கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்பாட்டுக் குழு

திரு.ந.தெய்வேந்திரராஜா (ஓய்வுநிலை அதிபர்)

கலாநிதி செ.சேதுராஜா (ஓய்வுநிலை அதிபர்)

திரு.க.பொன்னையா (முன்னாள் உப தவிசாளர் - கரவெட்டி)

திரு.சுந்தரலிங்கம் (பிரபல வர்த்தகர்)

திரு.இ.இராகவன் (ஓய்வுநிலை அதிபர்)

திரு.கி.ரவிக்குமார் (ஓய்வுநிலை தலைமைக் கிராம அலுவலர்)

திரு.மா.சிவபாலன் (நோர்வே)

திரு.இ.உமாகரன் (இலண்டன்)

திரு.ந.பிரதீபன் (பிரதி அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

மணிவிழா நிகழ்வை சிறப்போடு நடத்த வேண்டும் எனும் எண்ணக்கருவை எமக்கு தோற்றுவித்த நண்பர் மா.சிவபாலன் மற்றும் இ.உமாகரன் அவர்களுக்கு முதற்கண் நன்றிகள்.

இந் நிகழ்விற்கு வாழ்த்துச் செய்திகள் மற்றும் வாழ்த்துரைகள் வழங்கிய பெரியோர்கள், இந் நூலை சிறப்புற அமைத்து வழங்கிய தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர் மற்றும் மணிவிழா நிகழ்வில் வைத்தியகலாநிதி அவர்களை அகவுணர்வோடு வாழ்த்த வந்த பேருள்ளம் கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

பல வழிகளிலும் இவ் விழா சிறப்புற உதவியவர்கள், ஒத்துழைத்தவர்கள், பங்களிப்பு வழங்கியோர் அனைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவின் சார்பிலும் வைத்தியகலாநிதி அவர்களின் குடும்பத்தின் சார்பிலும் அகமகிழ்வோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏற்பாட்டுக் குழு
04.05.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org